52 பக்கங்கள்
யாழ். ரூ.30/=
வன்னி ரூ.20/=

# உதயன்

சுடர்: 29 கதிர்: 250 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆடி 18, ஞாயிறு 03.08.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily

கஜேந்தினி ஆசிரியரின் Deutsch மொழி வகுப்பு German Swiss செல்வோர்க்கான
Deutsch மொழி வகுப்புகள் German Embassyயில் கேட்கப்படும் A1 Certificateக்கு ஏற்றவாறு 7 வருடமாக நடைபெறுகிறது. படிக்க வருவோர்க்கு தங்குமிட வசதி செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு :
10, Palaly Road, Jaffna. | K.K.S. வீதி, சுன்னாகம். | பருத்தித்துறைரோட், ஆவரங்கால் சந்தி.
P.கஜேந்தினி T.P : 077 160 4823
தொலைபேசி மூலம் தொடர்புகொள்ளவும்.

## உள்ளே...



கொமன்வெல்த் போட்டிக்குச் செல்ல முடியாத நெருக்கடியில் மஹிந்த 8



ஆட்டங்களில் வென்ற அணிகள் 26



சச்சினுக்கு பாரத ரத்னா கிடைத்தது எவ்வாறு ? 27

# பத்து நாள்களில் பதில் இல்லையேல் நாடாளுமன்றை முற்றுகையிடுவோம்



இராமேஸ்வரத்தில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மீனவக் குடும்பங்கள்

## இராமநாதபுரம் மீனவர்கள் எச்சரிக்கை

இராமநாதபுரம், ஓக. 3
மீனவர் பிரச்சினை தொடர்பில் இன்னும் 10 நாள்களில் நடவடிக்கை எடுப்பதாக மத்திய இணையமைச்சர் பொன். இராதகிருஸ்ணன் அறிவித்துள்ளதை அடுத்து கச்சதீவு செல்லும் போராட்டத்தை இராமேஸ்வரம் மீனவர்கள் நேற்று நிறுத்தினர்.
எனினும் நடவடிக்கை எடுக்கும்வரை தமது வேலை நிறுத்தப்போராட்டம் தொடரும்.

25 ஆம் பக்கம் பார்க்க

# தீர்வை இழுத்தடித்தால் மீண்டும் வெடிக்கும் போர்

## அரசுக்கு எச்சரிக்கை விடுக்கிறார் சோபித தேரர்

கொழும்பு, ஓக.3
தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணப்படவேண்டும். தீர்வுக்குக் காலம் கடத்தினால் பிரச்சினை பூதாகரமாகும். மீண்டும் ஒரு போராட்டம் தோன்றக்கூடும். அது மிகவும் அபாயகரமானது. எம்மால் அதிலிருந்து மீள முடியாது என கோட்டை நாகவிகாராதிபதியும், சமூக நீதிக்கான மக்கள் இயக்கத்தின் தலைவருமான வண. மாதுலுவாவே சோபித தேரர் அரசுக்கு எச்சரிக்கை விடுத்தார்.
இனவாத, மதவாத போராட்டம் ஆரம்பித்தால் அது நாட்டுக்கு பெரும் ஆபத்தை ஏற்படுத்தும். கடந்த 30 வருட கால அனுபவம் எமக்கு இருக்கின்றது. மீண்டும் அவ்வாறானதொரு நிலை ஏற்படாதிருக்க வேண்டுமாயின் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களிடையே நம்பிக்கையைக் கட்டியெழுப்ப வேண்டும். சட்டம் அனைவருக்கும் சமமானதாக இருக்க வேண்டும். ஒருவருக்கொருவர் அவநம்பிக்கையை ஏற்படுத்தினால் இந்தப் பயணத்தைத் தொடரமுடியாது என்றும் அவர் தெரிவித்தார்.
மனித உரிமைகள் பாதுகாக்



சோபித தேரர்

25 ஆம் பக்கம் பார்க்க

## தமிழக மீனவர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணுங்கள்

சென்னை, ஓக.3
தமிழக மீனவர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வுகாண நடவடிக்கை எடுக்கவேண்டும் என இந்தியாவின் முன்னாள் மத்திய அமைச்சர் ஜீ.கே. வாசன் தெரிவித்துள்ளார்.
மீனவர்களின் கைதுகள் மற்றும் படகுகள் பறிமுதல் ஆகிய விடயங்கள் கண்டிக்கத்தக்கவை எனவும் ஜீ.கே.வாசன் தெரிவித்துள்ளார்.
அத்துடன், இலங்கைச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 93 தமிழக மீனவர்களும் உடனடியாக விடுதலை செய்யப்படவேண்டும் என்பதுடன், 62 மீன்பிடிப் படகுகளும் விடுவிக்கப்படவேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.
இந்திய - இலங்கை மீனவர் பிரச்சினைக்கு எந்தவித தீர்வும் எட்டப்படாத நிலையில்

25 ஆம் பக்கம் பார்க்க

## நேற்று மாத்திரம் 4 பேருக்கு டெங்கு

யாழ்ப்பாணம், ஓக 3
டெங்கு நோய்த்தொற்றுக்கு உள்ளான நிலையில் நேற்று மாத்திரம் 4 பேர் சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
நேற்றுமுன்தினம் 3 பேரும் அதற்கு முதல்நாளான வியாழக்கிழமை 3 பேரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். நாளாந்தம் குறைந்தது 2 பேராவது டெங்குத் தொற்றுக்கு உள்ளாகி மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்படுகின்றனர்.
கடந்த வாரம் மாத்திரம் சுமார் 15 பேர்வரை டெங்கினால் பாதிக்கப்பட்டுமருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
குறித்த சுகாதார வைத்திய

25 ஆம் பக்கம் பார்க்க

## போர்க்குற்ற வழக்கில் கோத்தாவை சிக்க வைக்க அமெரிக்காவில் முயற்சி

கொழும்பு, ஓக. 3
இலங்கையின் இறுதிப் போரில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மீது வழக்குத் தொடர்வதற்கு அமெரிக்காவில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.
அமெரிக்காவிலுள்ள தேசிய பாதுகாப்புக்கான சட்ட மற்றும் கொள்கைக்கான இணைய அமைப்பான'ஜஸ்ற்செக்கியூரிட்டி'யின் இணை ஆசிரியரான, றியன் குட்மன், கடந்த மாத ஆரம்பத்தில் கோத்தபாய ராஜ

25 ஆம் பக்கம் பார்க்க

## ஈழத்தை கைவிடேன் என்று உறுதியாக இருந்தார் பிரபா

### நட்வர் சிங் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஓக. 03
நான் சாவைத் தழுவினாலும் ஈழத்தைக் கைவிடமாட்டேன் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் உறுதியாக இருந்தார். இதனால் இந்திய - இலங்கை



இராணுவத்தை ஒரே நேரத்தில் எதிர்கொள்ள வேண்டி வரும் என்று தெரிவித்தபோதும், அவர் தனது முடிவில் மாற்றமின்றியே இருந்தார் என்று, இந்திய முன்னாள் வெளிவிவகார அமைச்சர் நட்வர் சிங் தெரிவித்துள்ளார்.
இந்தியாவின் முன்னாள் வெளிவிவகார அமைச்சரான நட்வர் சிங், இந்திய – இலங்கை ஒப்பந்த காலத்தில் இந்தியத் தரப்பில் முக்கியமாகச் செயற்பட்ட ஒருவர். தற்போது 410 பக்கங்களைக் கொண்ட தனது சுயசரிதைப் புத்தகத்தை

25 ஆம் பக்கம் பார்க்க

## வவுனியாவில் கஞ்சாவுடன் சிப்பாய் கைது

வவுனியா, ஓக.3
வவுனியாவில் கஞ்சாப் பொதியுடன் இராணுவச் சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
யாழப்பாணம், வயாவிளான் பிரதேசத்திலுள்ள இராணுவ முகாமில் கடமையாற்றும் சிப்பாய் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.
விடுமுறையின் நிமித்தம் குறித்த சிப்பாய் வவுனியா

25 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கைத் தூதரை அழைத்துக் கண்டியுங்கள்

### ஜெயலலிதா மோடியிடம் கோரிக்கை

சென்னை, ஓக.3
தம்மை அவமதிக்கும் விதமாகக் கட்டுரை வெளியிட்டதற்காக இந்தியாவுக்கான இலங்கை தூதரை நேரில் வரவழைத்து இந்தியப் பிரதமர் கண்டிக்க வேண்டும் என்று கோரித் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா மோடிக்கு கடிதம் எழுதியுள்ளார்.
அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-
மீனவர்களின் வாழ்வாதாரப் பிரச்சினையை இழிவுபடுத்தும் வகையிலான கட்டுரையை ஏற்றுக்கொள்ளமுடியாது. ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களின் புகைப்படத்துடன் கட்டுரை வெளியிடப்பட்டிருப்பதை இந்தியா சாதாரணமாக எடுத்துக்கொள்ளக்கூடாது. புகைப்படத்துடன் கட்டுரை வெளியிடுவது கட்டுரையா

25 ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1 லட்சத்துக்கும் மேற்பட்டோர் கிழக்கில் வறட்சியால் பாதிப்பு



மட்டக்களப்பு, ஓக. 3
மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் வறட்சியால் ஒரு இலட்சத்து அறுபது ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட அரச அதிபர் பீ.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் கூறுகையில்,

மட்டக்களப்பில் சுமார் 15 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 60 ஆயிரம் பேர் வரை வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளனர். வறட்சியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அடுத்த வாரம் தொடக்கம் 18 ஆயிரம் மெற்றிக் தொன் உலர் உணவுப் பொருள்கள் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன எனத் தெரிவித்தார்.

இந்த நிலைமை குறித்து மாவட்ட இடர் முகாமைத்துவ நிலைய உதவிப் பணிப்பாளர் விராஜ் திஸநாயக்கவிடம் கேட்டபோது,

திருகோணமலை மாவட்டத்தில் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளனர். 11 பிரதேச செயலாளர் பிரிவில் 25 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளனர். வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு குடிதண்ணீர் உள்ளிட்ட நிவாரணங்கள் வழங்கபட்டு வருகின்றது எனத் தெரிவித்தார். (த-10)

# சமூகப் பொருளாதார வளங்களை மக்களிடையே பகிர்வதே கூட்டுறவு

## வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஓக. 3
சமூகப் பொருளாதார வளங்களை மக்களிடையே கூட்டுறவு அடிப்படையில் பங்கு போட்டு அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே கூட்டுறவுச் சங்கங்களின் குறிக்கோளாக அமையவேண்டும். பொதுமக்களின் தொழில் முயற்சி என்ற விதத்தில் மாகாண, மத்திய அபிவிருத்திக்கு வழிசமைப்பதற்கான சூழலை உருவாக்கிய கூட்டுறவை மேம்படுத்தும் விதத்தில் பணி செய்வதே அதன் நோக்கமாகும் - என்று வட மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

கூட்டுறவு அபிவிருத்தி அலுவர்களுக்கான பணி மேம்பாடு தொடர்பான நிகழ்வு நேற்று யாழ்.கிறீன் கிறாஸ் விடுதியில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கூட்டுறவுச் சங்கமானது மக்களின் பொதுத் தேவைகளை நிறைவேற்ற ஸ்தாபிக்கப்படும் ஒரு நிறுவனமாகும். உறுப்பினர்கள் தமது பொதுவான பொருளாதார, சமூக, கலாசாரத் தேவைகளைப் பூர்த்தி செய்ய அவ்வாறு ஒருங்கிணைகின்றார்கள். அத்தியாவசியமான பொருள்களைப் பெற்றுத் தருவது ஒரு புறமாகவும் கடனுதவி பெற்றுப் பொருள்களைத் தயாரித்து அல்லது பெற்று சந்தைப்படுத்துவது மறுபுறமாகவும் நடைபெற வைப்பதே இந்த நிறுவனங்களிடம் நாம் பொதுவாக எதிர்பார்க்கும் நடவடிக்கைகளாகும்.

முக்கியமாகக் கூட்டுறவுச் சங்கங்கள் பெரிய ஆதாயங்களைப் பெறவேண்டும் என்ற அடிப்படையில் நடத்தப்படுவதில்லை. ஆனால் அதேநேரம் ஆதாயமும் இன்றி நட்டமும் இன்றி மக்களுக்கான, உறுப்பினர்களுக்கான சேவைகளை நடைமுறைப்படுத்துவது தான் கூட்டுறவு சங்கங்களின் எதிர்பார்ப்பு என்று கருதப்படுகிறது. ஆகவே மக்களின் தொழில் முயற்சி என்ற விதத்தில் கூட்டுறவு இயக்கத்தைக் கட்டி எழுப்புவதும் அந்த இயக்கத்தில் நல்லாட்சிக்கான பின்னணியை உருவாக்கிக் கொடுப்பதும் எமது தலையாய கடனாக அமைகின்றது.

போர்க் காலத்தில் எமது வட மாகாண பொருளாதார, வாழ்வாதார வசதிகள் பலவாறாகப் பாதிக்கப்பட்டன. மக்கள் காயப்பட்டவர்கள் ஆனார்கள். மனதாலும் உடலாலும் பாதிப்புக்குள்ளானார்கள். பொருள்களை இழந்தார்கள். குடும்பக் கட்டுக்கோப்பு பெரும் பாதிப்புக்குள்ளானது. இந்த நிலையை மாற்றி அமைப்பதும் மக்கள் வாழ்க்கையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதும் உங்கள் ஒவ்வொருவரின் தலையாய கடனாக இருக்கவேண்டும்.

கூட்டுறவானது மக்கள் வாழ்க்கையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்த ஒரு உந்துகோலாக அமைய வேண்டும். அதற்கு நீங்கள் யாவரும் அனுசரணை வழங்குவீர்கள் என்று எதிர்பார்க்கின்றேன்.

கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர்களான உங்கள் கடமைகள் மிக விரிவானவை. மக்கள் நன்மையை மையமாக வைத்துத் தயாரிக்கப்பட்டவை.

வடமாகாண சபை வரமுன் உங்களுக்கிருந்த மனோநிலை மாறவேண்டும். இப்பொழுது நீங்கள் மக்களுடன் மிக நெருங்கி வந்து விட்டீர்கள். மக்களின் தேவைகள், அவர்களின் ஆசைகள், அபிலாஷைகள் அனைத்தையும் அருகில் இருந்து அவதானிக்க வேண்டியவர்களாகி உள்ளீர்கள். அவதானித்து அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய என்ன செய்யலாம் என்ற கருத்தை நீங்கள், மக்கள் சேவையாற்றும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு எடுத்தியம்ப வேண்டிய ஒரு முக்கியமான பதவியில் இருக்கின்றீர்கள். அதனைச் செவ்வனே செய்ய நீங்கள் முன்வர வேண்டும் - என்றார். (த-14)



யாழ். மறை மாவட்டமும் யாழ். தமிழ்ச் சங்கமும் இணைந்து யாழ். மடத்தடிச் சந்தியில் நிறுவிய தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரின் சிலை நேற்று மாலை திறந்து வைக்கப்பட்டது. 'தனிநாயகம் முற்றம்' எனப் பெயரிடப்பட்ட அமைவிடத்தில் நிறுவப்பட்ட சிலையின் பெயர்ப் பலகையை யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை திரை நீக்கம் செய்து வைத்தார்.

'தனிநாயகம் முற்றம்' நினைவுக் கல்லை நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள் திரை நீக்கம் செய்து வைத்தார். அரசியல் தலைவர்கள் உட்பட பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (த-135-51)

## 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை வழிகாட்டியில் தமிழ் மொழி புறக்கணிப்பு

கொழும்பு, ஓக. 3
5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சைக்காக மாணவர்களைத் தயார்படுத்தும் நோக்கில் கடந்தகாலப் பரீட்சை வினாத்தாள்கள், விடைகள் மற்றும் எதிர்பார்க்கப்படும் மாதிரி வினாக்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய தொகுப்பொன்றைக் கல்வி அமைச்சின் வெளியீட்டுப் பகுதி மே மாதம் வெளியிட்டது. அதில் தமிழ்மொழி புறக்கணிக்கப்பட்டுள்ளது என நல்லாட்சிக்கான தேசிய முன்னணி குற்றம் சாட்டியுள்ளது.

சிங்கள மொழியில் வெளியிடப்பட்ட இவ்வெளியீட்டின் தமிழாக்கத்தில் 2005-2013 வரையான வினாத்தாள்களும் விடைகளும் மாத்திரமே உள்ளடக்கப்பட்டிருக்கின்றன. எதிர்பார்க்கப்படும் வினாக்களின் தொகுப்பு தமிழ் மொழிப் பதிப்பில் இடம் பெற்றிருக்கவில்லை.

இது குறித்து கல்வி அமைச்சின் வெளியீட்டுப் பகுதியைத் தொடர்பு கொண்டு விசாரித்த போது, மொழி பெயர்ப்புக்கான வசதிகள் இன்மை காரணமாக அவற்றை மொழி பெயர்க்கவில்லை எனவும் பாடசாலைகள் தோறும் குறித்த சிங்கள மொழிமூல வினாத்தாள்களை மொழிபெயர்ப்புச் செய்துகொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இது ஒரு பெரும் மொழி ரீதியான பாரபட்சத்தை எடுத்துக் காட்டும் விடயமாகும். மேற்படி விடயம் தொடர்பாக நல்லாட்சிக்கான தேசிய முன்னணி வடக்கு, கிழக்கு மாகாண கல்வி அமைச்சர்களுக்கும், மத்திய அரசின் கல்வி அமைச்சரின் கவனத்துக்கும் கொண்டுவருவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

புலமைப் பரிசில் பரீட்சைக்கு இன்னும் சில நாள்களே எஞ்சியிருக்கும் நிலையில் உடனடியாகத் தமிழ் மொழிபெயர்ப்பு உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டு அனைத்துப் பாடசாலைகளுக்கும் கிடைக்கச் செய்வது கல்வி அமைச்சின் பொறுப்பாகும் எனவும் நல்லாட்சிக்கான தேசிய முன்னணி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளது. (த)

## மாவட்ட இளைஞர்கள் விருது வழங்கும் விழா

யாழ்ப்பாணம், ஓக. 3
மாவட்ட இளைஞர்கள் விருது வழங்கும் விழா நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடை பெற்றது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் யாழ். திருமறைக்கலா மன்றத்தில் நேற்றுமுன்தினம் முற்பகல் 11 மணியளவில் இந்த விருது வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்கு வட மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் தம்பிராசா குருகுலராஜா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில், மாற்றுத் திறனாளிகளின் நடனம் மற்றும் பாடல்களும் இடம்பெற்றதுடன் தேசிய இளைஞர் சேவைகள் மன்றமும், யாழ். மாவட்ட இளைஞர் கழகமும் இணைந்து நடத்திய இளைஞர் கலாசாரப் போட்டியில் வெற்றி பெற்ற 13 பேருக்கு விருதுகளும் 60 பேருக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (த-106)

இலவச விசா ஆலோசனைகள்

* ஐக்கிய அமெரிக்கா
* கனடா
* ஆஸ்திரேலியா
* நியுஸிலாந்து
* ஐரோப்பிய நாடுகள்
(UK, France, Italy, Swiss, Germany, Poland, Latvia, Cyprus)
* ஆசிய நாடுகள்
(Singapore, Malaysia, India, China, Russia )

Student Visa
Work Permits
Skilled Migration
Visit Visa

# Entry with G.C.E O/L # IELTS Not required
# Free Accommodation # Very low Course fee
# Financial Sponsorships # Full Scholarships
* Conditions Apply

வெளிநாட்டில் படிக்க, உழைக்க எமது இலவச சட்ட ஆலோசனை மூலம் பலர் பயன் பெற்றுள்ளனர் .......

iCS Study Overseas
77, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம்
107-B 1/1,Galle Road, Colombo - 06
021 7306000, 077 3013060

# ஊவா மாகாண தேர்தலில் மு.கா தனித்துப் போட்டி

நடைபெறவுள்ள ஊவா மாகாண சபைத் தேர்தலின்போது ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து போட்டியிட்டால், அதிக வாக்குகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய அமைப்பாளர் சபீக் ரஜாப்தீன் தெரிவிக்கையில்,

ஊவா மாகாண சபைத் தேர்தலின் போது ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து போட்டியிட்டால் அதிக வாக்குகளைப் பெற்றுக்கொள்ள முடியும். இருப்பினும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இந்துமுறை ஊவா மாகாண சபைத் தேர்தலில் தனித்தே போட்டியிடவுள்ளது.

இந்த முறை மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடாமல் தமது உறுப்பினரை ஐக்கிய தேசிய கட்சியின் ஊடாக மாகாண சபைக்கு அனுப்ப சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் திட்டமிட்டிருந்ததாகத் தகவல்கள் வெளியாகி இருந்தன. எனினும் அவ்வாறான தீர்மானம் எதனையும் கட்சி மேற்கொள்ளவில்லை-என்றார். (த-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு வயதுக் குழந்தை உட்பட 12 பேருக்கு குடாநாட்டில் டெங்கு

வலி. வடக்கு,ஒக. 3

தெல்லிப்பழை சுகாதார வைத்தியதிகாரி பிரிவில் ஒரு வயது குழந்தை உட்பட யாழ். மாவட்டத்தில் பன்னிரண்டு பேர் டெங்கு நோய் தாக்கத்துக்கு உள்ளாகி வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பிராந்திய சுகாதார சேவைகள் அலுவலகத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சாவகச்சேரி,தெல்லிப்பழை, நல்லூர்,உடுவில்,சங்கானை, வேலணை,யாழ்ப்பாணம் ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளைச் சேர்ந்தவர்களே டெங்கு நோயின் தாக்கத்துக்கு உள்ளாகிய நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் அதிகளவானோர் பாடசாலை மாணவ மாணவிகள் என்பதும் குறிப்பிடத்தக்கது. (த-86)

# வவுனியா வளாகத்தில் மோதல்; மாணவர்கள் மீது நடவடிக்கை

வவுனியா, ஒக். 3


யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாகத்தில் அண்மையில் இடம்பெற்ற மோதல் சம்பவத்துடன் தொடர்புடைய 18 மாணவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக வளாக முதல்வர் கதிரபிள்ளை கந்தசாமி அருள்வேல் தெரிவித்தார்.

அடையாளம் காணப்பட்டுள்ள 18 மாணவர்கள் தொடர்பில் இரண்டு வாரங்களுக்குள் விசாரணைகளை மேற்கொண்டு அவர்கள் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படும் பட்சத்தில் உரிய தண்டனை வழங்கப்படும் எனவும் அவர் கூறினார்.

வவுனியா வளாகத்தில் கடந்த 28ஆம் திகதி இடம்பெற்ற மோதலை அடுத்து வியாபார முகாமைத்துவ பீடத்தின் மூன்றாம் வருட மாணவர்களுக்கு வகுப்புத் தடை விதிக்கப்பட்டிருந்தது. மீண்டும் இவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் நாளை திங்கட்கிழமை முதல் மீள ஆரம் பிக்கப்படவுள்ளதாகவும் அவர் கூறினார். (த-402)

# தமிழ் புகலிடக் கோரிக்கையாளர் நௌரு தீவுக்கு அனுப்பி வைப்பு

கான்பரா, ஒக. 3



ஆஸ்திரேலியாவுக்குச் செல்லும் வழியில் கடலில் தடுத்துவைக்கப்பட்டு பின்னர் ஆஸ்திரேலிய நிலப்பரப்புக்கு கொண்டு செல்லப்பட்டிருந்த 157 தமிழர்களை நௌரு தீவிலுள்ள தஞ்சக் கோரிக்கையாளர் தடுப்பு முகாமுக்கு அனுப்பிவைத்துள்ளதாக ஆஸ்திரேலியா அறிவித்துள்ளது.

இந்திய தூதரக அதிகாரிகளைச் சந்திக்க படகில் வந்தவர்கள் அனைவரும் மறுத்துவிட்டதால், அவர்கள் அனைவரும் நௌருவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும், அங்கு வைத்து அவர்களது அகதி தஞ்சக் கோரிக்கை விண்ணப்பம் பரிசீலிக்கப்படும் என்றும் ஆஸ்திரேலியப் பிரதமர் டோனி அப்பாட்டும், குடிவரவு அமைச்சர் ஸ்கொட் மொரிசனும் அறிவித்துள்ளனர்.

இந்தியாவிலுள்ள பாண்டிச்சேரியிலிருந்து கிளம்பியிருந்த இந்தியக் கொடி தாங்கிய படகு ஒன்றில் இவர்கள் ஆஸ்திரேலியா நோக்கி வந்தனர் என்று ஆஸ்திரேலிய அரசு கூறியிருந்தது. இவர்கள் வந்த படகு ஆஸ்திரேலிய சுங்கத்துறை கப்பல் ஒன்றினால் வழிமறிக்கப்பட்டிருந்தது.

இவர்களை கடலில் இருந்தே இந்தியா அல்லது இலங்கைக்கு திருப்பி அனுப்ப ஆஸ்திரேலிய அரசாங்கம் எடுத்திருந்த முயற்சிக்கு அந்நாட்டின் உயர்நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்திருந்தது.

இந்தியா இவர்களைத் திரும்ப எடுத்துக்கொள்ள வைப்பதற்கான முயற்சிகளை ஆஸ்திரேலிய அமைச்சர் ஸ்கொட் மொரிசன் புதுடில்லி சென்று மேற்கொண்டிருந்தார்.

157 பேரையும் விசாரித்து அவர்களில் இந்தியக் குடியுரிமை கொண்டவர்களையும் இந்தியாவில் நீண்டநாள் தங்கியிருந்தவர்களையும் தமது நாட்டுக்குள் எடுத்துக்கொள்ள இந்தியா அப்போது சம்மதித்திருந்ததாகவும், இதனை அடுத்தே கப்பலில் இருந்த இவர்களை ஆஸ்திரேலிய நிலப்பரப்புக்குள் கொண்டுவந்திருந்ததாகவும் ஆஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் ஸ்கொட் மொரிசன் கூறினார்.

ஆனால் இந்திய தூதரக அதிகாரிகளை சந்திக்க தாங்கள் விரும்பவில்லை என இவர்கள் அனைவரும் தெரிவித்துவிட்டதாகவும் அதனை அடுத்து. ஆஸ்திரேலியாவின் நிலப்பரப்புக்கு வெளியில் வைத்து தஞ்சக் கோரிக்கைகளை பரிசீலிக்கும் தற்போதைய ஆஸ்திரேலிய கொள்கைக்கு ஏற்ப அவர்கள் அனைவரும் நௌருவுக்கு அனுப்பப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

என்னதான் செய்தாலும் சட்டவிரோதமாக படகில் வந்த எவராலும் ஆஸ்திரேலியாவில் குடியேற முடியாது என்ற செய்தியை இந்த தருணத்தில் மீண்டும் தாங்கள் வலியுறுத்த விரும்புவதாக செய்தியாளர்களிடம் பேசிய ஆஸ்திரேலிய பிரதமர் தெரிவித்துள்ளார். (த)

## வவுனியா வந்த பஸ் மீது கல்வீச்சு

வவுனியா.ஒக.3

கொழும்பில் இருந்து வவுனியா நோக்கி வந்த பயணிகள் பஸ் மீது கற்களை வீசித்தாக்குதலை நடத்திவிட்டு தப்பிச்சென்ற இருவர் குறித்து பஸ்சின் சாரதி புத்தளம் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

கடந்த 31 ஆம் திகதி இரவு 10.15 மணியளவில் புத்தளம் - அனுராதபுரம் வீதியின் 4ஆவது மைல் கல் அருகில் இந்த கல்வீச்சு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இலங்கை போக்குவரத்து சபையின் வவுனியா டிப்போவுக்கு சொந்தமான பஸ்மீதே இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டது.

தாக்குதல் நடத்திவிட்டுச் சென்றவர்களை உடனடியாக கைது செய்யுமாறு அதன் சாரதி புத்தளம் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

இது குறித்துப் புத்தளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-402)

## விசேட பயிற்சி வகுப்பு

நாவற்குழி தச்சன்தோப்பு கந்தையா கனகம்மா நிதிய நிறுவனத்தின் பௌர்ணமி தின நிகழ்வாக ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான விசேட பயிற்சி வகுப்பு எதிர்வரும் 8ஆம் திகதி சாவகச்சேரி பிரதேசசபையின் நாவற்குழி உப அலுவலக மண்டபத்தில் இடம்பெறும் என ஏற்பாட்டாளர் மயில்வாகனம் அறிவித்துள்ளார். (த-9)

# கொலைக் குற்றவாளிக்கு நீதிமன்று சாவுத் தண்டனை

வவுனியா, ஒக். 3

கல்முனை மேல் நீதிமன்றத்தால் கொலைக் குற்றவாளியாக காணப்பட்ட ஒருவருக்கு நேற்றுமுன்தினம் சாவுத் தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

2004ஆம் ஆண்டு மே மாதம் கமண என்ற இடத்தைச் சேர்ந்த கமகே அமரவீர என்பவரைக் கொலை செய்த குற்றத்திற்காக முதியான்சாகே லொக்கு பண்டார என்பவருக்கு எதிராக சட்டமா அதிபர் திணைக்களம் தொடுத்திருந்த வழக்கு விசாரணை நேற்றுமுன்தினம் கல்முனை மேல் நீதிமன்றில் விசேட அமர்வு நீதிபதி திருமதி கே.சிவபாலசுந்தரம் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இத் தண்டனை வழங்கப்பட்டது.

கடந்த 10 வருடங்களாக நடைபெற்றுவந்த இந்த வழக்கு விசாரணையில் அரசு தரப்பு வாதம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட முறையில் நிரூபித்ததையடுத்து குறித்த எதிரியை குற்றவாளியாகக் கண்ட நீதிமன்றம் எதிரிக்கு சாவுத் தண்டனை தீர்ப்பு வழங்கியுள்ளது.

இந்த வழக்கை அரச தரப்பில் அரச சட்டவாதி நிசாந் நாகரட்ணம் நெறிப்படுத்தியிருந்தார். (த)

# வீதியைக் கடக்க முயன்ற மாணவனை மோதிய ஓட்டோ

தென்மராட்சி, ஒக. 3

வீதியைக் கடக்க முயன்ற மாணவன் ஓட்டோவினால் மோதுண்டார். இந்தச் சம்பவம் நேற்று கைதடி நாவற்குழி ஏ-9 வீதியில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த பிரபாகரன் பிரதீபன் (வயது 10) என்ற மாணவன் இதன் போது காயமடைந்து சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, நுணாவில் பகுதியில் காணி துப்பரவாக்கிய இளைஞரைப் பாம்பு தீண்டியது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் காயமடைந்த நுணாவில் மத்தியைச் சேர்ந்த கந்தசாமி கஜன் (வயது 22) என்பவர் சாவகச்சேரி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (த-9)

# சுன்னாகம் மின் நிலையத்தால் கிணறுகளில் கழிவு ஒயில்

## பாதிப்பு குறித்து மக்கள் இன்று கூடி ஆராய்வு

வலி.வடக்கு, ஒக. 3

சுன்னாகம் பிரதேசத்தில் உள்ள கிணறுகளில் மின் நிலையம் மூலம் கழிவு ஒயில் பரவி வருகின்றமை குறித்து அப் பகுதியைச் சேர்ந்த மக்கள் இன்று கூடி ஆராயவுள்ளனர்.

இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று மாலை 4 மணிக்கு சுன்னாகம் சிவன் கோயிலுக்கு அருகில் உள்ள மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கடந்த மூன்று வருடங்களாக இந்தப் பிரச்சினை உள்ள போதும் இதுவரை உரிய நடவடிக்கை எதுவும் எடுக்கப்படாத நிலையில் பொதுமக்கள் தாங்களாகக் கூடி இது குறித்து ஆராயவுள்ளனர். (த-86)

உங்களுக்கு

அவசரபணத்தேவை

உள்ளதா?

SINGER FINANCE நாடுங்கள்

உங்கள் வாகனபுத்தகத்தை கொடுத்து

உங்கள் பணத்தை பெற்றுக்கொள்ளுங்கள்

தொடர்புகளுக்கு

தனு 077 9 357 124

சுஜந்தன் 077 7 391 449

தர்ஷன் 077 7 009 666

(பி.15599)

இல.86, கே.கே.எஸ், வீதி, யாழ்ப்பாணம்

# அரசர்கேணிக்கு மின் விநியோகம்

பளை. ஒக.3

பளைப் பிரதேசத்தில் மேலும் ஒரு கிராமத்திற்கு நேற்றுமுன்தினம் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மின் விநியோகம் வழங்கப்பட்டுள்ளது.

பளை அரசர் கேணிக் கிராமத்திற்கே மின் விநியோகம் முதன்முறையாக வழங்கப்பட்டது.

மீள் குடியமர்வின் பின்னர் இந்தக் கிராமத்தில் 90 குடும்பங்களுக்கு வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டது. இதனையடுத்து வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மின்சார விநியோகத்திற்கான வேலைகளும் பூர்த்தி செய்யப்பட்டு நேற்றுமுன்தினம் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமாரினால் வைபவரீதியாக மின் விநியோகம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதேவேளை பிரதேசத்தின் கச்சார்வெளி, செல்வபுரம் ஆகிய கிராமங்களுக்கான மின் விநியோக வேலைகள் துரித கதியில் இடம்பெற்று வருவதாகவும், இக் கிராமங்களுக்கான மின் விநியோகமும் விரைவில் வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் இத்தாவில் கிராமத்திற்கான மின்சார விநியோகத்திற்கான ஆரம்பக் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கூறப்பட்டது.

பளைப் பிரதேசத்தில் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்ட அனைத்து கிராமங்களுக்கும் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-9)

# நாட்டின் பல்வேறு பகுதிகளில் மழையுடன் கூடிய காலநிலை

கொழும்பு, ஒக. 3

தென்மெற்கு பருவப் பெயர்ச்சியால் நாட்டின் பல பகுதிகளில் மழையுடன் கூடிய காலநிலை நிலவுகின்றது.

இந்த நிலைமை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதல் வாரம் வரை நீடிக்கும் என வளி மண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

புத்தளத்திலிருந்து காலி மற்றும் ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையிலான கடற்பகுதிகளில் கடும் காற்று வீசக் கூடும் எனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

மணிக்கு 60 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

சீரற்ற காலநிலை காரணமாக பல அனர்த்தங்களும் பதிவாகியுள்ளன.

மலையகத்தில் பெய்யும் அடைமழைகாரணமாக அங்குள்ள தேக்கங்களின் நீர் மட்டம் உயர்வடைந்து காணப்படுகின்றது.

நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களிலும் 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான மழை வீழ்ச்சி பதிவாகலாம் என வளி மண்டலவியல் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

மழையுடன் கூடிய காலநிலை காணப்படும் சந்தர்ப்பங்களில் கடும் காற்று வீசக் கூடும் எனவும் திணைக்களம் கூறியுள்ளது. (த)

# வவுனியா மாவட்டத்தின் அபிவிருத்திக் குழுக் கூட்டம் நாளை

வவுனியா,ஒக.3

வவுனியா மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டம் நாளை திங்கட்கிழமை வவுனியா மாவட்ட செயலகத்தில் பிற்பகல் 2.30 மணிக்கு இடம் பெறவுள்ளது. இக் கூட்டத்திற்கு வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனும் அமைச்சர் ரிஷாத் பதியுதீனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

மாலை வரை நடைபெறவுள்ள இக் கூட்டத்தில் மாவட்டத்தில் காணப்படும் குறைபாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான விடயங்கள் ஆராயப் படவுள்ளன. (த-421)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திருமதி மேரிறோஸ்மலர் கிறகோரி



மாத்தளனைப் பிறப்பிடமாகவும் இரணைப்பாலையை வசிப்பிடமாகவும் கொண்ட கிறகோரி மேரிறோஸ்மலர் நேற்று (02.08.2014) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சூசைப்பிள்ளை கிறகோரியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கிறகோரி அக்கினேஸ், தாரிசம்மா தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற சூசைப்பிள்ளை, அந்தோனியாப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், திருமதி அருள்மதி டியூக்மைக்கலின் அன்புத் தாயும், டியூக் மைக்கலின் (பிரான்ஸ்) அன்பு மாமியும், கியூட்ஸ், றெமோலின்ரா, ஸ்ராவின் (பிரான்ஸ்) ஆகியோரின் அம்மம்மாவும், அருட்தந்தை ஸ்.வின்சன் (பங்குத் தந்தை-கூழாமுறிப்பு) மாமியும், காலஞ்சென்ற மேரிகிறேஸ், செபஸ்ரியாம்பிள்ளை, மேரி மகிறேட் புஸ்பராணி, காலஞ்சென்ற தங்கரெத்தினம், அக்கினேஸ் குணமணி, காலஞ் சென்ற இரெத்தினதுரை, துரைரெட்ணம், தங்கத்துரை (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரியும், திரேசம்மா, செபமாலை, மாகிறட், லூர்த்தம்மா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிநிகழ்வு நாளை (04.08.2014) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 10.30 மணிக்கு இரணைப்பாலை பற்றிமா அன்னை ஆலயத்தில் இரங்கற்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, பற்றிமா அன்னை சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அருள்மதி( மகள்)
டியூக் மைக்கல் (மருமகன்)

T.P: 0033973654657
077 344 1415

(50561) (10)

# மரண அறிவித்தல்

## திருமதி கனகம்மா சின்னத்தம்பி



நுணாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி கனகம்மா சின்னத்தம்பி (31.07.2014) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையகுட்டி – தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான முத்தர்-இலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும் சின்னத்தம்பியின் அன்பு மனைவியும், குழந்தைவேலு, காலஞ்சென்றவர்களான சிவ குரு, பொன்னுத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரியும், குணமணி, விஜயராஜா (சுவிஸ்), காலஞ்சென்ற சிவராஜா மற்றும் தங்கராஜா (சுவிஸ்), ஜெயராஜா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், தம்பிராஜா, பாமா, றஞ்சிதாதேவி, சசிரேகா ஆகியோரின் அன்பு மாமியாரும், தீசன். ஜெகன், றகு, சதி, மதி, மயூரி, நிலுக்ஸி, நிரோஜன், தயா, பிரசாத், திவ்யா, அபிநயா, ஓவியா, வக்ஸியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அநஞ்ஞனின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.08.2014) ஞாயிற்றுக்கிழமை மதியம் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நுணாவில் காந் தாளம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

(C/15309) (10)

தகவல்: குடும்பத்தினர்
0772223815 (பதி)

## பொதுக்கூட்டம்

தென்மராட்சி, ஓக.3

தென்மராட்சி மக்கள் நல்ச் சேவைகள் சங்கத்தின் பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையில் சங்கத் தலைவர் பேராசிரியர் க.கந்தசாமி தலைமையில் நடைபெறும். கூட்டத்துக்கு பிரதேச நலனில் அக்கறையுள்ளவர்களைக் கலந்து கொள்ளுமாறு செயலாளர் யோ.ஜெயக்குமார் அறிவித் துள்ளார். (ஓ-9)

## குருபூசை

யாழ்ப்பாணம், ஓக.3

ஆனைக்கோட்டை இந்து சமய விருத்திச் சங்கம் நடத்தும் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை நிகழ்வு இன்று மாலை 4.30 மணிக்கு ஆனைக்கோட்டை மூத்தநயினார் ஆலய மண்டபத்தில் ஏ.வி.கணேசலிங்கம் தலைமையில் நடைபெறும். (ஓ-10)

## மதுவிலக்கல் பிரசார கருத்தமர்வு

யாழ்ப்பாணம், ஓக.3

வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனமும் யாழ்.றோட்டறிக் கழகமும் இணைந்து நடத்தும் கிராம மட்டத்திலான மதுவிலக்கல் பிரசார கருத்தமர்வும் கல்வி உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் இன்று பிற்பகல் 3 மணிக்குச் சுழிபுரம் அண்ணா சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

அண்ணா சனசமூக நிலையத் தலைவர் ந.பிரபாகரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் யாழ்.றோட்டரிக்கழகத் தலைவர் சி.அனுராஜ் முதன்மை விருந்தினராகவும் சிறப்பு விருந்தினர்களாக ஹெல்திலங்கா இணைப்பாளர் ஆர்.சிவநாயகம், வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத் தலைவர் க.புஸ்பராசா ஆகியோரும் கலந்துகொள்வர். (ஓ-10)

## தந்தையை வெட்டிய மகனுக்கு மறியல்

தென்மராட்சி,ஓக.3

தந்தையைக் கத்தியால் வெட்டிக் காயப்படுத்திய மகனை விளக்கமறியலில் வைக்க கிளிநொச்சி நீதிவான் உத்தரவிட்டார்.

பளை இத்தாவில் பகுதியில் கடந்த வியாழக்கிழமை இரவு மகனின் குடும்பத்தில் ஏற்பட்ட தகராறு ஒன்றை தீர்த்து வைக்கச் சென்ற தந்தையை மகன் கத்தியால் வெட்டினார். காயங்களுக்குள்ளான தந்தை பளை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். சின்னத்தம்பி சுப்பிரமணியம் (வயது-59) என்பவரே கத்தி வெட்டுக்கு இலக்கானார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பளைப் பொலிஸார் மகனைக் கைது செய்து நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமைகிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்தினார். வழக்கை விசாரித்த நீதிவான் எம்.ஐ.வகாப்தீன் குறித்த நபரை ஓகஸ்ட் 15ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ஓ-9)

## செயலமர்வு

கரணவாய், ஓக.3

வடமராட்சி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் தரம் 9, 10 மற்றும் தரம் 11 ஆகிய வகுப்புக்களில் விஞ்ஞான பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை திங்கட்கிழமை காலை 8 மணி முதல் புலோலி ஆசிரிய நிலையத்தில் இடம்பெறவுள்ளது. (ஓ-108)

## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஓக.3

ஞானக் குழந்தைகள் இல்ல பாலர் பாடசாலைகளுக்கு இடையிலான வருடாந்த விளையாட்டு விழா இன்று ஞாயிறு காலை 9 மணிக்கு யாழ்.துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெறும். (ஓ)

### வீடு விற்பனைக்கு

வட்டு வடக்கு, சித்தங்கேணியில் அமைந்துள்ள வீடு, வளவு கிணற்றுடன் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்:
077 045 9001/ 071 891 5173

(50552) (10)

### விற்பனைக்கு

மீசாலை, அல்லாரை வீதியில் (J / 318) கிராம சேவகர் அலுவலகத்துக்கு அருகில் 5 பரப்புக் காணியுடன் கூடிய 37 அடி வீடு விற்பனைக்குண்டு.

தொ.பே: 077 971 1972 (C/13271) (4.3.6)

# தரம் 5 விசேட எதிர்பார்க்கை வினாத்தாள்

## (பிரபல சிங்கள வினாத்தாளின் மொழிபெயர்ப்பு)

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்காக பிரபல சிங்கள பத்திரிகையில் வெளிவந்த மாதிரி வினாத்தாளின் தமிழ் மொழிபெயர்ப்பு வினாத்தாள் (பகுதி I + பகுதி II) தமிழ்மொழிமூல மாணவர்களின் நலன்கருதி நேற்றுமுன்தினம் வெளிவந்த ஓகஸ்ட் மாத ஒளிஅரசியில் இலவச இணைப்பாக வெளியிடப்பட்டுள்ளது.




இந்த சிங்களமொழிமூல வினாத்தாள்கள் மிகத் தரமானவை என எமது வளவாளர் குழு கருதுவதால் இதனையும் எடுத்து பயிற்சிசெய்து உயர்புள்ளி பெற முயற்சி செய்யுமாறு மாணவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

– கல்விச்சுடர் ஆசிரியர் குழு –

விரும்புவோர் அருகில் உள்ள பத்திரிகை முகவரிடம் ரூபா 60 செலுத்தி ஒளிஅரசி ஒன்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக தகவல்களுக்கு : யாழ். – 077 6569617, கொழும்பு – 071 4273035

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சங்கானை செங்கற்படை மகாதேவப் பிள்ளையார் தேவஸ்தானம்
மூன்றாம் திருவிழா

நாளது பொழுது இரண்டும் தவறாது காலது கொண்டு
தளராது வலம் வந்து தன் கோயில் தலைவாயில்
மீளாத அன்புடன் தலைகுட்டி நின்றாடி நாளும் அடியார்க்கு
வராத செல்வம் வருவிப்பான் வேழமுகன் திருநாளது மூன்றில்

ஆக்கம்: சங்கை – சிவம்

சிறப்புற வாழ்த்துவோர் :
அமரர் அரியபுத்திரர் நாகராசா (அப்பாவர்) நினைவாக
3 ஆம் திருவிழா உபயகாரர், மாலியவத்தை, சங்கானை.
(சி/15138)(5-6-3)

# நல்லூர் ஆலயச் சூழலில்

யாழ்ப்பாணம், ஒக.3

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த பெரும் திருவிழாவை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் திருவிழாக் காலத்தில் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில் நடத்தும் சமய சொற்பொழிவுகள் மற்றும் கலை நிகழ்வுகள் வரிசையில் இன்று பிற்பகல் 3 மணிக்கு-

'சுரபூபதி' என்ற தலைப்பில் சைவப்புலவர் நித்தியதசிதரனின் சிறப்புச் சொற்பொழிவும், கொக்குவில் ஸ்ரீ கிருஷ்ணர் அறநெறிப் பாடசாலை, கோண்டாவில் ஸ்ரீ சிவகாமி அம்மன் அறநெறிப் பாடசாலை மற்றும் குப்பிளான் சொர்க்கவளவு சோதி விநாயகர் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

★★★

தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தின் அனுசரணையுடன் நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசையரங்கத்தில் இன்று மாலை 6.45 மணிக்கு-

பாடல் - திருமதி சத்தியபாமா இராஜலிங்கம், உடன்பாடுபவர் - திருமதி கிருஷ்ணப்பிரியா, வயலின் - எஸ்.கோபிதாஸ், மிருதங்கம் - எம்.சிதம்பரநாதன், கெஞ்சிரா - பிரம்மஸ்ரீ சிவசுந்தரசர்மா.

# சமய சந்நிதிகளில்

உரும்பிராய், ஒக.3

உரும்பிராய் காளி அம்பாள் என வழங்கும் அருள்மிகு ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த வெள்ளிக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இடம்பெற்று வருகிறது. அந்த வரிசையில் எதிர்வரும் 09 ஆம் திகதி சனிக்கிழமை தேர் உற்சவமும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (ஞ)

★★★

கிளிநொச்சி - பூநகரி - வேரவில் அருள்மிகு வெள்ளிப்பள்ளத்து வீரகத்தி பிள்ளையார் கோயிலின் இவ்வாண்டுக்கான வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் இடம்பெறவுள்ளது. அந்த வரிசையில் எதிர்வரும் 13 ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம் பெறவுள்ளன. (ஞ)

# புத்தக வடிவமைப்பு பற்றிய கருத்துரை

சமகாலக் கலை, கட்டடக் கலை மற்றும் வடிவமைப்புக்கான இலங்கை ஆவணக் காப்பகத்தால் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள நியா தண்டபாணியின் 'புத்தக வடிவமைப்பு' பற்றிய கருத்துரை இன்று ஞாயிறு முற்பகல் 10 மணி தொடக்கம் 12 மணி வரை நல்லூரில் உள்ள சமகாலக் கலை, கட்டடக்கலை மற்றும் வடிவமைப்புக்கான இலங்கை ஆவணக்காப்பகத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் ஆர்வலர்களைக் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ஓ)

# விளையாட்டு விழா

ஞானக் குழந்தைகள் இல்ல பாலர் பாடசாலைகளுக்கு இடையிலான வருடாந்த விளையாட்டு விழா இன்று ஞாயிறு காலை 9 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெறும்.

பாலர் கல்விக் கழகத் தலைவர் எஸ்.பி காசிநாதன் தலைமையில் நடைபெறும் இந்தநிகழ்வில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தம்பதியர் பிரதம விருந்தினர்களாகவும், சிறப்பு விருந்தினர் களாக முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கோகிலா மகேந்திரன், தொழிலதிபர் ஈ.எஸ்.பி.நாகரத்தினம் ஆகியோரும், கௌரவ விருந்தினராக யாழ். முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப் பாளர் க.விமலநாதனும் கலந்து கொள்வர். (ஓ)


நல்லூர் முருகன் இரண்டாம் நாள் மாலைத் திருவிழா

## நம்பிக்கை ஊட்டிடுவாய்

வெண்பா

ஆடவர் பெண்டிர் அகங்குளிர்ந்து அன்புடனே
நாடியுன் ஆலயத்தை நண்ணுகிறார் – கூடிநின்று
கும்பிடும் போது அவர் கூறும் குறைநீக்கி
நம்பிக்கை ஊட்டிடுவாய் நன்கு

*சி.வெற்றிவேலு*

## எமைக் காக்க வா குமரா

அடியார்கள் குறை தீர்க்க விரைந்தோடி வா
அலங்கார கந்தா நீ மயிலேறி வா
மடிதந்து தாயாகி துயர் தீர்க்கவா
மணி மாடத் திருநல்லைப் படியேறிவா
பிடிநீங்க மழையாகி புகழ்பொங்கவா
பிறைசூடும் பெருமானின் மகனே நீவா
கொடி தாங்கும் கரத்தோனே குமரா நீவா
கொடுங்கோலை அழிப்போனோ எமைக் காக்க வா

*வேலணையூர் சுகுமார்*

## கந்தனின் மகிமை தன்னை காண வாரீர்

எத்திக்கும் புகழ் பரப்பும் சக்தியின் மைந்தன் நல்லை
பக்திக்குரிய கந்தன் பாரவர் போற்றும் வேலன்
முப்பக்கம் கோபுரம் சூழ்மூர்த்தி தலம் தீர்த்த மதை
முறையாகக் கொண்டவனின் பெருவிழாக் காணவாரீர்

காலத்தை மாற்ற மாட்டான் காசினையும் கருதமாட்டான்
கோலத்தை மாற்றி மாற்றி கொள்ளை அழகோடு இந்த
ஞாலத்தவர் போற்றி நாடே வியந்து ஏற்றும் எங்கள்
மூலவன் தங்கவேலனின் திருமுகம் காணவாரீர்

காணக்கண் கோடி வேண்டும் கட்டழகன் கந்தன் எங்கள்
கானக்குறவள்ளிலோலன் காட்சி தரும் நல்லை மண்ணில்
யாரடா நீ என்ற ஓசை ஞான முனியோகனதும்
தேரடியின் மகிமை தன்னை நேரடியாய்க் காணவாரீர்

*கவிமணி அன்னைதாஸன்*
*ஊரெழு*

oticon
HEARING AIDS
Since 1904

நீங்களும்
கேட்டல் குறைபாட்டால்
அவதிப்படும் ஒருவரா?
இதோ அதற்கான ஒரு சிறந்த தீர்வு...



விஷன் கெயாவிடமிருந்து
முழுமையான இலவச செவிப் பரிசோதனையின்
பின்னர் புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய
கேட்டல் உபகரணமொன்றை அணிந்து
மாற்றத்தை அறிந்துகொள்ளுங்கள்....
நீங்கள் இதற்காக செய்யவேண்டியதாவது,
உங்களுக்கு அண்மையில் உள்ள
விஷன் கெயாவை அழைத்து பதிவுசெய்து
கொள்வது மட்டுமே.

VISION CARE
OPTICAL SERVICES

யாழ்ப்பாணம் - 077-0035377
திருகோணமலை - 077-0122763
மட்டக்களப்பு - 077-4782957
(15290) (45.6.3)

அசத்தலான ஆடித் தள்ளுபடி



நம்ப முடியாத விலைக்கழிவில்
அனைத்து ஆடைத் தினுசுகளும்
எதிர்வரும் 16.08.2014 வரை
விற்பனை செய்யப்படுகின்றன.
சாறி 500/= இல் இருந்து 2000/=
கவுண் 200/= இல் இருந்து
பஞ்சாபிசெற் 700/= இல் இருந்து
ஸ்கேட் 400/=இல் இருந்து
பஞ்சாபி சில்க் துணி 500/= இல் இருந்து
ரீசேட் 400/= இல் இருந்து
பெனாரிஸ் சாறி2000/=
பட்டோலா சாறி 1000/=
மேலும் அனைத்து வகையான புடைவை வகைகளுக்கும்
விஷேட ஆடிக் கழிவுகள் வழங்கப்படும்.
உங்கள் தெரிவுகளுக்கு இன்றே முந்துங்கள்
விதம்விதமாக அள்ளிச் செல்லுங்கள்.
T.K த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்
44, 42, Grand Bazaar, Jaffna. Tel: 222 8847, Fax: 222 8847
(சி/15194)(4.3.6)

நல்லூர் கந்தனுக்கு இன்று
மூன்றாம் திருவிழா
03.08.2014



பயோட்டினெக்ஸ் e 14 ஆண்டுகளாக.....
தலைமுடி சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு
நிரந்தரத் தீர்வளிக்கிறது.
Rial E
வளமான கேசத்திற்கு பலமான கவசம்
மேலதிக தொடர்புகளுக்கு :
யாழ் மாவட்ட விற்பனைப் பிரதிநிதி
R.Y.பிரபு 077 002 8942
ஏக விநியோகஸ்தர் :
ஜெகன் பார்மசி
462/B, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4336
(C/15124) (7.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## செல்வி சாரதா நவரத்தினம்

காரைநகர் மல்லிகையைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்ட செல்வி சாரதா நவரத்தினம் நேற்று (02.08.2014) சனிக்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு நவரத்தினம் -தனபாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், பாக்கியராசா, ஸ்ரீகர லக்ஷமி, தர்மராசா (M.G.R), லலிதா, கோகனந்த, நிர்மலா தேவி, அரிகரராசா ஆகியோரின் அன்பு சகோதரியும், நாக பூஷனி, காலஞ்சென்ற குலசேகரம் மற்றும் சுந்தராம்பாள், கனகசுந்தரம், நடராசா, பாலசுப்பிரமணியம், சிவமலர் ஆகி யோரின் மைத்துனியும், கோபிராஜ், பத்மஜா, கோபிரஞ்சன், பிரணவராஜ், அபிநயனி, அபிராம் ஆகியோரின் மாமியும், சுகிர்தராசா, சற்குண ராசா, விமலராசா, ஸ்ரீகுலராசா ஆகியோரின் சிறியதாயும், தேவஜெனனி, தேவ ரஜனி, காலஞ்சென்ற தேவரஜீவன் மற்றும் தேவசஞ்சீவன், ஜெனனி, அனிக்கா, ரேவதி, காயத்திரி, கௌரி, குகன் ஆகியோரின் பெரிய தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 05.08.2014 பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மல்லிகை, காரைநகர்.**
**077 603 3259**

(50560) (10)

**தகவல்:**
**ந. தர்மராசா**


# விசா




ஐரோப்பிய நாடுகளுக்கு
UK I USA I AUSTRALIA I CANADA I NEW ZEALAND I DENMARK I FRANCE I GERMAN I ITALY I JAPAN I NETHER LAND ஆகிய நாடுகளுக்கு விசா பெற இருப்பவர்களுக்கு ...........

உங்கள் விசா நிராகரிக்கப்பட்டுள்ளதா? மீண்டும் விசா தேவையா?
உங்கள் வங்கிக்கணக்கில் 50 லட்சத்திற்கு மேல் பணம் உள்ளதா?
பிஸினஸ், மல்டி விசா தேவையா?
உங்களிடம் வீடு காணி BR வசதிகள் உள்ளனவா?
விசிட் விசா தேவையா?
நீங்கள் இதற்கு முன் பல தடவைகள் UK, USA போன்ற நாடுகளுக்கு போய் வந்திருந்தால்
10 வருட விசா அல்லது நீங்கள் விரும்பியவர்களை அழைத்துச் செல்ல ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படும்.
நீங்கள் IELTS செய்துள்ளீர்களா?
நீங்கள் பல வருடங்கள் உயர்தொழில் புரிந்திருக்கின்றீர்களா?
PR விசா தேவையா?
பட்டப்படிப்பினை முடித்துள்ளீர்களா?
விசா உள்ள துணையுடன் செல்ல விரும்புகிறீர்களா?

## ஸ்டுடன்ட் | விசிட் | பிசினஸ் விசா

★ ஸ்டுடன்ட் விசா பெற்றுக்கொள்வதற்காக 1 வாரத்தில் ஓபர் லெட்டர் வழங்கப்படும்.
★ படிப்புக்கான செலவும், ஏனைய செலவுக்கும் வங்கியில் கல்விக்கடன் வசதிகள்.
★ ஸ்பொன்சர் பணத்தேவைக்கும் உதவி
★ வெளிநாட்டில் கல்வி கற்றுக்கொண்டிருக்கும் மாணவர்களின் விசாவை மீளப்பெற்றுக் கொள்வதற்கு வங்கியில் பணத்தேவைக்கும் ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படும்.
★ வெளிநாட்டில் படிக்கும் பிள்ளைகளை பார்வையிடுவதற்கு செல்வதற்காக விசா பெற்றுக்கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படும்.
★ எத்தகைய விசாக்களையும் பெற்றுக்கொள்வதற்கு தேவையான ஆவணங்கள், கடிதங்கள், பணவிபரங்கள், ஸ்பொன்சர், சொத்து விபரங்கள் மற்றும் விசா 100% பெறுவதற்கான சட்ட ஆலோசனைகளும் விசா பெறுவதற்கு சகல வேலைகளை உடன் செய்வதற்கு ஆவணங்களுடன் நேரே வரவும்....

Online மூலம் விண்ணப்பங்கள் பூர்த்தி செய்து கொடுத்தல், Ticket, Insurance, Medical, Hotel Booking, வங்கி பண வேலைகள்,மொழிபெயர்ப்பு என்பன செய்து தரப்படும்.

மேலதிக விபரங்களுக்கும், தொடர்புகளுக்கும்:

**0114 061667 0114061668**
**Hotline: 077 77 44 089** (C/15705)(4.3.6)

**LONDON OVERSEAS STUDENT VISA CENTER**
# 205,1/1, 1st Floor, 1st Division, Maradana, Colombo - 10.
( Next To Kaleel Nursing Home & Technical Junction )


## ஆங்கில மொழியும் நாடகப் போட்டியும்

தென்மராட்சி, ஓக.3

தென்மராட்சி கல்வி வலயஆங்கிலப்பிரிவு நடத்தும் ஆங்கில மொழியும் நாடகப் போட்டியும் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடை பெறும். வலய ஆங்கிலப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி. ஜி.ஏ. திருக்குமார் தலைமையில் நடைபெறும் ஆங்கில நிறங்கள் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராகத் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு. கிருஷ்ணகுமார் கலந்துகொள்வார்.

(ஓ-9)


## விற்பனை முகவர்கள் தேவை

டினர், லகர், பெயின்ட் மற்றும் கெமிகல் வகை விநியோகிப்பதற்காக விற்பனை முகவர்களும் சேல்ஸ் ரெப். கூடிய சீக்கிரம் தேவை.
077.6677045 (தமிழ் மொழியில்)
077-8501537 (உரிமையாளர் சிங்கள மொழியில்)


## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் **தர்மலிங்கம் இரத்தினேஸ்வரன்**
(கிராம சேவையாளர்-J/127)



தோற்றம்
24.07.1952

மறைவு
26.07.2012


உங்கள் பிரிவால்
தூக்கம் தொலைத்த எங்கள்
இரவுகளின் தனிமையில்
உங்கள் நினைவுகளின்
- நெருடல்கள்
நீங்கள் எம்மை விட்டு மறைந்தாலும்-
உங்கள்
விழுதுகள் நாம் என்றென்றும்
காத்து நிற்போம்
நீங்கள் தந்த நிழலின் பெருமை
சற்றும் குறையாமல்

உங்களின் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
மருமகன்.

நாகலிங்கம் வீதி, கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (50558)(10)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
14 . 11 . 1932



மறைவு
14 . 08 . 2013

### அமரர் கந்தையா அம்பலவாணர்

Rtd.Staff Sergeant-Srilankan Army Ordnance Corp.
Chairman - Mercantile Security Services (pvt) Ltd

தன்நிகரற்ற நிறுவனத் தலைவராகவும்
கண்ணியமான கணவராகவும்
சிறப்பு மிக்க தந்தையாகவும்
பாசமிக்க பண்பான மாமனாகவும்
அரவணைப்பான அன்புத் தாத்தாவாகவும்
என்றென்றும் அழியாத புகழோடு வாழ்ந்தவரே!
கடமையில் கடமை வீரனாக இருந்தவரே!
காலங்கள் கடந்தாலும் எம் இதயத்தை விட்டு
அழியாதையா உம் நினைவுகள்- என்றென்றும்
உங்கள் பணி நாங்கள் தொடர்வோம் அணியணியாக!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

651/13, நாவலர் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(50543)(4.3.6)

குடும்பத்தினர்.


NORTH LEAD Computer & Accessories Wholesaler, Computer Repairing & Services
Computer & Language Classes, Computer Printing & Designing

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி நகரில் எங்குமில்லாத விலைகளில் 1-3 வருட உத்தரவாதத்துடன் கணனிகள் மற்றும் உதிரிப்பாகங்கள்

Intel 3.0GHz Processor, Intel Motherboard, 160GB Hard Disk, 2GB DDR-II, Asus DVD Writer, 15" LCD, Keyboard, Mouse, Speaker, 7.2Multy Dongle: Rs:22450/- (1Yrs Warranty)

No : 328, Stanly Road, Jaffna. Tel: 0774192275
(Near To Arijakulam Junction)
Branch : # 12 Kanagapuram Road, Kilinochchi
Tel : 0772533390 (Near To Barthi Hotel)

NORTH LEAD உங்களது சகல விதமான கணனிகள் (Laptop & Desktop) மற்றும் அதன் உதிரிப்பாகங்கள் விற்பனையிலும் பழுதுபார்த்தலிலும் நம்பிக்கையான நிறுவனம். உங்களது சகலவிதமான கணனிகளையும் ஒரேநாளில் பழுது பார்த்து பெற்றுக்கொள்ளலாம். (Quick Pick-up & Delevery)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Intel D.C Processor : 8550 | 24x Sam Dvd Writer : 2675 | 7.2 Mul.Dongle From: 2450 | 650W Techfine UPS : 4350 | Lap Hard Disk 500GB : 7350 |
| Intel I-3 Processor : 15900 | ATX Porch Casing : 2575 | 21.1Mb Multy Dongle : 3550 | Matrix UPS Battery : 1550 | Lap Hard Disk 1TB : 10875 |
| Intel I-7 M. Board : 7900 | 1 User Kaspersky : 1550 | 20MP Webcam From : 875 | 450W Power Supply : 1450 | Lap Org Charger From : 1875 |
| Intel G-31 M.Board : 6250 | 1 User Bitdefender : 1450 | Headphone&Mic From: 250 | Wireless 4port Router : 4950 | Laptop Battery From : 6250 |
| 500GB Hard Disk : 6850 | 2GB Kings Mic SD : 385 | Keyboard USB From : 485 | 19" AOC, HP, LED : 11850 | Laptop Display From : 8650 |
| 1TB Hard Disk : 8850 | 4GB Kings Mic SD : 550 | Optical Mouse From : 250 | 19" V.Sonic, Samsung : 12600 | Lap Coolar Pad From : 575 |
| 2TB Hard Disk : 14250 | 4GB King Pendrive : 750 | Powerlogic Key & Mouse : 1250 | Computer Table Normal : 2950 | HP Org Toners 12A.35A: 7150 |
| 2GB DDR-III Ram : [illegible] | 8GB King Pendrive : 875 | Wireless Mouse From : 850 | Samsung 3in1 Printer : 24500 | Premium Toners 35A, 85A: 3450 |
| 4GB DDR-III Ram : [illegible] | 16 GB Pendrive : 1475 | Wireless Key& Mouse : 1950 | 500GB Exter Hard Disk : 9850 | Dual Core Full Set : 48700 |
| 8GB DDR-III Ram : 10250 | 32 Gb Pendrive : 2650 | 2.1 Multymedia Woofer: 1700 | 1 TB External Hard Disk : 11950 | Core I-3 Full Set : 57500 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜொய்ன்ற் கொமிசன் இன்ரநஷனல் சான்றிதழ் பெற்ற டேர்டன்ஸ் மருத்துவமனைக்கு உலகத் தர அங்கீகாரம்




இலங்கையின் தனியார்துறை சுகாதாரப் பராமரிப்புச் சேவை வழங்குநர்களில் முன்னோடியாக விளங்கும் டேர்டன்ஸ் மருத்துவமனை தமது உயரிய பயணத்தில் இன்னொரு மைல் கல்லை அடைந்தமையைப் பெருமையுடன் அறியத் தருகின்றனர். உலகின் முன்னோடி சுகாதாரப் பராமரிப்பு சேவை வழங்குநர்களுக்கு இணைவாக நோயாளிகளுக்கு வழங்கும் பராமரிப்பின் தரம், அவர்களின் பாதுகாப்பு டேர்டன்ஸ் சர்வதேச அங்கீகாரம் பெற் றுள்ளது. கடந்த ஏழு தசாப்தங்களுக்கு மேலாக மூன் றாம் நிலை சுகாதாரப் பராமரிப்பு சேவை வழங்கலில் முன்னோடியாக விளங்கி வரும் டேர்டன்ஸ் மருத்துவமனை, இந்தப் பாராட்டை மகிழ்ச்சியுடன் அறியத்தருவதுடன் தொடர்ந்தும் திறமையாகச் செயற்பட உறுதி பூண்டுள்ளது. ஒரு நிறுவனம் என்ற ரீதியில் இந்தப் பயணம் சாதனைகள் அதிகம் கொண்டதாகவும், சவால் மிக்கதாயும் விளங்குகின்றது. உயர்தரம் வாய்ந்த தொழில் நுட்பம், உலகத் தரம் வாய்ந்த உட்கட்டமைப்பு வசதிகள், உயர் தகுதி வாய்ந்த வளங்கள் முதீலிய விடயங்கள் உள்ளிட்ட தமது பயணத்திலும் தாம் வழங்கும் சேவையிலும் அதி சிறந்ததை மட்டுமே வழங்க வேண்டும் என்ற நிபந்தனையற்ற அர்ப்பணிப்பை இவர்கள்எப்பொழுதும்வெளிப்படுத்திவருகின்றனர். டேர்டன்ஸ் மருத்துவமனையின் நிறைவேற்றுத் தலைவர் அஜித் துடாவ கூறும்பொழுது, டேர்டன்ஸ் மருத்துவமனையில் சமூகத்துக்கு உயரிய சுகாதாரப் பராமரிப்புச் சேவை வழங்குவதில் முன்னோர்டியாக விளங்க வேண்டும் என்பது எமது தொலைநோக்கு. மருத்துவப் பராமரிப்பில் திறமையாகச் செயற்படவேண்டும் என்பதைக் குறிக்கோளாகக் கொண்டு எமது எப்பொழுதும் செயற்படுகின்றோம். இந்தச் சான்றிதழ் எமது சேவைக்குக் கிடைத்த அங்கீகாரம். ஜே.சி.ஐ. இடமிருந்து எமக்கு கிடைத்த இந்தச் சான்றிதழ் உலகளாவிய ரீதியில் சிறந்த மருத்துவ பராமரிப்பு நிலையங்களுக்கு கிடைக்கும் அங்கீகாரம் ஆகும். இலங்கையில் முதல் தடவையாக சர்வதேச அங்கீகாரம் பெற்ற மருத்துவமனையாக நாம் தரம் உயர்ந்திருப் பதையிட்டு பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றோம். எமது பேராளர்களுக்கு டேர்டன்ஸ் மீது அவர்கள் வைத்துள்ள நம்பிக்கைக்கு கிடைத்த வரவேற்பு இது. மேலும் டேர்டன்ஸ் மருத்துவ மனையில் பணிபுரிபவர்களுக்கு எம்முடைய அர்ப்பணிப்புக்கும் கடின உழைப்புக்கும் கிடைத்த வெகுமானம் இந்த அங்கீகாரம் எனத் தெரிவித்தார்.

1994 முதல் சுகாதார பராமரிப்பு சேவைகளுக்கு சான்றிதழ் வழங்கிவரும் அமெரிக்காவின் முதன்மை நிறுவனமான ஜொயின்ற் கொமிஷன் இன்ரநஷனல்-அமெரிக்கா, 90க்கு மேற்பட்ட நாடுகளிலுள்ள மருத்துவ நிலையங்களுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றது. வழங்கும் சேவையின் தரம் மற்றும் நோயாளர் பாதுகாப்பு ஆகியவற்றில் சர்வதேச நியமங்களை வகுக்கும் நிறுவனமாக இது செயற்பட்டு வருகின்றது. தானாக முன்வந்து சர்வதேச சான்றுபடுத்தல்களை வழங்குவதன் மூலம் சுகாதாரப் பராமரிப்புத் துறையின் தரத்தை முன்னேற்றுவது இதன் இலக்கு. நோயாளர்களை மையப்படுத்தி அவர்களுக்கு வழங்கும் சேவை யின் தரம் மற்றும் முகாமைத்துவத்தின் திறமை யான செயற்பாடு, சேவையின் கிடைப்பனவு, சேவையின் தொடர்ச்சி, நோயாளர்களின் மதிப்பீடு, தொற்றுக் கட்டுப்பாடு, நோயாளியினதும் குடும்பத்தினதும் உரிமைகள், வசதிகளின் முகாமைத்துவம், நிறுவனத்தின் ஆளுகை, தலைமைத்துவம், தகவல் தொடர்பாடல் முகாமைத்துவம் என்பன இதன்போது கருத்தில் கொள்ளப்படுகின்றன.

பொதுமக்களுக்கு விசுவாசத்துடன் முழுமையான மூன்றாம்நிலை மருத்துவப் பராமரிப்பை வழங்கும் முதன்மை சுகாதார நிலையம் டேர்டன்ஸ் மருத்துவமனை. சக மருத்துவ சேவை வழங்குநர்கள் மத்தியில் சிறந்த அங்கீகார மும் மதிப்பும் பெற்ற நிறுவனமாக இது விளங்குகின்றது - என்றார். (த)

# வாடிக்கையாளரை தங்கத்தால் அலங்கரிக்கும் கோயா




அன்பின் நறுமணத்தைப் பரவச் செய்து கோயா தமது பெருமைக்குரிய வாடிக்கையாளர்களைத் தங்கத்தால் அலங்கரித்துள்ளது. ஹேமாஸ் மனுபக்டரிங் நிறுவனத்தின் புகழ்பெற்ற கோயா வர்த்தக நாமமானது, அதன் பெருமைக்குரிய வாடிக்கையாளர்களுக்குத் தங்க ஆபரணங்களை வெகுமதியாக வழங்கும் வகையில் ஊக்குவிப்புத் திட்டமொன்றை முன்னெடுத்திருந்தது. இதன்போது 18 வெற்றியாளர்களுக்கு ஒரு மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியான தங்க ஆபரணங் கள் கோயா மூலம் வழங்கப்பட்டிருந்தன.

இந்தத் திட்டத்தில் வெற்றி பெற்றவர்களுக்கு வெகுமதிகளை வழங்கும் நிகழ்வு அண்மையில் கொழும்பு 02 பிறேபுறுக் பிளேஸில் அமைந்துள்ள ஹேமாஸ் மனுபக்டரிங் நிறுவனத்தின் தலைமைக் காரியாலயத்தில் இடம்பெற்றது. இதன் போது முதல் பரிசாக தங்கச் சங்கிலி மற்றும் தங்கப் பதக்கம் உள்ளிட்ட மூன்று வெகுமதிகள் கையளிக்கப்பட்டதுடன், இரண்டாவது பரிசாக 5 பிரேஸ்லட்களும், மூன்றாவது பரிசாக 10 வெற்றியாளருக்கு தங்கப் பதக்கங்களும் கையளிக்கப்பட்டன.

இந்த ஊக்குவிப்புத் திட்டமானது ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் முன்னெடுக்கப்பட்டிருந்தது. பத்திரிகைகளில் வெளியான கூப்பனுடன் கோயா கொள்வனவு பற்றுச்சீட்டு மற்றும் பொதியின் ஒரு பகுதியை வெட்டி அனுப்புவதன் ஊடாக இப்போட்டியில் கலந்து கொள்வதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டிருந்தது. நாட்டின் அனைத்துப் பிரதேசங்களிலிருந்தும் அதிகப்படியான கூப்பன்களை அனுப்பி பெரும்பாலானவர்கள் பங்குபற்றியிருந்தனர். இந்த ஊக்குவிப்பு திட்டம் குறித்து கோயா சிரேஷ்ட வர்த்தகநாம முகாமையாளர் நிரோஷனி பெரேரா கருத்துத் தெரிவிக்கையில், "இதற்கு முன்னர், எமது பெருமைக்குரிய வாடிக்கையாளருக்கு பெறுமதியான பரிசில்களை வழங்கிடும் வகையிலான பல ஊக்குவிப்பு திட்டங்களை முன்னெடுத்திருந்தோம். எமது பெறுமதிமிக்க வாடிக்கையாளருக்கு மிகவும் பெறுமதி வாய்ந்த வெகுமதியொன்றை வழங்கிடும் நோக்கில் நாம் இந்த தங்க ஆபரணங்களை வழங்கும் ஊக்குவிப்புத் திட்டத்தை முன்னெடுக்கத் தீர்மானித்தோம். இதற்கு அமோக வரவேற்பு கிடைத்திருந்ததுடன், இந்த ஊக்குவிப்பு திட்டத்துடன் இணைந்திருந்த வாடிக்கையாளர்களுக்கு ஹேமாஸ் நிறுவனம் மற்றும் கோயா குழுவினர் சார்பாக எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்" எனத் தெரிவித்தார். (த)



# கொமர்ஷல் வங்கியின் புதிய தலைவர்

கொமர்ஷல் வங்கியின் புதிய தலைவராக தர்ம தீரசிங்க மற்றும் பிரதித் தலைவராக பிரீதி ஜயவர்தன ஆகியோர் 29 ஜூலை 2014 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் நியமனம் செய் யப்பட்டுள்ளதாக வங்கி அறிவித்துள்ளது. வங்கியின் பிரதித் தலைவராக இருந்த தீரசிங்க தலைவராக இருந்த தினேஷ் வீரக்கொடியின் இடத்துக்கு நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த இரண்டரை வருடங்கள் வங்கியின் தலைவர் பதவியை வகித்த தினேஷ் வீரக்கொடி தற்போது ஓய்வு பெற்றுள்ளார்.

கீர்த்திமிக்க பொருளியலாளரும் வங்கித் துறையில் 40 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவம் உள்ளவருமான தீரசிங்க 2011 டிசெம்பர் 20ல் வங்கியின் ஆளுநர் சபைக்கு நியமிக்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து பிரதித் தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டார். அவர் முன்னர் இலங்கை மத்திய வங்கியின் சிரேஷ்ட பிரதி ஆளுநராகப் பதவி வகித்தார். அத்தோடு மத்திய வங்கியின் நாணயக் கொள்கைக் குழு மற்றும் இறைமை தரப்படுத்தல் குழு என்பனவற்றின் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

மேலும் தீரசிங்க சர்வதேச நாணய நிதியத்தின் பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளின் மாற்று நிறைவேற்றுப் பணிப்பாளராகவும் பதவி வகித்துள்ளார். கடன் மூல தனச் சந்தை, பூகோளமயமாக்கல் நிதி என பொருளாதாரத்தின் பல பிரிவுகளில் இவரது ஆக்கங்களும் வெளியிடப்பட்டுள்ளன. இலங்கையிலும் வெளிநாடுகளிலும் கீர்த்திமிக்க பல சஞ்சிகைகள் மற்றும் நூல்களில் இவரின் 30க்கும் அதிகமான இத்தகைய கட்டுரைகள் வெளியிடப்பட்டுள்ளன. சர்வதேச கருத்தரங்குகள் பலவற்றில் 50க்கும் அதிகமான இவரது ஆய்வுக் கட்டுரைகளும் வெளியாகியுள்ளன. கொழும்பு, களனி, ஸ்ரீஜயவர்தனபுர மற்றும் மொரட்டுவைப் பல்கலைக்கழகங்களிலும் மற்றும் பல கீர்த்திமிக்க தொழில்சார் கல்வி அமைப்புக்களிலும் இவர் வருகை தரும் விரிவுரையாளராகவும், பரீட்சையாளராகவும் பணி புரிகின்றார்.

பிரீதி ஜயவர்தன வங்கியின் ஆளுநர் சபைக்கு 2011 இல் நியமனம் செய்யப்பட்டார். இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் முழு நேர உறுப்பினரான இவர் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கல்வித்தகைமைக்குப் பிந்திய 35 வருட கால அனுபவம் கொண்டவர் ஆவார். நிதி மற்றும் திறைசேரிச் செயற்பாடுகளில் இவர் நிபுணத்துவம் கொண்டவர். இவர் சாம்பியா கொன்சலிடேட்டட் கொபர் மைன்ஸ் நிறுவனத்தில் அதன் திறைசேரித் தலைவர் பதவி உட்பட பல சிரேஷ்ட பதவிகளில் 13 வருடங்கள் பணியாற்றி இரண்டு பில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமான சர்வதேச கடன் விவகாரத்தைக் கையாண்ட அனுபவம் மிக்கவராவார். (த)

# இலங்கையின் முதலாவது டொலர் பிணைக்கு பிணையங்கள் பரிவர்த்தனைக் குழு அனுமதி







இலங்கையின் முதலீட்டுத் துறையை சர்வதேச மயமாக்கும் செயற்பாட்டின் ஒரு அங்கமாக, இலங்கையின் முதலாவது டொலர் பிணைக்கு பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக் குழு அனுமதி வழங்கியுள்ளது. இதுவரை காலமும் ரூபாவுக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டிருந்த முதலீட்டு நிதியங்களின் புதிய உள்ளடக்கமாக இந்தப் பிணை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பிணை, இலங்கை மத்திய வங்கி மற்றும் நிதி அமைச்சின் அங்கீகாரத்தையும் பெற்றுள்ளது. வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மற்றும் முதலீட்டுச் சபை நிறுவனங்கள் ஆகியவை நேரடியாக உயர் விளைச்சல்களை வழங்கக்கூடிய நிதியத்தில் தமது முதலீடுகளை மேற்கொள்ள முடியும்.

சிலோன் அசெட் மனேஜ்மன்ட் நிறுவனத்தின் மூலம் அறிமுகம் செய்யப்பட்டுள்ள இந்தப் பிணை, 'சிலோன் டொலர் பொண்ட் பண்ட்' என்ற பெயரைக் கொண்டுள்ளது. நேரடியாக அமெரிக்க டொலர்களின் மூலம் இந்தப் பிணை கட்டமைக்கப்பட்டுள்ளதால் விலைத்தளம்பல் இடர்களை எதிர்கொள்ளாது. இந்த புதிய சிலோன் டொலர் பொண்ட் பண்ட் ஜூலை மாதம் 30 ஆம் திகதி அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. டொலர்களில் மதிப்பிடப் படும் இலங்கை சவரின் பிணைகளிலும், வங்கி மற்றும் கூட்டாண்மை நிறுவனங்களின் மூலம் [illegible] டொலர் பிணைகளிலும் நேரடியாக முதலீடு செய்ய முடியும். சிலோன் அசெட் மனேஜ்மண்ட் மூலம் முகாமைத்துவம் செய்யப்படும் இந்தப் பிணையின் காப்பாளராக டொயிஷ் வங்கி ஏஜி செயற்படுகிறது. இந்தப் பிணையை பிட்ச் ரேடிங்ஸ் தரப்படுத்தும் என்பதுடன், இடர் வெளிப்படுத்தல் என்பது வங்கி மற்றும் சவரின் இடர்களுக்கு அமைய அமைந்திருக்கும். சிலோன் டொலர் பொண்ட் பண்ட் என்பது அமெரிக்க டொலர்களில் முதலீடுகளை மேற்கொள்வோருக்காக அமைந்துள்ளது. மூலதன மதிப்புயர்வையும் வருமான வளர்ச்சியையும் குறித்த காலப்பகுதியில் பெற விரும்புவோருக்காகவும், வெளிநாட்டு நிறுவனங்களை இலங்கை முதலீட்டு சபை அனுமதியுடன் இயங்கும் நிறுவனங்களினூடாக இயங்கும் நிறுவனங்களுக்கும், வெளிநாட்டு சிறியளவிலான முதலீட்டாளர்களுக்கும் உகந்த வகையில் இது அமைந்துள்ளது. ஆகக்குறைந்த முதலீடு அமெரிக்க டொலர்கள் 1000 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களின் முதலீடுகளை கவரும் வகையில் இந்த நிதியம் அமைந்துள்ளது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## காஸாவும் முள்ளிவாய்க்காலும்

இன்றைய நாள்களில் காஸாவில் இஸ்ரேல் அரங்கேற்றிக் கொண்டிருக்கும் அட்டூழியங்கள், ஐந்து வருடங்களுக்கு முன்னர் முள்ளிவாய்க்காலில் என்னவெல்லாம் நடைபெற்றிருக்கும் என்பதை மீள மனக்கண்முன் கொண்டுவந்து நிறுத்துகின்றன. நாளாந்தம் வரும் அவலச் செய்திகளும், புகைப்படங்களும், கல்மனதையும் கலங்க வைத்துக் கண்ணீரைக் கரைபுரண்டோடச்செய்யும் அளவுக்கு நிலைமை மோசமாகிக்கொண்டிருப்பதை துல்லியமாக உணர்த்துகின்றன.

குறிப்பாக உயிரற்று சடலங்களாகக்கிடக்கும் பாவமறியா பச்சிளம் குழந்தைகளினதும் குற்றுயிராக சீவ-மரணப் போராட்டத்தில் சிக்குண்டிருக்கும் சிறார்களினதும் புகைப் படங்களைப் பார்க்கையில் மனதைஉருக்கும் வேதனையின் பரிமாணத்தை வார்த்தைகளால் விவரித்துவிட முடியாது.

காஸா மீது காட்டு மிராண்டித்தனமாக இஸ்ரேல் கட்ட விழ்த்து விட்டுள்ள குரூர புதிய கட்டத் தாக்குதல்கள் இன்றுடன் 27 ஆவது நாள்களை எட்டியுள்ளன. இந் நிலையில் நேற்று வரையில் 1600ற்கும் அதிகமான பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர். அத்துடன் 8000ற்கும் அதிகமானோர் காயமுற்றுள்ளனர். உயிரிழந்த மற்றும் காயமுற்றோரில் பெரும்பாலானோர் பொதுமக்களாக - அதிலும் குறிப்பாக, சிறுவர்களும் பெண்களுமாக இருப்பதிலிருந்து போரென்பது உண்மையில் யாரை அதிகமாக பாதிக்கின்றது என்பதை எளிதில் புரிந்து கொண்டுவிடலாம்.

மத்தியதரைக்கடலை மேற்கு எல்லையாகக் கொண்டுள்ள காஸா மொத்தமாக 360 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்டுள்ள சிறிய நிலப் பிரதேசமாகும். 41 கிலோ மீற்றர் நீளத்தையும் 6 முதல் 12 கிலோ மீற்றர் வரையான அகலத்தையும் கொண்டுள்ள காஸா நிலப்பரப்பில் 18 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் வாழ்கிறார்கள். இந்தச் சிறிய நிலப் பரப்பிற்குள் இவ்வளவு தொகையான மக்கள் வாழ்வதையும் பொருட்படுத்தாது இஸ்ரேலியப் படைகள் முன்னெடுத்துவரும் மிலேச்சத்தனமான தாக்குதல்களால் காஸா இன்றொரு கொலைக் களமாக மாற்றம் பெற்றிருக்கின்றது.

ஐந்துவருடங்களுக்கு முன்னர் காஸாவிலும் பார்க்க பன்மடங்கு சிறியதான முள்ளிவாய்க்கால் பிரதேசத்தில், ஏறத்தாழ அரைமில்லியன் மக்கள் அடர்த்தியாகக் குவிந்திருந்த பிரதேசத்தில் தாக்குதல் நடத்தப்பட்டபோது, மக்கள் பட்ட துன்ப துயரங்களை எண்ணிப் பார்க்கும் ஒவ்வொரு தருணத்திலும் இதயத்தில் ஆறாத வலி பெருக்கெடுப்பதை மறுத்து விடமுடியாது.

காஸா மீது இஸ்ரேல் அதி நவீன ஆயுதங்களைக் கொண்டு தரை வழியாகவும், வான் வழியாகவும் மேற்கொள்ளும் தாக்குதல்களால் உயிர்களுக்கும் உடைமைகளுக்கும் ஏற்பட்டு வரும் சேதங்களின் ஒட்டுமொத்த பரிமாணத்தை விளங்கிக்கொள்ள முடியாவிட்டாலும், கணிசமான அளவுக்கு அங்கு நடைபெறும் அட்டூழியங்களை கள நிலையில் நின்று நேரடியாகச் செய்திசேகரிக்கும் செய்தியாளர்களும், புகைப்படப் பிடிப்பாளர்களும் வெளிக்கொண்டு வருகின்றனர். இவர்களில் பலர் சர்வதேசத்திலுள்ள முன்னணி செய்தி ஊடகங்களின் செய்தியாளர்களாக இருப்பதால், அந்த ஊடகங்களுடாக உலகெங்கும் காஸாவின் துயரம் சென்றடையும் சந்தர்ப்பம் இதுவரையில் கிட்டியிருக்கின்றது.

அத்தோடு ஐக்கிய நாடுகள் சபை உள்ளிட்ட சர்வதேச அமைப்புக்களும் காஸாவில் இன்னமும் பிரசன்னமாகியிருப்பதால், அடைக்கலம் தேடி உயிரையேனும் காத்துக்கொள்ளலாம் என்ற நம்பிக்கையாவது அம்மக்களுக்கு எஞ்சியிருக்கும். ஆனால் அந்த நம்பிக்கைகூட அருகிக் கருகிப்போவதை ஐ.நா.வின் பராமரிப்பிலிருக்கும் பாடசாலை அகதி முகாம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் கடந்த வாரத்தில் 15ற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்ட சம்பவம் உணர்த்துகின்றது. இதுபோன்ற சம்பவங்களால் நம்பிக்கை நாளாந்தம் தகர்ந்து போனாலும் ஐ.நா. போன்ற அமைப்புக்களின் பிரசன்னம் இருக்கும் வரையில் பாதிக்கப்படும் மக்களுக்கு ஏதோ ஒரு நம் பிக்கை மிஞ்சியிருக்கும்.

ஐ.நா. தரப்பினரின் பிரசன்னம் இருக்கும் நிலையிலேயே இஸ்ரேலிய படையினரின் மிலேச்சத்தனமான தாக்குதல்கள் இப்படியிருக்கின்றனவென்றால், ஐக்கிய நாடுகள் சபைபோன்ற சர்வதேச அமைப்புகளோ, சர்வதேச ஊடகவியலாளர்களோ, ஏன் உள் நாட்டு ஊடகவியலாளர்களோ இல்லாத நிலையில் முள்ளிவாய்க்காலில் நிகழ்த்தப்பட்ட கொடூரங்கள் எந்த அளவுக்கு அகோரமானவையாக இருந்திருக்கும் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவே நெஞ்சம் பதைக்கின்றது.


முப்பதாண்டுகால போரின் வடுக்கள் ஆறக் காலம் எடுக்கும் என அடிக்கடி கூறுவதனாலோ, அதன்படி காலத்தின் ஓட்டத்தாலோ, மக்களுக்கு ஏற்பட்ட இழப்புக்களின் வலிகளை இல்லாமல் செய்து இந்த நாட்டில் நல்லிணக்கத்தை அடைந்து விடமுடியாது. நடுநிலை ஊடகவியலாளர்களினதோ, நடுநிலையான உலக அமைப்புக்களினதோ பிரசன்னமின்றி முன்னெடுக்கப்பட்ட இறுதிப் போரில் என்ன நடைபெற்றது என்பதை உண்மையாக அறிந்து கொள்வதற்கு ஐ.நாவின் சர்வதேச விசாரணைக் குழுவுடன் ஒத்துழைப்பதும், தாமாக அமைத்துள்ள விசாரணைக் குழுவைச் சுதந்திரமாகச் செயற்பட அனுமதிப்பதும் முக்கியமானதாகும்.

எமது நாட்டில் நிரந்தர நல்லிணக்கத்தை அடைவதற்கான அர்த்த புஷ்டியான முதற்படியாக அமையக்கூடிய இந்த விசாரணைகளை அரசு இதயசுத்தியுடன் அணுகுமேயானால், அடுத்தடுத்த படிகளும் தொடர்ந்து நம்பகத்தன்மை கொண்டவையாகவும், ஆக்கபூர்வமானவையாகவும் அமையும் என்பதில் ஐயமில்லை.

# கொமன்வெல்த் போட்டிக்குச் செல்ல முடியாத நெருக்கடியில் மஹிந்த

## ஏதோ கதை விடுகிறார் அமைச்சர் பீரிஸ்

சிங்கள மூலம்: மவ்பிம
தமிழில்-வீஎஸ்ரீ



இம்முறை ஸ்கொட்லாந்து கிளாஸ்கோ நகரில் இடம் பெற்று வரும் பொதுநலவாய நாடுகளின் (கொமன்வெல்த்) விளையாட்டுப் போட்டிகள் நிகழ்வில் ஜனாதிபதி மஹிந்த கலந்து கொள்வதில்லை என தீர்மானித்தமை குறித்து வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் பிரித்தானிய அரசுக்கு அனுப்பி வைத்த கடிதத்தில் அந்த முடிவுக்கான காரணம் குறித்து இதுவரை வெளியிடப்படாத தகவலொன்று வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கை அரசுக்கு எதிராக பிரித்தானியாவில் வாழும் புலம்பெயர் தமிழர்கள் மேற்கொள்ளும் எதிர்ப்பு நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதில் பிரித்தானிய அரசு தோல்வி கண்டமையே அத்தகையதொரு தீர்மானத்தை இலங்கை அரசு மேற்கொள்ள நேர்ந்தமைக்கான காரணமென பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் இங்கிலாந்தில் இடம்பெற்ற எலிசபெத் மகாராணியின் வைர விழாக் கொண்டாட்டத்தில் கலந்துகொள்ளச் சென்ற ஜனாதிபதி மஹிந்தவின் அந்தப் பயணத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து புலம்பெயர் தமிழர் தரப்பினர் ஜனாதிபதி பயணித்த வாகனத்தின் மீது தண்ணீர்ப் போத்தல்களையும், மென்பான 'ரின்'களையும் வீசித் தாக்குதல் நடத்தியதாக பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெளிவுபடுத்தியிருந்தார். குறிப்பிட்ட அந்தத் தகவலை அவர் தெரிவிக்கும் வரை ஏனைய எவரும் அந்தச் சம்பவம் குறித்து அறிந்திருக்கவில்லை. ஜனாதிபதி தமது அந்தப் பிரிட்டனுக்கான பயணத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பியதன் பின்னர் பிரித்தானியப் பொலிஸார் ஜனாதிபதி மஹிந்தவுக்கு வழங்கிய பாதுகாப்புக்கு இலங்கை அரசு நன்றி தெரிவித்திருந்தது. பிரித்தானியப் பொலிஸாரின் பாதுகாப்புக்கு மத்தியில் மஹிந்தவின் கார் பயணித்த காட்சியை தொலைக்காட்சிகள் கூட ஒளி பரப்பியிருந்தன. அந்த வகையில் புலம்பெயர் தமிழ் அமைப்புக்களது எதிர்ப்பையும் பொருட்படுத்தாது பிரித்தானிய அரசு மஹிந்தவுக்கு பாதுகாப்பும் வரவேற்பும் வழங்கியிருந்ததாக அந்த வேளையில் இலங்கை அரசு பொது மக்களுக்குத் தெரியப்படுத்தியிருந்தது. ஆனால் குறிப்பிட்ட அந்தச் சம்பவம் இடம்பெற்று சில ஆண்டுகள் கழிந்து போய்விட்ட இன்றைய நிலையில், லண்டனில் வைத்து மஹிந்த பயணம் செய்த வாகனத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக இலங்கை அரசு கதையொன்றை அவிழ்த்து விடுகிறது. அத்தோடு இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் காரணமாகவே ஜனாதிபதி மஹிந்த பொதுநலவாய நாடுகளின் விளையாட்டுப் போட்டி நிகழ்வுக்குச் செல்வதில்லையென முடிவு செய்ததாக வும் அரசு தெரிவித்துள்ளது.

இத்தனைக்கும் ஜனாதிபதி மஹிந்த தற்போது பொதுநலவாய நாடுகள் அமைப்பின் நிர்வாகத் தலைவர். அந்த அமைப்பின் அவ்வேளைய நிர்வாகத் தலைவர் கலந்து கொள்ளாத நிலையில் அமைப்பின் விளையாட்டுப் போட்டிகள் இடம்பெறுவது இதுவே முதல் தடவையாகும். மஹிந்த பொதுநலவாய நாடுகள் அமைப்பின் நிர்வாகத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின்னர் கடந்த மார்ச் மாதத்தில் பொது நலவாய நாடுகள் அமைப்பு நிறுவப்பட்ட தினம் கொண்டாடப்பட்டது. அந்த நிகழ்வில் கூட பொது நலவாய நாடுகள் அமைப்பின் தற்போதைய நிர்வாகத் தலைவர் என்ற வகையில் அமைப்பின் விசேடத் தலைவியான எலிசபெத் மகாராணியைச் சந்தித்திருக்கவில்லை.

அதேபோன்று இலங்கையில் இடம்பெற்ற மாநாட்டில் மஹிந்தவை அமைப்பின் நிர்வாகத் தலைவராக நியமித்த வேளையில் கூட பொதுநலவாய நாடுகளின் தலைவியான பிரிட்டிஷ் மகாராணியார் மாநாட்டுக்குச் சமுகமளிக்கவில்லை. அவருக்காக அவரது மகன் முடிக்குரிய இளவரசர் சார்ள்ஸ் மட்டுமே கலந்து கொண்டார். அதனால் பொது நலவாய நாடுகள் அமைப்பு நிறுவப்பட்ட நாள் நிகழ்வில் கலந்துகொண்டு எலிசபெத் மகாராணியைச் சந்தித்து உரையாட மஹிந்த எதிர்பார்ப்புடன் இருந்தார். ஆனால் குறிப்பிட்ட நிகழ்வில் கலந்து கொள்ள பிரிட்டனுக்கு வருகைதர வேண்டாமென பிரித்தானிய அரசு மஹிந்தவுக்கு அறிவுறுத்தியது. மஹிந்தவின் பிரித்தானியப் பயணத்தின் போது எதிர்ப்பு வெளியிடத் திரளும் புலம்பெயர் தமிழர் அமைப்பினரின் எதிர்ப்பைச் சமாளித்து மஹிந்தவுக்குப் பாதுகாப்பு வழங்க இயலுமாயினும், அதனை நூற்றுக்கு நூறு வீதம் உறுதிப்படுத்த இயலாதென பிரித்தானிய அரசு தெரிவித்தது. பொதுநலவாய நாடுகள் அமைப்பு நிறுவப்பட்ட தின நிகழ்வில் கலந்துகொள்ளாதிருந்த அந்த அமைப்பின் முதலாவது நிர்வாகத் தலைவர் மஹிந்ததானா என்பது தெரியவில்லை. குறிப்பிட்ட அந்த நிகழ்வில் தாம் கலந்து கொள்வதற்கு உரிய பாதுகாப்பை வழங்க பிரித்தானிய அரசு பின்னடித் தமை குறித்து அந்த வேளையில் மஹிந்த பிரித்தானிய அரசு மீது குற்றம் சாட்டினாரில்லை. அந்த நிகழ்வில் கலந்துகொள்ள இயலாத தமது சூழ்நிலையை விட்டுக்கொடுக்காது சமாளிக்கும் விதத்தில், வேறொரு வெளிநாட்டுப் பயணமொன்றைத் தாம் மேற்கொள்ள வேண்டியிருப்பதால் குறிப்பிட்ட அந்த நிகழ்வில் தம்மால் பங்கேற்க இயலாதுள்ளதாக அறிவித்துச் சமாளித்து விட்டார். ஆனால் தற்போது பொதுநலவாய நாடுகளின் விளையாட்டுப் போட்டி நிகழ்வில் கலந்து கொள்வதில்லையென ஜனாதிபதி தீர்மானித்தமைக்கான காரணம் புலம்பெயர் தமிழர் அமைப்புக்களின் எதிர்ப்பே என்று இலங்கை அரசு தெரிவிக்கின்றது. ஆனால் உண்மையில் இந்தத் தடவையும் பிரித்தானிய அரசு மஹிந்தவின் பாது காப்பைக் கருத்தில்கொண்டு, பொது நலவாய நாடுகளின் விளையாட்டுப் போட்டி நிகழ்வில் கலந்துகொள்ளப் பிரிட்டனுக்கு வருவதைத் தவிர்க்குமாறு உத்தியோக பூர்வமற்ற விதத்தில் அறி வுறுத்தியிருக்கக் கூடுமா என்பது குறித்து எதுவும் கூற இயலாதுள்ளது. அதனால் ஏற்பட்ட சினம் காரணமாகவே அரசு ஜி.எல்.பீரிஸைப் பயன்படுத்தி, போத்தல்களாலும், 'ரின்'களாலும் புலம் பெயர் தமிழர்கள் மஹிந்த பயணித்த வாகனத்தின் மீது தாக்குதல் மேற் கொண்டனர் என்ற பழைய கதை யொன்றை அவிழ்த்துவிட்டு பிரித்தானிய அரசைக் குற்றம் சாட்டுகின்றதா என்பது குறித்தும் கூட எதுவும் தெளி வாகக் கூற முடியவில்லை.

எது எவ்வாறான போதிலும், மஹிந் தவை இந்த முறை பொதுநலவாய நாடுகள் அமைப்பின் நிர்வாகத் தலைவராக்குவதற்காக, அமைப்பின் உச்சி மாநாட்டை இலங்கையில் நடத்துவதற்காக இலங்கை அரசு பல மில்லியன் கணக்கான பணத்தைச் செலவிட்டது. இந்தப் பெருந்தொகை நிதி வேறெந்த நாடுகளாலோ, நபர்களாலோ வழங்கப்பட்ட ஒன்றல்ல. இந்த நாட்டின் பொது மக்களது சட்டைப் பைகளுக்குள்ளிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பணமே அது. ஆனால் கடைசியில் பொதுநலவாய நாடுகள் அமைப்பின் தற்போதைய நிர்வாகத் தலைவரான ஜனாதிபதி மஹிந்தவால், பொதுநலவாய நாடுகள் அமைப்பு நிறுவப்பட்ட தின நிகழ்விலோ, அன்றேல் பொதுநலவாய நாடுகள் அமைப்பின் விளையாட்டு விழாவிலோ கலந்துகொள்ள இயலாததொரு நிலை ஏற்பட்டுள்ளது. அந்த வகையில் பொதுநலவாய நாடுகள் அமைப்பின் தற்போதைய நிர்வாகத் தலைமைப் பதவியை வகிக்கும் இலங்கைக்கு இதுவோர் வெட்கக் கேடாகக் கொள்ளத்தக்கதாகும். பொதுநலவாய நாடுகள் அமைப்பின் உச்சி மாநாட்டை இங்கு நடத்தி அதன் நிர்வாகத் தலைமைப் பதவியை ஏற்பதற்கு முன்னர் அரசு இவை பற்றிச் சிந்தித்திருக்க வேண்டும்.

2009 ஆம் ஆண்டில் போர் முடிவுக்கு வந்த நாளன்று அரசின் பங்காளிக் கட்சியினர் இலங்கையிலுள்ள பிரித்தானி யத் தூதராலயத்தைச் சூழ்ந்து கொண்டு அந்த வேளையில் பிரித்தானிய வெளியுறவு அமைச்சராகவிருந்த மிலி பான்ட்டை விடுதலைப் புலியாக உருவகப்படுத்தி பெரும் ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டனர். பழுதடைந்த தக்காளி, கூழ்முட்டை என்பவற்றை தூதராலய சுவர்கள் மீது வீசி அசுத்தப்படுத்தினர். தூதரகக் கட்டடத்தின் மீது கல் வீசித் தாக்கித் தமது ஆத்திரத்தை வெளிப்படுத்தினர். இவற்றையெல்லாம் அரச நிர்வாகம் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்ததே தவிர அவற்றைத் தடுக்க உரிய நடவடிக்கை எதையும் மேற்கொள்ளவில்லை. தற்போது பிரித்தானியா தனக் குக் கிட்டிய வாய்ப்பைப் பயன்படுத்தி அதற்குப் பழி தீர்த்துக் கொள்கிறது என்றே கருத வேண் டியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்திய சுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 178

# “தாய்ப்பாலூட்டல் வாழ்வுக்கான ஒரு வெற்றி தரும் இலக்கு”



**உலக தாய்ப்பாலூட்டல் வாரம் ஓகஸ்ட் 1 - 7. 2014**

தாய்ப்பாலூட்டலின் முக்கியத்துவம் கருதி, இந்த வருடமும் ஓகஸ்ட் முதலாம் திகதி முதல் 7 ஆம் திகதி வரை உலக தாய்ப்பாலூட்டல் வாரம் அனுஷ்டிக்கப்படுகிறது. இந்த வருடத்தின் தொனிப்பொருள். "தாய்ப்பாலூட்டல்: வாழ்வுக்கான ஒரு வெற்றி தரும் இலக்கு" என்பதாகும். ஒவ்வொரு குழந்தைக்கும் தாய்ப்பாலூட்டலை பிறந்ததிலிருந்து வெற்றிகரமாக வழங்கும்போது, அந்தக் குழந்தை சுகதேகியாக வளர வாய்ப்புக்கிட்டும். அதன் மூலம் வாழ்வு வளமடையும் என்பதே இந்தத் தொனிப்பொருளின் கருத்தாகும். எனவே தாய்ப்பாலூட்டலை ஊக்கிவிப்பதற்காகவும், அதனை இடையூறின்றி ஒரு தாய் தனது குழந்தைக்கு குறைந்தது குழந்தையைப் பிரசவித்து. இரு வருடம்வரை வழங்க உதவவேண்டும் என்பதற்காகவும், மக்களிடையே தாய்ப்பாலூட்டலின் முக்கியவத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும் உலக தாய்ப்பாலூட்டல் வாரம் ஒவ்வொரு வருடமும் ஓகஸ்ட் முதலாம் திகதி முதல் 7 ஆம் திகதி வரை கொண்டாடப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் சபையால் 1990 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட மில்லேனியம் அபிவிருத்தி இலக்குகளில் ஒன்றான, ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளின் இறப்பு வீதத்தை, 1990 ஆம் ஆண்டில் காணப்பட்டதை விட கால்வாசியாக 2015 ஆம் ஆண்டளவில் குறைப்பதற்கு உலகளாவிய ரீதியில் தாய்ப்பாலூட்டலை ஊக்குவித்தலும் முக்கியமாக அமைகிறது. குழந்தை பிறந்து முதல் 6 மாதம் வரைக்கு தனித்தாய்ப் பாலூட்டலும், அதன் பின்னர் தாய்ப்பாலூட்டலைத் தொடர்ந்து கொண்டே சரியான முறையில் மிகைநிரப்பு ஆகாரமூட்டலும் (Complementary Feeding) அந்தக் குழந்தையின் நல்வாழ்வுக்கு இன்றியமையாதவையாகும். எனவேதான், நாம் தாய்ப் பாலூட்டலை ஊக்குவிப்பதற்கும், தாய்ப்பாலூட்டல் முறையை பாதுகாக்கவும் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். அதற்காக தாய்ப்பாலூட்டலின் நன்மைகள் பற்றி நாம் அறிந்திருக்க வேண்டும். தாய்ப்பாலூட்டலால் குழந்தைக்குக் கிடைக்கும் நன்மைகள்.

1. தாய்ப்பாலானது குழந்தைக்கு ஏற்ற (குறைமாதமாயினும், நோயுற்றவராயினும்) அனைத்து வகைச் சத்துக்களும் அடங்கிய, இலகுவில் சமிபாடடையக்கூடிய பூரண உணவு என விஞ்ஞான ரீதியில் நிரூபிக்கப்பட்டுள்ளது.
2. குழந்தையினுடைய உணவுகளையும் உளநலத்தையும் தாய்ப்பாலூட்டல் பூர்த்தி செய்யும். உதாரணமாக குறைமாதக் குழந்தைகளை எடுத்தால் தாய்ப்பாலூட்டலை பெறாத குழந்தைகள் அதிகமாக இறக்கிறார்கள்.
3. தாய்க்கும் குழந்தைக்குமிடையேயான பாசப் பிணைப்பும் அன்பும் தாய்ப்பாலூட்டும்போது அதிகரிக்கும்.
4. தாய்ப்பாலில் கிருமித்தொற்றுக்கான எதிர்ப்புசக்திகள் அதிகமாக உள்ளன. இந்த எதிர்ப்பு சக்திகள் மாப்பாலில் காணப்படுவதில்லை. எனவே தாய்ப்பாலில் இருந்தும் குழந்தைகளுக்கு சளிக்காய்ச்சல், வயிற்றோட்டம், காதினுள்ளே கிருமித் தொற்று போன் றவை ஏற்படும் வாய்ப்பு மாப்பால் அருந்தும் குழந்தை களைவிட மிகக் குறைவாகவே இருக்கும்.
5. தாய்ப்பாலருந்திய குழந்தைகளின் மூளை வளர்ச்சியும், நுண்ணறிவும் மாப்பால் அருந்திய குழந்தைகளைவிட அதிகமாகும்.
6. தாய்ப்பால் அருந்திய குழந்தைகளுக்கு பிற்காலத்தில் ஒவ்வாமை நோய்களான எக்சிமா, ஆஸ்துமா(இழுப்பு) போன்றவை ஏற்படுவது குறைவடையும்.
7. மாப்பால் அருந்திய குழந்தைகளைவிட தாய்ப்பால் அருந்திய குழந்தைகளுக்கு அதிகநிறை (Obesity) உயர்குருதி அமுக்கம் (Hight Blood Pressure), சலரோகம் போன்ற நாட்பட்ட நோய்கள் பிற்காலத்தில் ஏற்படுவதற்கான வாய்ப்புக் குறைவு என ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன.

**தாய்ப்பாலூட்டலினால் தாய்க்குக் கிடைக்கும் நன்மைகள்.**

1. தாய்ப்பாலூட்டலை நீண்டகாலம் மேற்கொண்ட ஒரு தாய்க்கு மார்பகப் புற்றுநோய், கர்ப்பப்பை புற்றுநோய் போன்ற புற்றுநோய்கள் ஏற்படாது.
2. அதேபோல் தாய்ப்பாலை அருந்திய பெண்குழந்தைக்களுக்கு பிற்காலத்தில் மார்பகப் புற்று நோய் ஏற்படுவதற்கான வாய்ப்பு, மாப்பால் அருந்திய பெண் குழந்தைகளை விட மிகக் குறைவாகும்.
3. தாய்ப்பாலூட்டலை மேற்கொள்ளும் தாய் அதிக நிறையுடையவராயின் அவரது நிறையைக் குறைக்க தாய்ப்பாலூட்டல் வழிவகுக்கும். அதேபோல் தாய்ப்பாலூட்டலைத் தொடரும்போது, மீண்டும் கர்ப்பமடைவதற்கான வாய்ப்பு குறைவு என்பதால் தாய்ப்பாலூட்டல் ஓர் இயற்கையான கர்ப்பத்தடை முறையாக அமைகிறது.

**தாய்ப்பாலூட்டலால் குடும்பத்துக்குக் கிடைக்கும் நன்மைகள்.**

1. தாய்ப்பாலை பணம் கொடுத்து வாங்க வேண்டியதில்லை மாப்பாலுக்காகவும் பாத்திரங்களுக்காகவும். பணம் செலவழிக்க வேண்டியதில்லை.
2. தாய்ப்பால் அருந்தும் குழந்தை சுகதேகியாக வளர்வதால் வைத்தியத்துக்காகவும் பணம் செலவழிக்க தேவையில்லை. அனாவசியமாக வைத்தியசாலைக்கு அலையவும் வேண்டியதில்லை.
3. எனவே குடும்பத்துக்கு மகிழ்ச்சியும் சுகவாழ்வும் கிடைக்கும்.

மேற்குறிப்பிட்டவை போன்ற இன்னும் பல நன்மைகள் தாய்ப்பாலூட்டலால் கிடைப்பதால் இப்போது உலகளாவிய ரீதியில் தாய்ப்பாலூட்டலைப் பலரும் பரிந்துரை செய்கிறார்கள். பல வளர்ச்சியடைந்த நாடுகளிலும் இப்போது தாய்ப்பாலூட்டலை ஊக்குவிப்பதற்கான பல்வேறு விழிப்புணர்வு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. தாய்ப்பாலூட்டலைப் பாதுகாப்பதற்காக பல சட்டங்களும் உள்ளன. இலங்கையிலும், குடும்ப சுகாதார பணியகம் பல வழிகளிலும் தாய்ப் பாலூட்டலை ஊக்குவிக்கின்றது. சுகாதார ஊழியர்களுக்கு பல்வேறு பயிற்சிகளையும், குழந்தைபேறு நடைபெறும் வைத்தியசாலைகளில் தாய்ப்பாலூட்டல் முகாமைத்துவ அலகுகளையும் (Lactation Management Center) நிறுவி வருகின்றது. அந்த வகையில் யாழ். போதனா வைத்தியசாலையிலும் தாய்ப்பாலூட்டல் சம்மந்தமான பிரச்சினைகளைத் தீர்க்க தாய்ப்பாலூட்டல் முகாமைத்துவ அலகு செயற்படுகிறது. தாய்ப்பாலூட்டல் சம்பந்தப்பட்ட பிரச்சினை உள்ள தாய்மார் அந்தப் பிரிவுக்கு நேரடியாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ (தொ.இல: 0212222261, பக்ஸ்: 338/309) பகல்வேளைகளில் தொடர்பு கொள்ளலாம். மேலும் இந்தத் தாய்ப்பாலூட்டல் வாரத்தில் தாய்ப்பாலூட்டலை ஊக்குவிப்பதற்கும் பாதுகாக்கவும் நாம் அனைவரும் முயற்சிக்க வேண்டும்.

மருத்துவர் ந.ஸ்ரீசரவணபவானந்தன்
குழந்தை நல வைத்திய நிபுணர்
யாழ்.போதனா வைத்தியசாலை.

# பல வகையான உணவுகளை தினமும் உணவுக்காக எடுத்துக் கொள்வோம்

நாம் அன்றாடம் உண்ணும் உணவு ஆறு உணவுப் பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. தினமும் சகல உணவுப் பிரிவுகளில் இருந்தும் அவசியமான அளவுகளில் உணவுகளை உள்ளெடுப்பதன் மூலம் எமக்கு ஒவ்வொரு நாளும் தேவையான சகல போஷணைக் கூறுகளையும், தேவையான அளவுகளில் பெற்றுக்கொள்ள முடியும். ஒரு சில உணவுப் பிரிவுகளினுள் உள்ளடங்கும் உணவு வகைகளை அதிகளவில் உள்ளெடுப்பதினாலோ அன்றி குறைந்தளவில் எடுப்பதினாலோ அல்லது முற்றாக தவிர்ப்பதனாலோ எமக்குத் தேவையான சில போஷணைக்கூறுகள் (மாப்பொருள், புரதம், கொழுப்பு, விற்றமின்கள், கனியுப்புக்கள்) அதிகளவிலோ, அன்றி குறைவாகவோ, அன்றி கிடைக்காமலோ போகக் கூடும். எனவே தினமும் பல வகையான உணவுகளை அவசியமான அளவுகளில் உள்ளெடுத்தல் அத்தியாவசியமாகும்.

ஆறு உணவுப் பிரிவுகளும் அவற்றின் தொழிற்பாடுகளும் ஆவன,

**i. தானிய வகைகள்**

உ+ம் - அரிசி, குரக்கன் முதலிய தானியங்கள் மற்றும் அரிசிமா, கோதுமை மாவி னால் செய் யப்பட்ட உணவுகள் மற்றும் உருளைக் கிழங்கு, பூசணி, மரவள்ளி போன்ற கிழங்கு வகைகள்.
இவை தொழில் உடற்றொழிற் பாட்டுக்கு அத்தியாவசியமமான சக்தியை வழங்கும்.

**ii. மரக்கறிகள் மற்றும் கீரை வகைகள்**

இவை விற்றமின் மற்றும் கனியுப்புக்களை வழங்குகின்றது.
நோய் ஏற்படாது தடுக்க, நோய் குணமாக்குவதை விரைவுபடுத்த இவை உதவும்.

**iii. பழங்கள்**

இவை விற்றமின் மற்றும் கனியுப்புகளை வழங்கும்.
நோய் ஏற்படாது தடுக்க, நோய் குணமாவதை விரைவுபடுத்த இவை உதவும்.

**iv. இறைச்சி வகைகள்**

உ+ம் - பருப்பு மற்றும் பயறு, கடலை, கௌபி முதலிய விதை வகைகள், அவரை வகைகள் மற்றும் மீன், முட்டை, கருவாடு, இறைச்சி வகைகள் முதலியன இவை புரதத்தை வழங்கும்.
உடல் வளர்ச்சிக்கும், உடல் வளர்ச்சியை பேணவும் இவை உதவுகின்றன.

**v. பால் மற்றும் பால் உற்பத்திப் பொருள்கள்**

உ+ம் - பால், மற்றும் பாலிலிருந்து தயாரிக்கப்படும் உற்பத்திப் பொருள்களான யோக்கட், தயிர், வெண்ணெய் கட்டி, ஐஸ்கிறீம், மோர் போன்றவை.
இவை புரதத்தை வழங்கும்.
கல்சியம் முதலிய அவசியமான கனியுப்புக்கள் மூலம், என்பு வளர்ச்சி, என்பு இயக்கத்துக்கும் இவை உதவும்.

**vi. எண்ணெய் வகைகள்**

உ+ம் - தேங்காய் மற்றும் கஜு/ நிலக் கடலை / எள் முதலிய வித்து வகைகள் மற்றும் மாஜரின், பட்டர் போன்றவை மற்றும் தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய், சூரிய காந்தி எண்ணெய் முதலிய எண்ணெய் வகைகள் போன்றவை.
இவை உடலுக்கு அத்தியாவசியமான சக்தியை வழங்கும்
உடலைப் பேணிப் பாதுகாப்பதற்கும் உடற்றொழிற்பாடுகள் சீராக நடைபெறவும் இவை அவசியமாகும்.

**ஏன் ஒவ்வொரு தனிநபருக்கும் நாளாந்தம் தேவைப்படும் போசணைக் கூறுகளின் அளவு வேறுபடுகின்றது?**

மேற்கூறப்பட்ட ஒவ்வொரு உணவுப் பிரிவிலிருந்தும் ஒவ்வொரு தனிநபருக்கு நாளாந்தம் தேவைப்படும் உணவின் அளவு வேறுபடுகின்றது. இந்த அளவு ஒவ்வொரு தனிநபரின் வயது, பால் (ஆண்/பெண்) உடல்/பௌதிக வளர்ச்சிப் பருவம் (குழந்தை, சிறார், வளரிளம் பருவம், முதிர்பருவம், கர்ப்பிணி ) என்பனவற்றிற்கேற்பவும் மற்றும் செயற்பாட்டு மட்டத்துக்கேற்பவும் வேறுபடுகின்றது.

**மரக்கறி மாத்திரம் உண்போர் / மாமிச மற்ற உணவு வகைகளை அதிகம் உண்போர் எவ்வாறு மேலும் ஆரோக்கியமான உணவுகளைத் தெரிவு செய்ய முடியும்?**

அடிக்கடி/ தினமும் மரக்கறி உணவு உண்பவர்கள் அல்லது மாமிச உணவு உண்ணாத தனிநபர்கள் தத்தமது உணவை மிகக் கவனமாக தெரிவு செய்வதன் மூலம் தமக்குத் தேவையான சகல போசணைக் கூறுகளையும் பெற்று ஆரோக்கியத்துடன் வாழமுடியும். ஏனெனில் தனி மரக்கறி உணவு, பூரணமற்ற புரதங்களைக் கொண்டிருப்பதுடன், உடலினால் குறைந்தளவே அகத்துறிஞ்சக்கூடிய இரும்பு மற்றும் கல்சியத்தைக் கொண்டுள்ளது. எனவே

- தினமும் கடும்பச்சை நிற கீரைவகைகள், சோயா, பயறு, கடலை, கௌபி போன்ற விதைவகைகள், பருப்பு வகைகள் உணவில் சேர வேண்டும்.
- புரதம் அதிகமுள்ள தாவர உணவு வகைகளை என்பன சேர்த்து சமைத்தல் மிகவும் நன்று.

உ+ம் - பருப்பு + போஞ்சி கறி
பயிற்றங்காய் + சோயா சேர்த்த கறி
கடலைப் பருப்பு + சிறகவரை சேர்த்த கறி

- பால்/பால் உணவுகளை தினமும் உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

இதன் மூலம் உடலுக்கு அவசியமான Ca விற்றமின் $B_{12}$, புரதங்களைப் பெறலாம்.

போசாக்கியலாளர் தாரணி முரளிஹரன்,
(Mphil -Reading (Food & Nutrition))
நீரிழிவு சிகிச்சை நிலையம்,
யாழ்.போதனா வைத்தியசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



நெடுந்தீவுப் பிரதேசசபை அலுவலர்களில்
ஒருவராக எம்முடன் சேவையாற்றும்
**க.சத்தியேந்திரா**
அவர்களின் பாசமிகு தாயார்
**கமலம் கந்தையா**
அவர்களின் பிரிவால் வருந்தும் அவரது குடும்பத்தினரின் துயரத்தில் பங்கு கொண்டு எமது கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.

(50534) **பிரதேசசபை, நெடுந்தீவு**

# கஞ்சிக் கலயங்களை ஏந்தியவாறு ஊர்வலம்

### ஆடிப்பூரத்தையொட்டி இன்று

மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீடத்தின் யாழ். மன்றத்தினர், ஆடிப்பூர விழாவையொட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை கஞ்சிக்கலய ஊர்வலம், பாலபிடேகம் மற்றும் வழிபாட்டு நிகழ்வுகளை ஏற்பாடு செய்துள்ளனர். திருநெல் வேலி அருள்மிகு முத்துமாரி அம்பாள் ஆலய முன் றிலில் தயாரிக்கப்படும் கஞ்சியை சின்னஞ்சிறிய மண் பானைகளில் நிரப்பி ஏந்தியவாறு செவ் வாடை சக்திகளின் ஊர்வலம் இடம்பெறும்.

அன்னை ஆதிபராசக்தியின் திருவுருவப் படங்கள் தாங்கிய வண்ணம் கஞ்சிக் கலயங்களுடன் செவ்வாடை சக்திகள், அங்கிருந்து ஊர்வலமாக அணிவகுத்து சட்டநாதர் சிவன் கோயிலுக்குச் சமீபமாகவுள்ள திவ்ய ஜீவன சங்க மண்ட பத்தை அடைவர். அங்கு அன்னை ஆதிபரா சக்தியின் திருவுருவச் சிலை, சுயம்புவுக்கும் பால் அபிடேகம் இடம்பெறும். தொடர்ந்து மகேஸ்வர பூசையுடன் ஆடிப்பூர விழா நிறைவுபெறும். (ஓ)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**ந.முருகானந்தம்**
(கலாபூஷணம் தவில் மேதை)

தோற்றம் 16 * 08 * 1944
மறைவு 02 * 08 * 2010

திதி: 03.08.2014

எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே !
ஆண்டுகள் நான்கு வந்ததப்பா உடலைப் பிரிந்தோம்.
இசையுலகில் ஒரு தவில் நாத ஓசையை இழந்தோம்
என்னுயிர் பிரியும் வரை உறங்கினால் கனவிலும்
முழித்தால் நிழல்கள் எங்கள் கூடவே
வருவது போல் மனவேதனை

அனைவரும் உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

தாவடி. (50449)(5-6-3) குடும்பத்தினர்.

## ஈரவிழிகளில் இருபது ஆண்டுகள்

அமரர் நாகலிங்கம்
**தர்மராஜா**
(உரிமையாளர்- டைமன் வெல்டேர்ஸ், நெல்லியடி)



தோற்றம் 23 . 07 . 1942
மறைவு 03 . 08 . 1994

பாசத்தைப் பொழிந்து அன்பாக வளர்த்து
எங்களை ஆளாக்கிய அருமையான அப்பாவே!
எம்மைத் தவிக்கவிட்டு எங்கு சென்றீர்கள்
எப்பொழுதும் எங்களையே சுற்றி நிற்பீர்கள்
நாகலிங்கம் பெற்றெடுத்த மூத்த வைரமே
நடமாடும் வீட்டில் படமாகி விட்டீர்கள்
அப்பா, அப்பா என்று ஆசையும் கூற முடியாதவாறு
எம்மை அநாதைகள் ஆக்கிவிட்டு எங்கு சென்றீர்கள்
எங்களிடம் இருந்து நீங்கள் பிரிந்தாலும்
எங்கள் இதயத்தில் நிலையாக நிற்கும்
உங்கள் நினைவுகள் எத்தனை வருடங்கள்
சென்றாலும் எங்கள் உள்ளத்தில் என்றும் நிலைத்திருக்கும்.

அன்பு மனைவி: இராஜேஸ்வரி
பிள்ளைகள்: விஜிதா, மணிவண்ணன், கமலக்கண்ணன், சோபியா அருள்குமரன்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உடன் பிறப்புக்கள்.

தோப்புவளவு, எல்லைவீதி,
நவிண்டில்,
கரவெட்டி. (50447)(4.6.3)

## நினைவலைகள்

20ஆம் ஆண்டு 02ஆம் ஆண்டு





தோற்றம் 06.07.1930
மறைவு 19.07.1994

தோற்றம் 03.02.1934
மறைவு 26.07.2012

திதி: 03.08.2014

**முருகேசு கணபதிப்பிள்ளை** **கணபதிப்பிள்ளை சிவபாக்கியம்**

இனிய வாழ்வு தந்த தெய்வங்களே!
நல்லதோர் தந்தையும் தாயும் கிடைத்த
அதிர்ஷ்டசாலிகள் நாம் என எண்ணியவேளை
உங்களை ஏன் பிரித்தான் காலன்?
எங்கள் உயர்வுக்கு உறுதுணையாக அமைந்த
உங்கள் சிரித்த முகங்களைக் காண்பதற்கு
ஏங்கித் தவிக்கின்றோம்
நிறைவான வாழ்வைத்தந்த
எங்கள் அப்பா அம்மாவின் ஆத்மா சாந்தியடைய
இறைவனை என்றும் பிரார்த்திக்கின்றோம்.

(49722)(12.3.6)

அம்பன்,
குடத்தனை. குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



## திருமதி பூரணம் கனகர்

ஆவரங்கால் மேற்கு, சிவன்வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூரணம் கனகர் 28.07.2014 திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் கனகர் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நாகர்-சந்தி தம்பதியரின் அன்பு மகளும், பேபி, தவராசா(பிரான்ஸ்), நகுலேஸ்வரன்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத்தாயாரும், சந்திரநாதன் (முன்னாள் கிராமிய வங்கி முகாமையாளர், அச்சுவேலி), சந்திரகலா (பிரான்ஸ்), உமா(பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும், கிருஷ்ணன், வையிரி ஆழ்வார், சிதம்பரம் ஆகியோரின் சகோதரியும், வையிரி, வெள்ளைக்குட்டி, பூலோகம், சின்னத்தம்பி, கந்தையா, மாணிக்கம், இலட்சுமி, செல்லத்துரை (முறிவு, நெரிவு வைத்தியர்-புத்தூர்) ஆகியோரின் மைத்துனியும், கேமலோசன், கேமதாசன், கேமபாலன், கேமினா, தருஷா, சஞ்சித், நிரோஜ், சர்மினா, கிஷோத் ஆகியோரின் பேர்த்தியும், விதுன், விதுனா, விதுர்ஷிகா, கியாஷ் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.08.2014) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, மு.ப. 11.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக ஆவரங்கால் கரதடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தவராசா: [illegible] 8652/ நகுலேஸ்வரன் : 065 248 3028
சந்திரநாதன்: 077 322 7798

தகவல்:
சிவன் வீதி, ஆவரங்கால் மேற்கு. (50503)(4.3.6) குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநோயாளர் பிரிவுச் சேவை மாலை 6 மணியுடன் நிறுத்தப்படும்

## சாவகச்சேரி மருத்துவமனையில்

யாழ்ப்பாணம், ஓக. 3

சாவகச்சேரி மருத்துவமனையில் இரவு 8 மணி வரையும் நடத்தப்பட்டுவரும் வெளிநோயாளர் பிரிவின் சேவை மாலை 6 மணியுடன் நிறுத்தப்படவுள்ளதாக தகவல் கசிந்துள்ளது. மருத்துவமனையில் ஏற்பட்டுள்ள மருத்துவர் பற்றாக்குறை காரணமாக வெளிநோயாளர் பிரிவை மாலை 6 மணியுடன் மூடுவது தொடர்பாக யாழ்.பிராந்திய சுகாதார திணைக்களத்துக்கு கடிதம் அனுப் பப்பட்டுள்ளது. நாட்டிலுள்ள மருத்துவமனைகளில் காலை 8 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை வெளிநோயாளர் பிரிவுகள் இயங்க வேண்டும் என்று சுகாதாரத் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டுள்ளதை யடுத்து பல மருத்துவமனைகளில் இரவு 8 மணி வரை நடத்தப்பட்டு வந்தசேவை மாலை 6 மணி வரையாகக் குறைக்கப்பட்ட போதிலும் சாவகச்சேரி மருத்துவ மனை வெளிநோயாளர் பிரிவுக்கு வரும் நோயாளர்களின் நலன்கருதி தொடர்ந்து இரவு 8 மணிவரை வெளிநோயாளர் பிரிவு இயங்கி வருகிறது. மருத்துவமனையில் ஏற்பட்டுள்ள மருத்துவர் பற்றாக்குறை காரணமாக இரவுக் கடமைக்கு இரண்டு மருத்துவர்களே கடமையாற்றுவதால் விடுதி நோயாளர்களைப் பார்வையிடல் மற்றும் அவசர நோயாளர்களைப் பார்வையிடல் போன்றவற்றால் வெளிநோயாளர் பிரிவுக்கு வருவோருக்கு உடனுக்குடன் சேவைகள் வழங்க முடியாத நிலை தோன்றியுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு தற்போது இரவு 8 மணி வரை நடத்தப்படும் வெளிநோயாளர் பிரிவின் சேவையை மாலை 6 மணி வரையாகக் குறைப்பது தொடர்பாகப் பிராந்திய சுகாதார திணைக்களத்துக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. (வ)





## உலக தர்ம் வாய்ந்த சுகாதார பராமரிப்பு இலங்கை மக்களுக்காக

Joint Commission International (JCI)

GOLD SEAL OF APPROVAL

## டேர்டன்ஸ் மருத்துவமனை அங்கீகரிக்கப்பட்டுள்ளது

1st JCI அங்கீகரிக்கப்பட்ட முதல் மருத்துவமனை

டேர்டன்ஸ் மருத்துவமனையை ஐக்கிய அமெரிக்க குடியரசில் அமைந்துள்ள சர்வதேச பொது ஆணைக்குழுவினால் Joint Commission International உலக தரம் வாய்ந்த சுகாதார பராமரிப்பு நிறுவனமென உத்தியோகபூர்வமாக அங்கீகரித்து சான்றுப்படுத்தப்பட்டுள்ளது.

டேர்டன்ஸ் மருத்துவமனை இலங்கையின் மருத்துவத்துறை வரலாற்றில் சர்வதேச பொது ஆணைக்குழுவினால் Joint Commission International உலக தர சுகாதார பராமரிப்பு வழங்குதலில் Gold Seal of Approval™ (பொன் தர சான்றிதழை) பெற்ற முதல் மருத்துவமனையாக விளங்குகின்றது. சர்வதேச பொது ஆணைக்குழுவானது (JCI) மேம்படுத்தப்பட்ட உலக தர சுகாதார பராமரிப்பு மற்றும் நோயாளிகளின் பாதுகாப்பு என்பவற்றை இனம் கண்டு, அறவீடு செய்து மேம்படுத்தப்பட்ட உலக தர சுகாதார பராமரிப்பு சேவையை வழங்க அனைத்து சுகாதார பராமரிப்பு நிறுவனங்களுக்கும் தலைமைத்துவத்தையும் அறிவுறுத்தல்களையும் வழங்குகின்றது. இதன் படி நோயாளிகளின் பாதுகாப்பு மற்றும் தரமிக்க பராமரிப்பு ஆகியவைகளின் சர்வதேச தர யுக்திகளை கையாளுகின்றமைக்காகவே சர்வதேச பொது ஆணைக்குழுவினால் (JCI) இப்பொன்முத்திரை சான்றிதழ் எமக்கு சான்றப்பட்டுள்ளது.

இலங்கை முதல் தர மருத்துவ மனையாக விளங்கும் டேர்டன்ஸ் மருத்துவமனை சர்வதேச தரம் வாய்ந்த சுகாதார பராமரிப்பு நிறுவனமாக இனம் கண்டு கொண்டமையினால் இலங்கையின் சுகாதார பராமரிப்பு சேவையை சர்வதேச தரத்திற்கு கொண்டு செல்ல நாம் முன்னின்றமைக்காக பெருமை அடைகின்றோம். இம்மாபெரும் சாதனை டேர்டன்ஸ் மருத்துவ மனைக்கு மட்டுமல்லாது அனைத்து இலங்கையின் சுகாதார பராமரிப்பு சேவையையும் சார்ந்ததேயாகும் என்பதையும் எமக்கு தொடர்ந்து தங்களின் ஒத்துழைப்பை வழங்கி வரும் அனைவருக்கும் எமது நிறுவனத்தின் மனமார்ந்த நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

DURDANS HOSPITAL
A Heritage Built On Values And Expertise


# நீர் வற்றிய நிலையிலும் உப- உணவுப் பயிர்ச் செய்கை

## பூநகரி குடமுருட்டிக்குளத்தின் கீழ்

பூநகரி, ஓக. 3

பூநகரி குடமுருட்டிக்குளத்தில் மிகக் குறைந்த அளவு நீர் உள்ள நிலையில் திட்டமிடப்படாத வகையில் தற்போது உப உணவுப் பயிர்ச் செய்கை இடம்பெற்று வருவதை அவதானிக்க முடிகின்றது.

இந்தக் குளத்தின் கீழ் 20 ஏக்கரில் 40 குடும்பங்கள் உபஉணவுப் பயிர்ச் செய்கையில் ஈடுபடுவதென மூன்று மாதங்களுக்கு முன்னர் தீர்மானிக்கப்பட்டது.

ஆனால் நேற்று முன்தினமும் இந்தக் குளத்தின் கீழ் வெங்காயப் பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

இந்தக் குளத்து நீர் தியாகக்குளத்துக்கு கால்நடைகளின் குடிதண்ணீர்ப் பாவனைக்கென திறந்து விடப்பட்டுள்ளது. இதனால் உப உணவுப் பயிர்களுக்கு நீர்ப்பற்றாக்குறை ஏற்படக்கூடிய அபாய நிலை காணப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்ட குளங்களின் நீர்மட்டம் அடிமட்டத்துக்குச் செல்வதால் குளங்களிலுள்ள மீன்கள் உட்பட வேறு உயிரினங்களும் பாதிப் படையக் கூடிய கட்டத்தை எட்டியுள்ளன. (க-18)

# பாடசாலை மோட்டரை காணவில்லை

மாணவர்களின் பயன்பாட்டுக்கு கிணற்றிலிருந்து தொட்டிக்குக் குடிதண்ணீர் பெறுவதற்கெனப் பொருத்தப்பட்டிருந்த மின்சார மோட்டர் கடந்த புதன்கிழமை இரவு இனந் தெரியாதோரால் அபகரிக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் கொடிகாமம் நாவற்காடு கண பதிப்பிள்ளை வித்தியாலயத்தில் இடம்பெற்றுள்ளது. குறித்த மோட்டர் கிணற்றுக்கு அருகில் உள்ள அறையில் பொருத்தப்பட்டிருந்ததாகவும் கடந்த சனி, ஞாயிறு விடுமுறையின் பின்னர் 28 ஆம் திகதி பாடசாலை திறந்த பின்னர் தொட்டிக்கு தண்ணீர் நிரப்புவதற்காக மோட்டரை இயக்க மின் ஆழியை இயக்கிய போது மோட்டர் இயங்காததால் அங்கு சென்று பார்த்தபோது மின்மோட்டரைக் காணவில்லையென கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. இது தொடர்பாக பொலிஸார் நீதிமன்றில் நேற்று அறிக்கை தாக்கல் செய்துள்ளனர். (வ-9)

# உளநல சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெறுவோருக்கு வகுப்புகள்

## சாவகச்சேரி மருத்துவமனையில்



*உளநல சிகிச்சைப் பிரிவினருக்கு வழங்கப்பட்ட பயிற்சிகளின் போது தயாரிக்கப்பட்ட பொருள்கள்*

தென்மராட்சி, ஓக. 3

சாவகச்சேரி மருத்துவமனை உளநல சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெறுவோருக்கான குடிசைக் கைத்தொழில் பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பமாகியுள்ளன.

உளநல சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெறுவோரின் மனோ நிலையை ஒருமுகப்படுத்தும் நோக்கில் 'வேள்ட் விஷன்' நிறுவன அனுசரணையுடன் மூன்று நாள்கள் பயிற்சி வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன.

உளநல சிகிச்சை பெறுவோரில் முதற் கட்டமாக 25 பேர் தெரிவு செய்யப்பட்டு மெழுகுவர்த்தி, சிமெந்துக் கற்கள், பூச்சட்டி, சிமெந்து பூக்கற்கள் போன்றவற்றைக் குடிசைக் கைத்தொழிலாக மேற்கொள்ள பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. தயாரிப்பதற்கான உபகரணங்களை 'வேள்ட் விஷன்' நிறுவனம் வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CAPTAIN STEEL (PVT) LTD

இரும்பு உற்பத்தியில் முன்னோடிகள்
PIONEERS IN STEEL
වානේ අතර ප්‍රමුඛයා

ISO 9001:2008




MADE OUT OF PRIME STEEL BILLETS TO HIGH QUALITY STANDARDS

CAPTAIN STEEL

CAPTAIN STEEL (PVT) LTD AN ISO 9001 - 2008 SLSI CERTIFIED BOI COMPANY

Rs 100,000/= + NBT + VAT UPWARDS

TMT BARS | CTD BARS | M.S. ANGLE | M.S. FLAT | M. S. CHANNEL | ROUND BAR | SQUARE BAR | I BEAM



CAPTAIN STEEL (PVT) LTD

www.captainsteel.lk

MARKETING OFFICE
No. 220, Dr. N. M. Perera Mawatha, Colombo 08.
Tel : (+9411) 592 5555 | Fax : (+9411) 592 7777
marketing@captainsteel.lk | www.captainsteel.lk

FACTORY UNIT II
249/3 Wakkiyawatta Road, Pahala Bomeriya, Kaduwela.
Tel : (+9411) 5575800 | Fax : (+9411) 2142591
kaduwela@captainsteel.lk | www.captainsteel.lk

FACTORY OUTLET
No 461, Old Moor Street, Colombo 12
Tel : (+9411) 4345412-6 | Fax : (+9411) 4740690
factoryoutlet@captainsteel.lk | www.captainsteel.lk

C/15297

MoneyGram. money transfer ஊடாக இலங்கைக்கு அனுப்பும் பணத்தை சம்பத் வங்கியில் பெற்றுக்கொள்ளுங்கள்

ஒவ்வொரு தடவைக்கும் ஒவ்வொருவருக்கும் Alarm Clock ஒன்று!




வெளிநாடுகளிலிருந்து அன்புக்குரியவர்கள் MoneyGram ஊடாக அனுப்பும் பணத்தை சம்பத் வங்கியில் பெற்றுக்கொள்ளும் அனைவருக்கும் பெறுமதியான Alarm Clock ஒன்று.

MoneyGram ஊடாக அனுப்பும் பணத்தை பெற்றுக்கொள்ள...
- நாடுமுழுவதிலும் 215 சம்பத் வங்கிக் கிளைகள்.
- 365 நாட்களும் திறந்திருக்கும் 9 சுப்பர் கிளைகள். (காலை 8 மணி முதல் மாலை 8 மணி வரை திறந்திருக்கும்)
- வார இறுதி நாட்களிலும் திறந்திருக்கும் தெரிவுசெய்யப்பட்ட சம்பத் வங்கிக் கிளைகள்.

MoneyGram ஊடாக அனுப்பும் பணத்தை
சம்பத் வங்கி ஊடாக பெற்றுக்கொள்ளும்
ஒவ்வொரு தடவையும் இப்பரிசு கிடைக்கப்பெறும்.

சம்பத் ஈ ரெமிட்டன்ஸ் ஊடாக பணம் அனுப்புங்கள். பணத்தை
அங்கு அனுப்பியதும் இங்கு பெற்றுக்கொள்ளலாம்!
சரியான Simple - போயாச்சு எடுத்தாச்சு வந்தாச்சு!
மேலதிக விபரங்களுக்கு 0773 933 833 அழையுங்கள்.

MoneyGram. money transfer | Sampath e remittance service | சம்பத் வங்கி எதிர்காலத்தின் முன்னோடிகள்

Sampath Bank Fitch Ratings AA-(lka) | www.sampath.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கரைதுறைப்பற்று பாடசாலைகளுக்கு இடையிலான திருக்குறள், ஆத்திசூடி, கொன்றைவேந்தன் மனனப் போட்டிகள் விலாவத்தை தமிழ் வித்தியாலயத்தில் நடைபெற்றபோது அதில் கலந்து கொண்ட மாணவர்களும் அவர்களை அழைத்து வந்த பெற்றோர்மற்றும்ஆசிரியர்களும் படத்தில் காணப்படுகின்றனர். (க-433)



வவுனியா தோணிக்கல் கிராம அபிவிருத்திச் சங்க சிவாலய முன்பள்ளியின் 21 ஆம் ஆண்டு விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட நெடுங்கேணி பிரதேச செயலர் க.பரந்தாமன், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை உபதவிசாளர் நடராஜசிங்கம், வவுனியா நகர சபை முன்னாள் உபதலைவர் க.சந்திரகுலசிங்கம், வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றிய செயலர் கௌரவ பிரபாகரக்குருக்கள் ஆகியோர் அழைத்து வரப்படுகின்றனர். (க-402)



மன்னார் மாவட்டத்தில் இந்த வருடம் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான இலவச கருத்தரங்கும் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் அண்மையில் மன்னார் அடம்பன் மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றபோது. பாடசாலை அதிபர் உரையாற்றுவதையும் பங்கு பற்றிய மாணவர்களில் ஒரு பகுதியினரையும் காணலாம். (க-421)









வவுனியா பிரதேச செயலகத்தின் ஆடிப்பிறப்பு நிகழ்வு வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் மண்டபத்தில் இடம்பெற்றபோது விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் வவுனியா பிரதேச உதவிப் பிரதேச செயலர் திருமதி சாரதாஞ்சலி கர்ணன் தலைமையுரை நிகழ்த்துவதையும் அங்கு நடைபெற்ற கலை நிகழ்வுகள் சிலவற்றையும் காணலாம். (க-421)




வவுனியா கருங்காலிக்குளம் அ.த.க.பாடசாலை இன்னமும் கிடுகுகளால் வேயப்பட்ட கொட்டகைகளில் இயங்கி வருகின்றது. (க-421)



மல்லாவி பிரதான வீதியில் இருந்து பிரிந்து செல்லும் மின்சார நிலைய வீதியின் பற்றைக் காடாகக் காணப்படும் காணியில் மதுபான வகைகளின் வெற்றுப் போத்தல்கள், பியரின்கள் என்பன குவிந்து காணப்படுகின்றன. (க-415)



மல்லாவி கடைத் தொகுதிக்கான பொதுக் கிணற்றின் புனரமைப்புப் பணிகள் நிறைவு பெறாத நிலையில் நீண்ட காலமாக இழுபறி நிலையில் காணப்படுகின்றது. (க-415)



ஒட்டுசுட்டான் தான் தோன்றீஸ்வரர் மீது பாமாலை பாடிய சைவப் புலவர் பா.திலகானந்தம் ஆலய முன்றிலில் பொன்னாடை போர்த்தப்பட்டு 'சிவ அன்பன்' என்ற பட்டமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்ட போது. (க-500)



கிளிநொச்சி மாவட்ட முன்னாள் அரச அதிபர் பொன்னம்பலம் நினைவாக இடம்பெற்ற இலக்கியக் கருத்தரங்கில் கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கத் தலைவர் வே. இறைபிள்ளை தலைமையுரையாற்றுவதையும் நிகழ்வுக்குத் தலைமை தாங்கிய தமிழ் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி பிறேமா மதுரநாயகம் அமர்ந்திருப்பதையும் காணலாம். (க-18)



முசலி பிரதேச அபிவிருத்திக் குழுவின் ஏற்பாட்டில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், முசலிப் பிரதேச அபிவிருத்திக் குழுத் தலைவருமான ஹூனைஸ் பாரூக் தலைமையில் மாபெரும் இப்தார் நிகழ்வு முசலிப் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. (ஓ-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# SOFTLOGIC வேலைவாய்ப்பு

உலகில் உள்ள உயர்தர கம்பனிகளில் ஒன்றான Softlogic நிறுவனமானது 6000 இக்கு மேற்பட்ட பணியாளர்களைக் கொண்டு ஆஸ்திரேலியா மற்றும் இலங்கையில் ஏறத்தாள 200 மில்லியன் அமெரிக்க டொலர்களை வருமானமாக உழைத்துவருகிறது. உலகிலே மிகவும் வேகமாக வளர்ந்துவரும் வர்த்தக கம்பனிகளில் Softlogic கம்பனியும் ஒன்றாகும்.

வியாபார சந்தையிலே நிலைத்து நிற்கக்கூடிய ஒரு பலமான வர்த்தக நிலைகளை நாம் உருவாக்கியிருக்கிறோம் தொலைத்தொடர்பு, சுகாதாரமும் பராமரிப்பும், சில்லறை வியாபாரம், நிதிச்சேவை, தொலைபேசி மற்றும் சுற்றுலா ஆகிய துறைகளில் எமது வியாபா ரத்தை விஸ்தரித்துள்ளோம்.

தற்போது வியாபித்து வரும் உலக மயமாதலிற்கேற்ப ஆழமாக கால்பதித்து நிலைத்து நிற்கக் கூடிய ஊழியர்களையும் அதிவினைத் திறனாகச் செயற்படக்கூடியவர்களையும் இணைத்து ஒரு தொழிற்படையை உருவாக்கியுள்ளோம். நீங்கள் சொப்ட்லொஜிக்கின் ஒரு பணியாளராக இணைந்து உங்கள் தொழில் மற்றும் வருமானத்தை முன்னேற்று வதற்கான சந்தர்ப்பத்தை Softlogic வழங்குகின்றது.

எமது Softlogic நிறுவனத்தில் பின்வரும் பதவிகளுக்கான வெற்றிடங்கள் உள்ளன.

## 01. மாவட்ட முகாமையாளர் (District Managers)

பொறுப்புக்கள்:

- மாவட்டத்தில் உள்ள அனைத்து காட்சியறைகளுக்கும் முழுப் பொறுப்புதாரியாக இருக்கவேண்டும் என்பதுடன் பின்வரும் பொறுப்புகளையும் செயற்படுத்தல் வேண்டும்.
- மாதாந்த விற்பனையை ஊக்குவித்தல்.
- வாடகைக் கொள்வனவு முறையை முகாமைசெய்தல்.
- காசு மற்றும் சொத்து முகாமைத்துவம்.
- பராமரிப்பும், மேற்பார்வையும்.
- கம்பனி மூலம் நடைபெறும் சகல கொடுக்கல்வாங்கல் நிகழ்வுகளுக்கு பொறுப்புதாரி ஆதல்.
- காட்சியறைகளை விஸ்தரித்தலும், வலையமைப்பை உருவாக்கலும்.
- எதிர் கால சவால்களை எதிர்கொள்ளக்கூடிய வகையில் ஆளணியினரையும், காட்சியறை முகாமையாளர்களையும் விருத்தி செய்தல்.

கொண்டிருக்கவேண்டிய தகைமையும் திறன்களும்

- இத்துறை சார்ந்த தொழில் அனுபவமானது மேலதிக நன்மையாகக் கருதப்படும்.
- குறைந்தது இரண்டு வருடங்கள் சந்தைப்படுத்தல் மற்றும் கணக்கியல் துறைகளில் நிறைவேற்று தரத்தில் உள்ள தொழில் அனுபவம்.
- ஒரு பிரதேசத்தின் முகாமையாளராக விஷேடமாக மின் சாதனப்பொருள்களின் காட்சியறையை நிர்வாகம் செய்தவராக இருப்பது விரும்பத்தக்கது.
- காட்சியறை முகாமையாளர்களையும், ஊழியர்களையும் ஊக்குவித்து இலக்கை அடைவதற்கு வழி நடத்தக் கூடியவராக இருத்தல்.
- நீண்ட காலத்திற்கு கடின உழைப்பை வழங்கக்கூடியவராக இருத்தல்.
- நாட்டின் சகல பாகங்களிலும் கடமையாற்றக் கூடியவராக இருத்தல்.
- ஆங்கிலம் மற்றும் சிங்களத்தில் சிறப்புத் தேர்ச்சியுள்ளவராக இருத்தல்.
- வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களில் தமிழ் மொழி மிக அவசியம்.
- வேலைகளைப் பகுத்தறியக் கூடிய திறனைக் கொண்டிருத்தல் மற்றும் சந்தைப் படுத்தல் துறையில் போதிய கல்விப் புலமையையும் கொண்டிருத்தல்.
- செல்லுபடியான சாரதி அனுமதிப் பத்திரத்தைக் கொண்டிருத்தல்.

## 02. காட்சியறை முகாமையாளர்கள் (Showroom Managers):

பொறுப்புக்கள்:

- கம்பனியால் வழங்கப்படும் மாதாந்த இலக்குகளை அடைதல்.
- சகல நிர்வாக நடவடிக்கைகள், வாடகைக் கொள்வனவு முறை, சொத்து முகாமைத்துவம் ஆகியவற்றுக்குப் பொறுப்பாக இருத்தல்.
- வாடிக்கையாளர்களுடன் சுமூக உறவைப் பேணுதல்.
- கம்பனியால் பிரதேச ரீதியாகவும் தேசிய ரீதியாகவும் முன்னெடுக்கப்படும் வியாபார நடவடிக்கைகளில் பங்கு கொண்டு வியாபாரத்தை விஸ்தரித்தல்.
- கம்பனியால் வழங்கப்படும் தகவலுக்கேற்பவும் நியம சட்டதிட்டங்களுக்கமைவாகவும் காட்சியறையை மேற்பார்வை செய்தல்.
- முகாமைத்துவத்தினரின் வேண்டுகோளுக்கமைய வாராந்த, மாதாந்த அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்.

தகைமைகள்:

- மின்பாவனைப் பொருள்களின் விற்பனை மற்றும் நிர்வாகத்துறையில் முகாமைத்துவம் தொடர்பான அனுபவம்.
- வாடகைக் கொள்வனவு முறையில் பொருள்கள் விற்றல் மற்றும் சொத்து விற்பனை போன்றவற்றில் அனுபவம்.
- ஆங்கிலம் மற்றும் சிங்களத்தில் தொடர்பாடலை மேற்கொள்வதுடன் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் தமிழ் மொழித் தொடர்புகளை மேற்கொள்ளக்கூடியவராக இருத்தல் அவசியம்.
- வாடிக்கையாளர் சேவையைச் செய்வதில் சிறந்த அனுபவம்.
- கணினி அறிவு அவசியம்
- சுயமாகச் செயற்படக்கூடியவராகவும், மற்றவர்களை வழிநடத்தக் கூடியவராகவும் வார இறுதியில் நேரம் பாராது கடமை யாற்றக்கூடியவராகவும் இருத்தல்.
- வயது 40 வயதுக்குக் கீழ்.

## 03. காட்சியறை விற்பனை நிறைவேற்று அலுவலர் (பயிலுநர்): Showroom Sale Executive (Trainee)

பொறுப்புகள்:

- கம்பனியால் வழங்கப்படும் மாதாந்த விற்பனை இலக்கை அடைதல்.
- சிறந்த வாடிக்கையாளர் சேவையை வழங்குதல்.
- வாடிக்கையாளருடன் சிறந்த உறவைக் கட்டியெழுப்புதல்.
- கம்பனியால் நடத்தப்படும் வியாபார நடவடிக்கைகளில் பங்கு கொள்ளல்.

தகைமைகள்:

- சுறுசுறுப்புள்ளவராகவும் ஊக்கத்துடன் செயற்படக் கூடியவராகவும் இருத்தல்.
- இத்துறையில் சிறந்த அனுபவமுள்ளவராக இருத்தல். (காட்சியறை, வெளிக்களம் மற்றும் நேரடி விற்பனை)
- வியாபார நடவடிக்கைகளினை செயற்படுத்திய அனுபவம்.
- ஆங்கிலம் மற்றும் சிங்கள மொழியில் தொடர்பாடலை மேற்கொள்வதுடன் கணினி அறிவு அவசியம்.
- மின்சாதனப் பொருள்களின் விற்பனைத் துறையிலான அனுபவம் விரும்பத்தக்கது.
- பாடசாலையில் இருந்து விலகிய திறமையுடையவர்களும் விண்ணப்பிக்கலாம்.
- வாடிக்கையாளர் சேவை தொடர்பான பூரண அறிவு கொண்டிருத்தல் அவசியம்.
- சுறுசுறுப்பாகவும் சுயமாகவும் செயற்படக் கூடயவராகவும் மேற்பார்வையாளரின் வழிநடத்தலின் கீழ் செயற்படக் கூடிய வராகவும் வார இறுதி நாள்களில் நெகிழ்வுப் போக்குடன் கடமையாற்றக் கூடியவராகவும் இருத்தல்.
- 25 வயதுக்குட்பட்டவராக இருத்தல்.

## 04. காட்சியறை உதவியாளர்கள் (Showroom Stores Assistant):

பொறுப்பும் கடமையும்:

- சொத்துக்களைக் கையாள்தல்.
- காட்சியறையில் உள்ள அனைத்து ஆவணங்களுக்கும் பொறுப்புதாரி.

தகைமைகள்:

- இத் துறையில் அனுபவம் விரும்பத்தக்கது
- கணினி அறிவு அவசியம் (Ms Office Applications)
- சுயமாக செயற்படக் கூடியவராகவும் ஆளுமையும் சுழற்சி முறையில் நெகிழ்வுப் போக்குடன் வேலை செய்யக்கூடிய வராகவும் இருத்தல்.
- வயது 20 - 35 வருடங்கள்

## 05. காசாளர் (Cashier):

பொறுப்புகளும் கடமைகளும்

- தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் நாளாந்த காசு நடவடிக்கை மற்றும் காசோலை மூலமான பெறுவனவு, கொள்வனவு, கடனட்டைகள் மற்றும் காட்சியறையில் நடைபெறும் அனைத்துவிதமான கொடுக்கல் வாங்கல்களுக்குப் பொறுப்புதாரி ஆவார்.
- நாளாந்த காசு மற்றும் வங்கி அறிக்கைகளைக் கொழும்புத் தலைமைக் காரியாலயத்துக்கு அனுப்ப வேண்டும்.
- வாடிக்கையாளர்களின் தேவைப்பாடுகள், ஆலோசனைகள் மற்றும் சேவைகளை வினைத்திறனாகக் கையாளக் கூடிய வராக இருத்தல்.

தகைமைகள்:

- காசாளராக அல்லது உதவிக் காசாளராகக் கடமையாற்றிய அனுபவம்.
- கணினி மூலம் வேலை செய்யக்கூடியவராக இருத்தல். (Ms Office Applications)
- சுய அறிவும் ஆளுமையும் கொண்டிருப்பதோடு சுழற்சி முறையில், நெகிழ்வுத் தன்மையுடன் கடமையாற்றக் கூடியவ ராக இருத்தல்.
- வயதெல்லை 20 - 35 வருடங்கள்.

ஆர்வமுள்ள விண்ணப்பதாரிகள் தங்கள் சுயவிவரங்களை எழுதி இரண்டு உறவினரல்லாத நபர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு இவ் விளம்பரம் பிரசுரமாகி 10 நாள்களுக்குள் எமக்குக் கிடைக்கக்கூடியதாக எமது கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

தபால் மூலம் அனுப்பும் விண்ணப்பதாரிகள் தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட வேண்டும். ஈமெயில் மூலம் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் விடயம் என்ற பகுதியில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட வேண்டும். தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகளுக்குக் கம்பனியால் கவர்ச்சிகரமான சம்பளப் பொதியும் ஊக்குவிப்புத் தொகைகளும் தகுதிகளுக்கேற்ப வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:

Head of Human Resources
Softlogic Retail (pvt) Ltd.
Lukmani's Building Level - 04
No. 421, Galle Road, Colombo - 03
E-mail: Careers@softlogic.lk T.P.: 0777 944 1174




திருநெல்வேலி தலங்காவற்பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த திருவிழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட சமய அறிவுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. பரீட்சையில் அதிகூடுதலான புள்ளிகளைப் பெற்று சிறப்புப் பரிசாக தங்கப்பதக்கத்தைப் பெற்ற திருநெல்வேலி பரமேஸ்வரா வித்தியால யத்தைச் சேர்ந்த தயாளரூபன் ஹரிஸ்ராஜ் என்ற மாணவனுக்கு நிகழ்வில் பிரதம விருந்தினரான கலாநிதி ஆறு. திருமுருகன் தங்கப் பதக்கத்தை அணிவித்தார். நிகழ்வில் விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் மற்றும் யாழ். ஆனைப்பந்தி மெதடிஸ்ற் மிஷன் வித்தியாலய அதிபர் யோ.ஜெகஆனந்தம் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஓ-14)



உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மை யில் கல்லூரி அதிபர் எஸ்.கிருஷ்ண குமார் தலைமையில் இடம்பெற் றது. வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில் களை பிரதம விருந்தின ரான வட மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா வழங்கு வதையும், மாணவர்களின் கலை நிகழ்வையும் காணலாம். (ஓ-108)



கடந்த இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாக கடற்படையினரின் கட்டுப்பாட்டில் இருந்த காரைநகர் பலகாடு இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலய மகா கும்பாபிஷேகம் இடம்பெற்ற போது... (ஓ-25)



2014 ஆம் ஆண்டு நடைபெற்ற அகில இலங்கைத் தமிழ்த்தினப் போட்டியில் நாட்டிய நாடக நிகழ்வில் இணுவில் மத்திய கல்லூரி முதலாம் இடத்தைப் பெற்று மீண்டும் சாதனை படைத் துள்ளது. இந்தச் சாதனையைப் படைத்த மாணவர்களையும் பயிற்றுவித்த நடன ஆசிரியை திருமதி நிசாந்தி தனேந்திரன் மற்றும் ஊக்குவித்த அனைவரையும் கல்விச் சமூகம் பாராட்டியுள்ளது. (ஓ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒளிர மறுக்கும் வீதி விளக்குகள்

பாஷையூர் கடற்கரை வீதியில் சூரியபுரம், புனிதபுரம் பகுதிகளில் உள்ள வீதி விளக்குகள் பலவும் இரவு வேளைகளில் ஒளிராது காணப்






படுவதாக அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். அந்தப் பகுதியில் மீளக்குடியமர்ந்த பல குடும்பங்கள் பாதுகாப்பற்ற குடிசைகளில் வாழ்ந்து வருகின்றனர். வீதி விளக்குள் சரிவர ஒளிராது இருள் சூழ்ந்துள்ளமையால் இவர்கள் இரவுப் பொழுதை அச்சத்துடன் கழித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஒளிராத மின் விளக்குகளைச் சரி செய்து மக்களின் இரவு நேர வாழ்வியலுக்கு பாதுகாப்பு வழங்குமாறு கோரிக்கை விடுக்கின்றனர். (வ-135)

# குளங்களின் மண்டித் தண்ணீரை பருகுவதால் இறக்கும் கால்நடைகள்

## தென்மராட்சி தெற்கில்

தென்மராட்சி, ஓக.3

தென்மராட்சி தெற்குப் பிரதேச குளங்களில் காணப்படும் மண்டித் தண்ணீரைப் பருகும் மாடுகளும் கன்றுகளும் இறக்கின்றன. இதனால் மாட்டுக் கன்றுகளை அவிழ்த்து விடாமல் வீடுகளில் வைத்துப் பராமரிக்குமாறு சாவகச்சேரி கால்நடை மருத்துவர் அறிவித்துள்ளார்.

கடந்த வருடம் போதிய மழைவீழ்ச்சி இல்லாததால் குளங்களில் நிரம்பியிருந்த நீர் நெற்பயிர்களுக்கு இறைக்கப்பட்டது. இதனால் கடந்த மார்ச் மாதம் முதல் அந்தப் பகுதியில் உள்ள பல குளங்கள் நீரின்றி வறண்டு காணப்படுகின்றன.

இந்த நிலையில் மேய்ச்சலுக்காக விடப்படும் மாடுகள் சில இடங்களில் உள்ள குளங்களில் காணப்படும் சிறிதளவு மண்டித்தண்ணீரைக் குடிப்பதால் நோய் ஏற்பட்டு இறக்க நேரிடுகிறது. நோயால் பீடிக்கப்பட்டுள்ள மாடுகளுக்கான கிசிச்சைகள் கால்நடை மருத்துவர் பணிமனை உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இருப்பினும் எந்தக் காரணம் கொண்டும் மாட்டுக்கன்றுகளை மேய்ச்சலுக்காக வெளியில் விடாமல் வளவினுள் வைத்துப் பராமரிக்குமாறும் கால்நடை மருத்துவர் அறிவித்துள்ளார்.

பிரதேசத்தில் நீரின்மையால் நூற்றுக்கு மேற்பட்ட மாடுகள் இறந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-9)



# பயணிக்க முடியாத நிலையில் ஜும்மா பள்ளிவாசல் வீதி

யாழ்.ஜும்மா பள்ளிவாசல் வீதி மிகவும் சேதமடைந்து மக்கள் பயணிக்க முடியாதபடி குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது.

யாழ்.நகரின் மத்தியில் முஸ்லிம் மக்கள் செறிவாக வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் குறித்த வீதி போக்குவரத்துக்கு உரிய வகையில் சீராக்கப்படாமையால் மக்கள் பல அசௌகரியங்களை எதிர்கொள்வதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

யாழ்.நகரின் பல்வேறு வீதிகளும் காப்பெற் வீதிகளாக மாற்றப்பட்டு வரும் இவ்வேளையில் இவ்வீதியைக் கவனிக்க யாருமில்லையா என்று அப்பகுதி வர்த்தகர்கள் கேள்வி எழுப்புகின்றனர். (வ-135)




வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தின் சமூக மேம்பாட்டுத் திட்டத்தின் கல்வி வளர்ச்சிக்கான உதவியின் கீழ் உயர் கல்வி கற்கும் மாணவர் ஒருவருக்கு 35 ஆயிரம் ரூபா நிதி உதவி அண்மையில் வழங்கப்பட்டுள்ளது. இந்து வாலிபர் சங்க கட்டடத்தில் வைத்து வழங்கப்பட்ட நிதியை உயர் கல்வி கற்கும் மாணவனாக க.ஜோன் பெற்றுக் கொண்டார். (வ-86)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைக்கிள் பாதுகாப்புத் தரிப்பிடம் அமைப்பதற்கு காணியில்லை

## சைக்கிள் பாதுகாப்புக்கு பணம் அறவிட முடியாமல் திண்டாடும் நிலை

வலி.தென்மேற்கு, ஓக.3

வலி.தென்மேற்குப் பிரதேச சபை நிர்வாகத்துக்கு உட்பட்ட காக்கைதீவு சந்தையில் சைக்கிள் பாதுகாப்புத் தரிப்பிடம் அமைப்பதற்குப் பொருத்தமான காணி இல்லாததால் நிரந்தரமான சைக்கிள் பாதுகாப்புத் தரிப்பிடம் அமைக்க முடியாத நிலை பிரதேச சபைக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் சைக்கிள் பாதுகாப்புக்குரிய கட்டணத்தை மக்களிடமிருந்து அறவிட முடியாமல் திண்டாடும் ஒப்பந்தக்காரர் சந்தைக்கான குத்தகைக்குரிய பணத்தை உரிய முறையில் உரிய நேரத்தில் பிரதேச சபைக்குச் செலுத்த முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார். காக்கைதீவு கடற்கரையில் அமைந்துள்ள மீன்சந்தையை குத்தகைக்கு வழங்கிய பிரதேச சபை அங்கு சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தை அமைத்துக் கொடுக்காமல் காலம் கடத்தி வருகிறது. இதனால் சந்தையைக் குத்தகைக்கு எடுத்தவர் மக்களிடமிருந்து கட்டணம் அறவிடுவதற்கு வசதியாக பாதுகாப்புத் தரிப்பிடத்தை அமைத்துத் தருமாறு பிரதேச சபையைப் பல தடவைகள் கோரியுள்ளார். சைக்கிள் பாதுகாப்புத் தரிப்பிடத்தை அமைப்பதற்கு பிரதேச சபைக்குச் சொந்தமான காணியில்லாததால் குத்தகைக்கு காணி எடுப்பதற்கு முயற்சித்த போதிலும் அது கைகூடவில்லை. இதனால் தினமும் சந்தைக்கு வரும் மக்கள் தங்கள் வசதிக்கு ஏற்ற விதத்தில் கண்ட இடங்களிலும், வீதியோரங்களிலும், மர நிழலிலும் சைக்கிள்களை நிறுத்துவதால் அவர்களிடமிருந்து கட்டணம் அறவிட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலை குறித்து விசனம் தெரிவித்துள்ள ஒப்பந்தகாரர் ஏழு மாதங்கள் கடந்த நிலையிலும் இனியாவது பாதுகாப்புத் தரிப்பிடத்தை அமைத்துத் தருமாறு பிரதேச சபையைக் கோரியுள்ளார். (வ-115)

# சந்நிதி ஆலயத்துக்குச் செல்லும் தற்காலிக வீதியை அமைக்குக

## ஆலயத் திருவிழாக் காலத்தில் பக்தர்களின் நலன் கருதி பொது அமைப்புகள் கோரிக்கை

அச்சுவேலி, ஓக 3

தொண்டமானாறு செல்வச் சந்நிதி வருடாந்த திருவிழாக் காலத்தில் கடல் நீரேரியை ஊடறுத்து உப்புநீர்த் தடை அணைக்கு சமாந்தரமாக அமைக்கப்படும் தற்காலிக வீதியை இந்த வருடமும் அமைக்க வேண்டும். ஆலயத்துக்குச் செல்லும் அடியார்களுக்கு வசதி ஏற்படுத்த வேண்டும் என்று பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

கடந்த காலங்களில் வீதி அமைப்புப் பணியைச் செய்து கொடுத்த வலி.கிழக்கு பிரதேச சபை, வல்வெட்டித்துறை நகர சபை ஆகியவற்றிடமும் யாழ். அரச அதிபரிடமும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

திருவிழாவை முன்னிட்டு அமைக்கப்படும் தற்காலிக வீதி மூலம் வலிகாமம் கிழக்கு, வலிகாமம் தெற்கு, வலிகாமம் வடக்கு, வலி.தென்மேற்கு மற்றும் தீவுப்பகுதி மக்கள் இலகுவாக கோயிலுக்குச் சென்று திரும்ப முடியும். அத்துடன் பொது மக்கள் நெருக்கமாகச் சென்று திரும்பும்போது ஏற்படக்கூடிய நெருக்கடிகள் மற்றும் அசம்பாவிதங்களை தவிர்த்துக் கொள்ள முடியும்.

மேற்படி தற்காலிக வீதி போர் முடிவடைந்து அமைதி ஏற்பட்ட பின்னர் கடந்த வருடமும் அதற்கு முந்திய வருடமும் (2012-2013) அமைக்கப்பட்டன. மக்கள் இயல்பு நிலையில் பயணம் செய்தனர்.

வீதி அமைப்பு சேவையை வலி.கிழக்கு பிரதேச சபையும் வல்வெட்டித்துறை நகர சபையும் இணைந்து மேற்கொண்டு வந்தன.

2012 ஆம் ஆண்டு தற்காலிக வீதி அமைப்பதற்கு பயன்படுத்தப்பட்ட கல், மண் என்பனவற்றை உரிய முறையில் தண்ணீரில் இருந்து அகற்றப்படாமையால் மழை வெள்ளம் கடலுக்குச் செல்ல விடாமல் போய்விட்டதால் மழை வெள்ள இடர் ஏற்பட்டது என்று கூறி கடந்த வருடம் வீதி அமைப்பதை நீர்ப்பாசனத் திணைக்களம் தடுத்து நிறுத்தியது.

இந்தப்பிரச்சினை யாழ்.மாவட்ட அரச அதிபரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டதை அடுத்து அரச அதிபர் இரண்டு தரப்பினரையும் சமாதானம் செய்து திருவிழா முடிவடைந்து வீதி அமைப்பதற்கு பயன்படுத்திய கல், மண் முதலியவற்றை வலி.கிழக்கு பிரதேச சபை அகற்ற வேண்டும் என்று இணக்கம் ஏற்படுத்தி வைத்தார். இணக்கம் காணப்பட்ட பிரகாரம் வீதி அமைப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட கல், மண் முதலியன உரிய முறையில் அகற்ற நடவடிக்கை எடுக்காமையால் இந்த வருடம் வீதி அமைப்பதில் உள்ளூராட்சி நிர்வாகம் அக்கறை கொள்ளவில்லை என்று கூறப்படுவதால் பொது அமைப்புக்கள் தற்காலிக வீதியை அமைத்து ஆலயத்துக்குச் செல்லும் அடியவர்களுக்கு வசதி செய்யுமாறு கோரிக்கை விடுத்துள்ளன. (வ-11)



இதனால் சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் முருங்கன் பொதுசன விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

பெரியகாமம் எவக்கிறின் விளையாட்டுக்கழக அணிக்கும் பனங்கட்டிக்கொட்டு சென். ஜோசப் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் பனங்கட்டிக்கொட்டு சென். ஜோசப் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.


மன்னார் சென். சேவியர் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:-

வங்காலை ஆன்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் மன்னார் ஐக்கிய விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் மன்னார் ஐக்கிய விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

தாழ்வுபாடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் அடம்பன் செந்தமிழ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் தாழ்வுபாடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மன்னார் பொலிஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் தேவன்பிட்டி சென்.சேவியர் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் மன்னார் பொலிஸ் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

## ஆட்டங்களில் வென்ற அணிகள்



ஆட்டத்தின் ஒரு காட்சி

யாழ்ப்பாணம், ஓக.3

ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகம் பகல், இரவு ஆட்டங்களாக நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:-

அச்சுவேலி தோப்பு வாலிபர் விளையாட்டுக்கழக அணிக்கும், நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான 3 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்றது.

உடுப்பிட்டி சிவகுமரன் விளையாட்டுக்கழக அணிக்கும் புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான 3 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் உடுப்பிட்டி சிவகுமாரன் விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது.

அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக்கழக அணிக்கும் அச்சுவேலி தோப்பு கலைமகள் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான 3 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் அச்சுவேலி தோப்பு கலைமகள் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

## நட்பு ரீதியில் உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஓக.3

அரியாலை சனசமூக நிலையத்தின் விளையாட்டு மைதானத்துக்கு மின்ஒளி வழங்கும் நிகழ்வை முன்னிட்டு நடத்தப்பட்ட நட்பு ரீதியான உதைபந்தாட்ட போட்டிகளில் அரியாலை நோர்வே புலம் பெயர் அணியும், யாழ்.மத்திய கல்லூரி அணியும் வெற்றி பெற்றுள்ளன.

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் அரியாலை நோர்வே புலம் பெயர் அணியை எதிர்த்து யாழ்.உதைபந்தாட்டத் தெரிவு அணியும் மோதிக்கொண்டது.

இதில் நோர்வே புலம் பெயர் அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் அரியாலை சனசமூக நிலைய அணியை எதிர்த்து யாழ்.மத்திய கல்லூரி அணி மோதிக் கொண்டது.

இதில் யாழ்.மத்திய கல்லூரி அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

## வடக்கு - கிழக்கு பூப்பந்து இறுதியாட்டம் இன்று

யாழ்ப்பாணம், ஓக. 3

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சும் வடமாகாண பூப்பந்தாட்டச் சங்கமும் இணைந்து நடத்தும் வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு இடையிலான பூப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் 19 வயதுக்குட்பட்டவர்களுக்கான மற்றும் திறந்த பிரிவினருக்கான இறுதியாட்டங்களும் பரிசளிப்பு நிகழ்வும் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப 3மணிக்கு யாழ்.பல்கலைக்கழக பூப்பந்தாட்டத் திடலில் இடம்பெறவுள்ளன.

இன்றைய நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜா கலந்து கொள்ளவுள்ளார். (த-23)

## சந்திரன், உதயசூரியன் வெற்றி

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டங்கள் புதுக்குடியிருப்பு விக்கினேஸ்வரா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:-

சந்திரன் விளையாட்டுக்கழக அணிக்கும், யங்ஸ்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் சந்திரன் விளையாட்டுக்கழக அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. செம்மலை உதய சூரியன் விளையாட்டுக்கழக அணிக்கும் பேராறு றோயல் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் செம்மலை உதயசூரியன் விளையாட்டுக்கழக அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சினுக்கு பாரத ரத்னா கிடைத்தது எவ்வாறு ?

இந்திய அணியின் ஜாம்பவான் சச்சினுக்கு பாரத ரத்னா விருது வழங்கப்பட்டதன் பின்னணியில் காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல்காந்தி இருந்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்தியாவின் சாதனை வீரர் சச்சினின் 24 ஆண்டுகால கிரிக்கெட் திறமையை கௌரவிக்கும் வகையில், இவர் ஓய்வு பெற்ற சில மணி நேரங்களில், நாட்டின் உயரிய விருதான பாரத ரத்னா விருது வழங்கப்பட்டது.

இந்த விருது மறைந்த ஹொக்கி ஜாம்பவான் தியான்சந்த்துக்குதான் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் வாக்கு வங்கி அரசியலுக்காக அவரைப் புறக்கணித்துவிட்டு, கடைசி நேரத்தில் சச்சினைத் தெரிவு செய்ததாகச் சர்ச்சை எழுந்தது. இதன் பின்னணியில் காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல்காந்தி இருந்ததாகத் தெரிகிறது.

அதாவது, 2013, நவம்பர் 14 இல் சச்சினின் கடைசி டெஸ்ட், மும்பையில் தொடங்கியது. நாடு முழுவதும் அவருக்கு இருந்த ஆதரவு அலையை ராகுல்காந்தி தனக்குச் சாதகமாகப் பயன்படுத்த விரும்பியுள்ளார்.

இதனை மனதில் வைத்து சச்சினின் ஆட்டத்தைப் பார்க்க மும்பை கிளம்பி இருக்கிறார். அப்போது பிரதமர் அலுவலகத்துடன் பாரத ரத்னா விருது வழங்குவது குறித்துப் பேசியுள்ளார். உடனே, சச்சின் குறித்த விவரங்களை அனுப்புமாறு, மத்திய விளையாட்டு அமைச்சகத்துக்கு, பிரதமர் அலுவலகம் தகவல் அனுப்பியிருந்தது.

மாலை 5.22 மணிக்கு சச்சினின் விவரங்களைச் பெற்றது பிரதமர் அலுவலகம். மறுநாள் அப்போதைய பிரதமர் மன்மோகன் சிங், இதற்கு ஒப்புதல் தரும்படி, ஜனாதிபதி பிரணாப் முகர்ஜிக்கு கடிதம் அனுப்பியுள்ளார். அவரும் அன்றே கையெழுத்திட மறுநாள் விருது குறித்து அறிவிப்பு வெளியாகியுள்ளது.

பொதுவாகப் பாரத ரத்னா விருது பெறுபவரின் பெயரை மத்திய விளையாட்டு அமைச்சு பரிந்துரை செய்ய வேண்டும். இதன்படி 2013, ஜூலை 16 இல் தியான்சந்த்தின் பெயரை மத்திய விளையாட்டு அமைச்சகம் பரிந்துரை செய்தது.

அதே சமயம் விருது அறிவிப்புக்கு மூன்று நாள்களுக்கு முன்னர் வரை சச்சின் பெயரை யாரும் பரிந்துரை செய்யவில்லை என்பது தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்படி தெரிய வந்துள்ளது. மொத்தத்தில், சச்சின் விடயத்தில் எந்தவித விதிகளும் பின்பற்றப்படவில்லை என்பது தெளிவாகியுள்ளது.

இதன் பின்னணயில் ராகுல்காந்தி இருந்தாரா என்பதற்கு நேரடி ஆதாரம் எதுவும் இல்லை. ஆனால், ஐந்து மணி நேரத்தில் அனைத்து முடிவுகளும் எடுக்கப்பட்டுள்ளதைப் பார்த்தால் இந்த விடயத்தில் ராகுல்காந்தி தலையிட்டுள்ளார் என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

(த)





# தண்டனை இல்லாமல் தப்பினார் அண்டர்சன்

அண்மையில் இந்திய வீரர் ரவீந்திர ஜடேஜாவுக்கும், இங்கிலாந்து வீரர் ஜேம்ஸ் அண்டர்சனுக்கும் இடையே திடீரென மோதல் ஏற்பட்டது.

டெஸ்ட் போட்டியின்போது உணவு இடைவேளையில் பெவிலியனை நோக்கித் திரும்பிய போது, ஜடேஜாவை வம்புக்கு இழுத்த அண்டர்சன் அவரைத் திட்டித் தீர்த்ததுடன் அவரைப் பிடித்துத்தள்ளி அவமதித்ததாக இந்திய அணித் தலைவர் டோனி குற்றம் சாட்டினார்.

இதையடுத்து அண்டர்சன் மீது நடத்தை விதியை மீறியதாக சர்வதேச கிரிக்கெட் சபையிடம் இந்தியா புகார் செய்தது. பதிலுக்கு, ஜடேஜா அண்டர்சனை மிரட்டும் வகையில் நடந்து கொண்டதாக இங்கிலாந்துத் தரப்பு குற்றம் சுமத்தியது.

ஜடேஜா மீதான புகாரில் போட்டி நடுவர் டேவிட் பூன், ஜடேஜாவுக்கு போட்டிக் கட்டணத்தில் இருந்து 50 சதவீதத்தை அபராதமாக விதித்தார். இதை எதிர்த்து இந்திய அணி நிர்வாகம் முறையீடு செய்தது.

இந்த நிலையில் அண்டர்சன் மீதான புகார் மற்றும் ஜடேஜாவின் அப்பீல் குறித்து ஐ.சி.சியால் நியமிக்கப்பட்ட விசாரணை அதிகாரி கார்டன் லீவிஸ் நேற்றுமுன்தினம் விசாரணை நடத்தினார்.

ஆஸ்திரேலியாவின் மெல்பேர்ன் நகரில் இருந்தபடி வீடியோ மூலம் சவுதம்டன் ஹோட்டலில் தங்கியிருந்த சம்பவத்தை நேரில் பார்த்த இரண்டு தரப்பு வீரர்கள், அணி மேலாளர்கள், சட்டத்தரணிகளிடம் விசாரணை மேற்கொண்டார்.

விசாரணையின்போது இந்திய வீரர்கள் தங்கள் தரப்பு நியாயத்தை முன் வைத்ததுடன், சில ஆதாரங்களையும் சமர்பித்தனர். 6 மணி நேரத்துக்கு மேலாக நீடித்த இந்த விசாரணை கடைசியில் புஷ்வாணமாகிப் போய் விட்டது.

ஜடேஜா, அண்டர்சன் இருவர் மீதும் தவறில்லை என்று விசாரணை அதிகாரி கார்டன் லீவிஸ் அறிவித்து, இந்தப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைத்தார். இதன் மூலம் ஜடேஜாவுக்கு விதிக்கப்பட்ட அபராதமும் இரத்துச் செய்யப்பட்டது.

அண்டர்சன் குற்றவாளி என்று உறுதி செய்யப்பட்டால், அவருக்கு 2 முதல் 4 டெஸ்ட் போட்டிகள் வரை விளையாடத் தடை விதிக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் சம்பவம் நடந்த வீரர்களின் அறையின் வெளிப்பகுதியில் பொருத்தப்பட்ட கமரா அந்தச் சமயத்தில் அணைத்து வைக்கப்பட்டிருந்ததாக அதற்குப் பொறுப்பானவர்கள் பல்டி அடித்தனர். போதிய ஆதாரம் இல்லாததால் அண்டர்சன் தண்டனையிலிருந்து தப்பி இருக்கிறார். ஐ.சி.சியின் இந்தத் தீர்ப்பால் இந்திய அணியினர் அதிருப்தி அடைந்துள்ளனர். (த)



# மொகமட் அலியின் கையுறை ஏலத்தில்

புகழ்பெற்ற அதிபார குத்துச் சண்டை வீரர் மொஹமட் அலி பயன்படுத்திய குத்துச் சண்டைக்கான கையுறை 3 லட்சத்து 88 ஆயிரத்து 375 டொலர்களுக்கு ஏலத்தில் விறபனையாகியுள்ளது.

அமெரிக்காவின் க்லேவ்லேண்ட் பகுதியில் உள்ள செல்வந்தர் ஒருவர் இதனை ஏலத்தில் எடுத்துள்ளார்.

இந்தக் கையுறையை, 1971ஆம் ஆண்டு ஜோ பிபேசிய ருடன் இடம்பெற்ற போட்டியின் போது மொஹமட் அலி பயன்படுத்தி இருந்தார்.

இந்தப் போட்டியில் வழங்கப்பட்ட சர்ச்சைக்குரிய தீர்ப்பின் மூலம் பிபேசியர் வெற்றி பெற்றதா அறிவிக்கப்பட்டார்.

இந்தப் போட்டி நூற்றாண்டின் சிறந்த சண்டை என்று வர்ணிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும் 1974ஆம் ஆண்டு மற்றும் 1975ஆ ஆண்டுகளில் ஜோ பிபேசியருடன் இடம்பெற் போட்டிகளில் மொஹமட் அலி வெற்றி பெற்று, தா சிறந்த குத்துச் சண்டை வீரர் என்பதை நிலை நிறுத் இருந்தார். (த)

# மூன்று பதக்கங்களையும் தன்வசமாக்கிய ஜமெய்க்கா

கிளஸ்கோவில் இடம்பெற்றவரும் பொதுநலவாயப் போட்டிகளின் ஆடவருக்கான 200 மீற்றர் ஓட்டப் போட்டியின் மூன்று பதக்கங்களையும் ஜமெய்க்கா கைப்பற்றியுள்ளது.

200 மீற்றர் ஓட்டப் போட்டியில் ஜமெய்க்காவின் ரஷீட் டிவோயர் தங்கப் பதக்கத்தை வென்றெடுத்தார். அவர் தனது போட்டித் தூரத்தை 20.14 செக்கன்களில் நிறைவு செய்தார்.

இதேவேளை ஜமெய்க்காவின் வெரென் வெயர் வெள்ளிப்பதக்கத்தையும், ஜேசன் லிவமோர் வெண்கலப் பதக்கத்தையும் வென்றெடுத்தமை குறிப்பிடத்தக்கது. (த)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரவோடு இரவாக வெள்ளவாய்க்காலை மூடியது வீதி அபிவிருத்தித் திணைக்களம்

யாழ்ப்பாணம், ஓக. 3

உடுவில் - சண்டிலிப்பாய் இணைப்பு வீதியான டச்சு வீதியில் உள்ள வெள்ளநீர் வாய்க்கால் வீதி அபிவிருத்தித் திணைக்களத்தினரால் நேற்று இரவோடு இரவாக மண் போட்டு நிரப்பப்பட்டுள்ளது.

அதனை மூடி விடுவதற்கு அப்பகுதி மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்திருந்த நிலையில் நேற்று இரவிரவாகத் திணைக்களத்தினர் அதனை மூடியுள்ளனர்.

ஒன்றரைக் கிலோமீற்றர் நீளமான குறித்த வெள்ள வாய்க்காலை மூடுவதற்கு திணைக்களத்தினர் முன்னர் நடவடிக்கை மேற்கொண்டிருந்தனர்.

ஆனால் அதன் தேவைப்பாடு பற்றி அப்பகுதி மக்கள் அதிகாரிகளுக்கு எடுத்துரைத்ததனால் அந்த வாய்க்காலைப் புனரமைத்துத் தருவதாகக் கூறி சுமார் 15 மீற்றர் வரை சிமெந்தினால் வாய்க்கால் கட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்று அவர்கள் இரவோடு இரவாக வாய்க்காலுக்கு மண் நிரப்பி அதனை மூடும் பணியில் ஈடுபட்டனர்.

அது தொடர்பில் குறித்த பிரதேச சபைத் தவிசாளருக்கு அறிவிக்கப்பட்டது. அவர் சம்பவ இடத்துக்குச் சென்று வாய்க்கால் நிரவும் பணியை நிறுத்துமாறு கோரியபோதும் அதனைக் கவனத்தில் கொள்ளாது பணியாளர்கள் தமது மேலதிகாரியிடம் கதைக்குமாறு கூறிவிட்டு வாய்க்காலை மூடியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அது தொடர்பில் திணைக்களத்தினரின் கருத்தை உடனடியாகப் பெறமுடியவில்லை. (த-4-86)

## 9 ரூபா பஸ் கட்டணம் 5 ரூபாவாகக் குறைப்பு

9 ரூபாவாக உள்ள ஆகக் குறைந்த பஸ் கட்டணத்தை 5 ரூவாகக் குறைக்க தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தினர் தீர்மானித்துள்ளனர்.

இந்தக் கட்டணக் குறைப்பானது காலை 9.30 மணி முதல் பிற்பகல் 1 மணிவரை இரு பஸ் தரிப்பிடங்களுக்கு இடையில் மட்டும் நடைமுறைப்படுத்தப்படும் என்று தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரட்ண தெரிவித்தார்.

பஸ் சேவையைப் புறக்கணிக்கும் பொதுமக்களை மீண்டும் அந்தச் சேவைக்குள் உள்வாங்குவதற்காகவும், அன்றாடம் எற்படும் நட்டத்தைக் குறைத்துக்கொள்வதற்காகவும் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

தற்போது ஒரு பஸ் தரிப்பிடத்திலிருந்து அடுத்த பஸ் தரிப்பிடத்திற்குச் செல்வதற்கு 9 ரூபா கட்டணம் அறவிடப்படுகிறது. இதனை 5 ரூபாவாகக் குறைப்பதற்கான யோசனை இன்று காலை 11 மணிக்கு இடம்பெறும் தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் 13 ஆவது சம்மேளனத்தில் முன்வைக்கப்படவுள்ளது என்றும் கெமுனு விஜேரட்ண தெரிவித்தார்.

நீண்ட மற்றும் குறுகிய தனியார் போக்குவரத்து பஸ் சேவையில் நாளொன்றுக்கு 50 சதவீத வருமானம் வீழ்ச்சியடைந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, எந்த அடிப்படையில் காலை 9.30 மணி முதல் 1 மணிவரை பஸ் கட்டணக் குறைப்பு தீர்மானிக்கப்பட்டது. இதனால் பாடசாலை மாணவர்கள், தொழில் புரிபவர்கள் எனப் பெரும்பான்மையான தரப்பினருக்கு எந்த நன்மையும் ஏற்படாதே என 'உதயன்' எழுப்பிய கேள்விக்கு அவர் பதிலளிக்கையில், இரண்டு பஸ் தரிப்பிடங்களை அடிப்படையாகக் கொண்டே இந்த பஸ் கட்டணக் குறைப்பு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இறுதித் தீர்மானம் நாளை (இன்று) இடம்பெறும் சம்மேளனத்தில் எடுக்கப்படும் - என்றார்.

## வாள்வெட்டுக்கு இலக்கானார் வர்த்தகர்

வலி. வடக்கு, ஓக.3

சன நடமாட்டம் மிக்க சுன்னாகம் நகரப் பகுதியில் வைத்து மோட்டார் சைக்கிளில் முகத்தை துணியால் மூடிக் கட்டிக் கொண்டு வந்த இனம் தெரியாத இருவரால் சுன்னாகம் வர்த்தகர் ஒருவர் வாளால் வெட்டிப் படுகாயப்படுத்தப்பட்டுள்ளார். கடந்த செவ்வாய்க் கிழமை இரவு 9 மணியளவில் காங் கேசன் துறை வீதியில் உள்ள வர்த்தக வங்கிக்கு முன்பாக வைத்து மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள், தனது வீடியோக் கடையை மூடிவிட்டு வீட்டுக் குச் செல்ல நடந்து வந்து கொண்டிருந்த அந்த வர்த்தகரை வெட்டி விட்டு தப்பிச்சென்றுள்ளனர்.

குறித்த நபர் உடனடியாக வீதியில் நின்றவர்களின் உதவியுடன் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். வாள்வெட்டுக்கு உள்ளாகிய நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டவர் சுன்னாகத்தில் வீடியோ கடையொன்றின் உரிமையாளரான இளவாலை பொலிஸ் நிலைய வீதியைச் சேர்ந்த இராஜரத்தினம் இராஜகுமார் (வயது - 37) என்பவராவார்.

சுன்னாகம் பொலிஸார் குறித்த சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்கள். (வ-86)

## முகம் தெரியாத பெண்ணுக்காக உயிரை மாய்த்தார் இளைஞர்

யாழ்ப்பாணம், ஓக. 3

மூன்றாவது தடவையாகத் தற்கொலைக்கு முயன்று உயிரிழந்தார் 19 வயது இளைஞர்.

குறித்த இளைஞர் பெண் ஒருவரை, அவரின் முகத்தைக் கூடப் பார்க்காது தொலைபேசியில் மாத்திரம் கதைத்துக் காதல் தொடர்பு கொண்டிருந்ததாகவும் பின்னர் அந்தப் பெண் ஏமாற்றி விட்டதாகவும் அதனால் தற்கொலை செய்ததாகவும் மரண விசாரணையில் கூறப்பட்டுள்ளது.

யாழ். குருநகரைச் சேர்ந்த இளைஞர் ஒருவரே அவ்வாறு உயிரிழந்தார். அவர் குறித்த பெண்ணின் கைத் தொலைபேசி இலக்கத்தைப் பெற்றுள்ளார். அதனைக் கொண்டு அவரைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டுள்ளார். குறித்த பெண்ணும் அவருடன் தொலைபேசியில் உரையாடி வந்துள்ளார். பின்னர் குறித்த பெண் அவரைத் திருமணம் செய்ய முடியாது என்று ஏமாற்றியுள்ளார்.

அதனால் கடந்த திங்கட் கிழமை குறித்த இளைஞர் வீட்டில் தூக்குப்போட்ட முயற்சி செய்துள்ளார். அதனை அவரது தந்தையார் தடுத்து விட்டார். அதனால் மற்றொரு நாள் அவர் தூக்கில் தொங்க முயன்றுள்ளார். அதனையும் அவரது தந்தையார் தடுத்து விட்டார். இரண்டு தடவைகள் காப்பாற்றப்பட்ட அவர் நேற்று முன்தினம் மது அருந்தி விட்டு மருந்துக் குளிசைகளைப் போட்டுள்ளார். பின்னர் வாந்தி எடுத்துள்ளார். அவரை வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர். எனினும் சிகிச்சை பயனளிக்காது அவர் நேற்று அதிகாலை உயிரிழந்தார். திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் இறப்பு விசாரணை மேற்கொண்டு சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைத்தார். (த-4-10)

### கண்ணீர் அஞ்சலி

**மனுவேற்பிள்ளை செபஸ்தியாம்பிள்ளை**

(இளைப்பாறிய அதிபர், யா/புனித மரியாள் வித்தியாலயம் O.L.R)



நல்ல ஆசானாக எமது பிள்ளைகளை வழிநடத்தி அவர்கள் உருவாக்கத்தில் பெரும்பங்காற்றிய எமது அன்புக்கும் மதிப்புக்கும் உரிய இளைப்பாறிய அதிபர் மனுவேற்பிள்ளை செபஸ்தியாம்பிளளை அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

புனித அடைக்கல மாதா ஆலயம் (O.L.R), யாழ்ப்பாணம். (50556) (10) பங்கு மக்கள், பங்கு தந்தை.

## ஆசிய நாடுகளின் அரசியற் கட்சி மாநாடு செப்.18 இல் கொழும்பில்

ஆசிய நாடுகளின் அரசியல் கட்சிகளுக்கிடையிலான சர்வதேச மாநாடு அடுத்த மாதம் 18 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை கொழும்பில் இடம்பெறவுள்ளது.

இந்த மாநாடு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சிகளின் தலைமையில் இடம்பெறவுள்ளது. இந்த மாநாட்டில் 33 நாடுகள் கலந்து கொள்ளவுள்ளன.

இந்த மாநாடு தொடர்பான கலந்துரையாடல் ஒன்று ஜனாதிபதி மஹிந்த தலைமையில் அலரிமாளிகையில் இடம்பெற்றுள்ளது. இந்தக் கலந்துரையாடலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (ஒ)

### BIOLOGY
A/L-2015

★ இனப்பெருக்கம் கற்பிக்கப்படுகின்றது

மீட்டல் வகுப்பு ஆரம்பம்

05.08.2014 செவ்வாய் (3.30 - 4.30)

ஆசிரியர் : M.M. அல்போன்ஸ்

### Physics-2015

★ புலங்கள் ★ ஆரம்பம் : 04.08.2014

திங்கள் (3.00 - 4pm )

ஆசிரியர் : M. கருணாநிதி

இடம்: The SCIENCE CORNER JAFFNA (077 611 6724) (50559) (10)

### வாகனம் வாடகைக்குத் தேவை

3 கியூப் ரிப்பர் வாகனங்கள்.

கி/மீ 110 ரூபா தரப்படும். (50522) (7.6.3)

தொடர்பு : 077 371 3513, 077 866 6841

### German Language Academy
கோணேஸ்வரனின் ஜேர்மன் கல்லூரி

ஜேர்மன் டொச் மொழிகள்

$A_1$, பரீட்சைக்கு ஏற்றவாறு ஜேர்மனியில் வசித்துவந்த ஆசிரியரால் கற்பிக்கப்படுகின்றது.

(போலியான விளம்பரங்களைக் கண்டு ஏமாற வேண்டாம்)

புதிய பிரிவுகள் திங்கள் 8.00 மணிக்கு

(சி/15261) (12.3.6) German Language Academy

ஆரியகுளம், யாழ்ப்பாணம். 077 970 7322

### சாவகச்சேரியில் காணி விற்பனைக்கு

A9 வீதிக்கு அண்மையில், ஐயர் ஒழுங்கையில் 8 பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு. பரப்பு 3 இலட்சம், பிரித்தும் விற்கப்படும்.

(50631) (12.3.6) தொடர்பு: 077 268 7252

### விற்பனைக்கு

TATA SUPER ACE சாம்பல் கலர் வாகனம் 8000 கி.மீ ஓடிய நிலையில் லீசிங்குடன் விற்பனைக்கு உண்டு.

(50553) (10) T.P: 077 355 8779

### வீடு விற்பனைக்கு

சுன்னாகம் தெற்கு பூதவராயர் கோவில் வீதியில் 02 பரப்புக் காணியில் அமைந்த வீடு விற்பனைக்குண்டு.

(50557) (10) தொடர்பு: T.P.No: 077 844 9687

### இந்திய சாஸ்திரியார் வருகை

யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்

ஓம் சக்தி அருள்வாக்கு பெற்ற பரம்பரை ஜோதிடர்

**S.N குமாரசாமி**

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத் தடை, கல்வித் தடையா, குழந்தைப் பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா ? தொழில் முன்னேற்றம் இல்லையா, குடும்பப் பிரச்சினையா, வெளிநாடு செல்லத் தடையா? மன உளைச்சலா ?

எந்தப் பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்

(காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை)

இல. 97/8, கண்ணகி அம்மன் கோயில் ஒழுங்கை, கோப்பாய் வீதி, உரும்பிராய், யாழ்ப்பாணம். (உரும்பிராய் சந்திக்கு அருகில்)

T.P 072 681 6681, 072 681 6691

### அக்ஷயா
அழகுக்கலை பயிற்சிகள் நடைபெறுகின்றன

பேசியல், மேக்கப், கேயாஸ்டைல், சாறிவுளவுஸ், கட்டிங் அனைத்து விதமான தையல் கட்டிங் பயிற்சிகள் றடைபெறுகின்றன.

★ கறுப்பு, பிறப்பிலே கறுப்பு மஞ்சள், கரும் புள்ளிகள், நாட்பட்ட பருக்கள் அனைத்தையும் மாற்றும் ஒரிஜினல் வைத்நிங் கிறீம் விற்பனைக்கு உண்டு.

★ உடல் எடை கூட்டும், குறைக்கும் பால்மா, குளிசை விற்பனைக்கு உண்டு.

தலைமுடி வளரச் செய்யும் ஆயுர்வேத எண்ணெய் விற்பனைக்கு உண்டு.

077 210 6155 (50554) (10)

அக்ஷயா, 221, நாவலர் றோட், (பிறவுன் றோட் அருள் கொமினிகேஷன் அருகில்)

### Mega Sale

ARPICO DAMRO

ஆடி தள்ளுபடி

என்றும் எங்கும் கிடைக்காத அமோக விலை குறைப்பு

ஞாயிறு காட்சியறை திறக்கப்படும்

மங்களா காட்சியறை

536, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.

021 222 8367 - 021 222 8366 0777 286 069

### கடையும் வீடும் விற்பனைக்கு

யாழ்.-பருத்தித்துறை வீதி ஆவரங்கால் சந்திக்கு அருகில் அமைந்துள்ள 3 (மூன்று) பரப்புக் காணியும் 45 அடி நீளம் கொண்ட மூன்று கடைகளும் மேல் மாடி வீடும் விற்பனைக்கு உள்ளன.

தொடர்பு:

076 535 2300 (சி/15293) (7.6.3)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.08.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# சூரியகாந்தி

உதயன்
ஞாயிறு சிறப்பிதழ்
03.08.2014




# வெடிகுண்டு கிராமம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஜெரா

இலங்கையின் பண்டைய வரலாற்றைச் சொல்லும் கதைகளில் இயக்கர், நாகர் என்கிற இரு இனங்களைப் பற்றிய குறிப்பு வரும். அதாவது இலங்கைக்கு விஜயன் இந்தியாவிலிருந்து வருகின்ற வேளையில் இங்கு சுதேச குடிமக்களாக இயக்கரும், நாகரும் வாழ்ந்தனர். அந்த இனத்துக்கு நூல் நூற்கும் தொழில் செய்யும் குவேனி தலைவியாக இருந்தாள், என்கிற கதை இலங்கை வரலாறு படித்த அனைவருக்குமே நினைவிருக்கலாம். அதில் நாகர் வழிவந்த இனத்தின் மிச்ச சொச்சங்களும்; நாகர்களின் பண்பாட்டைப் பின்பற்றுகின்ற கலாசார தொடர்புகளும் உள்ள ஓரிடம் 2014 இன் பின் அரைப் பகுதியில் எப்படியிருக்கின்றது?


மணலால் மூடப்பட்டும், மணலுக்கு வெளியில் எட்டிப் பார்த்துக் கொண்டும், மரங்களின் முதுகுகளைத் துளைத்துக் கொண்டும், அந்த நிலத்துப் பூர்வகுடிகளது உடல்களின் தலை, கால், முதுகு, தொடை என எந்தப் பாகத்துக்குள்ளும் குத்திக் கொண்டும் இருக்கின்றன வெடிபொருள்களின் எஞ்சிய பாகங்கள்

நாகர்கோவில், யாழ்ப்பாணத்தையும், வன்னிப் பெருநிலப்பரப்பையும் நிரந்தரமாகவே பிரித்துவைத்திருக்கும் ஏரிப் பகுதியின் ஓரத்தில் அமைந்திருக்கும் கிராமம். எங்கு பார்த்தாலும், குவிந்திருக்கும் வெண் மணல் வெயிலிலும் அழகாக இருக்கின்றது. இயல்பாகவே இந்த மணற்பரப்பைப் பார்த்ததும் கால் புதையப் புதையத் துள்ளியோட வேண்டும் போன்ற எண்ணம் வரும். ஆனால் நீங்கள் ஓட முடியாது. எங்கும் எச்சரிக்கின்றன "மிதிவெடி கவனம்" அபாய எச்சரிப்புகள். ஒரு காலத்தில், எதிர்பாராத வெடிவிபத்துகளுக்கும், இராணுவத்தினருடனான நேரடி மோதல்களுக்கும் செய்திகளில் இந்த இடம் பிரபலம் பெற்றிருந்தது. முகமாலை முன்னரங்க நிலைகள் மீது நடந்த அனைத்துத் தாக்குதல்களிலும் நாகர்கோவில் கிழிந்து தொங்கி, சின்னாபின்னமானதற்கு பனைமரங்கள் பெருஞ்சாட்சி. அதிக காலமும், அதிக வெடிபொருள்களோடு இந்த இடம் பரிச்சயப்பட்டிருப்பதை நாகர்கோவில் மணல் வெளி காட்டிக் கொடுத்துவிடுகிறது.

மணல் மேடுகள் முழுவதிலும் வெடிபொருள்கள் அனைத்தினதும் சிதிலங்கள், உடைந்த பாகங்கள் சிதறிக் கிடக்கின்றன. போரில் ஈடுபட்ட தரப்பினரின் ஆயுத வகையறாக்களை அடையாளங் கண்டுகொள்ளுமளவுக்கு அந்த வெளியெங்கும் விதம் விதமான வெடிபொருள்களின் எச்சங்கள் மலிவாகக் காட்சி தருகின்றன. மணலால் மூடப்பட்டும், மணலுக்கு வெளியில் எட்டிப் பார்த்துக் கொண்டும், மரங்களின் முதுகுகளைத் துளைத்துக் கொண்டும், அந்த நிலத்துப் பூர்வ குடிகளது உடல்களின் தலை, கால், முதுகு, தொடை என எந்தப் பாகத்துக்குள்ளும் குத்திக் கொண்டும் இருக்கின்றன வெடிபொருள்களின் எஞ்சிய பாகங்கள்.

அநேக சிறுவர்களின் விளையாட்டுப் பொருள்களும், உடனடி அலங்காரப் பொருள்களாகவும் வெடிபொருள்களின் கோதுகள் பயன்படுத்தப்படுகின்றன. சிரட்டையில் மண் அள்ளி, மண் கும்பிகளில் அடுப்பு நட்டு விளையாடும் கிராமத்துச் சிறார்களின் விளையாட்டில், சிரட்டையும், மரத்தடிகளும் பிடித்த இடத்தை வெவ்வேறு அளவிலான துப்பாக்கி ரவைகளின் கோதுகளும், பீரங்கிக் குண்டுகளின் உடைந்த பாகங்களும் பிடித்திருக்கின்றன. மண் சிலையை சுவாமியாக வைத்து விளையாடிய சிறார்கள், ஆட்லெறி ஷெல்லின் கோதுகளில் சிவனைக் காண்கிறார்கள். மலர் வைத்து , திருநீறு பூசி அதற்குப் பூசையும் செய்கிறார்கள். செருப்பை வெட்டிச் சில்லு செய்து, பிளாஸ்ரிக் போத்தலோடு செருகிச் செய்யும் வண்டில்களும், வெடிபொருள்களின் எச்சங்களுக்கு மடைமாற்றம் செய்யப்பட்டிருக்கின்றன. இதைவிட வீட்டுப் பூந்தோட்டங்களுக்கும், முற்றங்களுக்கான வளைவுகளுக்கும் ஆட்லெறி, அஞ்சிஞ்சி ஷெல்களின் கோதுகள் அலங்கரிக்கப் பயன்படுகின்றன.

இவ்வளவுக்கும் மத்தியில், துரித கதியில் வெடிபொருள் மீட்புப் பணியாளர்கள், நாகர்கோவிலின் பல பகுதிகளிலும் தம் பணியைச் செய்துகொண்டிருக்கின்றார்கள். அவர்களாலும் என்ன செய்யமுடியும்? அங்கு பணிசெய்யத் தொடங்கிய காலத்தில், அந்தப் பணியாளர்களில் ஒருவர் உடல் சிதறிப் பலியாகியிருக்கிறார். இன்னுமொருவர் காயப்பட்டிருக்கிறார்.

இலங்கையில் போர் முடிந்துவிட்டது. பிரகடனமும் செய்தாயிற்று. ஆனால் வெடிபொருள்களுடனான விளையாட்டு மட்டும் இன்னமும் தொடர்ந்துகொண்டேதான் இருக்கின்றது. சிறுவர்களின் நாள்களில் அதிக இடத்தை இந்த வெடிபொருள்கள் எடுத்துக் கொள்கின்றன. அந்தப் பொருள்கள் பற்றிய கதைகளும், நினைவுகளும் அவர்கள் மத்தியில் கடத்தப்பட்டுக் கொண்டேயிருக்கின்றது.

வெடிபொருள்களைத் தவிர்த்துப் பார்த்தாலும், அங்கு பிரச்சினைகள்தான் முதலில் தெரிகின்றன. பெரும்பாலான ஆண்கள் கடற்றொழிலை நம்பியிருக்கின்றனர். போருக்குப் பின்னர் அந்தப் பகுதி கடலில் மீன்வளம் அருகிவிட்டது. யார் யாரெல்லாமோ வந்து கடல் வளத்தைச் சூறையாடிச் செல்வதாக வந்து போகின்றவர்களிடம் முறையிடுகிறார்கள். இதைவிட நிறுவனங்கள் தரும் வீட்டுத்திட்ட வேலைகளில், பலர் மேசன்களாக இணைந்திருக்கின்றனர். விடுதலைப் புலிகளும், இராணுவமும் விட்டுச் சென்ற முகாம்களிலிருந்தும், காவலரண்களிலிருந்தும் இரும்பு சேகரித்து விற்பதையும் முக்கியமான ஒரு தொழிலாக வைத்திருக்கின்றனர். ஆபத்து மிக்க இந்தத் தொழிலில் ஈடுபட்ட ஒருவர் குண்டுவெடித்து உடல் சிதறி இறந்திருக்கிறார். அவரின் சடலத்தைக்கூட 4 நாள்கள் கழித்து, நாய், காகம் தின்ற எஞ்சிய பாகங்களை எடுத்து அடக்கம் செய்திருக்கின்றனர். பேராபத்துமிக்க இந்தத் தொழிலைப் பாடசாலை செல்லும் சிறுவர், சிறுமியர் தொடக்கம் கர்ப்பிணிப் பெண்கள் வரையும் செய்கின்றனர்.

நாளொன்றில் ஒரு பொழுதையாவது வயிற்றை நிரப்ப வேறு என்னதான் வழியிருக்கிறது அவர்களுக்கு? இப்படியெல்லாம் சிரமப்பட்டு, உயிர் கொடுத்து உழைக்கும் உழைப்பின் பெரும்பகுதியை ஆண்கள் குடிப்பதற்கே செலவிடுகின்றனர். காரணம் என்ன என்று கேட்டால், இந்த வாழ்க்கைதான் என்கின்றனர்.

வீட்டுத்திட்ட மற்றும் நிவாரண வழங்கல்களிலும் பாகுபாடு காட்டப்படுவதாக சிலர் தெரிவிக்கின்றனர். இயந்திர கதியில் வீட்டுத்திட்ட வேலைகள் நடக்கின்றமையை அவதானிக்கலாம். ஆனால் அந்த வெளியெங்கும் குடிசை வீடுகளே தெரிகின்றன. மிகுதிக் காசு தரவில்லை என்ற காரணத்தைப் பலரும் சொல்கின்றனர்.

நாகர்கோவில் பாடசாலை மீது 1997 ஆம் ஆண்டு இலங்கை விமானப் படையினர் நடத்திய தாக்குதலில் 32 மாணவர்கள் பலியானமை மறந்தே போயிருக்கலாம். ஆனால் அந்தப் பாடசாலையும், அந்தத் தாக்குதலில் காயப்பட்டு, மாற்றுத் திறனாளிகளாக வலம் வரும் பலர் அதை இப்போது நினைவுபடுத்துகின்றனர். இடிந்து நொருங்கிக் கிடக்கும் பாடசாலைக் கட்டடங்கள் போல அவர்களின் வாழ்க்கையும் பல வழிகளிலும் நொருக்கப்பட்டிருக்கின்றது. ஆனாலும் என்ன செய்ய? விமானத் தாக்குதலில் பலியான மாணவர்களை நினைவுகூறக்கூட அவர்களுக்குத் தடை விதிக்கப்பட்டிருக்கின்றது. இதற்கும் மேலாக அங்கிருக்கும் மாணவர்களில் அதிகம்பேர் கற்றலில் ஆர்வம் காட்டுவதில்லை. காலை 10 மணிவரைக்கும் கடற்றொழில் பார்த்து குறிப்பிட்டளவு வருமானத்தைப் பெற்ற பின்னரே பாடசாலைப் பக்கம் எட்டிப் பார்க்கின்றனர். 10 வயதுக்குப் பின்னர் அவரவர் வாழ்க்கைக்கு ஒரு தொழிலைத் தேடிக் கொள்வதில் அந்தச் சிறார்கள் நாட்டம் கொள்கின்றனர்.

இப்போது மணலும், விரைவாகச் சூறையாடப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் பிரபலமான மணல் அகழ்வு நிறுவனமொன்று நாகர் கோவில் மணல் அரண்களை அள்ளியெடுத்து காசாக்குவதில் தீவிரம் காட்டுகிறது. இரவு பகலாக மணல் அகழ்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பெருங்கடல் உள்வருவதைதத் தடுத்து, நாகர் கோவிலைக் காப்பாற்றிக் கொண்டிருக்கும், மணல் அணை அகழப்படுகின்றது. இப்படியே அந்த மணல் மேடு முழுதும் அகற்றப்படுமானால், இன்னொரு சின்னச் சுனாமி வந்தாலே, நாகர்கோவிலைக் கடல் கொண்டுவிடும். எங்கள் உடலங்களை கடலில்தான் பொறுக்க வேண்டும் என்கின்றார் இரண்டு நூற்றாண்டு வயதுகளைத் தொட்ட மூத்தகுடிமகனொருவர். எந்த வகை அநீதிக்கு எதிராகவும் அந்தப் பழைய குடிகள் வாய் திறக்க முடியாது. கதைத்தால் உடனடியாகவே 'அவர்கள்' வந்துவிடுகின்றனர்.

வீதிகள் இன்னும் மோசம். மேடுபள்ளமான மணல் வீதி பல தசாப்தங்களாகத் திருத்தப்படாமலேயே கிடக்கின்றது. இரவில் ஏதும் நோய் நொடியென்றால்கூட 15 கிலோமீற்றர்களுக்கு அப்பாலான மந்திகை மருத்துவமனைக்குத்தான் அவர்கள் செல்ல வேண்டியிருக்கின்றது. அண்மையில், பிரசவ வழியால் துடித்த கர்ப்பிணித் தாயொருவர், ஓட்டோவில் ஏற்றிச் செல்லும் போது, ஓட்டோவுக்குள்ளேயே குழந்தையைப் பிரசவித்திருக்கிறார்.

அரச, அரச சார்பற்ற எந்தக் கட்டமைப்புக்களும் இன்னும் சரியாக செயற்படத் தொடங்காத ஒரு கிராமமாக நாகர்கோவில் இருக்கின்றது. ஆனால் இராணுவப் பார்வைகள் மட்டும் அந்தக் கிராமத்தை விட்டு அகழவேயில்லை. இலங்கையின் மூத்த குடிகளின் பெயரைத் தம்மோடு இணைத்துக் கொண்ட நிலத்தவரின் வாழ்க்கை எல்லா பக்கங்களிலும் இன்மைமயப்பட்டதாகவே இருக்கின்றது. மாற்றம் ஒன்றே மாறாதது என்ற இயங்கியல் தத்துவம் இங்கு மட்டுமே பொய்த்திருக்கின்றது போலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ தி.அமுதன்

# அப்பு ஆச்சியர் வாழ்ந்த பூமியில் ஆமிக்காரன்

விடுதலைப் புலிகளற்ற காலத்திலும் மண் மீட்புக்கான போராட்டம் தொடர்ந்து கொண்டே தான் இருக்கின்றது. ஆனால் இது பல வீனமான போராட்டம். இராணுவத்தினரால் அபகரிக்கப்பட்டுள்ள தங்கள் பூர்வீக நிலத்தை மீட்பதற்காகத் தமிழ் மக்களின் போராட்டம் தினமும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இந்தப் போராட்டம் கடந்த சில வாரங்களாக யாழ்ப்பாணத்தில் உச்சத்தைத் தொட்டிருக்கின்றது. இராணுவத்தினர், கடற்படையினர் தாம் தற்போதுள்ள முகாம்களை நிரந்தரமாக மக்களின் காணிகளில் அமைப்பதற்காக, குறித்த காணிகளை சுவீகரிக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். இதற்கான சுவீகரிப்பு அறிவித்தல்கள் ஒட்டப்பட்டிருந்தன. இதன் அடுத்த கட்ட நடவடிக்கையாக, குறித்த காணிகள் அளவீடு செய்யப்படுவதற்கு நிலஅளவைத் திணைக்களத்தினர் நடவடிக்கை மேற்கொண்டிருந்தனர். இதன் போது, சுவீகரிக்கப்படவுள்ள காணிகளின் உரிமையாளர்களும், அரசியல்வாதிகளும் இணைந்து காணி அளவீட்டு நடவடிக்கைகளுக்குத் தமது எதிர்ப்புக்களைத் தெரிவித்திருந்தனர்.

அச்சுவேலி, நுணாவில், கீரிமலை, வெற்றிலைக்கேணி, மிருசுவில் என்று பல்வேறு இடங்களிலும் முன்னெடுக்கப்பட்ட இந்தப் போராட்டம் நிலஅளவையாளர்களின் நடவடிக்கைகளை நிறுத்தியிருந்தது. இருப்பினும் இந்தப் போராட்டங்களினூடாகக் காணி சுவீகரிப்பு நடவடிக்கையை நிரந்தரமாக நிறுத்த முடியவில்லை. கீரிமலையில், தமிழ் மக்கள் ஆண்டாண்டு காலமாக வாழ்ந்து வந்த மண்ணில் கடற்படையினர் நிரந்தர முகாம் அமைத்துள்ளனர். அந்த முகாமுடன் உயர் பாதுகாப்பு வலயத்தின் எல்லையும் ஆரம்பிக்கின்றது. இங்கேதான் வித்தியாசமான முறையில் காணி சுவீகரிப்பு அரங்கேறிக் கொண்டிருக்கின்றது. உயர் பாதுகாப்பு வலயத்துக்கு வெளியே - கடற்படையினரின் முகாமுக்கு வெளியே - உள்ள காணிகளையும் சுவீகரிப்பதற்குக் கடற்படையினர் முயற்சிக்கின்றனர்.

இந்தக் காணியை சுவீகரிப்பதற்கு முன்னெடுக்கப்பட்ட முயற்சி கடந்த மாதம் 11 ஆம் திகதி தடுத்து நிறுத்தப்பட்டது. மறுபடியும் 14 ஆம் திகதி காணி சுவீகரிப்புக்காக அலுவலர்கள் வரவுள்ளனர் என்ற தகவலறிந்து மக்கள் திரண்டிருந்தாலும், அலுவலர்கள் வரவுமில்லை, அளக்கப்படவுமில்லை. அத்துடன் அன்றைய தினம் மக்கள் தாங்களாகவே சில முடிவுகளை எடுத்தும் இருந்தனர். கடற்படையினரின் முகாமுக்கு வெளியிலுள்ள தங்களது நிலத்தைத் தாமே துப்புரவு செய்யப்போவதாகத் தெரிவித்திருந்தனர். அதற்கிடையில் நிலஅளவையாளர்கள் காணியை அளக்கும் நடவடிக்கையை ஆரம்பித்திருந்தனர். அவர்களால், கடற்படையினரின் பாதுகாப்புடன் அவர்களது முகாமுக்குள் மாத்திரமே அளவீடு செய்ய முடிந்தது. அதற்கு வெளியிலுள்ள காணியை அளவீடு செய்ய முடியவில்லை.

கடற்படை முகாமுக்கு வெளியிலுள்ள காணியை அளவீடு செய்ய முற்பட்ட நில அளவைத் திணைக்களத்தினரைத் தடுத்து நிறுத்தியது ஒருவர் மாத்திரமே. அவ்வாறு தடுத்து நிறுத்திய அந்த ஒருவரைத் தேடியபோது, கடற்படையினரினால் சுவீகரிக்க அடையாளமிடப்பட்ட காணிக்கு எதிராக வீதியின் மறு பக்கத்திலேயே அவர் தங்கியிருக்கின்றார்.

அவரது வீடு என்று ஒன்றைக் காட்டினார்கள். அரைகுறையாகக் கட்டப்பட்ட சிமெந்து வீட்டின் அருகில் குடிசை வீடு. அதனைக் குடிசை வீடு என்றும் சொல்ல முடியாது. கொட்டில் என்று மாத்திரமே சொல்ல முடியும். அதற்குள் அவர் சமையல் வேலையில் மும்முரமாக இருந்தார். என்னை அறிமுகப்படுத்திய பின்னர், அவருடன் உரையாடலைத் தொடர்ந்தேன். உரையாட ஆரம்பித்ததுமே, "உங்களோட நிறையக் கதைக்க வேணும். அடுப்பில கத்தரிக்காய் கறி இருக்கு. இறக்கி வைச்சிட்டு வாறன்" என்று வேகமாக ஓடிச் சென்று சில கணங்களிலேயே மீளவும் வந்தார். ஐம்பதைத் தாண்டிய வயதைத் தொட்ட தோற்றம். இவரா, தனித்து நில அளவையாளர்களைத் தடுத்து நிறுத்தியிருந்தார் என்ற சந்தேகத்துடன் உரையாடலைத் தொடங்கினேன். 66 வயதான, ஆ.செல்வஞானேஸ்வரி என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார். தானும் தனது 84 வயது தாயாரும் மற்றும் இரு சகோதரிகளும் ஒன்றாக வாழ்ந்து வருவதாகத் தெரிவித்தார்.

"ஹாபர் வியூ ஹொட்டலுக்குப் பக்கத்துக் காணியிலதான் எங்கட வீடு. அங்கதான் நான் பிறந்தனான். 16 வயதிலையே அந்தக் காணியை சிமெந்து தொழிற்சாலைக்காறங்கள் எடுத்திட்டாங்கள்" என்று முதலாவது இடப்பெயர்வை விபரித்தார். 1964 ஆம் ஆண்டே பிறந்த மண்ணை விட்டு வெளியேற்றப்பட்டார்.

அதன் பின்னர் சிறிது காலம் உறவினர்கள் வீடுகளில் இருந்ததாகக் குறிப்பிட்டார். அகதி வாழ்க்கை என்பது 1946 ஆம் ஆண்டே இவருக்கு ஆரம்பித்துவிட்டது. "1972 ஆம் ஆண்டு இப்ப நேவிக்காரன் பிடிச்சு வைச்சிருக்கிற இந்த இடத்தில காணி வாங்கினாங்கள். 14 பரப்புக் காணி 17 ஆயிரம் ரூபா. இப்ப 17 ஆயிரத்துக்கு ஒரு துண்டு நிலம் இந்த இடத்தில வாங்கேலுமோ?" என்று மறு கேள்வியையும் அவர் தொடுத்தார். காணி வாங்கிய ஆண்டை அச்சொட்டாக எவ்வாறு நினைவில் வைத்திருந்தீர்கள் என்ற கேள்வியைத் தொடுக்க, அவரது முகத்தில் பிரகாசம் பொங்கியது. "எங்கட கிணறு, காணி வாங்கின உடன கட்டினது. அந்தக் கிணற்றுக் கட்டில "1972 என்று பொறிச்சிருக்கிறம். எங்கட காணியில இப்பவும் இருக்கிறது அந்தக் கிணறு மட்டும்தான்" என்றார்.

1979 ஆம் ஆண்டு குறித்த காணியில் வீடு கட்டி குடியேறியதாகக் குறிப்பிட்டார். "1979ஆம் ஆண்டு குடிபுகுந்தனாங்கள். 12 வருசம் தான் கட்டின வீட்டில இருக்கக் கொடுத்து வச்சனாங்கள். அவ்வளவு காலமும் சந்தோசமாய், வீட்டோட தோட்டமும் செய்து கொண்டு இருந்தனாங்கள். 1991ஆம் ஆண்டு ஆனி மாதம் முதலாம் திகதி வீட்டை விட்டு வெளியேறினோம்" என்றார் மெதுவாக.

இராணுவத்தின் ஷெல் தாக்குதல் காரணமாக சொந்த மண்ணையும் வீட்டையும் விட்டு வெளியேறியதாகச் சொன்னார். அவரது முகத்திலிருந்த சந்தோசமும் கொஞ்சம் கொஞ்சமாகக் கரைந்து போனது. இதன் பின்னர் இளவாலை, சண்டிலிப்பாய் என்று சுற்றித் திரிந்த பின்னர் ஒரேயடியாக வலிகாமத்தை விட்டு வெளியேறி, வடமராட்சி உடுப்பிட்டியில் தங்கியிருந்தாகக் குறிப்பிட்டார். 1995ஆம் ஆண்டு இடப்பெயர்வின் போது யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறவில்லை என்றும், இடப்பெயர்வின் பின்னர் வலிகாமத்துக்கு மக்கள் திரும்பி வந்தபோது, சொந்த இடத்துக்குத் திரும்ப முடியாமையால், சண்டிலிப்பாயில் தங்கியதாகத் தெரிவித்தார்.

"சண்டிலிப்பாய் சீரணி அம்மன் கோயில் தெற்கு வீதியில், இருந்த ஒருத்தர்ர வீட்டில, அவர்ர மாடுகள் கட்டிற பெரிய கொட்டில எங்களுக்கு இருக்க தந்தவர். இந்த இடத்தை விடும் மட்டும் அங்கதான் இருந்தனாங்கள்" என்றார். 16 வருடங்கள், மாட்டுக் கொட்டகைதான் அவரின் வீடாக இருந்து வந்தது. ஆனாலும் அவர், அந்த இடத்தைத் தந்த வீட்டுக்காரரைப் பெருமையுடன் நினைவுகூர்ந்தார்.

"2012 ஆம் ஆண்டு இந்த இடத்தை விட்ட உடன வந்திட்டம். றோட்டுக்கு அங்காலதான் எங்கட காணி. அந்தக் காணிக்க போகேலாது என்று நேவிக்காரர் சொன்னவை. அதால றோட்டுக்கு மற்ற பக்கம், என்ர ஒண்டவிட்ட தம்பியின்ர காணி இருந்தது. அதுக்குள்ள ஒரு குடிசை வீட்டைக் கட்டிட்டு இருக்கிறம். றோட்டுக்கு மற்ற சைற் இருக்கிற காணியைப் பார்க்கத்தான் முடியுது. அதுக்குள்ள போய் வர நேவி விட்டவன். ஆனால் துப்புரவு செய்து அதுக்குள்ள இருக்கிறதுக்கு விட மாட்டான் என்கிறான். இங்க வந்து இருக்க வெளிக்கிட்ட தொடக்கத்தில, நேவி கொமாண்டர் வந்து, தங்கட காம்ப் இருக்கிற காணிக்காரர்களின் உறுதிஎல்லாத்தையும் வாங்கினவர். தாங்கள் மேலிடத்துக்கு அனுப்புவம் எண்டும், அங்கயிருந்து அனுமதி வந்ததும் விடுறம் எண்டவை. இண்டை வரைக்கும் விடேல. அண்டைக்கும், நாங்கள் எங்கட காணியைத் துப்புரவு செய்யிறம் எண்டு காணிக்க இறங்க வெளிக்கிட, பொலிஸ் வந்து எங்களைத் தடுத்துப் போட்டுது. ஆர்ரேன் காணியைத் துப்புரவு செய்யிறதை பொலிஸ் தடுத்துதான் கேள்விப்பட்டிருக்கிறேன். எங்கட சொந்தக் காணிக்கை இறங்க விடாமபொலிஸ் தடுத்து இப்பதான் முதல்முறை பார்த்திருக்கிறன்" என்றார் ஆவேசமாக.

"எங்கட காணியைநாங்கள்நேவிக்கு கொடுக்கமாட்டம். அதுக்குப் பிறகும் காணியை அளக்கிறதில நிக்கினம். முதல்தரம் காணி அளக்க வரேக்க எல்லாரும் நிண்டவை. எல்லாரும் எதிர்த்ததால, அவங்கள் திரும்பிப் போயிட்டாங்கள். பேந்து, எங்கட சனமெல்லாம் செத்தவீட்டுக்குப் போன அண்டு காணி அளக்க வந்தவை. வந்தவை 'காம்புக்குள்ள' போய் அளந்தவை. வெளியில அளக்க வர நான் தனிய போய் நிண்டு மறிச்சன். நேவிக்காரரும் நிண்டவை. நான் சொன்னன், இது என்ர காணி. இதுக்க அளக்க இறங்கேலாது. உங்கட கொமாண்டர் சொன்னவர் மேலிடத்தில கதைச்சுப் போட்டு சொல்லுறன் என்று. இது வரைக்கும் எங்களுக்கு ஒண்டும் சொல்லேல்ல. இப்பிடியே எவ்வளவு காலத்துக்குப்பேய்க் காட்டிக் கொண்டிருக்கப் போறியள் என்று அவையிட்ட கோபமாகக் கேட்டன்" என்றார்.

எந்த நேரமும் ரத்தம் கொதிச்சுக் கொண்டேயிருக்கு தம்பி. அம்மா சொல்லுறா, என்ர மண்ணிலதான் சாக வேணும். கொட்டில் என்றாலும் பரவாயில்லை, தன்ர சொந்தக் காணியிலதான் சாக வேணும் என்றுறா", என்று அவர் சொல்லி முடிப்பதற்கு முன்னரே அழத் தொடங்கிவிட்டார். அவரது கண்ணீர், அவரது ஏக்கத்தைச் சொல்லுவதாகவே இருந்தது. சிறிது நேரத்தின் பின்னர், சரி இந்தக் காணிக்க போறதுக்கு என்ன செய்யப் போறியள் என்று கேட்க, "எங்கட பெரியாக்கள்தான் எப்பிடியாவது மீட்டுத் தரவேணும். மாவை சேனாதிராசா அவைதான் காணியை நேவியிட்ட இருந்து மீட்டுத் தர வேணும். முந்தி கீரிமலைக்கு வாற ஆக்கள், ஆமியிட்ட பதிஞ்சு பாஸ் எடுத்துத் தான் வரவேணும். அப்பிடி வந்த ஆக்கள், எங்கட வீட்டோட இருந்த காணியில கல் அகழ்றான் என்று சொன்னாங்கள். அதால காணியில பெரிய இடத் தைக் கிடங்காக்கிப் போட்டான் என்று சொல்லிச்சினம். உடன சேனாதிராசாவுக்குச் சொல்லி, அவரூடாக மேலிடத்தில கதைச்சு, பேந்து நிப்பாட்டிட்டாங்கள். இப்ப நாங்கள் வந்து பார்க்கேக்க, என்ர காணியில பெரிய இடம் கிடங்காப் போட்டுது. வீட்டை புல்டோசர் போட்டு இடிச்சுப் பெயர்த்துப் போட்டாங்கள். கிணத்தடியும் அதோட 3 பரப்பும் தான் இருக்கு. மிச்ச இடமெல்லாம் கல்அள்ளிக் கிடங்காக்கிப் போட்டாங்கள்" என்றார். கடைசியாக விடை பெறும் போது, நீங்களாவது எங்கட காணியை மீட்டுத் தருவீர்களா? என்று தனது ஏக்கத்தைக் கேள்வியாக்கினார். சொல்வதற்கான பதில் எங்களிடமும் இல்லை.


காணி சுவீகரிப்புக்கு எதிராகக் காணி உரிமையாளர்கள் மாத்திரமே களத்தில் நிற்கின்றனர். ஏனையோர் தமக்கு ஏன் வம்பு என்று ஒதுங்கிக் கொள்கின்றனர். தமது காணிகளுக்காகவும் நாளைக்குக் குரல் கொடுக்க ஒருத்தரும் வரப் போவதில்லை என்பதை உணர மறுக்கின்றனர். தமிழர்கள் என்ற ஒற்றைக் குடையில் எல்லோரும் ஒன்றாகத் திரள்வதன் மூலமே இந்தச் சுவீகரிப்பினைத் தடுக்க முடியும். ■



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

> அரசுடன் இணைந்துள்ள சில கட்சிகள் இந்தத் தேர்தலில் தமது பலத்தைப் பலப்படுத்திக் கொள்ள, ஸ்திரப்படுத்திக் கொள்ள வியூகங்களை வகுக்க ஆரம்பித்துள்ளன. இவர்களுள் விமல் வீரவன்ஸவின் தேசிய சுதந்திர முன்னணி, முஸ்லிம் கட்சிகள், மலையகக் கட்சிகள் என்பன இந்தத் தேர்தல் தொடர்பாக வெவ்வேறு வியூகங்களை வகுக்கும் முயற்சிகளில் இறங்கியுள்ளன.

# தனிவழி தேடும் தரகர்கள்



சந்திரசேகர ஆசாத்

வெகு விரைவில் இடம்பெறவுள்ள ஊவா மாகாண சபைத் தேர்தலை முன்னிட்டு வெற்றி வாய்ப்பை நோக்கி அரசியல் கட்சிகள் தம்மைத் தயார்ப்படுத்தும் பணியில் தீவிரமாக இறங்கியுள்ளன. ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பும், ஐக்கிய தேசியக் கட்சியும் இந்தத் தேர்தலை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான ஒரு பரீட்சார்த்தக் களமாகவே பார்க்கின்றன.

அதேவேளையில் அரசுடன் இணைந்துள்ள சில கட்சிகள் இந்தத் தேர்தலில் தமது பலத்தைப் பலப்படுத்திக் கொள்ள, ஸ்திரப்படுத்திக் கொள்ள வியூகங்களை வகுக்க ஆரம்பித்துள்ளன. இவர்களுள் விமல் வீரவன்ஸவின் தேசிய சுதந்திர முன்னணி, முஸ்லிம் கட்சிகள், மலையகக் கட்சிகள் என்பன இந்தத் தேர்தல் தொடர்பாக வெவ்வேறு வியூகங்களை வகுக்கும் முயற்சிகளில் இறங்கியுள்ளன.

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ ஊவா மாகாண சபைத் தேர்தலில் தனித்துப் போட்டியிடப் போவதாகத் திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டார். அதேவேளையில் முஸ்லிம்கள் தங்கள் பிரதிநிதித்துவத்தைப் பாதுகாக்கும் முகமாக ஒன்றிணைந்து போட்டியிட வேண்டும் என்ற குரல்கள் எழுந்துள்ளன. இது தொடர்பாக ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அமைச்சர் ரிஷாத் பதியுதீனுடன் சில இரகசியப் பேச்சுக்களை நடத்தியுள்ளதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன. இன்னொருபுறம் பிரதிநிதித்துவத்தைத் தக்கவைக்க மலையகக் கட்சிகள் ஒன்றிணைந்து போட்டியிட வேண்டுமெனவும் கோரிக்கைகள் எழுந்துள்ளன.

இதில் கவனிக்க வேண்டிய முக்கிய விடயம் என்னவெனில் , இந்தக் கட்சிகள் அனைத்துமே அரசில் அங்கம் வகிப்பவை. தேர்தலின் பின்பும் அரசிலிருந்தே ஆதரவு வழங்க இருப்பவை. அப்படியானால் ஏன் இவையெல்லாம் தனித்தனி வியூகங்கள் அமைக்கின்றன. தாங்கள் கூடுதலான ஆசனங்களைப் பெறவே என்பதை அவர்களே தெரிவித்து விட்டனர். அடிப்படையில் பதவிகளுக்கான வியூகங்கள்தான் இவை. விமல் வீரவன்ஸ தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி அரசு நேரடியாகச் செய்ய முடியாத சில வேலைகளைத் தாமே செய்வதன் மூலம் அரசின் பூரண விசுவாசியாக விளங்கும் ஒரு கட்சியாகும்.

குறிப்பாக ஐக்கிய நாடுகள் சபைக்கு எதிராகப் போராட்டம் நடத்தி அதை முற்றுகையிட்டு இயங்கவிடாமல் நெருக்கடியை ஏற்படுத்தி, ஐக்கிய நாடுகள் பொதுச் செயலர் பான்கீ மூன், ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை ஆகியோரின் படங்களுக்குச் செருப்பு மாலை அணிவித்து அவமரியாதை செய்து எரியூட்டி சாதனை படைக்கிறவர்கள் தேசிய சுதந்திர முன்னணியினர். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு எதிராக உண்ணாவிரதப் போராட்டம் நடத்தியவர் விமல் வீரவன்ஸ. அது மட்டுமன்றி ஜாதிக ஹெல உறுமய, பொதுபல சேனா போன்ற அமைப்புகளுக்குப் போட்டியாக இனவாதக் கருத்துக்களை அவர் பரப்பி வருகிறார். ஒட்டுமொத்தத்தில் தமிழ் மக்களுக்கு சிறிதளவு உரிமைகள்கூட வழங்கப்படக் கூடாது என்ற கருத்தைச் சிங்கள மக்கள் மனங்களில் ஆழப் பதிப்பதில் இவர் தீவிரமாகச் செயற்பட்டு வருகிறார்.

அதாவது அரசின் இன விரோத நடவடிக்கைகளுக்கான ஒரு வலுவான ஆதரவுதளத்தைச் சிங்கள மக்கள் மத்தியில் உருவாக்குவதில் பெரிய பங்காற்றி வருகின்றார். இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் என்பன தொடர்பாகவும், பொதுபல சேனாவின் நடவடிக்கைகளுக்கு அரசு ஆதரவு வழங்குவது தொடர்பாகவும் ஊடகவியலாளர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் தொடர்பாகவும் அரசுக்கு சர்வதேச அளவில் பல முனைகளிலும் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன. எனவே அரசு சில கண் துடைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டிய ஒரு தேவை எழுந்துள்ளது. இதன் காரணமாகவே அரசு காணாமற் போனோர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு ஆலோசனை வழங்க மூன்று வெளிநாட்டு நிபுணர்களை நியமித்துள்ளது.

இந்த நியமனம் தொடர்பாக இப்போது விமல் வீரவன்ஸ போர்க்கொடி தூக்கியுள்ளார். ஏற்கனவே அவர் அரசிடம் சமர்ப்பித்த 12 கோரிக்கைகளுக்கு அரசு பதில் தரவில்லை எனவும் குற்றம் சாட்டியுள்ளார். இந்த இரு விடயங்களையும் அடிப்படையாக வைத்துத்தான் ஊவா மாகாண சபையில் தனித்துப் போட்டியிடப் போவதாகத் தெரிவித்துள்ளார்.

ஆனால் அவர் இன்றுவரை அமைச்சர் பதவியிலிருந்து விலகவுமில்லை: இனி விலகப் போவதுமில்லை தேர்தல்களின் பின்பும் அரசுக்கு இவரின் ஆதரவு தொடரும் என்பதில் சந்தேகமில்லை.

ஆனால் சிங்கள மக்கள் மத்தியில் சிங்கள கடும்போக்கு சிந்தனையைக் கலையவிடாமல் பாதுகாக்கவும், அந்த வாக்குகள் வேறு பக்கம் போய்விடாமல் தமது பக்கம் திருப்பவுமே அவர் தனியாகப் போட்டியிடுகிறார். அதில் அரசைக் கண்டித்தும் பரப்புரை செய்வார். இறுதியில் அவர் வெற்றி பெற்ற ஆசனங்கள் அரசுக்கே ஆதரவு வழங்கும்.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலின்போது முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம்களுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகளைக் கண்டித்தே அரசுக்கு எதிரான வாக்குகளைப் பெற்று சில ஆசனங்களைக் கைப்பற்றியது. ஆனால் தேர்தல் முடிந்த பின்பு அதே அரசு கட்சிக்கு ஆதரவு வழங்கி ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் உறுப்பினரை முதலமைச்சர் ஆக்கியது.

இப்போ விமல் வீரவன்ஸ முஸ்லிம் காங்கிரஸின் அதே வழியில் இறங்கியுள்ளார். இவரின் நடவடிக்கைகளுக்கு அரச தரப்பின் மறைமுக ஆதரவு நிச்சயம் உண்டு.

அடுத்து முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்த முஸ்லிம்கள் ஒன்றிணைந்து போட்டியிட வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது.

இவர்கள் தேர்தல் காலத்தில் பள்ளிவாசல்கள் தாக்கப்பட்டதைக் கண்டித்தும், பேருவளை, அளுத்கமவில் ஆரம்பித்து நாட்டின் பல பகுதிகளுக்கும் பரவிய முஸ்லிம் மக்களுக்கு எதிரான வன்முறைகளை எதிர்த்து முஸ்லிம் மக்கள் தங்கள் பலத்தை நிரூபிக்க வேண்டும் எனக் கேட்டு அரசுக்கு எதிராகப் பரப்புரை செய்வார்கள். ஆனால் ரவூப் ஹக்கீமும், ரிஷாத் பதியுதீனும் அரசின் முக்கிய அமைச்சர்கள். எனவே தேர்தல் முடிந்த பின்பு வெற்றி பெறுபவர்கள் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கே ஆதரவு வழங்குவார்கள். உண்மையாகவே எதிர்க்கட்சிகளுக்கு விழக்கூடிய முஸ்லிம் வாக்குகளை அரசுக்குச் சாதகமாகத் திருப்புவதே அவர்களின் சாதனையாக இருக்கும். அங்கு அவர்கள் அரசைப் பலப்படுத்தும் சில பணியை மட்டுமே செய்ய முடியும்.

கிழக்கு மாகாண சபையில் எவ்வளவு போராடியும் பேருவளை, அளுத்கம சம்பவங்களைக் கண்டித்து ஒரு தீர்மானத்தை முன்மொழிய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பைச் சேர்ந்த தவிசாளர் அனுமதிக்கவில்லை என்பதை நாம் மறந்து விட முடியாது. ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸால் எதையுமே செய்ய முடியவில்லை. அவர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்து மாகாண சபை ஆட்சியைக் கலைக்கவும் இல்லை.

இதே போன்றே மலையக மக்களின் பிரதிநிதித்துவத்தை அதிகப்படுத்த மலையகக் கட்சிகள் ஒன்றிணைந்து போராட வேண்டும் என்ற நிலை எழுந்துள்ளது.

இலங்கை தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி உட்படப் பெரும்பான்மையான மலையகக் கட்சிகள் அரசில் அங்கம் வகிக்கின்றன. இவர்கள் ஒன்றிணைந்து போட்டியிட்டு வெற்றி பெற்றாலும் தேர்தலின் பின்பு ஆதரவு வழங்கப் போவது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கே.

இன்று இலங்கையிலேயே அதி குறைந்த கூலி பெறுபவர்கள் மலையகத் தொழிலாளர்களே. கணவன், மனைவி, பிள்ளைகள் என அனைவரும் உழைத்தாலும் அவர்கள் இன்னமும் கடுமையான வறுமையிலேயே வாடுகின்றனர். சுகாதார வசதி, வீட்டு வசதி, கல்வி வசதி என்பது மிக்க குறைந்தளவு மக்களுக்கே கிடைக்கிறது. 10 லட்சத்துக்கு மேற்பட்ட மலையக மக்கள் நாட்டில் வசித்தாலும் வருடா வருடம் நூறு பேருக்கும் குறைந்த மாணவர்களே பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்படுமளவுக்கு மலையகக் கல்வி நிலை படுமோசமாக உள்ளது.


எல்லாவற்றையும் விடத் தோட்ட நிர்வாகங்களின் பல்வேறு ஒடுக்கு முறைகளுக்கும் , மோசடிகளுக்கும் இந்த மக்கள் உட்படுத்தப்பட்டு வருகின்றனர். மலையகத்தின் பெரிய தொழிற் சங்கங்கள், கட்சிகள் எல்லாமே அரசில் ஏதோ ஒரு வகையில் அங்கம் வகித்தாலும் அவர்களின் வாழ்வு படு பாதாளத்திலேயே உள்ளது. இப்படியான நிலையில் மலையக மக்களின் ஒன்றிணைந்த பிரதிநிதித்துவம் பற்றிப் பேசப்படுகிறது. எல்லோரும் ஒன்றிணைந்து போட்டியிடக் கூடிய மலையகத்தவர்களை மாகாண சபைக்குத் தெரிவு செய்யப்பட்டாலும் அவர்கள் அரச கட்சிக்கே ஆதரவளிக்கப் போகின்றனர். அப்படி ஆதரவளித்து மலையக அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், ஜனாதிபதி இணைப்பாளர்கள் ஆகியோரால் செய்ய முடியாதவற்றை மாகாண சபை உறுப்பினர்களால் செய்து விட முடியுமா? எனவே ஒன்றிணைந்த பிரதிநிதித்துவம் என்பது அடிப்படையில் மலையக மக்களின் ஆதரவை ஒன்று திரட்டி அரசுக்கு வழங்கும் ஒரு தந்திரம் என்பதில் சந்தேகமில்லை.

இன்னும் சொல்லப் போனால் மலையக மக்களின் வாக்குகள் எதிர்க்கட்சிக்கோ, அரசுக்கு எதிரான சக்திகளுக்கோ போய்விடாமல் தடுக்கும் ஒரு தந்திரோபாய நடவடிக்கையே இந்த ஒன்றிணைந்த பிரதிநிதித்துவம் என்பதாகும்.

தனித்துப் போட்டியிடுதல், முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை அதிகரித்தல் , மலையக மக்களின் உறுப்பினர்களை அதிகரித்தல் போன்ற கோஷங்கள் எல்லாமே அரசுக்கு எதிரான வாக்குகளைத் திசை திருப்பி அரசுக்கே பயன்படுத்துவதாகும்.

விலைவாசி உயர்வு, மாணவர்கள், தொழிலாளர்கள், முஸ்லிம்கள் உட்பட மக்கள் மீது மேற்கொள்ளப்படும் ஒடுக்குமுறைகள் என்பன தொடர்பாக மக்களின் வெறுப்பைப் பயன்படுத்தியே அரசுக்குப் பலன் தேடும் நயவஞ்சக நாடகங்களே இவைகளாகும். இவர்கள் அரசின் தரகர்கள் என்பதை மக்கள் புரிந்து கொண்டு நிச்சயமாக அவர்களுக்குச் சரியான பாடம் புகட்டுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரை விமர்சனம்

மூழ்கடிக்கும் வசன மழை

# சதுரங்க வேட்டை

பணம் இருந்தா என்ன வேணுமாலும் பண்ணலாமா, அந்தப் பணத்தைச் சம்பாதிக்க நான் ஏன் என்ன வேணுமானாலும் பண்ணக் கூடாது? என்று திட்டமிடும் ஒருவனின் சதுரங்க வேட்டை வியூகங்கள்! சமூகத்தால் விரட்டப்படும் சிறுவன், அதே சமூகத்தை ஏமாற்றும் குற்றவாளியாக உருவாகும் ஒருவருடைய கதைதான். ஆனால், அதில் தமிழகத்தின் வெள்ளை வேட்டிகளைப் புட்டுப் புட்டு வைத்திருக் கும் வசனங்கள் அசத்தல்!

மண்ணுள்ளிப்பாம்பு, மல்ட்டி லெவல் மார்க்கெட்டிங், ஈமு கோழி, இரிடியம் கோபுரம்... என்று செய்திகளில் கடந்து போன சம்பவங்கள்தான். அந்த மோசடிகளையே கதைக் களமாக்கி, சதுரங்கக் காய் நகர்த்தல் அமைப்பில் திரைக்கதை அமைத்து, இறுதியில் அன்பின் பெருவெளிச்சத்தைப் பாய்ச்சியிருக்கிறார் அறிமுக இயக்குநர் எச்.வினோத். ஒரு மனிதனின் பணத் தேவை எப்படி ஒருவனை ஏமாற்றுபவனாகவும், மற்றவனை ஏமாறுபவனாகவும் மாற்றுகிறது. பேராசைப் பேர்வழிகளை மோசடி மன்னர்கள் எப்படி ஆசைத் தூண்டில் வீசி கவிழ்க்கிறார்கள், ஏமாற்றி அபகரித்த பணம் எப்படி நிம்மதியை ஆக்கிரமிக்கிறது என்று கதையைச் சொன்ன விதம் வரவேற்பைப் பெறுகின்றது!

கதாநாயகன் நடராஜுக்குப் பணமே பிரதானம். மண்ணுளிப்பாம்பை மருத்துவக் குணம்கொண்டது என்று சொல்லி விற்பது, புற்றுநோயைக் குணப்படுத்தும் அமெரிக்க ஏரி நீரை விற்பது, ஈமு கோழி மூலம் கோடிகள் அள்ளலாம் என்று வலை விரிப்பது எனத் தில்லு முல்லு தகிடுதத்தங்கள் செய்கிறார். எதிர் பாராத ஒரு திருப்பத்தில், தன்னால் ஏமாற்றப் பட்டவர்களுக்குப் பதில் சொல்லியாக வேண்டிய நிர்பந்தத்தில் சிக்கிக்கொள்கிறார் நடராஜ். தன் கர்ப்பிணி மனைவி பிணையில் இருக்க, அதுவரையிலான தகிடுத்தனங்களை மிஞ்சும் மிகப்பெரும் மோசடியைத் திட்டமிடுகிறார். அதில் திடீர் சிக்கல். வில்லன்களிடம் இருந்து நடராஜ் மீண்டாரா? மனைவியின் நிலை என்ன? இதுவே செக்மேட்!

மது, சூது, கள்ளம், கபடம்... என சர்வகாலமும் கெட்ட செயல்களின் இடையே, நேர்த்தியான அணுகுமுறையோடு நீந்தும் காந்தி பாபு பாத்திரத்துக்கு, நடிகர் நட்டி சரியான பொருத்தம். பணத்தைப் பார்த்தும் படபடக்கும் கண்கள், வெளுக்கும் பொலிஸிடம் கள்ள மௌனம், பாசம் காட்டும் பொலிஸிடம் துள்ளல் வன்மம், காதலின் பிரியம், பிரிவின் துயரம்... என வளமான வார்ப்பு. அதிலும் பதமாக ஆரம்பித்து படபடவென அதிர்வு கூட்டி பாயும் புலியின் சீற்றம் சேர்த்து எதிராளியைச் சிலிர்க்கச் செய்யும் அந்த ஆன்மிக விரிவுரையாளர்... சரியான தெரிவு.

படத்தின் பெரும் பலமும் பெரும் பங்குக் கைதட்டலைக் குவிப்பதும்... வசனங்களே! "உலகத்தில் எல்லாமே இருந்தும், உங்களுக்குனு எதுவுமே இல்லைன்னு இருந்திருக்கிறீர்களா?", "நாளைக்குச் சம்பாதிக்க முடியாது என நினைக்கிறவன்தான் சேர்த்து வைப்பான். நான் ஏன் சேர்த்து வைக்கணும்?", "குற்றவுணர்ச்சி இல்லாம செய்யுற எதுவுமே தப்பில்லை", "நான் யாரையும் ஏமாத்தலை, ஏமாறத் தயாரா இருந்தவங்களுக்கு ஒரு வாய்ப்பு தந்தேன்", "உன்னை ஒருத்தன் ஏமாத்தினா, அவனை எதிரியா நினைக்காதே... ஏன்னா, ஒரு வகையில அவன் உனக்கு குரு", "அஞ்சு வருஷத்துல தமிழ்நாட்டை சிங்கப்பூரா மாத்திடுவேன்னு சொல்லி ஓட்டு வாங்குறாங்க. ஆனா, தமிழ்நாடு தமிழ்நாடாதான் அப்படியே இருக்கு. இது ஏமாத்து இல்லையா?", "ஒவ்வொரு பொய்லயும் கொஞ்சம் உண்மை கலந்திருக்கணும்", "நாமல்லாம் முதலாளி ஆக விரும்புற கம்யூனிஸ்ட், உனக்கு மட்டும் புரிஞ்சிட்டா, நான் வேற ஐடியா யோசிக்கணும்?" படீர் படீர் என வெடிக்கிறது ஒவ்வொரு துண்டு வசனமும். ஒவ்வொன்றிலும் அவ்வளவு அரசியல்! இடையிடையே, "பாம்புக்கு 200 மொழி தெரியும்", "இளைய தளபதி விஜய் என்று பேர் வைப்போமா?", "மதுரைக்காரன் என்னைக்குடா கட்டிங் கோட நிறுத்தியிருக்கிறான்?" என்று எளிய இனிய நகைச்சுவையும் உண்டு.

கிடைத்த கொஞ்ச இடத்திலும் அழுத்த முத்திரை பதிக்கிறார் இஷாரா. பெரிய விழிகள், பெரிய கன்னம், மருண்ட பார்வை... என்று முகமொழியிலேயே உணர்வுகளைக் கடத்திவிடுகிறார். தமிழ்த் திரைக்கு ஒரு புது ராணி!

மொழிப் பற்றோடு க்கட்டப்பஞ்சாயத்து செய்யும் சுத்தத் தமிழ் வில்லன், சிவப்பு நாடா நீதிமன்ற நிலுவைகள் ஒரு குற்றத்தைப் பிசுபிசுக்கச் செய்யும் உண்மை, அரச வளத்தை சூறையாடும் அசகாயத் தொழிலதிபர்கள், பாம்புக்காக மௌன விரதம் இருக்கும் பணத்தாசை வியாபாரி, பாதி விலையில் தங்கம் என்றதும் ஜோஜோவெனக் கிளம்பிவரும் மாட்டு மந்தை மக்கள் என... படத்தின் ஒவ்வொரு நிகழ்விலும் கதாபாத்திரத்தி லும் அத்தனை அசல்... அத்தனை அசத்தல்!

அறிமுகத் தோரணைகளுக்குப் பிறகு நடராஜிடம் ஒவ்வொரு பாத்திரமும் எப்படியும் ஏமாந்துவிடுவார்கள் என்று ஊகிக்க முடிகிறது. ஆனாலும், அது எப்படி என்பதில் கடைசித் திருப்பம் வரை சுவாரஸ்யம் சேர்த்து 'லப்டப்' எகிற வைத்திருக்கிறது விறுவிறுப்பூட்டும் திரைக்கதை! பிரமாண்ட அரங்கங்கள் இல்லை, அசத்தல் இடங்கள் இல்லை, ப்ழகிய முகங்கள் இல்லை... ஆனாலும் விதவித கோணங்களில் கண்களை நிறைக்கிறது கே.ஜீ.

ஷான் ரால்டனின் பின்னணி இசை... படத்துக்கு மேலும் வலுச் சேர்க்கிறது. படத்தின் பின்பாதியைப் பெருமளவு நிரப்பும் நட்டி - இஷாரா காதல் காட்சிகளை, ஈரமும் ஈர்ப்புமாகப் பதிவாக்கி இருக்கலாம். ஏமாறியவனைப் போலவே, ஏமாற்றுபவனும் நிம்மதியாக இருக்கமாட்டான் என்று புரிய வைத்த, அன்பே சிறந்த ஆயுதம் என வலியுறுத்திய, மோசடிகளில் இருந்து உஷாரா இருங்கப்பா என்று விழிப்பு உணர்வு ஏற்படுத்திய... பல தளங்களில் இயங்கியிருக்கும் இந்தச் சினிமா, தமிழ்ச் சூழலுக்கு மிக முக்கியமான பதிவு.

> "குற்றவுணர்ச்சி இல்லாம செய்யுற எதுவுமே தப்பில்லை"
>
> அஞ்சு வருஷத்துல தமிழ்நாட்டை சிங்கப்பூராக மாத்திடுவேன்னு சொல்லி ஓட்டு வாங்குறாங்க. ஆனா, தமிழ்நாடு தமிழ்நாடாதான் அப்படியே இருக்கு. இது ஏமாத்து இல்லையா?
>
> "நான் யாரையும் ஏமாத்தலை, ஏமாறத் தயாரா இருந்தவங்களுக்கு ஒரு வாய்ப்பு தந்தேன்"
>
> உன்னை ஒருத்தன் ஏமாத்தினால், அவனை எதிரியாக நினைக்காதே... ஏன்னா, ஒரு வகையில் அவன் உனக்கு குரு,

---

# அசத்தலான அம்மா

## சரண்யா பொன்வண்ணன்

அசத்தலான அம்மா தேவையா? கூப்பிடுங்கள் சரண்யாவை என்கிற அளவுக் குப் பெரும்பாலான கதாநாயகர்களுக்கு அம்மாவாக நடித்துப் பாச மழை பொழிந்துகொண்டிருக்கிறார் சரண்யா பொன்வண்ணன். இதுதான் சமயமென்று சரண்யாவுக்கு சில அம்மா கேள்விகள்

*உங்கள் அம்மா பற்றி...?*

என் அம்மாவின் பெயர் சரோஜினி ராஜ். பிறந்து வளர்ந்தது எல்லாம் கேரளா என்றாலும், அடிப்படையில் அவர் தமிழ்ப் பெண். விதம் விதமாக சமையல் செய்து அசத்துவார். அவரின் பிரமாதமான தொழில் உடைதைப்பது. மிகவும் அழகாக வீட்டுத் தோட்டம் அமைப்பார். நம்பமுடியாதளவுக்குத் தைரியமான பெண் என் அம்மா.

*முதன் முதலாக அம்மாவாக நடித்த படம்?*

அலை படத்தில் சிம்புவுக்கு அம்மாவாக நடித்தேன். அதுதான் ஆரம்பம்.

*இனிமேல் அம்மா வேடம்தான் என்று முடிவானபோது மனநிலை எப்படி இருந்தது?*

நம்பமாட்டீர்கள். மிகவும் திருப்தியாக இருந்தது. பாதுகாப்பாக உணர்ந்தேன். கவர்ச்சியாக நடிக்கத் தேவையில்லை. கிசுகிசு பிரச்சினை வராது. கதாநாயகர் களுக்கு அம்மாவாக நடிப்பதால், மரியாதை அதிகமாகின்றது. மிகவும் சந்தோஷமாக இருக்கின்றேன்.

*நீங்கள் அம்மாவாக நடிக்க ஆரம்பித்த போது, உங்கள் கணவர் பொன்வண்ணன் எப்படி உணர்ந்தார்?*

அவருக்கும் மிகுந்த சந்தோஷம். கல்யாணத்துக்குப் பிறகு குழந்தைகள் பிறந்து ஐந்தாறு வருடங்கள் நடிக்காமலேயே இருந்தேன்.

மறுபடியும் நடிக்க வாய்ப்பு வந்தபோது, "இது உனக்கு ரெண்டாவது இன்னிங்ஸ்... சொல்லப் போனார், மரியாதையான இன்னிங்ஸ்" என்று சொல்லி உற்சாகப்படுத்தியதே அவர்தான்.

*கதாநாயக மகன்களில் இந்த அம்மாவுக்குப் பிடித்த மகன் யார்?*

என்னால் பதிலே சொல்ல முடியாத கேள்வி இது. எனக்கு இரண்டு மகள்கள். ஆனால் எத்தனையோ மகன்கள். அம்மாவாக நடிக்கும்போது, வெறுமனே நடித்துவிட்டு மட்டும் வந்துவிடுவது இல்லை. அம்மா என்ற உணர்வு நடிப்பையும் மீறி நிலைத்திருக்கும். அதனால் நான் யார் யாருக்கெல்லாம் அம்மாவாகப் படத்தில் நடித்திருக்கிறேனோ அவர்கள் எல்லோரும் எனக்குப் பிடித்த என் மகன்கள்தான்.

*பிடித்த அம்மா பாட்டு?*

சில நாள் முன்பு வரைக்கும் மன்னன் படத்தில் வந்த "அம்மா என்றழைக்காத உயிரில்லையே" பாட்டுத்தான். ஆனால் இப்போது வேலையில்லா பட்டதாரி படத்தில் வரும் "அம்மா நீ எங்கே அம்மா" பாட்டுத்தான். காரணம் அது என் வாழ்க்கை யுடன் சம்பந்தப்பட்ட பாட்டு. எனக்காக அம்மா கவலைப் பட்டுக்கொண்டே இருப்பார். அவர் இறந்த பின்னர் எனக்கு ஒரு நல்ல மனிதருடன் கல்யாணம் நடந்தது. நல்ல பிள்ளைகள் பிறந்தது. சினிமாவில் நல்ல வாழ்க்கை அமைந்தது. அடுத்தடுத்து நல்லது எல்லாம் ஏதோ விபத்து மாதிரி நடந்தது.

*உங்கள் பிள்ளைகள் உங்களை அம்மானு கூப்பிடுகிறார்களா? மம்மி என்று கூப்பிடுகின்றார்களா?*

அய்யே... போட்டு வாங்குறீங்களா? எங்கேயும் எப்போவதும் அம்மா என்றுதான் கூப்பிடுகிறார்கள்... கூப்பிடுவார்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைவரையும் வசீகரிக்க

கருத்துப் பரிமாற்றத்தில் வெறும் சொற்கள் ஒரு மிகச் சிறிய பங்கு மட்டுமே வகிக்கின்றன என்பது உண்மை. இருப்பினும் கவனமாகத் தேர்ந்தெடுக்கப்படும் சொற்கள் மனிதர்களின் உணர்ச்சிகளைப் பாதிக்கின்றன. அதனால் பரஸ்பர நேச உணர்வையும் வளர்க்கின்றன. உதாரணத்துக்குப் பாராட்டு வழங்குவது என்பது விளைவை ஏற்படுத்தக் கூடியதுதான். ஆனால் அவை மனத்தின் ஆழத்திலிருந்து வர வேண்டும். மேலும் நிச்சயமான தகவலை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். முகஸ்துதி என்பதுபோலிநாணயத்தைப்பயன்படுத்துவதுபோன்றதாகும். அதைச் செலவழிக்க உங்களால் முடியலாம். ஆனால் கண்டுபிடிக்கப்பட்டால் உங்களுக்குப் பெரிய அளவில் சேதத்தை உண்டுபண்ணக் கூடும். புதிது, எளிது, இலவசம், உடல்நலம், பணம், பாலுணர்வு போன்ற சில சொற்கள் மனிதர்களின் உணர்வுகளையும் எண்ணங்களையும் பாதிக்கும் என்பது விளம்பரதாரர்களுக்குத் தெரியும். நம் ஒவ்வொருவருக்கும் ஏற்றுக் கொள்ளத்தக்கவையாக, நம்முடைய உணர்ச்சிகளைத் தூண்டுபவையாக நமக்கென்றே ஒரு சொல் தொகுப்பு உண்டு. மற்றவருக்கு எத்தகைய சொற்களை ஏற்க முடியும் என்பதை முனைந்து கண்டுபிடித்துப் பரஸ்பர நேச உணர்வுப் பாலத்தைக் கட்டுவதற்கு இவற் றைப் பயன்படுத்தவும்.

**செல்வாக்கை ஏற்படுத்தக் கூடிய தீவிரமான சொற்கள்**

உடல் ரீதியாக, உணர்ச்சி பூர்வமாகத் தூண்டுதலை ஏற்படுத்தும் மக்களுடைய தீவிரச் சொற்களைக் கவனித்துப் பார்க்கவும்.

**தானே ஒரு சூழ்நிலையைத் தொடங்கிச் செயற்படும் மனிதர்கள்**

அதைத் தேர்ந்தெடு, சும்மா அதைச் செய், இப்போது ஏன் காத்திருக்க வேண்டும், தொடங்குவதை நீயே செய், எதற்காக நீ காத்திருக்கிறாய், நாம் துரிதமாகச் செயற்படலாம் போன்ற சொற்களுக்கு அவர்கள் பதில் வினையாற்றுவார்கள்.

**சிந்தனை வயப்பட்டவர்கள் இப்படி பேசுவார்கள்**

நாம் அதைச் சிந்தித்துப் பார்க்கலாம், ஏன் என்பதை இது உனக்குச் சொல்லும், உண்மையிலேயே நாம் புரிந்து கொள்வது அவசியமாகிறது, உன்னால் முடியும், அதற்கான நேரம் வந்துவிட்டது.

**இலக்கை நோக்கித் தூண்டப்பட்டவர்கள் பின்வரும் வார்த்தைகளால் தூண்டப்படுவர்**

சாதிக்கவும் சொல்வதைச் சாத்தியமாக்கும், லாபங்கள், ஆதாயங்கள், இதைத்தான் நீ செய்ய வேண்டும், ஒன்றை அடை, முயற்சித்து நிறைவேற்று.

**பிரச்சினையைத் தீர்ப்பவர்/ தவிர்ப்பவர்கள் இந்த வார்த்தைகளுக்கு வினையாற்றுவர்**

தீர்வுகாண், தவிர்க்கவும், பொருத்தவும், தடுக்கவும், அதிலிருந்து விடுவித்துக்கொள், அது பொருத்தமானதல்ல, எது தவறு என்பதை நாம் கண்டுபிடிக்கலாம், எந்தப்பிரச்சினையும் இருக்காது.



**அக உணர்வால் தூண்டப்படுபவர்கள் இந்த வார்த்தைகளுக்கு வினையாற்றுவர்**

இதை நீயே முடிவு செய், அதைப் பற்றி யோசி என்று நான் சொல்கிறேன், முயற்சி செய்து பிறகு நீ என்ன நினைக்கிறாய் என்பது பற்றி முடிவு எடு, உன்னால் மட்டுமே முடிவு எடுக்க முடியும், நீ யோசித்துப் பார்க்கலாம், கூப்பிடு.

**புறவிடயங்களால் தூண்டப்படுபவர்கள் இந்த வார்த்தைகளுக்கு வினையாற்றுவர்**

மற்றவர்கள் பார்ப்பார்கள், அது அங்கீகரிக்கப்பட்டுள்ளது, நன்றாக மதிக்கப்பட்டவர்.

**மாற்றத்தை வெறுப்பவர்கள் இந்த வார்த்தைகளுக்கு வினையாற்றுவர்**

பொதுவாக நீ வழக்கமாகச் செய்வது போல், மாறாமல் இருப்பது, உனக்கு ஏற்கனவே தெரிந்தது போல், அதையே நிலைநிறுத்திக் கொண்டு, அச்சு அசல் அதேபோல், முன்பு இருந்தது போலவே.

**மாற்றத்தை விரும்புபவர்கள் இந்த வார்த்தைகளுக்கு வினையாற்றுவர்**

புதிது, முற்றிலும் மாறுபட்டது, இங்குள்ள எதைப் போலவும் இல்லை, தனித்தன்மையானது, ஒரே வகையானவற்றில் தலை சிறந்தது, முழுவதுமாக மாற்றப்பட்ட, அடையாளம் காணமுடியாதபடி மாற்று, புத்தம் புதியது, கேள்விப்பட்டதேயில்லை, இது ஒன்றே ஒன்று.

**மனித மையச் சிந்தனை உள்ளவர்கள் இந்த வார்த்தைகளுக்கு வினையாற்றுவர்**

மனிதர்களின் பெயர்கள், நான், உணர்வுகள், எண்ணங்கள், அனுபவித்துக் கொண்டு, இது நல்லதாக உணரச் செய்யவும், உனக்கு, மற்றவர்களுக்கு, மனிதர்கள், நம் குழு, தவிர அது, இது, இவை, அவை, அவர்கள் போன்ற சுட்டிக்காட்டப்படும் சொற்கள்.

**பொருள்களைப் பற்றிச் சிந்தனையுள்ளவர்கள் இந்த வார்த்தைகளுக்கு வினையாற்றுவர்**

பொருள்கள், முறை, குறிக்கோள்கள், செய்முறை, அந்த வேலையைச் செய்துமுடி, கையில் இருப்பதில் முழுக் கவனம், இலக்கு, விளைவுகள்.

எப்போதும் தயங்குதல், மிகையாக அழுத்தம் கொடுத்தல், ஒரு வார்த்தை பதில்கள், பரிதாபத்துக்குரிய நான், குறைகூறும் மொழி, கூடுதலான அடக்கத்தோடு பேசுதல், கொச்சை மொழி, கடு மொழி போன்ற குறிப்பிட்ட வகையாக மொழி மற்றும் சில வகையான அங்க அசைவுகள் பரஸ்பர நேச உணர்வை வளர்ப்பதைச் சேதப்படுத்த வாய்ப்புண்டு.

(தொடரும்)

# கொதிக்கும் குருதி கடல்....

சர்வதேச சமுதாயமே...!
எம்மின குருதியை
சாட்சியாக வைத்து
எழுப்பும் குரல் இது

உரிமைக்காகப் போராடி
உணர்வுகள் எடுக்கப்பட்டது
உதிரம் சிந்திய போர்க் காண்டத்தில்
உனக்கும் பங்குண்டு
ஞாபகம் இருக்கட்டும்

எம்மின தேச விடியலுக்காய்
சிதைக்கப்பட்ட பெண்களும்
விதைக்கப்பட்ட மறவர்களும்


ஆயிரம் கோடி
மறைக்கப்பட்ட உண்மைகளும்
மறுக்கப்பட்ட உரிமைகளும்
கோடான கோடி

நீ செய்த பிழையை உணர்ந்து
நீதி ஒன்றை நிலைநாட்ட
ஜெனிவா என்கின்ற
ஜெகயோதியா...?
மூடிவைத்த உண்மைகள்
முளைத்தெழும் போது – மீண்டும்
மூடுவதற்காய் போட்ட
முன்வேலியா....?
நீயே முடிவு செய்

*வரணியிலிருந்து*
*ஈழமைந்தன் குட்டி ஜசி.*

# பொதியில் வந்த விமானம்...!

ஆளில்லா விமானங்கள் பொதுவாக ராணுவம், மீட்புப் பணி போன்ற பணிகளுக்காகப் பயன்படக்கூடியவை. அமெரிக்காவில் ரூ. 2 கோடி மதிப்புள்ள ஆளில்லா விமானம் ஒன்று தவறுதலாக ஒரு மாணவருக்கு பொதி செய்து அனுப்பப்பட்டுவிட்டது. மகிழ்ச்சியின் உச்சத்துக்குச் சென்ற அந்த மாணவர், அந்த விமானத்தைப் பயன்படுத்திப் படங்களை எடுத்ததுடன் சமூக வலைத்தளத்திலும் பதிவேற்றி மகிழ்ந்தார். மாசசூசெட்ஸ் மாகாணத்தில் உள்ள கடல்வாழ் உயிரிகள் சரணாலயத்துக்கு அனுப்பப்பட்ட அந்த விமானம், பின்னர் மாணவரிடமிருந்து திரும்பப் பெறப்பட்டுவிட்டது. மாணவர் சரி, பயங்கரவாதிகள் கையில் இதுபோன்ற பொருட்கள் கிடைத்திருந்தால்?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூடு

2000 ரூபா பரிசு பெறும் சிறுகதை

முல்லைக் கஜன்



கறுத்த கனத்த மேகங்கள். குலை நடுங்கும் வாடைக்காற்று. அங்குமிங்குமாய் முறிந்து விழும் மரங்கள். இருளின் மாயைக்குள் மண்டியிட்டுக்கொண்டது ஊர். இத்தனைக்குமிடையில் வானைக் கீறிக் கிழித்துப் பளிச்சிடும் மின்னல் கீற்றுக்குப் பின்னால், அணுகுண்டாய் சிதறும் இடி முழக்கம், அந்தக் கிராமமே சூனியப் பகுதியாயிருந்தது. இவை யாவற்றையும் ஒன்று திரட்டி பொழியும் கன மழை.

இருளைக் கிழித்தவாறு எங்கோவொரு மெல்லிய மஞ்சள் வெளிச்சம் சிணுங்கிக் கொண்டிருந்தது. கொலைக்காற்று போல வாடைக்காற்று சுழன்றடித்துக்கொண்டிருந்தது. பற்கள் கிடுகிடுத்தன. உடல் குளிரால் உறைந்து போயிருந்தது. ஆனால் அந்த உருவம் குப்பி விளக்கின் முன்னால் குந்தியிருந்தது. கையிலேயிருந்த புத்தகமும் சோர்ந்து போனது. தூக்கம் இவனைத் தூக்கி வாரிப்போட்டாலும், தூங்க மனமில்லை. விடிந்தால் பரீட்சை. காலின் கீழே சிறியதொரு பாத்திரத்தில் நீர். தூக்கம் வரும்போதெல்லாம் அதனுள் கால்கள் சென்று வரும்.

தாய் செல்லம்மாவுக்குச் சரியான காய்ச்சல். குச்சியால் செய்ததைப்போன்ற உடல். வெளித்தள்ளும் என்புகள். நொய்ந்து போன நிலையில். இப்போது காய்ச்சலும்... வியர்வையால் உடல் நனைந்திருந்தது. நேற்று ஒரு பனடோல் போட்டிருந்தாள். வேறு பனடோலும் இருக்கவில்லை. குளிர் ஒருபுறம். காய்ச்சல் மறுபுறம். அவளது நிலை பார்க்க பரிதாபமாயிருந்தது.

"அம்மா.... அம்மா.... என்னம்மா செய்யுது...?" தாயருகில் சென்று பரிவோடு வினாவுவான்.

"எனக்கொண்டும் இல்லை மோனை... நீ போய் படியடா ராசா".

குப்பி விளக்கை காற்று எங்கே விட்டு வைக்கப் போகிறது? தீப்பெட்டியிலும் குச்சுகள் தீர்ந்து போய்விட்டன. இறுதிக்குச்சை உரசிப் பற்ற வைக்க முயல்கிறான். அதனையும் காற்று அணைத்து விடுகிறது.

★ ★ ★

பொழுது புலர்ந்தது. மழை ஓய்ந்து விட்டது. எழில் கொஞ்சும் அந்தக் கிராமம் காலையில் சுடுகாடாய்ப் போயிருக்கும் என யாரும் எண்ணியிருக்கவில்லை. வடலிப் பனையின் மட்டையால் கட்டப்பட்ட படலை. படலையைத் திறந்து... வெளியே வந்த அருணுக்கு... முற்றத்தில் கண்ட காட்சி அப்படியே நிலைகுலைய வைத்துவிட்டது.

"அம்மா... அம்மா... இஞ்ச பாருங்கோ...?" எனக் கூறியபடியே தாயிடம் விரைந்த அருணைக் குறுக்கறுத்த தங்கை...

"என்னடா அண்ணா..."?

"மா... மா... மர.....ம்"

மௌனித்துப் போய் நின்றான் அருண். அப்பா சொன்னவர். அப்பப்பா வைத்த மாமரம். எத்தனை சந்ததிகள் கடந்தாலும் இந்த மரம் நிக்க வேணும். பரம்பரை பரம்பரையாய் எல்லா சந்ததிக்கும் அது பலன் கொடுக்கவேணுமென்று. ஆனால் இன்று... தந்தை சிவம் அடிக்கடி கூறும் வார்த்தைகள் அவன் அடி மனதிலிருந்து மேலெழுந்து வரலாயிற்று.

"அண்ணா.... அண்ணா... அங்க பாரேன்? எவ்வளவு மாங்காய் என்று... எல்லாம் அநியாயமாய் போய்ட்டுது."

தங்கை கஸ்தூரியின் மனப்புகைச்சல் கனன்றது. "அம்மா, நீங்கள் எனக்கு சப்பாத்து வாங்கித் தர மாட்டியலென்ன... என்ர சப்பாத்தைப் பார்த்து பிள்ளையளெல்லாம் நக்கலடிக்குதுகள். முதலையாம். நாக்கை நீட்டுதாம். தங்களை விழுங் கிப் போடுமாம். மரமும் முறிஞ்சிட்டுது. இனி எனக்கு சப் பாத்து...?

"..............................."

கூறிவிட்டு மௌனமாய் நின்றாள் கஸ்தூரி. இந்த முறை மாங்காய் வித்திட்டு, அந்தக் காசிலை சப்பாத்து வாங்கித்தாறன் என்று ஆசையூட்டிய செல்லம்மாவின் கனவை....

பூவும் பிஞ்சுமாய் குலை குலையாய் தொங் கிய க்காய்கள்... நிலம் தெரியாமல் சித றுண்டு கிடந்தன. தள்ளாடியபடியே முற்றத் துக்கு வந்து சேர்ந்தாள் செல்லம்மா. இரவு முழு வதும் சரியான காய்ச்சல். மாமரம் முறிந்த செய்தி கேட்டதும்... தனித்தொரு உற்சாகம் அவளுள் பிறந்துவிட்டது.

வீட்டு வாசலால் இறங்கியதும் றோட்டை மறைத்தபடி முற்றத்தில் நின்றது கறுத்தக் கொழும்பான் மாமரம். பருவத்துக்குச் சும்மா குலை கட்டிக் காய்ச்சிருக்கும். பெரிய உயரம் என்றில்லை. ஒர ளவு கட்டைதான்.

சில நேரத்தில காய்கள் தலை யிலகூட முட்டும். பழமென்றால் தேன்தான். பழமும் பெரியது. ஒராள் ஒரு பழத்துக்கு மேல சாப்பிடுறது அரிது. மாங்காய் காலத்தில நாங்கள் வைக்கோலும் ஆளுமாய்த்தான் இருப்பம்.

விடிய கோதுமை மாவில அம்மா பிட்டு அவிப்பா. அதோட மாங்காயும் நிறையச் சீவித்தருவா. கொஞ்ச நேரத்தில் கோப்பை மட்டுமில்லை. நீத்துப்பெட்டியும் காலியாயிடும். வெளவாலுகளோட தான் பெரிய பாடு. அப்பா முன் விறாந்தையில் தான் படுத்திருப்பார்.

முத்தத்தில கிடக்கிற தகரத்தில் தடியால அடித்துதான் வெளவாலுகளைக் கலைப்பர். அதுகள் எங்க கேட்கிற...? அப்பா தட்டிட்டுவர அதுகள் பின்னால வந்து சேர்ந்திடுங்கள்.

அரசடிப் பிள்ளையார் கோயில் திருவிழாவும் இந்தக் காலத்தில தான் வாறது. மாங்காய் வியாபாரிமார் முன்னும் பின்னும் திரிவாங்கள். நல்ல விலைக்கு விக்கலாம். இப்பிடி வித்து சேர்த்த காசில தான், தங்கைச்சிக்கு சாமத்திய வீடும் செய்தனாங்கள்.

ம்... இனி...?

"என்னடா ர்ாசா இப்பிடியே யோசித்துக் கொண்டிருக்கிறாய்?"

"அது ஒண்டுமில்லையம்மா..."

"ஓமடா தம்பி. இந்த மாமரம் நட்டு கிட்டத்தட்ட நூறு வருசமாய்ச்சு. அப்பாட கனவெல்லாம்.... ம், என்ன மோனை செய்யிறது. எங்கட காலம் இப்படியாய்ப் போய்ட்டுது..." போர்க் கால சூழலிலும் கூட, ஒரு கொப்புக்கூட முறியாமல் நிண்டது. 'மகாசென்' எண்டு சொல்லி வந்திச்சே... எல்லாம் நாசமாய்ப் போட்டுது.

"அம்மா... அம்மா... இங்க..."

"என்னடி பிள்ளை...?"

"இஞ்ச வாங்கோவன்.. அண்ணா டேய்.. இங்க வாடா"

"என்னடி சொல்லு...?" என்று கூறியபடியே தங்கையை நோக்கி சென்றான் அருண். அங்கே கண்ட காட்சி அவனை ஒரு தடவை அப்படியே உலுக்கி நின்றது. மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாய்...

பிய்ந்துபோன நிலையிலிருந்த குருவிக் கூடொன்றை தூக்கிக் காட்டினாள் கஸ்தூரி. கொப்புகளுக்குள் சிக்குண்ட நிலையில் குருவிகள். தாய்க்குருவியும் நான்கு குஞ்சுகளும்... மூன்று குஞ்சுகளும் இறந்து போய்... தாய்க் குருவி தனது சிறகுகளை அடித்துப் பறக்க முற்பட்டது. தனக்கேதும் ஆபத்து நேர்ந்து விடுமோ எனக் குருவி பயந்து நடுங்கியது.

கஸ்தூரியும், அருணும் சேர்ந்து குருவிகளை மீட்டனர். அவற்றைத் தாயிடம் கொண்டு சென்று காட்டினார்கள். "ஏன் மோனை இதுகளைப் பிடிக்கிறியள். ஐந்தறிவு படைத்த ஜீவனுகளைக் கொடுமைப் படுத்தக் கூடாது. அதுகளைப் பேசமாம விட்டி டுங்கோ..."

"இல்லையம்மா. அதுகள் பாவம். நான் அதுகளை வளர்க்கப்போறன்" என்றாள் கஸ்தூரி.

"ம், ரெண்டு பேரும் என்னவோ செய்யுங்கோ. பள்ளிக் கூடத்துக்கு நேரம் போகுது. கெதியாய் வெளிக்கிடுங்கோ பாப்பம்"

உண்மையில் அந்தக் குருவி பாவம். எவ்வளவு கஷ்டப்பட்டு அலைஞ்சு திரிஞ்சு தும்புகள் எடுத்து வந்து, அதை வைத்துக் கூடு கட்டி எவ்வளவு சந்தோசமாய் வாழ்ந்திருக்கும்? ஒரு கூட்டில் தன்ர குஞ்சுகளோட ஒன்றாய் வாழ்ந்த குருவி... இண்டைக்கு.....

ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்த செல்லம்மா, திடுக்குற்று விழித்தாள். கையில் பிய்ந்து போன அந்தக் குருவிக்கூடு... மௌனமாய்க் கிடந்தது. அவளை அறியாமலே அவளுக்குக் கண்ணீர்த் துளிகள் விழிமடலுக்குள்ளே கருக்கொள்ளலானது. அழுதே விட்டாள். செல்லம்மாவின் குடும்பக்கூடும் இப்படித்தான் சின்னாபின்னமாகியது. இரவு பெய்த மழைக்குக் குடத்தில் நிரம்பியிருந்த நீரில் கை, கால், முகம் கழுவிவிட்டுப் பள்ளிக்குப் புறப்படத் தயாரானார்கள் அருணும் கஸ்தூரியும். அம்மா போட்டுவாறம்.

★ ★ ★

அருணின் தந்தை ஒரு விவசாயி. ஒரு போகத்துக்கு எப்படியும் ஏழெட்டு ஏக்கர் நெல் விதைப்பார். சொந்தமாக ஒருசோடி உழவுமாடு நின்றது. அப்ப இந்த மெஷினுகள் ஒண்டும் இல்லை. எல்லாம் கை வேலைதான். விதைப்புத் தொடங்கினால் அந்த ஊர் ஆம்பிளையள் ஒருதரையும் ஊரில காணக்கிடையாது. வயலிலதான் நிப்பினம்.

இப்பிடித்தான் சிவமும். வீட்டுக்கு வர நாங்களெல்லாம் நித்திரையாய்ப் போயிடுவம். பிறகும், காலங்காத்தால ஐந்து மணிக்கெல்லாம் சிவம் அப்பா வயலுக்குப் போயிடுவார். நாங்கள் அப்பாவைக் காணுறதே அரிதாய்த்தான் இருக்கும். வயல் றோட்டாலதான் பள்ளிக்கூடம் போகவேணும். பச்சை மிளகாய்ச் சம்பலும், பழஞ்சோறும் சேர்த்து பார்சல் கட்டி தந்து விடுவா. பள்ளிக்கூடம் போகேக்க நான் குடுத் திட்டுப் போவன். மாமரத்துக்குக் கீழே இருந்த வாறு தனது பழைய நினைவுகளை மீட்டிக் கொண்டிருந்தான் அருண்.

சிவத்துக்கு நான்கு பிள்ளைகள். மூத்தவன் தான் அருண். மற்றது மூன்றும் பொம்பிளைப் பிள்ளையள். அருண் க.பொ.த. உயர்தரத்திலே கிராமப் பாடசாலையொன்றில் கல்வி பயில்கிறான். மூன்றாவதுதான் கஸ்தூரி. அவள் பத்தாமாண்டு படிக்கிறாள்.

இப்பிடித்தான் ஒரு நாள்... வயலில உழுது கொண்டு நிக்கேக்க, ஏதோவொரு பொருள் வெடிச்சு கரு வெள்ளை எருத்தனுக்கு பின்னங் கால் போட்டுது. அண்டையில இருந்து சிவம் வயலுக்குள் இறங்கிறேல்ல. ஒவ்வொரு போக மும் சின்னாம்பி மாமாவுக்குத் தான் வயல் குத்தகைக்குக் குடுக்கிறது. அன்று பிடித்த சனியன் தான் இண்டுவரையும்...

ஆனால் அப்பா சோரேல்ல. உழைச்ச உடம்பு சும்மா இராது. வீட்டில சைக்கிள் கடை போட்டார். குத்தகை நெல்லு சாப்பாட்டுக்கு மிச்சம் மிச்சம்.

சைக்கிள் வேலையளும் பெரிசா இல்லை. கிடைக்கிற ஐந்து பத்தில குடும்பம் ஒரு மாதிரி ஓடிக்கொண்டிருந்திச்சுது. சிவத்துக்கு தன்ர குடும்பத்தில் சரியான அக்கறை.

"எட தம்பி, நான் செத்துப் போனாலும், எப்படி யாவது நீ படிச்சிட வேணும். இந்த மாமரம் எத்தினை சந்ததியாய் நிண்டு பலன் தருதோ, அதுபோல நீயும் ஒரு டொக்டராய் வந்து இந்த சமூகத்துக்கு சேவை செய்ய வேணும். அம்மா, சகோதரங்களைக் கண் கலங்காமல் பார்க்க வேணும்...."

அருணை நோக்கி சிவம் அடிக்கடி கூறும் வார்த் தைகள் இவை.

"அப்பா, நான் பார்ப் பன். ஆனால் நீங் கள் மட்டும் இப் பிடிக் கதைக்க என்னாலதாங் கேலாதாம்"

அருணின் பிஞ்சு மனம் அடிக்கடி இவ்வாறுவெம்பிக்கொள்வதுண்டு.

★ ★ ★

வன்னிப்பகுதியைப் போர் மேகங்கள் மெல்ல மெல்ல சூழ்ந்து கொள்ளலாயின. கந்தக வாசங்களை நுகர்ந்தபடியும், பிணமலையில் ஊறி நடந்தபடியும், உடைமைகளையும், உறவுகளையும் வீதி வீதியாய் சிதறியபடியும்... கடந்து போன நாள்கள் பதுங்குகுழிதான் சொர்க்கத்தையும் நரகத்தையும் தேடித் தந்தது. நள்ளிரவு வேளை...

வழமைக்கு மாறாக எறிகணைகள் சர மாரியாக வீழ்ந்து வெடிக்கத் தொடங்கின. வானைக் கீறிக் கிழித்து வந்த மிகை யொலி விமானங்கள், குண்டுகளை அள்ளிக் கொட்டின. துப்பாக்கி வேட்டுக்கள் மிக நெருக்கமாகக் கேட்கத் தொடங் கியது. கூவி வந்த எறிகணை யொன்று சிவத்தின் தறப்பாள் கொட்டகைக்கு அருகில் வந்து வீழ்ந்து வெடிக்கலானது.

"டுேடுேடுே ம்ம்ம்...."

"ஐயோ அம்மா....??"

"......................"

கரிய இருளுடன் கலந்த வெடி மருந்து புகையும் வானளாவ, சிவத்தின் உடல் எறிகணைச் சன்னங்களால் குதறப்பட்டுக் கிடந்தது. கரிய இருளிலும், சின்னாபின்னமான சதைத் துண்டங்கள் குருதியில் தோய்ந்து கிடந்தன.

செல்லம்மாவுக்கு வயிற்றில் சிறு காயம். தங்மைமார் இருவரும் இரத்தாற்றிலே நீந்திக்கொண்டிருக்க, கடைக்குட்டி மட்டும் அதிஷ்ரவசமாக உயிர் பிழைத்தாள். யாரையும் யாரும் காப்பாற்ற முடியாத நிலை. கட்டிய கணவனாயினும் சரி, பெற்ற பிள்ளையாயினும் சரி, கண் முன்னே காலடியில் புழுதியை அகல விரித்து மூடிவிட்டுச் செல்லும் துன்பியல்? மரண ஓலங்கள் கூட யார் காதுகளிலும் கேட்பதாயில்லை. அடுத்தடுத்து வந்த எறிகணைகள் தறப்பாளைச் சுற்றி அங்குமிங் கும் வீழ்ந்து வெடிக்கலாயின.

மூன்று ஜீவன் களும் இரத்தாற்றில் மூழ்கிப் போயிருந்தனர்.

(14 ஆம் பக்கம் பார்க்க)




'புதிய பாடம்' என்ற சிறுகதையை சூரியகாந்தி பகுதியில் எழுதிய [illegible] ஆசிரியர் கலாசாலையைச் சேர்ந்த ரீ.ஹேமாவுக்கான பரிசுத் தொகையை உதயனின் நிர்வாக இயக்குநர் திருமதி யசோதை சரவணபவன் வழங்கிக் கௌரவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலைப்பக்கம்



## சுஜிதா சிவதாஸன்

### இவர்களிடம் கேட்டுப் பாருங்கள்... நேரத்தின் பெறுமதியைச் சொல்வார்கள்

- ஒரு மில்லி செக்கனின் மதிப்பை, ஒலிம்பிக்கில் வெள்ளிப் பதக்கம் வாங்கியவரைக் கேட்டால் தெரியும்.
- ஒரு செக்கனின் மதிப்பை, விபத்தில் உயிர் தப்பியவரைக் கேட்டால் தெரியும்.
- ஒரு நிமிடத்தின் மதிப்பைத் தூக்கிலிடப்படும் கைதியைக் கேட்டால் தெரியும்.
- ஒரு மணி நேரத்தின் மதிப்பை உயிர் காக்கப் போராடும் மருத்துவரைக் கேட்டால் தெரியும்.
- ஒரு நாளின் மதிப்பை அன்று வேலை இல்லாத தினக் கூலி தொழிலாளரைக் கேட்டால் தெரியும்.
- ஒரு வாரத்தின் மதிப்பை வாரப் பத்திரிகை ஒன்றின் ஆசிரியரைக் கேட்டால் தெரியும்.
- ஒரு மாதத்தின் மதிப்பைக் குறைப் பிரசவம் ஆகும் ஒரு தாயைக் கேட்டால் தெரியும்.
- ஒரு வருடத்தின் மதிப்பைப் பரீட்சையில் தோல்வியுற்ற ஒரு மாணவனைக் கேட்டால் தெரியும்.

நேரத்தை வீணாக்கும்போது கடிகாரத்தை பார்.. ஓடுவது முள் அல்ல, உன் வாழ்க்கை...



**அன்புடன் அனு @ anutwits**

சாப்பாட்டறையில் தாயின் நினைவும், படுக்கையறையில் காதலியின் நினைவும் வராத வாழ்க்கை வாழ்கிற ஆண் மட்டுமே நிறைவான மண வாழ்க்கை வாழ் கிறான்.



**ட்விட்டர் எம்.ஜி.ஆர் @RavikumarMGR**

அழுதுகொண்டே பள்ளிக்குச் செல்கிறான்! பள்ளிக்கு அனுப்பியே ஆகவேண்டுமா என யோசிக்கையில் படிக்காததால் கஷ்டப்படும் உறவுகள் நினைவுக்கு வருகின்றனர்



**மயில்செந்தில் @mayilSK**

சங்கிலித் தொடராய்க் குரைத்திடும் நாய்களில், கடைசி நாயை மறித்துக் காரணம் கேட்டால் என்னத்தைக் கூறும்?



**மலர் @mildrose**

தெரிந்தவர்களைப் பற்றி யாரோ சொல்லிக்கேட்க வேண்டிய நிலை வரும் போதுதான், அவர்களுக்கு யாரோவாகி விட்டோம் என முழுமையாகப் புரிகிறது!!



**அன்புடன் பாலு @balugs**

சாமிக்குத் தேங்காய் உடைக்கிறோம் வாழ்க்கை சிதறிப் போகாமலிருக்க, அதே தேங்காய் எடுக்கிறார்கள் வாழ்க்கையில் சிதறிப்போனவர்கள்..



**நாயோன் @writernaayon**

சிலர் எல்லாம் வல்ல இறைவனையும், பலர் எல்லாம் வெல்ல இறைவனையும் போற்றுகின்றனர்.



## அன்னகுமாரன்

### மனதைக் கவர்ந்த ஆட்டோ வாசகங்கள்

- உலக எண்ணிக்கையில் ஒருவனாக இருப்பதை விட, உலகமே உன்னை எண்ணும் அளவுக்கு இரு!
- முதுகுக்குப் பின்னால் ஒரே ஒரு காரியம் மட்டும் செய்யலாம். அது அடுத்தவரின் முதுகைத் தட்டிக் கொடுப்பதுதான்.
- கொஞ்சம் வைத்திருப்பவன் ஏழை அல்ல; அதிகமாக ஆசைப்படுபவனே ஏழை!
- உங்கள் கௌரவம் வேறு எங்கும் இல்லை; உங்கள் நாக்கு நுனியில்தான் இருக்கிறது!
- கடவுளின் பெயரை உச்சரிக்கும் உதடுகளைக் காட்டிலும், ஓர் ஏழைக்கு உதவும் கைகளே புனிதமானவை!
- கதவைத் தட்டாதவர்கள் எத்தனையோ வாய்ப்புகளை இழந்திருக்கிறார்கள்!



## ராஜமணி சுப்ரமணி

ஒரு வகுப்பில் ஆசிரியர் வீட்டுப்பாடம் கொடுத்தார்.
மறுநாள் எல்லோரும் ஒரு கதையும், அந்தக் கதை சொல்லும் படிப்பையும் சொல்லவேண்டும்.
மறு நாள் அமரன் முதல் மாணவனாக எழுந்தான். எங்கட அப்பா வியட்நாம் போரில் கலந்துகொண்டவர், நடு வானத்தில விமானம் பழுதாகி அவங்களின்ர எதிரி முகாமுக்குக் கிட்ட விழுந்திட்டுது. அவரிடம் இருந்ததோ ஒரு சாராயப் போத்தல் , ஒரு துப்பாக்கி, ஒரு வாள்.... நிறுத்தினான்.
எல்லோரும் ஆச்சரியமாகக் கேட்டார்கள்.
பிறகு தொடர்ந்தான்.எங்கடயப்பா முழுசாராயத்தையும் குடிச்சவர். அங்க மொத்தம் 100 பேர். 70 பேரைச் சுட்டுக் கொன்றார். வாளால் 20 பேரை வெட்டி வீழ்த்தி னார். அந்த வாள் உடைஞ்சதால் மீதி 10 பேரை வெறும் கையால அடிச்சிக் கொன்று தப்பி வந்தார்.
ஆசிரியர் திகிலாகக் கேட்டார். இந்தக் கதையின் படிப்பினை?
எங்கடயப்பா சாராயம் குடிச்சிருக்கும்போது கொஞ்சம் தள்ளியே இருக்கணும்..





## சித்ரா ஸரி

ஓர் ஊரில், ஒரு வெங்காயம், ஒரு தக்காளி மற்றும் ஒரு ஐஸ் கிறீம் ஆகிய மூன்று பேரும் நண்பர்களாக இருந்தார்களாம்.ஒரு நாள் மூன்றுபேரும் கடற்கரைக்குக் குளிக்க சென்றபோது, சொல்லுக் கேட்காத, ஐஸ் கிரீம் கடலில் இறங்கிக் கரைந்து போய்விட்டதாம். இதனால் தக்காளியும், வெங்காயமும் அங்கேயே புரண்டு, புரண்டு அழுததாம். வீட்டுக்கு வரும் வழியில் லொறியில் அடிபட்டு தக்காளியும் நசுங்கிச் செத்துப்போனதாம்.
உடனே வெங்காயம், அழுதுகொண்டே கடவுளிடம் போய் ஐஸ்கிறீம் செத்தபோது நானும் தக்காளியும் சேர்ந்து அழுதோம், தக்காளி செத்தபோது நான் அழுதேன்.. ஆனால் நான் நாளைக்கு செத்துப்போனால் எனக்கென்று அழ யாரு மில்லையே என்று கேட்டதாம்..
அதற்குக் கடவுளும், சரி இனிமேல் நீ சாகும்போது யாரெல்லாம் பக்கத்தில் இருக்கிறார்களோ அவர்கள் எல்லோரும் அழுவார்கள் என்று வரம் கொடுத்தாராம்!
அதனால்தான் வெங்காயம் வெட்டும்போது கண்ணில் கண்ணீர் வருதாம்..!!



## ராமன் ராகவன்

5 நிமிடத்தில் ஒரு பெண்
சமாதானம் ஆகிறாள்
எனில், அவள் **தாய்,**

15 நிமிடத்தில் ஒரு பெண்
சமாதானம் ஆகிறாள்
எனில், அவள் **சகோதரி,**

30 நிமிடத்தில் ஒரு பெண்
சமாதானம் ஆகிறாள்
எனில், அவள் **தோழி,**

3 மணி நேரத்துக்கு
மேலாகியும்
சமாதானப்படுத்த
முடியவில்லையெனில்,
**அவள் காதலி,**

உனக்கு சமாதானம்
செய்யும் சந்தர்ப்பம் கூட
கிடைக்கவில்லையெனில்,
அவள் மனைவி,



## தமிழ் மொழியும் காதல் விழியும்

ஒரு செல்வந்தன் இருந்தான்.ஒரு நாள் அவன் தன் தோட்டத்தில் விளைந்த வாழைக்குலை ஒன்றைப் பணியாளிடம் கொடுத்துக் கோவிலில் கொடுக்கச் சொன்னான்.
ஏழைப் பணியாள் எடுத்துச் செல்லும் வழியில் அவனுக்கு அதிகப் பசியெடுக்கவே அந்தக் குலையிலிருந்து இரண்டு பழங்களைப் பிய்த்துச் சாப்பிட்டு விட்டான். மீதிப் பழங்களைக் கோவிலில் கொடுத்தான். அன்றிரவு செல்வந்தர் ஒரு கனவு கண்டார்.கனவில் இறைவன் வந்து நீ எனக்குக் கொடுத்த இரண்டு பழங்களை நான் சாப்பிட்டேன்;ருசியாக இருந்தது என்றார்.
செல்வந்தனுக்கு மிகக் கோபம் வந்தது. ஒரு குலை பழம் கொடுத்திருக்க இரண்டு மட்டுமே இறைவனுக்குப் போய்ச் சேர்ந்திருக்கிறது. மீதி என்னவாயிற்று எனக் கோபப்பட்டான்.
மறு நாள் காலை அந்தப் பணியாளைக் கூப்பிட்டு விசாரித்தான்.
அவன் இரண்டு பழங்களைப் பசியினால் தான் சாப்பிட்டதை ஒப்புக் கொண்டு ,மீதிக் குலையைக் கோவிலில் கொடுத்து விட்டதைச் சொன்னான். செல்வந்தனுக்குப் புரிந்தது. அந்த ஏழை சாப்பிட்ட பழம் மட்டுமே இறைவனைச் சென்று அடைந்திருக்கிறது என்று.



அரியபடம்- முதுபெரும் தமிழ் திரையுலக நடிகர்களான ஜெய்சங்கர் மற்றும் ஸ்ரீகாந்துடன் உலகநாயகன் கமல்ஹாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிமகன்

# அப்பாவுக்காக...

அதிகாலை நான்கு மணி "தொலைபேசி அழைப்பு. என்ன அம்மா இந்த நேரத்தில..." யோசினையோடு தாயை வினவுகிறான் அவன். "இல்ல தம்பி அப்பாவுக்குக் கொஞ்சம் சுகமில்ல. அது தான் சொல்லுறன்" தாயின் பேச்சை இனங்கண்டவன் புரிந்து கொள்கிறான் தந்தைக்கு ஏதோ பெரிய பிரச்சினை என்று. ஆனால் மகன் குழம்பிடுவான் என்ற நினைப்பு உண்மையை மறைத்தது.

இவனது தந்தையோ மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். அந்த நாட்டில் தனியார் மருத்துவமனையின் சிகிச்சை என்றாலே பணத்தைப் பறிக்கும் செயல்கள் அரங்கேறும். செய்வதறியாது திகைத்து நின்றான். தந்தையைக் காப்பற்றும் முழுப் பொறுப்பும் இவனையே சார்ந்து நின்றது. ஆனாலும் இவனிடம் எந்த சேமிப்பும் இருந்ததில்லை. தாயகத்தில் வாழ்வாதாரங்கள் துறக்கப்பட்ட நிலையில் உயிர் தப்பினால் போதும் என்று ஓடி வந்து புலத்தில் தஞ்சம் கோரியவன் அவன். அவனுக்கென்று வதிவிடவுரிமையோ அல்லது பணம் சேமிப்பதற்கான வேலை வாய்ப்போ இருக்கவில்லை. அவன் வாழும் நாடு சட்ட இறுக்கம் மிக்க நாடு.

ஆனாலும் அவன் தனது தந்தையின் உயிர் காக்கும் முனைப்பில் செயற்பட ஆரம்பித்தான். வேலை இல்லை. பணம் இல்லை என்பதெல்லாம் வெளிப்படை பிரச்சினைகள். ஆனாலும் இவனின் தந்தையின் இருப்பு இவனுக்கு மிக முக்கியம். தன்னைப் பிறப்பில் இருந்து இது நாள் வரை செதுக்கி எடுத்த சிற்பியல்லவா அவர். சிறுகச் சிறுக சேமிக்கும் பணம் அனைத்தையும் அவனுக்கான தேவைகளுக்காக செலவு செய்து அவனை எப்பாடுபட்டு என்றாலும் நல்ல நிலைக்குக் கொண்டு வர திண்ணம் கொண்டு வளர்த்தவரல்லவா அவர். இவையெல்லாவற்றையும்விட தனக்கும் தன் தாய்க்குமான ஆணி வேரல்லவா அவர். எவ்வாறாயினும் அவர் உயிர் பிழைக்கவேண்டும். தான் அப்பா என்று அழைத்து அன்பு பொழிய அவர் அருகில் இருக்க வேண்டும்

அவன் தந்தையைப் போல. கடவுள் நம்பிக்கையற்றவன். சில கொள்கைகளுக்காகக் கடவுள் இல்லை என்று கூறாவிடினும் கடவுளை நம்புவதைத் தவிர்த்து நடப்பவன். முயற்சியே கடவுள் என்ற புனித கோட்பாட்டைக் கொண்டவன். கடவுளை நம்புவதால் மட்டும் நன்மையோ அல்லது நம்பவில்லை என்றால் மட்டும் தீமையோ ஏற்படப்போவதில்லைஎன்றஉண்மை அவனுக்கு நன்கு புலப்பட்டே இருந்தது. இதனாலோ என்னவோ அவன் கடவுளின் காலடிகளைப் பணிய துணிவற்று இருந்தான். ஆனாலும் அன்றைக்கு அவனது அடி மனசில் கடவுளின் எண்ணம் எட்டிப் பார்த்தது. இறைவா எனது அப்பாவை எப்படியாவது என்னிடம் திருப்பித் தந்துவிடு என்று மனதார வேண்டுகை செய்தான்.

இங்கே இவன் தனிமையில் உணர்வுகள் செத்து வாடிக் கொண்டிருக்க பரபரப்பாக இயங்கி கொண்டிருந்த அந்த சிகிச்சைப் பிரிவில் மருத்துவர்கள் தந்தையைக் காத்திடப் போராடிக் கொண்டு இருந்தார்கள். யாரும் அற்ற நிலையில் தனிமையில் தாயும் அனைத்துத் தெய்வங்கள் மீதும் காணிக்கை வேண்டுதல்களை செய்து கொண்டிருந்தாள். "என் புருஷனைச் காத்திடு முருகா..." இவர்கள் குரல் அந்த இறைவனுக்குக் கேட்கவில்லையோ என்னவோ தந்தையின் நிலை மோசமாகி கொண்டே இருந்தது. தகவல் பரிமாற்றங்கள் இவனுக்குத் தடைப்பட்டன. தந்தையின் நிலை தெரியாது தவித்துக் கொண்டிருந்தவனுக்கு அருகில் இருந்த உறவின் அழைப்பு ஆறுதல். "தம்பி உங்க தனிய இருந்து யோசிக்காத. இங்க வாடா" கிளம்பியவன் தந்தைக்காக மனதார கடவுளிடம் வேண்டுகை செய்து கொண்டு சென்றான்.

தாய் வழி உறவுகள் மைத்துனனின் உயிர் காக்கத் தேவையான அனைத்தையும் செய்திருந்தாலும், தனிமையில் வாடிக்கொண்டிருந்த இவனையும், தந்தையோடு அவரது உயிருக்காகப் போராடிக்கொண்டிருந்த தாயையும் வேதனைத் தீயில் இருந்து வெளிக்கொண்டு வர யாராலும் முடியவில்லை. ஒரு மகன் என்று தவமிருந்து பிறந்தவன் இறுதியாகத் தந்தையின் முகம் பார்க்கத் துடித்துக் கொண்டிருந்தான். அவரைத் தூக்கித் தாங்க வேண்டும் என்று தவித்துக் கொண்டிருந்தான் எந்தநிலை வரினும் அவரைப் பிரியக் கூடாது என்று சபதம் ஏற்று இருந்தவன் அவன். ஆனால் இறுதிப் போர் தந்த வடுக்களினால் அவர்களை விட்டு பல்லாயிரம் மைல்கள் தாண்டி வந்திருந்தான். குறித்த காலத்தின் பின் அவனுக்குக் கிடைக்க இருக்கும் வதிவிட உரிமையின் சாதக முடிவுகளுக்குப் பின் தன் தாயை தந்தையை தன் அருகில் அழைத்து அவர்களோடு வாழ்நாள் முழுவதுமான வாழ்க்கையைக் கழிக்க என்று எவ்வளவோ கனவுகளை மனதில் சுமந்தவன் அவன். அத்தனையும் குறித்த சில மணித்துளி களின் சில்லறைகளாய் சிதறப்போகிறது. என்ற உண்மை அவனுக்குப் புரிந்தாலும் தந்தை மீண்டு வருவார் என்று தாயைப் போல நம்பினான்.

அவர் என்றோ ஒருநாள் தனது குறிப்பேட்டில் எழுதியிருந்த வார்த்தைகள் அவனது மனதைத் தொட்டுச் சென்றன. என் வாழ்க்கையின் நினைவுகள் என்றோ தொடங்கி இன்றுவரை முற்றுப்பெறாமல் தொடர்கிறது. இந்த வாழ்வின் வரலாற்றுக்கு முற்றுப்புள்ளியிட ஏதோ ஒருநாள் காத்திருக்கிறது. இந்த வகையில் அந்த நாளுக்கான காத்திருத்தலில் நானும் எதிர்பார்ப்போடு.... தந்தை எழுதிச்சென்ற வார்த்தைகளுக்கான உண்மைத் தன்மை இன்று உருவாகிவிடுமோ என்ற அச்சம் அவனுள் எழுந்து கொண்டது. இருப்பினும் அச்சம் தவிர்த்து தந்தையின் மீள் வருகைக்காகக் காத்திருந்தான். மூன்று நாட்கள் உணவில்லை. தேநீர் கூட வற்புறுத்தலிலே உள்ளே சென்றது. காத்திருப்பொன்றே அவனது நிலையாக இருந்தது. தவித்திருக்கும் அவனுக்குத் தாயின் அருகில் நின்று கொண்டிருக்கும் உறவுகளின் தகவல்கள்தான் ஆறுதல் தரும் மருந்தாக இருந்தன. ஆனாலும் அது நீடிக்க வில்லை.

அன்று காலையில் இருந்து பல அழைப்புக்கள். அத்தனையும் மறுக்கப்பட்டுத் தொடர்பு கொள்ள முடியாது இருந்தது. யார் யாருக்கோ எல்லாம் அழைத்திருந்தான். அழைப்புக்கள் மறுக்கப்பட்டன. அழுவதைத் தவிர அவனுக்கு வேறெதுவும் தெரியவில்லை. அழுதழுது நீர் வற்றிய நிலையில் அவனுக்கு உண்மை உரைக்கப்பட்டது.

அப்பா அவனை விட்டு தனது முடிவுரை எழுதி சென்று விட்டார். கடமையில் கண்ணும், மகனில் கருத்துமாக இருந்தவர் தன் கடமை மறந்து தொட முடியாத இடத்துக்கு சென்றுவிட்டார். அவர் அடிக்கடி சொல்லும் ஒரு வார்த்தை மட்டும் அவனுக்குள் மீண்டும் மீண்டும் எழுந்து ஒலித்துக்கொண் டிருந்தது. "தம்பி நாங்கள் செத்தாலும் தாயகத்தில சாகனும்டா" அவர் ஒரு தாயக விடுதலை விரும்பி. அதற்கான பல இடர்களைக் கடந்து பயணப்பட்டவர். அதனால் தானோ என்னவோ புலம்பெயர் தேசங்களுக்கான அழைப்புக்களை நிராகரித்துத் தாயகத்திலையே வாழ்வை நிலைப்படுத்தியிருந்தார். தமிழ் என்ற ஒன்றுக்காகத் தனது உடல் பொருள் உயிர் அனைத்தையும் தாயகத்திலையே கொடுக்க வேண்டும் என்று விருப்பம் மட்டுமல்ல கொள்கையும் கொண்டவர். இதனாலேயே அவர் தாயகத்தை விட்டுப் பிரிய நினைப்பதில்லை. ஆனால் இறுதிப் போர் தந்த கொடூர முடிவுகளால் அவர் தாயகத்தை விட்டுப் பிரிந்து தற்காலிகமாக வாழ்ந்த அயல் நாட்டில் தனது முடிவுரையை எழுதிக் கொண்டார்.

தான் வசிக்கும் நாட்டில் இருந்து வெளியேற முனைப்புக் கொண்டான். தஞ்சக்கோரிக்கையை ரத்து செய்து விட்டுத் தந்தையின் இழப்பால் தனிமை என்ற வட்டத்துக்குள் கண்ணீரை சொந்தமாக்கி வாழ்ந்து கொண்டிருக்கும் தாய்க்கு ஆறுதலாக இருக்க முடிவெடுத்தான். ஆனாலும் தாயாரின் வேண்டுகோள் அவனை நிறுத்தியது. நிம்மதியற்றுத் தாய்க்காக முடிவை மாற்றிக் கொண்டான். தொழில் நுட்ப வளர்ச்சிகள் அவனுக்குத் தந்தையின் இழப்பை கண் முன்னே கொண்டுவந்து நிறுத்தின. ஆனாலும் எதையும் கண் முன்னே சந்திக்கும் திராணியாற்றவனாக இறப்பின் துயர விசாரிப்புக்களோடு பதிலளிக்க முடியாது தடுமாறினான்.

அவரது மகன் அவருக்காக எதையுமே செய்ததில்லை என்ற வெறுமையான வெற்றிடத்தை நிரப்ப அவன் முடிவு கொண்டான். தந்தை எதை விரும்பினாரோ அதை அவன் நிறைவேற்றத் துணிந்து செயற்பட்டான். அனைத்தும் நடந்து முடிந்தன. அவரது இறுதி நிகழ்வுகள் தமிழ் முறைப்படி அவரது விருப்பத்துக்கு சாதகமான முறையில் நடத்த துணிந்தான்.

பல தடைகள் அவன் முன் விரிந்து கிடந்தன. அத்தனையும் தாண்டி சென்று அனைத்தையும் சிறப்பாக செய்தான். தன் தந்தைக்கு ஒரு மலரைக்கூட காணிக்கையாக்கவில்லையே என்ற ஒரு குறையைத் தவிர...

தாயும் தனித்து விட்டாள். இவனும் தனித்து விட்டான். ஆனாலும் தந்தையின் நினைவுகளும் வழிநடத்தல்களும் என்றும் இவனுக்குள் துணையாக நிற்கும் என்ற திண்ணத்தோடு தந்தையின் வேண்டுகோள்களில் ஒன்றான, "தம்பி எழுதுடா. எழுத்துத் தான் எங்களை வெளியுலகோடு இணைக்கும். ஊடகவியலே உரிமைகளைக் கேட்கவும், உண்மையை உரைக்கவும் சரியான தெரிவு.

அதனால் ஊடகத்திலையே உன் பணியமைத்துக்கொள். கவிதை, கட்டுரை, கதை என்று எதை என்றாலும் எழுது. உனக்கு அந்த ஆற்றல் இருக்குடா என் ஆசையை நிறைவேற்றுடா..." என்பதை நிறைவேற்ற பேனாவைக் கையில் எடுத்தான் அவன்.



"அவர் என்றோ ஒருநாள் தனது குறிப்பேட்டில் எழுதியிருந்த வார்த்தைகள் அவனது மனதைத் தொட்டுச் சென்றன. என் வாழ்க்கையின் நினைவுகள் என்றோ தொடங்கி இன்றுவரை முற்றுப்பெறாமல் தொடர்கிறது. இந்த வாழ்வின் வரலாற்றுக்கு முற்றுப்புள்ளியிட ஏதோ ஒருநாள் [illegible]

1000 ரூபா பரிசு பெறும் கவிதை

சூரியனைப் பார்த்ததில்லை அதன்
சூட்டை உணர்ந்திருக்கின்றேன்
தாயைப் பார்த்ததில்லை அவள்
தந்த பாசத்தை அறிந்திருக்கின்றேன்
பூவைப் பார்த்ததில்லை அது தந்த
மணத்தை முகர்ந்திருக்கின்றேன்
தேனைப் பார்த்ததில்லை அதன்
இனிமையைச் சுவைத்திருக்கின்றேன்
உண்மையைப் பார்த்ததில்லை அதன்
உண்மையைத் தெரிந்திருக்கின்றேன்
பசியைப் பார்த்ததில்லை அதன்
கொடுமையை அறிந்திருக்கின்றேன்
உறவைப் பார்த்ததில்லை அவள்
கை தொடுகையில் உணர்ந்திருக்கின்றேன்
தமிழைப் பார்த்ததில்லை அதன்
இனிமையைப் பேசியிருக்கின்றேன்
என் கண்ணைப் பார்த்ததில்லை
ஆனால் இருட்டைப் பார்த்திருக்கின்றேன்
வெளிச்சத்துடன் செல்கின்றேன்
மற்றவர் அறிவதற்காக, தெரிவதற்காக
என்னைக் குருடன் என்கின்றார்கள்
கண் தெரிந்த குருடர்கள்.

பாவரன், வவுனியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



■ இ.நிசாந்தன்

# திருக்குறள் வெளிப்படுத்தும் இல்லறப்பண்புகள்

மனித வாழ்வியலிலே முக்கியமான வாழக்கைக் கால கட்டங்களில் முதன்மையான பகுதியாக இல்லறமானது கருதப்படுகின்றது. இல்லறத்தின் துணை கொண்டே ஏனைய அறங்களைக் கடைப்பிடிக்க இயலும். எனவே திருவள்ளுவர் இயற்றிய உலகப் பொது மறை நூலாக விளங்குகின்ற திருக்குறளானது இல்லறத்தின் பண்புகள் பற்றி சிறப்புறக் கூறியிருக்கின்றது.

இன்று பலருக்கும் உள்ள பிரச்சினை வாழ்வியல் முறைகளையும் அதன் அடிப்படைக் கருத்துக்களையும் புரிந்து கொள்ளாமையே ஆகும். அன்பு என்பதே வாழ்வியலின் முக்கிய அம்சமாகும். அந்தவகையில் அன்பே இல்லறத்தின் தோற்றுவாயாக இருக்க முடியும் என வள்ளுவர் கூறுகிறார். இல்வாழ்க்கையே ஒருவனுக்கு உலகத்தை நேசிக்க கற்றுத் தருகின்றது. இங்கு இல்வாழ்வுக்கு அன்பானது அடிப்படையான பண்பாக அமைந்தால் அதற்கு இல்லத்தார் செய்யும் அறச் செயல்களே பயனாக விளையும். இதனாலே அறம் எனப்பட்டதே இல்வாழ்க்கை என்று கூறுகின்றார். அறம் செய்வதற்குரிய இரு நிலைகளில் இல்லறமே முதன்மை பெறுகின்றது. இவ்வாறு மனதொருமித்த மனைவியுடன் இணைந்து பிதிரர், தேவர், சுற்றத்தார், விருந்தினர் ஆகியோருக்கு ஆற்ற வேண்டிய கடமைகளை இனிதே நிறைவேற்றும் கணவன் ஞானிகளை விடவும் பெருமைக்குரியவனாகவும் அவனது இல்லமே வானுலக இன்பத்தைத் தரும் பேறு பெற்றவனாகவும் விளங்கி இல்லறத்தை நல்லறமாக்கிய பெருமையையும்பெறுகின்றான் என்கின்றார் வள்ளுவர்.

இல்லறத்தில் ஈடுபடும் இல்லாளின் பங்கை வள்ளுவர் கூறும்போது. இல் ஆள் என்பது இல்லத்தை ஆளக்கூடியவள் எனப் பொருள்படுபவள். அதாவது தனது நற் குணங்களாலும் ஒழுக்கம் சார் செயற்பாடுகளாலும் தன் இல்லறத்துக்குப் புகழையும் பெருமையையும் சேர்ப்பவள். தகுதி வாய்ந்த இல்லத் தலைவியைக் கொண்ட இல்லமே நல் இல்லமாக அமையும். ஒரு இல்லாளிடம் மனைக்கேற்ற மாட்சி, அதை நடத்தும் இயல்பு என்பன இல்லாதுவிடின் அவ்வில்லறம் சிறப்பற்றுக் காணப்படாது. இல்லாள் நற்குணங்களைக் கொண்டிருந்தால் சகல நன்மைகளையும் அந்த இல்லம் பெற்று விளங்கும். இதனாலேதான் இல்லறம் நடத்தும் ஒரு பெண்ணால் முடியாத காரியம் ஏதுமில்லை என்பதை வள்ளுவர்,
"தெய்வம் தொழாஅள் கொழுநற் றெழு
தொழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை"
எனக் குறிப்பிடுகின்றார்.

இல்லறத்தில் மக்கள் பேறு சிறப்புற்று விளங்குகின்றது. இல்லறத்தின் மூலம் பெறும் பேறுகளில் மக்கட்பேறே சிறந்ததாகக் கூறப்படுகின்றது. நன் மக்களாலேயே பெற்றோர்களுக்குப் புகழும் பெருமையும் நற்கதியும் ஏற்படுகின்றது. நன்றாக அமைந்த வாழ்வுத் துணையால் மக்கட்பேறு கிடைக்கின்றது. ஒரு குழந்தை பிறந்து பெரியவனாகி மற்றவர்களால் சான்றோன் எனப் போற்றும் வகையில் நற்பண்புகளைக் கொண்டு விளங்கும்போது அதனைக் கண்டு பெற்றோர் உள்ளம்பெருமிதம்கொள்ளும். ஆகவே இல்லறத்தினுடைய மாண்புக்கு அணிகலமாவது நல் மக்கட் பேறே என்கிறார் வள்ளுவர். எனவே குழந்தைகளுக்கு நல்ல நீதி சார் போதனைகளைக் கூறி வாழ்க்கைப் பாதையைத் தெளிவுபடுத்தும் நிலை மாறி இன்று பெரும்பாலும் தொலைக் காட்சிப் பெட்டிகளின் முன்பாகப் பொழுதைக் கழித்து வாழ்க்கையின் இரகசியங்களை அறிந்து கொள்ளாமல் போகின்றனர். ஆகவே இவற்றைக் கருத்தில் கொண்டு பிள்ளைகளின் நல் எதிர் காலத்துக்காக இல்லறத்தார் செயற்பட வேண்டி யது கட்டாயமானதாகும்.

இல்லறத்தில் அன்புடன் வாழ்வதே மற்றோர் பண்பாகும். அறத்துடன் வாழ்வதே பயனாகும். எனவே இல் வாழ்க்கையில் அன்பையும், அறத்தையும் இரு கண்களாகக் கொண்டு வாழ்வதே அதனது நெறியாகும். மரஞ் செடிகளுக்கு சூரியன் போல் மனிதர் இதயத்துக்கு அன்பானது அவசியமாகும். இல்லறம் நடத்தும் ஆணும் பெண்ணும் அன்புடன் வாழ்வதுடன் அந்த வாழ்வின் பயனால் படர்ந்த அன்பானது பிறர் மீதும் செலுத்தப்படல் வேண்டும். அறம் செய்தால் அன்பு உண்டாகும். அன்பு உண்டானால் அருள் உண்டாகும். ஆக இல்வாழ்க்கையைப் பிணைத்துச் செல்வது அன்பறமேயாகும். ஒருவன் தானும் வாழ்வாங்கு வாழ்ந்து வையத்தையும் வாழ வைக்கும் அறமே இல்வாழ்வில் பெறத்தக்க சிறப்பாகும்.

விருந்தோம்பல் என்பது இல்லறத்தின் தலையாய கடைமையாகும். பசி தீர்த்தல் என்பது மிகச் சிறந்த அறமாகக் கருதப் படுகின்றது. இல்லறத்தில் விருந்தளித்து மகிழ்வது சுவையான அனுபவம். ஒருவருக்கு உணவளித்து உபசரிக்கின்றபோது அவரது உள்ளமும் மனநிறைவுபெற உணவளித்தவர் உள்ளமும் மன நிறைவு அடைகின்றது. வீட்டுக்கு வரும் விருந்தினர்களுக்கு மனைவி தன் கணவனுடன் இன்முகத்தோடு விருந்தோம்பல் செய்ய வேண்டும் என்பதையும் விருந்தோம்பும் பண்பே ஒரு நல்ல குடும்பத்தின் குறிக்கோளாகும் என வள்ளுவர் வலியுறுத்துகிறார்.

'மோப்பக் குழையும் அனிச்சம் முகந் திரிந்து நோக்கக் குழையும் விருந்து' எனும் குறள் மூலம் விருந்தினர்கள் அனிச்சம் மலரை விடவும் மென்மையானவர்கள் என்பதனால் அவர்களை அன்பாக உபசரித்து இதமான வார்த்தைகளால் அவர்களுடன் உரையாட வேண்டும். ஆனால் தற்காலத்தில் விருந்தினர்களை உபசாப்பது என்பது குறைவடைந்து வருகின்றது. எனவே இந்த நிலையை நாம் இயன்றளவு மாற்றி விருந்தோம்பும் பண்பை வளர்க்க வேண்டும்.

இல்லறத்தில் ஒழுக்கமே அந்த வாழ்வுக்கு உய்வளிப்பதாகும். ஒழுக்கமே ஒருவனுக்கு உயிராக விளங்குவது. உடல் நிலை பெற நாம் உயிரைப் பேணுதல் போல் உயிர் நிலை பெற ஒழுக்கத்தைப் பேண வேண்டும். உலகத்தோடு ஒத்ததே ஒழுக்கம். அதனாலே ஒழுக்கம் எல்லோர்க்கும் மேன்மை தருவதால் அது உயிரினும் மேலானதாகப் போற்றப் படுகின்றது. இதனை வள்ளுவர் ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம் உயிரிலும் ஓம்பப் படும் எனக் குறிப்பிடுகிறார்.

கொடை என்பது இல்லறவியலின் மற்றோர் பண்பாகும். ஒப்பரவும், ஈகையும் கொடையின் வழிச் செயல்களாகும். குறிப்பறிந்து செய்வது கொடை. ஏழைகளுக்கு செய்யப்படும் உதவி ஈகை. ஆகவே இல்லறத்தில் இருப்பர் கண்டிப்பாகக் கொடைச் செயலில் ஈடுபட வேண்டும். அவர்கள் செய்யும் கொடைச் செயல்களினால் அவர்களுக்குப் புகழ் வந்து சேருகின்றது. புகழே உலகத்தில் அழியாத பெரும் செல்வமாகும். புகழைப் பெற்றவர்கள் இறந்தாலும் அவர்கள் பெற்ற புகழ் என்றும் நிலைத்திருக்கும். எனவே இல்லறத்தார் வறியார்க்கும் ஏனையோர்க்கும் கொடை செய்ய வேண்டும். அதனால் அழியாத புகழ்பெற்று வாழவேண்டும்என் பதனையே வள்ளுவர் வலியுறுத்துகிறார்.

---

■ விவேகன்

# நூலாய்வு

படைப்பு மொழியின் கட்டமைப்பு. மொழிப் புரிதலின் ஊடாகக் கட்டமைக்கின்றபோதே படைப்பு கனதியானதாகவும், சமூகத்துக்குப் பயனுள்ளதாகவும், கவித்துவச் செழுமையுடையதாகவும் பரிணமிக்கும்.

யாரும் படைப்புகளைப் பிரசவிக்கலாம். வெளியிடலாம். ஆயினும் காலம் கடந்து மனங்களிலே நிற்கின்ற படைப்புக்களே அமர காவியம் பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. கவிதை மனித மனங்களுக்கான வடிகால்கள் எனும் வகையில் நாம் நினைக்கின்ற எத்தகைய உணர்வையும் இயல்பாக சொற்களின் ஊடாகக் கட்டமைத்துக்கொள்ள முடியும். ஆயினும் அவற்றில் மிகவும் கனதியானவை மட்டுமே படைப்புக்கான தரம் உடையதாகக் கொள்ளப்படுகின்றன. ஏனையவை காலத்தால் காவு கொள்ளப்பட்டு விடும்.

இன்றைய சூழ்நிலையில் பலரும் கவிதை நூல்கள் வெளியீடு செய்து வருகின்றனர். அந்த நூல்களில் எத்தனை மிகவும் கனதியானவையாகவும், சொற்பொருள் சார்ந்தவையாகவும் வெளிவருகின்றன என்பது வினாவுக்குரியதே.

இந்தப் பின்னணியில் 'குமுறல்' எனும் கவிதைப் படைப்பு வெளிவந்துள்ளது. இதன் படைப்பாளியாகச் சுபாஷினி பிரபாகரன் விளங்குகின்றார். தேஜஸின் வெளியீட்டில் வெளிவந்துள்ளது. குமுறல்கள் எனும் அடிப்படையில் தனது அனுபவ தளத்தில் உள்ளத்துக் குமுறல்களைக் கவிதைகளாகப் படைத்துள்ளார். இந்தப் படைப்பாளி யாழ் பல்கலைக்கழகத்து இசைத் துறைப் பட்டதாரிஎன்பதுடன் ஏற்கனவே 'பகிர்வு' எனும் கவிதைத்தொகுதியை வெளியிட்டுள்ளார். இவர் சமகாலத்துப் பதிவுகளாகவும், பெண்ணிய சிந்தனை நோக்கிலும் தனது குமுறல்களை வெளிப்படுத்தியுள்ளார். இன்றைய சூழ்நிலையில் ஆசிரியர்களுக்கான வலி நிறைந்த செயற்பாடாக அமைகின்றவற்றை இடமாற்றம், ஆசிரியான் நாட்குறிப்பு போன்ற கவிதைகளில் படைத்துள்ளார்.



இடமாற்றம் எனும் கவிதையில்

*கன்சரில் தவளும் நோயும்*
*றான்சரில் வந்த பெயரும்*
*ஒன்றென படுமாறிங்கோ*

ஆசிரியர்கள் இடமாற் றங்களால் பெறுகின்ற மன உளைச்சல்களைக் கவிதையாகப் படைத்துள்ளார். ஒரு ஆசிரியையின் நாள்குறிப்பு எனும் கவிதையில்;

*சேவலுக்கும் எனக்கும் போட்டி யார் முதலில் எழும்புவது??*
*மூன்றரைக்கே அலாரம் வைத்தால் யாரால்தான் முந்த முடியும்?*

என ஆரம்பித்து, உணவு தயாரித்தல், போக்குவ ரத்து எனப் பல தளங்களில் அடைகின்ற துன்பங்களைக் கவிதையாகப் படைத்துள்ளார். இவ்வாறு பல கவிதைகளில் சமகாலத்தில் படுகின்ற அவலங்களைப் பதிவு செய்துள்ளார். ஆயினும் அவை கவித்துவ செழுமையுடையன வாக [illegible] காணப்படுகின்றது.




தென்மராட்சி இலக்கிய அணியி னரின் வெளியீடாக 'வள்ளுவர் வழி நடப்போம்' என்கின்ற தொனிப்பொருளில் கட்டுரைகள் அடங்கிய தொகுப்பு நூல் வெளிவந்துள்ளது.

இந்த நூலுக்கான தொகுப்பாசிரியராக பா.விக்னேஸ்வரன் செயற்பட்டுள்ளார்.

வள்ளுவர் ஆக்கிய திருக்குறள்' எனும் நூலானது உலகப் பொது மறையாகக் காணப்படுகின்றது. திருக்குறள் சுட்டுகின்ற விடயங்கள் பல பொருள் பொதிந்து காணப்படுகின்றன.

கட்டுரையாளர்கள் தாம் திருக்குறளை பல கோணங்களில் வாசிப்பு தளத்தில் பதிவு செய்துள்ளனர். திருக்குறளைப் பல்வேறு காலத்து இலக்கியங்களுடன் ஒப்பிட்டு வெளிப் படுத்தியுள்ளனர்.

குறிப்பாகச் சங்க அகத்தினை மரபும். திருக்குறட் காமத்துப்பாலும் எனும் கட்டுரையில் சங்க அகத்தினை மரபின் தொடர்ச்சியாகத் திருக்குறளில் வருகின்ற காமத்துப்பால் எனும் அதிகாரம் விளங்குவதாகக் குறிப்பிடுகின்றார்.

பிளேட்டோவும் திருவள்ளுவரும் எனும் கட்டுரையில் கவிஞர் சோ.பத்மநாதன் இரு அறிஞர்களது அரசியல் வெளிப்பாட்டுத் தளத்தைத் தனது கட்டுரையில் பதிவு செய்துள்ளார். குறிப்பாக ஜனநாயகத்தன்மை , பொதுத்தன்மை போன்ற பலவற்றைக் குறிப்பிடுகின்றார். பிளேட்டோவும் திருவள்ளுவரும் தனிமனிதனையும் சமூகத்தையும் கொண்டு மனித குலத்தை மேம்படுத்த முயன்றவர்கள். பிளேட்டோ அரசியலமைப்பு ரீதியில் சிந்தித்தார். வள்ளுவர் மனுக்குலத்தை இயக்க வேண்டியது ஆன்ம நேயம் என்று தெளிந்தார், எனக் குறிப்பிடுகின்றார். இந்த வகையில் வேறு வேறு காலத்தை சேர்ந்தவர்கள் தம் வெளியில் நின்று எவ்வாறு சமூகத்தைப் பார்த்தார்கள் என்பதை இரு தளத்தில் வைத்து இந்தக்கட்டுரைகளைப் படைத்துள்ளார்.

'வள்ளுவர் காட்டும் வாழ்வியற் கருத்துக்கள்' எனும் கட்டுரையில் வாழ்விலே ஒழுக்கம், வாழ்கின்றமைக்கான வழிமுறைகள், குடும்ப வாழ்வு போன்ற பல்வேறு விடயங் களைத் தனது குறளின் ஊடாக வள்ளுவர் வெளிப்படுத்தியுள்ளமையைத் கட்டுரையில் பேராசிரியர். வேல் நம்பி பதிவு செய்துள்ளார்.

முயற்சி வரவேற்கத்தக்க விடயமாகும். ஆயினும் இதனுடைய நோக்கம், யாருக்காக வெளிப்படுத்தப்பட்டுள்ளது எனும் அடிப்படையில் பார்க்கின்றபோது வாசகர் தளத்தில் நின்று [illegible] பெறுகின்றவர்கள் யார் என்கின்ற வினா எழுகின்றது. பண்டையதொரு நூலை நடைமுறை வாழ்வியலோடு இணைத்துப் பார்க்கின்ற முயற்சி வித்தியாசமானதாகக் காணப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருதிப் பந்து

ஆனந்தபுரம் செங்கொடி

கோண்டாவில் டிப்போ சந்தியில் அன்றைய இரவு முழுவதும் வீதியிலேயே கழிந்தது. மூன்று மாதக் குழந்தையான அபிராமி, பாலுக்காக வீறிட்டு அழுது அம்மாவையும்-மச்சாளையும் தூங்கவிடாமல் உறுத்திக் கொண்டிருந்தாள். ஆமிக்காரனின் 'பரா' வெளிச்சத்தின் வெள்ளையடிப்பினுள்ளும் புதினம் பார்த்தபடி நான் உறங்கிப் போனேன். அடுத்தநாள் நவாலியில் கிபிர் அடித்தது. சேர்ச்சுக்குள் குழந்தைகள் செத்துப் போனார்கள் என்று கேள்விப்படும்போது நாங்கள் இருபாலையில் இருந்தோம். சுதுமலை அம்மன் கோயில் வீதியிலிருந்து தலைவரே முதல்வெடி வைத்து சண்டையைத் தொடக்கியதாக ஐங்கரன் அண்ணாவுக்கு யாரோ சொன்னார்களாம். "முன்னேறிப் பாய்ச்சல்" முன்னையதும், "புலிப் பாய்ச்சல்" பின்னையதுமாக விவரமாகப் புரியாத வெறும் ஒன்பது வயது எனக்கு!

வரிச் சீருடையில் முதுகில் வாழைப் பொத்தியை நீட்டிக் கட்டிக்கொண்டு சப்பாத்துச் சத்தத்தின் நேரொழுங்கு மாறாமல் மாமாக்களும்- அக்காக்களும் அணி வகுத்து மறையும் வரை கண்களைத் திருப்புவதில்லை. நானும் தம்பியும், இரும்புத் தொப்பி போட்ட, மீசையில்லாத இரண்டு துவக்குகள் வைத்திருக்கும் ஆமிக்காரன் எவனுமே இவர்களைப் பார்த்த மாத்திரத்திலேயே "மகே அம்மே" என்று கத்தியபடி திரும்பி ஓட்டமெடுத்தே ஆக வேண்டும். மீண்டும் சுன்னாகத்துக்குப் போவது சாத்தியமில்லை என்று முடிவெடுத்தார் அப்பா. அப்பாவின் சைக்கிளின் முன் பாரில் தம்பி- பின் "கரியரி'ல் அம்மாவும்- குழந்தையும். மச்சாளின் லேடிஸ் சைக்கிளில் நான். எங்கும் பொதிகள்! ஒரேயொரு சூட்கேஸ்! தென்மராட்சியின் மந்துவில் அடுத்த எட்டு மாதங்கள் எனது ஆட்சிக்குரிய நிலப்பரப்பாகத் தன்னை மாற்றிக் கொண்டதில் பெரும் புளகாங்கிதமடைந்தது.

யாழ்ப்பாணத்துக்கான சண்டை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஹெலிகளிலிருந்து நோட்டீஸ் வீசுவார்கள். வெகு அரிதாகப் பெருங்கத்தையாகவே கிடைக்கும். பல நோக்கங்களுக்காக இலங்கைப் பாதுகாப்புப் படையினரின் பிரசுரங்கள் பாவிக்கப்படும். மணிச் சித்தப்பா, கிளிப் அடித்து, நான் இதுவரை கண்டிராத எட்டுக்கட்டு கொப்பியளவில் செய்கை வழிப் புத்தகமாக்கித் தந்தார். அப்பாவின் கணக்குக் "கரைச்சல்" இரண்டு மடங்கு அதிகரித்தது. பன்னீர் பன்னிரெண்டு , 146 என்று சொல்லி வாங்கிக் கட்டிக் கொண்டேன். பாடசாலைகளுக்கான நெருக்கம் அதிகமாக இரண்டு நேரப் பள்ளிக்கூடங்களாகின. குஞ்சு மந்துவில் சந்தைக்கு முன்னால் சற்றே தள்ளியிருக்கும் மந்துவில் றோமன் கத்தோலிக்கத் தமிழ்க் கலவன் பாடசாலை என்னையும் அணைத்தது. பாதிப் பள்ளிக்கூடம் தான். ஹேய்! 11 மணியோடு வீட்டுக்கு அனுப்பி விடுவார்கள். பின்னேரம் இன்னொரு பாடசாலை - வேறு ஆசிரியர்கள்! கிழமைக்கு இரண்டு தடவைகள் எப்படியும் "கிபிர்" வரும். பின்னாலுள்ள புளிய மரத்தடிக்குப் பங்கருக்குள் துரத்தி விரட்டி வீழ்த்திக் கிடக்கச் செய்து எழுப்பி வருவார்கள். நானும், கபிலனும் பங்கருக்குப் போகும் போதே புத்தகப் பையையும், கையிலிருக்கும் கொப்பியையும் கவனமாக எடுத்து நிதானித்துக் கொள்வோம். 'கிபிர்' போனது உறுதியான பின்பு, 'வேலியென்றால் இப்படி இருக்க வேண்டும்' என்ற லட்சணமுள்ள பின்னெல்லையால் பாதுகாப்பாக வெளியேறிவிடுவோம், பாடசாலையைவிட்டு! சுஜி அக்கா வீட்டுக்கு ரியூசன் படிக்கச் சேர்த்து விட்டார்கள். கபிலன், நான், காயத்திரி, பகுதான்யா, சர்மிளா, உமா (ரமணன்) "முள்ளி"- "ஒளிச்சுத் தொட்டு" "ஐஸ் போல்"-"கிளித்தட்டு"- "கள்ளன் பொலிஸ்" இவற்றோடு ஸ்கொலர்ஷிப் படிப்பும்! "பங்களா தேஷ் பிரதமர்" "இலங்கையின் நிதியமைச்சர்", "இந்தியாவின் தேசிய விலங்கு" உட்பட பொது அறிவு வளர்ந்ததோ இல்லையோ, குஞ்சு மந்துவிலின் குளக்கரை தவளைகளுக்கு தொல்லை வளர்ந்தது. வேகமாக நீந்தும் வாத்துக்களை நோக்கி கல்லெறிவதும், அவை குனிந்து நீருள் மூழ்கி இலாவகமாகத் தப்பித்து உயிர் காப்பதும், எதிர்ப்படும் பெரியவர்களிடம் ஏச்சுக் கேட்பதும் பழகிக் கொண்டன. கரைகளில் இலைகள் மீது படர்ந்து பழுப்பு வெள்ளைகளில், நுரை போலக் கிடப்பவை தவளை முட்டைகள் என்றும், அவற்றைக் கல்லெறிந்து உடைத்தால் தவளைகளின் சாபத்தால், பத்து நாள்களில் குரல் தவளைக் குரலாக மாறிவிடும் என்றும் சொல்லித் தந்த உமா. 2007 இல் மாவீரனாகிப் போனான். குரும்பெட்டியின் மேல் ஈர்க்கை வளைத்துக் குத்தி நடுவில் நிலையீர்க்கு ஒன்றின் இரு வழிகளூடாக இன்னொரு ஈர்க்கை செங்குத்தாக நுழைத்து சுழற்றினால் சத்தம் வருவதையும்- இரண்டு சமவளவு நுங்கு கோதுகளை தடியில் இருபுறமும் குத்தி, இன்னொரு கவருள்ள தடியால் வண்டியோட்டுவதையும் கற்றுத் தந்தவர்கள் மந்துவில் நண்பர்கள். பேப்பரில் செய்த தவளை, ஜெட் விமானம், கமரா மற்றும் கண்டோஸ் பெட்டிக்குள் வருகிற கார் ஸ்ரிக்கர்- பொம்மை ஸ்ரிக்கர் எல்லாம் நண்பிகள் உபயம்! ஒரு கட்டி சவர்க்காரம் இருநூறு ரூபா விற்கிற காலத்தை சற்றும் கவனிக்காமல் நாங்கள் விளையாடித் திரிந்தோம். ஒவ்வொரு ஊராகப் பிடிபட்டு யாழ்ப்பாண நகரம் நெருக்கப்பட்டுக் கொண்டிருக்கும் அக்கடிக்குள் எங்களின் படிப்பையும் பகல் கூத்துக்களையும் யாருமே கண்டுகொள்ளாத சுதந்திரம் நிறையவே தைரியம் தந்திருந்தது.

பின்னேர வகுப்புக்கள் முடிந்து விளையாட்டுக்களும் அலுத்த பின்னர் யாருமறியாமல் புதுப் பொழுதுபோக்கு ஒன்றை நான் மட்டும் தேடிக் கொண்டேன். வீட்டுக்குப் போகும் முன், நண்பர்கள் யாவரும் விலகிக் கொண்ட பின்னர் "பற்றி" கடையில் ரீ.வி வைத்துப் பார்க்கும் அண்ணன்களின் புன்னகைக்கு என்னையும் பழக்கிக் கொண்டேன். சைக்கிள் சில்லு ஒன்றைப் பெடலுடன் கவிழ்த்து வைத்து அதிலிருந்து "பெல்ட்" வைத்து மோட்டார் ஒன்றைச் சுழல வைத்து அதனை மின்கலங்களில் தொடுத்துக் கையடக்கமான கறுப்பு வெள்ளை தொலைக்காட்சிப் பெட்டியொன்றை இயக்கும் இலத்திரனியல் சூட்சுமம் புரியவில்லை. ஆனாலும் கறுப்பு வெள்ளை ரீ.வி.யில் கலங்கலாகத் தெரியும் அந்த விளையாட்டும், அதற்கான ஆரவாரமும் நிறையப் பிடித்துப் போனது.

தெருக் கூத்துக்களும், வில்லுப்பாட்டும்- புரட்சித் திரைப்படங்களுக்கு மாய் லொறி ரயர் ஒன்றைக் கொளுத்திப் போட்ட வெளிச்சத்தில் இயக்கம் ஆள் சேர்க்கின்ற காலத்தில் பற்றிக் கடையில் 'மட்ச்' பார்க்கும் அண்ணைமார் சைக்கிள்களை பக்கத்திலுள்ள வெறும் வளவின் வடலிகளுக்குள் மறைத்து விடுவது ஏன் என்பது எனக்குப் புரிந்திருக்கவில்லை. நேரடி வர்ணனையின் ஆங்கிலம் புரியாவிடினும் அந்த ஆரவாரத்தை யாவது ரசிக்க எண்ணி, "கொஞ்சம் சவுண்ட் கூட்டுங்கோ அண்ணை!". என்னையும் அனுமதித்ததே பெரிய விடயம் என்பது போல தலையில் தட்டி அடக்கினார்கள் பெரியவர்கள். "பேசாமப் பாரடா குண்டா ! எல்லோரையும் அள்ளீட்டுப் போறதுக்கோ" மறுவினா எழுப்பாமல் சுருங்கிக் கொண்டேன். "ஏதோ" பிரச்சினை இருப்பது பேச்சில் புரிந்தது.

1996 உலகக் கிண்ணத்தின் நாயகர்களுள் எனக்கு முதன் முதலில் "களுவிதாரண"வையே பிடித்துப் போனது. ஆனாலும் பற்றிக் கடையண்ணை என்னை "குட்டி ரணதுங்க" என்றே விழித்தார். என்னையும் கிரிக்கெட் இழுத்து ஆட்கொண்டது. முதலில் அம்மாவிடம் - பிறகு அப்பாவிடம்- கெஞ்சிக் கூத்தாடி இலங்கை-இந்திய அணிகள் மோதும் அரையிறுதிக்கான தொலைக்காட்சிப் பார்வை உரிமத்தை பாடுபட்டுப் பெற்றேன். பதினாறாம் வாய்ப் பாட்டைக் கீழிருந்து மேலாக இரண்டு இரவுகளுக்குள் ஒப்பிக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் கொல்கத்தாவின் "ஈடன் கார்டன்" மைதானத்துக்குள் கறுப்பு வெள்ளை அலைவரிசையூடாக நுழைவதற்கான எனது விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. பாதிக்குப் பாதி இந்திய இரசிகர்கள் மத்தியில் இலங்கையணியின் கடைக்குட்டி ரசிகனான எனக்கு முன் வரிசையில் இடமும் கொஞ்சம் மதிப்பும் இருந்தது. சச்சினுக்கு , ஜெயசூர்யா வீசிய பந்தில் களுவிதாரண 'ரன் அவுட்' செய்த போது . வாதரவத்தை வெளியில் எனக்கு மேலால் வந்து விழுந்த 'பிளாஸ்டிக் ஷெல்' உட்பட ஒட்டு மொத்த [illegible] ன் மன்னித்தருளினேன். இந்தியத் துடுப்பாட்டக்காரர்கள் அடுத்தடுத்து வெளியேறினார்கள். ரசிகர்கள் வெறியர்களானார்கள்!

'ஈடன் கார்டன்' மைதானம் ரசிகர்கள் மூட்டிய தீயில் எரியத் தொடங்கியது. ரசிகர்களால் எறியப்பட்ட பிளாஸ்டிக் துண்டொன்றை ஏந்தியபடி எல்லைக்கோட்டில் மிலாந்திக் கொண்டிருந்த முரளிதரனைக் கண்டித்தபடி அவசரமாக உள்ளே அழைத்த 'ரணதுங்க'வின் செய்கைகளில் நான் என்னையே பார்த்தேன். "வினோத் காம்பிளி" அழுதபடி வெளியேற நான் கொலரைத் தூக்கிக் கொண்டேன். 'போட்டு வாறன்' சொன்னதை கவனிக்க முடியாத சோகத்திலிருந்தார், பற்றிக் கடையண்ணை.

பைனல், பாகிஸ்தானில்- அரவிந்த டி சில்வாவை பதினோராவது அவதாரமாகவே பார்த்தேன் நான். 'தேர்ட் மான்' திசையில் தட்டிவிட்ட பந்து எல்லைக்கோட்டை தொட முன்னரே கைகளில் ஸ்டம்பை பிடுங்கிக் கொண்டு ஆரவாரித்த 'ரணதுங்க'வை என்னவென்று விவரிக்க ! 'ரூபவாஹினி' வெற்றிக் களிப்பில் மூழ்கித் திளைத்தது. இலங்கை அணியின் பரிசுத் தொகை முழுவதும் பாதுகாப்பு நிதிக்கு வழங்கப்பட்டுத் தமிழனின் தலையில் குண்டுகளாக விழுந்ததை எனக்கும் சொல்ல வேண்டும் என்ற பொறுப்புணர்வு எந்தப் பெரியவர்களுக்குமே இருக்கவில்லை. நானோ "மகா நாம"வின் 'டைவிங்' பிடியெடுப்புக்களுக்கும், 'சனத்'தின் 'லெக் கிளான்ஸ்'களுக்கும், 'முரளி'யின் மாயத் திருப்பல்களுக்கும் அடிமையாகத் தொடங்கினேன்.

சித்திரை வந்தது- யாழ்ப்பாணம் பிடிக்கப்பட்டு துருப்புக்கள் ஆனையிறவை நோக்கி நகர்ந்தன. கிளாலிக்கு போக முயன்று மிருசுவிலோடு வடமராட்சிக்குள் திருப்பி விடப்பட்டோம். தாகம் வாட்டும் மத்தியானமொன்றில் நாங்கள் இடைத் தங்கியிருந்த காணியொன்றின் அயல் வீட்டுக்கு ஒரே வாகனத்தில் மூன்று சவப்பெட்டிகள் வந்திறங்கின. காரணம் தெரியாமல் நானும் சேர்ந்து குளறினேன். தற்காலிகமாக என் நாயகர்கள் மறக்கடிக்கப்பட்டனர். கல்வியங்காடு ஊடாக இராணுவம் வரவேற்றது. ஆமி அக்கா ஒருத்தி இனிப்பொன்று தந்தாள். சாப்பிட்டேனா- எறிந்து விட்டேனா என்று நினைவில்லை. எறியுமளவுக்கு அவர்கள் எதிரிகளா என்ன? அரவிந்த -ரணதுங்க-களுவிதாரணவின் சகோதரர்கள்-மச்சான்கள்-சகோதரிகள் !

ஆறாம் தரத்திலிருந்து நகரத்தின் பெரிய பாடசாலையில் சேர்க்கப்பட்டேன். கிரிக்கெட்டின் நூறாண்டுகள் தாண்டிய கௌரவத்தைக் கொண்டாடும் எனது புதிய பாடசாலை எனது ஆர்வப் பசிக்கு வாயில் அடிக்கடி கிரிக்கெட் பொரியள்ளிப் போட்டது. பிறகென்ன- இலங்கை அணிக்கு ஆதரவளிக்கும் பட்டாளம் சேர்ந்து கொண்டாடியது. 83 களில் இந்தியா உலகக் கிண்ணம் வென்ற போது இந்திய ரசிகர்களான அப்பாக்களின் பிள்ளைகளில் சிலர் இந்திய ரசிகர்களாகவும், 96 உலகக் கிண்ணத்தை "நெற்றி வியர்வை நிலத்தில் விழ" சம்பாதித்தவர்களான எங்களில் பலர் பேரணியாகவும் நின்று ஆதரவுச் சண்டை நடத்தினோம்.

உலக சாதனைக்கான தனிநபர் ஓட்டமான சஜீட் அன்வரின் 194 இனை, சனத் ஜெயசூர்ய துரத்தி வந்து 183 இல் வெளியேறிய போது அந்த ஆட்டமிழப்புக்குக் காரணமான 'சவுரவ் கங்குலி' கிரிக்கெட்டில் நானே எனக்கென்று ஈட்டிக்கொண்ட முதல் எதிரியானார். 'அப்பாவி' முரளிதரனைப் பந்தை எறிவதாகச் சொன்ன ஆஸ்திரேலிய நடுவர் 'டெரல் ஹேர்', 'சனத்'தை 99 இல் ரன் அவுட் செய்த "நஷார் குசேய்ன்" . இலங்கை அணியைக் கண்டதுமே குஷியாகும் "வீரேந்தர் செவாக்"- "சச்சின் டெண்டுல்கர்" கையுறைக்குள் குட்டிப் பந்தை வைத்துக்கொண்டு சதமடித்து உலகக் கிண்ணத்தைப் பிடுங்கிய "அடம் கில்கிறிஸ்ட்" குலசேகரவின் பந்தை சிக்ஸருக்கும், பின் உலகக் கிண்ணத்தையும் தூக்கிய மகி எனப்படும் "டோனி" என்று எனது எதிரிகளின் பட்டியல் நீண்டு-நீண்டு குழைந்தது.

என் நண்பர்களுடனான எவ்வித வாதப் பிரதிவாதத்தின் போதும் வெகு மீடிறனுடன் நான் கையாள்வது இப்படி "அரசியல் வேறு-விளையாட்டு வேறு", "விளையாட்டுணர்வுக்கு அரசியல்-இனவாதம் எதுவுமே தெரியாது" 2007 இல் உலகக் கிண்ண இறுதிப் போட்டிகளைக் காலி முகத்திடலில் மெகா திரையில் பார்த்துக் கொண்டிருந்தவர்கள், வான் பரப்பில் புலிகளின் விமானத்தை கேள்விப்பட்டு மின் விளக்குகளை நகரம் முழுவதும் நூர்த்துவிட்டு தப்பியோடிய போதும், ஏதோ எனக்கே நிகழ்ந்ததாக எரிச்சல்பட்டுக் கொண்டது என் ரசனை.

தமிழர்களின் தலையில் இரத்தம் ஒழுகிய போதெல்லாம் ஒற்றைக் கையால் அதை பொத்திப் பிடித்துக் கொண்டு மற்றக் கையில் றிமோட்டை வைத்து மாறி- மாறி இலங்கையணியை சுவைப்பதே பழக்கமாகியது. முள்ளிவாய்க்காலில் தசை ரசம் பிழியப்படும் போதும் கூட ஐ.பி.எல் இன் சென்னை சூப்பர் கிங்ஸையும்-முரளிதரனையும் மறக்காமல் முதுகில் தட்டிக்கொண்டே தானிருந்தேன். இலங்கை அணியின் வெளிநாட்டுச் சுற்றுப் பயணங்களில் புலிக்கொடியோடு ஆர்ப்பரிப்பவர்களையும், பாய்ந்தோடுபவர்களையும் கூட நடுநிலைமை தவறி விமர்சிக்கத் தவறவில்லை. காலம் என்னை, கடுமையாகக் கவனித்து வைத்திருக்க வேண்டும். பிரிட்டிஷ் பிரதமரின் இலங்கை வருகையின் போது என் ஆதர்ச நாயகன் முரளிதரனின் நாக்கை வைத்து என் மூக்கில் ஓங்கிக் குத்தியது. அதே காலம் எவனை "எறிகிறாய்" என்று சொன்ன போது நான் அழுதே விட்டேனோ- எவன் காப்புறுதி விளம்பரத்துக்காக யாழ்ப்பாணம் வந்த போது அவன் விரல்களைத் தொட்டதற்காய் வானத்தில் ஏறினேனோ- எவன் எனது பாடசாலை வந்த போது தமிழில் கையெழுத்துக் கேட்டு வாங்கினேனோ- எவனது ஓய்வுடன் இனி முடிந்தது இலங்கை அணி என்று மார் தட்டினேனோ- எவனை 'இவன் தமிழன்' என்று ஒட்டுமொத்த பேரினமும் சமத்துவத்தின் தவறிய குறியாக அடையாளம் காட்டியதோ- அவன், விபூசிகாவின் கண்ணீரையும் விளையாட்டுப் பந்தாகச் சுழற்றி எறிந்ததைத் துளியும் ஏற்க முடியவில்லை என் பதினேழு வருடப் பழக்கத்தால் காணாமற் போனவர்களின் மீதான தேடுகைக் கண்ணீரை 'கிளிசரீன் கண்ணீர்' என்று குதர்க்கம் பேசிய அடுத்த நொடி என்னவென்று அறிவிக்காத பெருஞ்ஞானம் புகுந்து கொண்டு "வெவ்வேறாக" எனக்குள் இருந்த கிரிக்கெட்டையும்-அரசியலையும் வேகமாக ஒன்றாக்கியது. பின்னோக்கிப் பார்க்கிறேன். இரண்டுமே ஒன்றாகத்தான் இருந்திருக்கின்றன. என் காமாலைக் கண்கள் கவனிக்கவே தவறியிருக்கின்றன, கம்பஹாவில் அடிவாங்கும் வரை!!

"சரித்திர சேனநாயக்கா"வை சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி) "எறிகிறான்" என்று சொன்னது. நேற்று ! என் உடலில் எங்குமே வலி இல்லை இப்போது.

என் தம்பிகளிடமும் சொல்லவிருக்கின்றேன் "எங்களுடையவன் என்று உறுதியாகத் தெரியாத எவனுக்காகவும் வீணாக்கப்படுமளவுக்கு. எம் கண்ணீர் ஒன்றும் அவ்வளவு மலிவானதில்லை"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றோரை பேணுதல்

ரம்யன்



பெற்றோரை வீட்டில் வைத்துப் பேணும் நிலையிலுள்ளவர்களுக்கு 'டெய்லிமெயில்' என்ற சஞ்சிகை பின்வரும் ஆலோசனைகளை வழங்கியுள்ளது.

*உங்கள் பெற்றோர் இளமையாகவும் , ஆரோக்கியமாகவும் இருக்கும் காலத்திலேயே அவர்களுடனும், உங்கள் சகோதரர்களுடனும் இணைந்து போகும் தன்மையை வளர்த்துக் கொள்ளுங்கள். எதற்கெடுத்தாலும் எதிர்ப்புக் காட்டும் தன்மை வேண்டாம்.

*உங்கள் பெற்றோர் எவ்வாறு நடத்தப்பட வேண்டும் என்று விரும்புகிறார்கள் என்பதை அவர்களுடன் விவாதியுங்கள்.

*நீங்கள் எவ்வாறு செயற்படப் போகிறீர்கள் என்பதை சகோதரர்களுடன் விவாதியுங்கள்.

இவைகளை விவாதிப்பதை சாதாரண உரையாடலாக வைத்துக் கொள்ளுங்கள்- உணர்ச்சி வசப்பட்ட விவாதங்களாக இருக்க வேண்டாம்.

*பராமரிப்பதில் சிக்கல் ஏதும் ஏற்படுமானால் எல்லோருடனும் கலந்து பேசுங்கள். காலத்தைப் போக்க வேண்டாம். பொதுவான ஓர் இடத்தில் சகோதரர்கள் கூடிப் பேசக்கூடியதாக ஒரு சந்திப்புக்கு ஏற்பாடு செய்யுங்கள். மூன்றாவது தரப்பு ஒன்றையும்- முடியுமானால் நெருங்கிய நண்பர் ஒருவர் அல்லது மதகுருவானவரையும் அழைத்திடுங்கள். வெளிநாட்டில் சகோதரர் ஒருவர் இருப்பாரானால் ஸ்கைப்பில் யாவற்றையும் பதிவு செய்யுங்கள்.

உடல் நல விவகாரம், பணம், உணவுகள் யாவற்றையும் விவாதிப்பதோடு எல்லோரையும் பேசும்படி செய்யுங்கள். கவனமாக செவிமடுக்கவும் செய்யுங்கள். பங்களிப்புச் செய்யுங்கள், ஒவ்வொருவரின் வசதிக்கு ஏற்றபடி பொறுப்புக்களை பகிர்ந்தளியுங்கள்.

★ பராமரிப்பு, பணச் செலவுகள் , சுகநல கவனம் யாவும் எல்லோராலும் பகிர்ந்து கொள்ளப்படுவதாக இருக்கட்டும்.

★ பெற்றோரைப் பராமரிப்பதில் நீங்கள்தான் பிரதான கவனமெடுப்பவராக இருந்தாலும் நீங்களே பெரிய தியாகி போல காட்டிக் கொள்ளாதீர்கள் . அவர்கள் தாம் புறக்கணிக்கப்பட்டுவிட்டதாக அல்லது அது எவ்வளவு கஷ்டமாக இருக்கும் என்பதை அறியாமல் இருக்கலாம். நேரடியாகச் செயற்படுபவர்கள் அவர்களுக்கும் குழுவின் பங்காளியாக இருப்பதற்குச் சந்தர்ப்பம் கொடுங்கள்.

★ நீங்கள் தூரத்தில் இருப்பவர் எனில் அருகில் இருக்கும் சகோதரர் அதிகமாகப் பங்களிப்பு செய்கிறார் என்றால், எல்லா வகையிலும் அவருக்குக் கௌரவம் கொடுங்கள். எந்த வகையில் உங்கள் உதவி தேவைப்படுகிறது என்பதைக் கேட்டறியுங்கள்.

நீங்கள் வந்து போவதற்கான திட்டம் ஒன்றை வரையும்போது உங்கள் பெற்றோரின் உடல்நிலைமை பற்றி விவரமாக அறிந்து கொள்ளுங்கள். உங்கள் சகோதரருக்கு ஓய்வு தேவைப்படும் சரியான காலத்தை அறிந்து வைத்துக் கொள்ளுங்கள்.

நிலைமை எப்படியிருக்கிறது என்பதை சற்று அதிக காலம் தங்கியிருந்து அறிந்து கொள்ளுங்கள். பெற்றோர் எங்கு போக விரும்பினாலும் அவர்களுடன் சென்று எல்லாவற்றையும் புரிந்து கொள்ளுங்கள்.

**தந்தையைப் பராமரிக்கும் மகள்**

இந்தக் காலத்தில் வேலைக்குச் செல்லும் பெண்கள் பிள்ளைகளோடு பெற்றோரையும் பராமரிக்க வேண்டியிருப்பது பெரிதும் சிக்கலாகத்தான் இருக்கிறது. பெற்றோரைச் சிலர் சினந்துகொள்கிறார்கள். பிள்ளைகளோடு மோதிக்கொள்கிறார்கள். தூர தேசத்திலுள்ள சகோதரர்களையும் குறை கூறுகிறார்கள். இன்னும் சிலர் எல்லாவற்றையும் தம் தலைமேல் போட்டுக் கொண்டு அதுவே கடமை என்று கருதிச் செயற்படுகிறார்கள். அதில் மகிழ்ச்சியும் திருப்தியும் கொள்பவர்களும் உண்டு.

இங்கு ஒரு வேலைக்குச் செல்லும் பெண் இரண்டு பிள்ளைகளோடு வயதான தனது தந்தையையும் பார்த்துக் கொள்கிறார். ஷீண்டஜோசிம் என்ற அந்தப் பெண்மணி கூறுவதைப் பார்ப்போம்.

சில நேரம் என் வாழ்வே எனக்குச் சொந்தமில்லை என்று எண்ணத் தோன்றுகின்றது. காலையிலிருந்து இரவு வரையில் நான் எல்லாப் பக்கங்களிலிருந்தும் இழுக்கப்படுவதாக உணர்கின்றேன். சில-நேரங்களில் பிள்ளைகள் இல்லையென்றால் அப்பாவைக் கவனித்தாக வேண்டும். என் உதவிக்குக் குடும்ப உதவியாளர் ஒருவரை வைத்திருக்கிறேன். என்றாலும் எனது தகப்பனாருக்கு எதற்குமே நான் இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கின்றார். எனக்கு சகோதரர்களும் இருக்கிறார்கள் . வெளிநாட்டிலிருந்து அவர்கள் பணம் அனுப்புகிறார்கள். என்றாலும் தினசரிக் கடமைகள் என் பொறுப்பாகவே இருக்கிறது. எல்லாம் ராணுவத் திட்டமிடல் போல செயற்பட வேண்டியிருக்கிறது.

உதவியாள் விடுமுறையில் நின்றுவிட்டால் கேட்க வேண்டாம். பக்கத்திலுள்ள கடைக்குப் போய் வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்குவது கூட என் வேலையாகிவிடுகிறது. அவசரமாகக் கடைக்குப் போய் ஒரு பொருளை வாங்கிவர வேண்டுமானாலும் தந்தையாருடன் இருக்க ஒருவரைத் தேடியாக வேண்டும். அவரைத் தனிமையில் இருக்க விடமுடியாது. ஒரு குடும்பத்தைப் பேணிப் பாதுகாத்து குழந்தைகளை வளர்த்து கற்பித்து மனிதர்களாக்கிவிட்ட மனிதர் வயதான காலத்தில் ஒருவரின் ஆதரவில் வாழ்வதும் தனது அன்றாடக் கடமைகளில் உதவிகளை அவளிடம் எதிர்பார்ப்பதும் அவருக்கும் நிச்சயம் கஷ்டமாகத்தான் இருக்கும். எனது பிள்ளைகளுக்கும் இது கஷ்டமான காரியம்தான். ஏனென்றால் வயதின் காரணமாக சிறு விடயத்துக்கும் சினம் கொண்டுவிடுவது அவர் குணமாக இருக்கின்றது. அவருடைய கோபதாபங்களுக்கு ஒரு எல்லையை நான் வைத்திருக்கிறேன். சில சமயங்களில் அவருடைய செயல்கள் என்னைக் குழப்பத்தில் ஆழ்த்திவிடுகின்றன. எனது பிள்ளைகளும் தந்தையாருடன் சில வேளைகளில் நேரத்தைக் கழிப்பார்கள். அவருக்காகப் பத்திரிகை வாசிப்பது. அவருடன் பேசிக் கொண்டிருப்பது போன்றவற்றில் நாங்கள் எல்லோருமே பகிர்ந்து கொண்டு வேலைகளை இலகுவாக்கிக் கொள்ளப் பழகிக் கொண்டுவிட்டோம். சில சமயங்களில் எனது சகோதரர்கள் பணத்தை அனுப்பிவிட்டு சுகமாக இருக்கிறார்கள். என் கஷ்டங்கள் அவர்களுக்குத் தெரிவதில்லை என்று நான் நினைப்பதுண்டு.




ஆனால் எங்களுக்காக அவர் செய்துள்ள தியாகங்கள், உதவிகள் யாவற்றையும் நினைத்துப் பார்க்கையில் நான் செய்வது ஒன்றும் பெரிய காரியம் அல்ல. எதுவானாலும் அவர் என் தந்தை. அவரைப் பராமரிப்பது என் கடமை.

# என்னவென்று நான் சொல்ல...



வாழ்க்கைப் பாதையிலே வாட்டங்கள் பலகண்டு
வாழ்ந்திடும் வாழ்க்கையிலே மாற்றங்கள் பல உண்டு
வாடாமல் போவதற்கு உயிர்கள் இங்கில்லை
வாட்டிடும் மாயைகள் என்னவென்று நான் சொல்ல

எண்ணெய் விளக்கினிலும் எண்ணில்லாப் படிப்புகள்
என்னென்ன வித்தைகள் பண்புடனே அன்று
கணினி யுகத்தினில் கல்லாமல் போனதென்ன?
கண்டதெல்லாம் கணினியிலே சத்தியமாய் ஆனதென்ன?

தொழில்நுட்பமும் விஞ்ஞானமும் விந்தைகள் செய்தாலும்
தொழிலாளர் வியர்வைகள் மண்ணில் தொடராக விழுந்தாலும்
தொடக்கமும் முடிவும் ஒன்றாகிட சிந்தையிலே
தொடர்கிறதே மனித பாவங்கள் மண்ணிலே

எனக்கென்ன வந்ததென்று எண்ணியவர் ஏராளம்
தனக்கென்று வந்தாலே துஞ்சியவர் ஏங்கிட
சுயநலமும் பொறாமையும் சுடுகாடாய் மாற்றிடவே
சுற்றமும் உற்றமும் சுமையாகிப் போகிடவே

மனம்போல வாழ்வென்று மானிடர் சொல்கிறார்கள்
மனம் ஒரு குரங்கென்றும் மாமனிதர் சொல்கிறார்கள்
மனம் காட்டும் கண்ணாடி முகமென்று சொல்கிறார்கள்
முகத்துக்கும் மேக் அப் என்னவென்று நான் சொல்ல?

நியாயம் பேசிடக் காலமில்லை இது
நியாயமாய் வைத்தால்தான் கோலமெல்லாம் இங்கு
நீதியாய் நடப்போர்க்கு இது ஒரு பலிமேடை
நிலைமாறி நடப்போர்க்கு இது ஒரு நாடக மேடை

*அல்லையூர் றமணி.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடியால் கெடும் குடி

பைந்தவி

வெயில் நிலத்திலிருந்து சுட்டெரிப்பதை அனுபவிக்க வேண்டுமா? என்னிடம் வா என்கிறது அந்த நிலம். இன்னும் கொள்ளையர்களின் கண்ணில் படாத பெரும் வெண்மணல் திட்டுக்கள் எரிவெயிலில் மினுங்குகின்றன. அந்தப் பெரு மணல் வெளியைக் கண்டதும் ஆசை மிகுதியில் நீங்கள் கால் புதையப் புதைய ஓடமுடியாது.

எல்லா இடங்களிலும் எச்சரிக்கின்றன மிதிவெடி கவனம் சிவப்புப் பலகைகளும், வெடித்த பொருள்களின் துண்டுகளும், வெடிக்காத பொருள்களும். அதற்குள் ஆங்காங்கே சில குடிசைகள். கிடுகால், பனையோலையால், அந்தச் சூழலில் காவலரணில் விட்டுப் போன தகரத்துண்டால் மற்றும் அங்கு வாழும் குடும்பத்து மூத்த பெண்ணின் சேலையால் அந்தக் குடிசைகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இங்கு குழந்தைகளுக்குப் பஞ்சமில்லை. வறுமையும், வெறுமையும் குழந்தைகளை உற்பத்திசெய்துகொண்டேயிருக்கின்றன. அநேக பெண் குழந்தைகளும், ஒன்றிரண்டு ஆண் குழந்தைகளுமாக குழந்தை வரம் அவர்களுக்கு வாய்த்திருக்கின்றது. அந்தச் சூழலுக்கு ஏற்றாற்போல அவர்கள் இயைபாக்கம் அடைந்து வளர்கின்றனர். ஒவ்வொரு குடிசைகளிலும் மூன்றுக்கும் மேற்பட்ட குழந்தைகள் இருக்கின்றனர். பல காலம் எண்ணெய் காணாத பறட்டைத் தலையும், காடாக வளர்ந்துவிட்ட செந்நிறத் தலைமுடியும், மிரளும் பார்வையும், வறட்சியான சிரிப்பும் வறுமையின் மொத்த வரைவிலக்கணத்தையும் தந்துவிடுகின்றன. அவர்களின் விளையாட்டுப் பொருள்களாக மணலும், நாவல் மரங்களும், சூழலெல்லாம் கொட்டிக் கிடக்கும் வெடிபொருள் துண்டுகளும் இருக்கின்றன. அரச பாடசாலைக் கல்வி அவர்களுக்குக் கிடைப்பதாகச் சொல்லுகின்றனர்.

சரி, அந்தக் குழந்தைகளின் அம்மா, அப்பா? ம்... அதே வறுமையின் வர்ணத்தில்தான் அவர்களும் இருக்கின்றனர். பல துண்டுத் துணிகளைச் சேர்த்து ஒட்டுப் போட்ட உடையை அந்தக் குழந்தைகளின் அம்மா அணிந்திருக்கிறார். காதில் சிலவேளைகளில் பிளாஸ்ரிக், பித்தளைத் தோடுகள் இருக்கக்கூடும். இன்னும் சில வேளைகளில் அதுவும் இருக்காது. அப்பா தாடி, தலைமயிரோடு வெயிலுக்கும், கடின உழைப்புக்கும் பெறுபேறாய்க் கிடைத்த செந்நிற, கவர்ச்சியற்ற கண்களோடு வெட்ட வெயிலை வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்கிறார். அம்மா, அப்பா ஆகிய இரு மனிதர்களையும் சுற்றிச் சுற்றி கதைப்பவற்றைக் கேட்டுக் கொண்டும், அதைக் கற்பனை செய்து கொண்டும், தங்களுக்குள் சின்னச் சண்டைகள் பிடித்துக் கொண்டும் இருக்கின்றனர் அந்தக் குழந்தைகள்.


**இனி அப்பாவைப் பற்றி**

இங்கு வாழும் அநேக அப்பாக்கள் கடின உழைப்பாளிகள்தான். கடற்றொழில், கள்ளிறக்க, மேசன் வேலை, விவசாயம், மிதிவெடி அகற்றல், இரும்பு வியாபாரம் எனப் பல தொழில்களையும் செய்கின்றனர். இந்தக் கடினத் தொழிலைக் காரணம் காட்டி குடிபோதைக்கு அடிமையாகிவிடுகின்றனர். ஆளை விழுங்கி விட்ட குடிப் பழக்கம் அந்தக் குடும்பங்களை மட்டுமின்றி முழுச் சமூகத்தையுமே பாதிப்பதாகவுள்ளது என்கின்றனர் அயலவர்கள்.

**அப்பாவைத் திருத்துங்கோ**

கண்ணுக்குள்ளே நினைவு வைக்கத்தக்க பளிச்சென்ற முகவெட்டுடன் எங்கள் தாய்த் தமிழின் நிறத்தில் அந்தப் பத்து வயதுச் சிறுவனைச் சந்தித்தோம். சுடும் மணலில் நடக்கமுடியாமல் தடுமாறிய எங்கள் கால்களை அவனது ஏளனப்பார்வைகள் குளிர வைத்தன. "வாங்கோ அண்ணா, வாங்கோ அக்கா" என்று வரவேற்றது அவனது குரல்.

ஓர் அறையின் அளவில் அமைக்கப்பட்ட குடிசையின் உள்ளே செல்வதற்கு அதிகமாகவே குனியவேண்டி இருந்தது. அந்தக் குடிசையின் சிறுபகுதி சமையலுக்கும், சிறுபகுதி படுக்கைக்கும், இன்னொரு பகுதி பொருள்களை அடுக்கி வைப்பதற்கும் பாகம் பிரிக்கப்பட்டதைப் பார்க்கும்போது அந்தக் குடும்பத்தின் இயல்பான நல்லதொரு வாழ்க்கை முறை வெளிப்படாமல் இல்லை. ஆனாலும் ஒரு பக்கத்திலிருந்து வந்த வித்தியாசமான வாடை மூக்கைத்துளைத்தது. திரும்பிப் பார்த்தபோது ஒரு மூலையில் அப்போதுதான் வடிக்கப்பட்ட கள்ளு இலையான்களின் நடுவில் இரக்கமற்று பார்த்துக்கொண்டிருந்தது.



தொடர்ச்சியாகக் குடிப்பழக்கத்துக்கு அடிமையான தந்தை தங்கள் வீட்டில் இருக்கின்றார் என்று பிள்ளைகளின் பேச்சற்ற மௌனமொழியே சொல்லிவிடும். கன்னத்தில் சிறு தழும்போடு அப்போதுதான் வடித்த சோற்றுப் பானைக்கருகில் அமர்ந்திருந்த அந்தச் சிறுமியின் கண்களில் குடித்துவிட்டு வந்து தந்தை அடித்த அடியின் மருட்சி குறையாதிருந்தது. அழகான பிள்ளைகள் அமைதியாகவும் அன்புடனும் பேசினர். அமைதியாக அவதானித்தபோது அழகிய மருண்ட கண்களுடன் நம் அருகில் வந்து, "நீங்கள் எங்கடை அப்பாவைத் திருத்த வந்தனீங்களோ?" என்று மழலை மொழியில் ஆரம்பித்தாள் அந்தச் சிறுமி. பிள்ளைகள் படிப்பிலும் கெட்டிக்காரர் என்பது அவர்களின் பேச்சிலிருந்து தெரிந்தாலும், அப்பாவின் குடி அவர்களின் பள்ளிக்கூடத்தில் முதலிடமாகப் பேசப்படுவது புரிந்தது.

எங்களை வரவேற்று அழைத்துப்போன அந்தச் சிறுவனின் முகத்தில் வாட்டத்தையும் வெறுப்பையும் தெளிவாகக் காண முடிந்தது. அந்தக் கண்கள் ஏதோ ஒன்றை எங்களிடம் ஆராய்ந்ததை எங்களால் மறுக்க முடியாது. "எங்களுக்கு நீங்கள் ஒன்றும் வாங்கித் தரவேண்டாம். எந்த உதவியும் செய்ய வேண்டாம். எங்களுக்கு எல்லாம் இருக்கு. எங்கடை அப்பாவைத் திருத்தித் தாங்கோ. அவரை குடியிலயிருந்து காப்பாத்துங்கோ" கண்களில் வடிந்த கண்ணீருக்கு நடுவில் அந்தச் சிறுவன் கூறியது அவன் மனதிலிருந்த கூட்டுச்சேர்ந்த ஏக்கத்தின் பிம்பமாக எங்கள் மனதில் படிந்துவிட்டது.

அப்பாவின் குடியின் பரிசுகள் பிள்ளைகளிடம் ஏராளமாகச் சென்றடைந்துவிட்டன. மிக வேகமாகக் காலைத்திருப்பிக்காட்டி "என்ரை காலில இருக்கிற காயம் அப்பா அடிச்சது தான்" என்றதும் மூத்த மகளும் தன் கன்னத்திலுள்ள காயத்தைக் காட்டினாள். கடைக்குட்டியான அழகி, "அப்பா எனக்கு வெறியில அடிக்கிறதேயில்லை" என்று சொல்லும்போது அந்தப் பிஞ்சு மனது 'வெறி' என்ற வார்த்தையை எவ்வளவு இலகுவாக உச்சரிக்கிறது. என்பதை எங்களால் உணரமுடிந்தது.

"அப்பா குடிக்காட்டி எங்களுக்கு அடிக்கிறதேயில்லை. அப்பா நெடுகலும் குடிக்கிறதில்லை. சில வேளை குடிச்சா பேசாமல்படுத்திடுவார்" என்று தங்கள் அப்பாவுக்காகப் பரிந்து பேசிய பிள்ளைகளின் பேச்சொலி தங்கள் தந்தை குடியை விட்டால் நல்லவர் என்ற கருத்தைத் தராமல் இல்லை. "அப்பா அம்மாவுக்கு அடிக்கும் போது ஆருமே ஓடி வாறதில்லை" என்று தொடர்ந்து கொண்டே சென்றது அவர்களின் ஏக்கம்.

அத்தனை வலிகளையும் சோகங்களையும் தன் சிறு சிரிப்புக்குள் மறைத்து வைத்திருந்த அந்த அம்மாவைப் பார்க்கும் போதே தெரிந்தது, தன்னுடைய குழந்தைகளை வளர்த்தெடுப்பதற்குக் கடினமான தடைகளைத் தாங்கத் தான் தயார் என்று. நம்பிக் கைகளைச் சுமந்து பிரச்சினைகளைக் கண்டு துவளாத மனமும், நிலைமைகளைச் சமாளிக்கும் மனப்பக்குவமும் கொண்ட அம்மாவாகவே அவரை நாங்கள் பார்த்தோம். எங்கள் அம்மாக்கள் எல்லோரும் நம்பிக்கையைத் தளர விடாததால்தான் நாங்கள் இன்றும் பிரச்சினைகளைக் கண்டு சோர்வதில்லை. "என்ரை மனிசன் குடிச்சிட்டு வந்து பண்ணுற அநியாயம் கொஞ்ச நஞ்சமில்லை. என்னைப்போட்டு அடிக்கிறது காணாதெண்டு பிள்ளைகளையும் போட்டு அடிக்கிறார்" கண்ணிலிருந்து வந்த வறண்ட கண்ணீர் துளிகளை வழக்கம்போல தானே துடைத்துக்கொண்டார். "எவ்வளவு சொல்லியும் கேக்கிறார் இல்லை. என்னையும் என்ரை பிள்ளையளையும் ஒரு சொந்தங்களும் தேடுதுகள் இல்லை" என்று மனக் குமுறலைக் கொட்டித் தீர்த்தார்.

அத்தனை பிரச்சினைகளினதும் மையப் புள்ளியான அப்பா அப்போது குடித்திருக்கவில்லை. அவரின் முகத்தில் ஒரு தெளிவில்லை. நேரான பார்வை இல்லை. வெறித்த பார்வை. மௌனம். தொடர்ந்து வெற்றிலை போட்டதால் காவிபடிந்த பற்கள், வைரம் பாய்ந்த கரங்கள். சிறு குற்ற உணர்வுப் போராட்டம் கலந்த பார்வை. சிறுவயதில் பெற்றோரைப் பிரிந்து, பல வலிநிறைந்த பாதைகளை கடந்து வந்த அவரின் மனதில் தன்னுடைய உடலின் வலிகளையும், மனதின் துக்கங்களையும் மறப்பதற்குத் தான் குடிப்பதால் உங்களுக்கு என்ன வந்தது என்ற ஒரு கேள்வியும் இருக்கிறது என்று எங்களால் புரிந்து கொள்ள முடிந்தது.

ஆரம்பத்தில் அவர் தன்னுடைய குடிக்கான காரணங்கள் பலவற்றைச் சொன்னாலும் அவரின் மனதில் தனக்கு விருப்பமில்லாமல் குடிக்கிறேன், தன் வாழ்க்கையின் தோல்விகளைத் தாங்கமுடியாது குடிக்கிறேன் என்று மாறி மாறிச் சொன்னார். தன்னிடம் உள்ள திறமைகளைத் தானே முன்வந்து சொல்லத்தொடங்கினார். இடையில் நுழைந்த மனைவி "இவர், எங்களுக்கு இல்லாட்டிலும் வீட்டுக்கு வாற மனிசருக்கு முதல்ல சாப்பாட்டை குடு என்டுதான் சொல்லுறவர். நல்லா சமைப்பார். கலியாண வீடு சாமத்திய வீடு என்றால் இவரைத்தான் இஞ்சை சமைக்கக் கூப்பிடுறவை" அவர் முகத்தில் பெருமை இழையோடியது. "நானும் தம்பி! இந்த நாசமறுந்த குடியை விடவேணும் என்றுதான் கனக்க முயற்சி செய்யிறன் என்னாலை முடியேல்ல" என்று அவர் கூறும் போதே எங்களால் வேண்டிய உதவியைச் செய்ய வேண்டும் என்ற முடிவெடுத்தோம்.

அருகிலிருந்த தன் கடைசி மகளை அணைத்தபடி அவர் இறுதியாகச் சொன்னார். இந்தக் குடியை விடோணும் தம்பி என்ன செய்யலாம்? நீங்கள் இந்தக்குடியை விட விரும்பினால் அதற்கான வழிகளைக் காட்டி உங்களோடு நின்று உதவுவோம் என்று நாம் சொன்ன போது அந்தப் பிரகாசமான முகத்துக்கு சொந்தமான சிறுவனின் முகத்தில் சிறு நம்பிக்கை ஒளியைக் கண்டோம்.

*மூல தரவுகளுக்கும் களப் பயணத்துக்குமான உதவி சாந்திகம்*

27.7.2014 உதயனில் உள்ளக்குமுறல் பகுதியில் ச.கயல்விழி எழுதிய கருத்துக்கள் பற்றி உளமருத்துவ நிபுணர் பேராசிரியர் தயா சோமசுந்தரம் அவர்களின் பார்வை:

கயல்விழி தனது புலமைப்பரிசில் பரீட்சை பற்றியும் தனது தோல்விகள், வெற்றிகள் பற்றியும் மனம் திறந்து எழுதியுள்ளார். இவரைப்போல ஏனைய மாணவர்களும் சிந்திக்க வேண்டும். புலமைப்பரிசில் பரீட்சையில் மட்டும் அழுத்தங்கள் நெருக்கடிகள் ஏற்படுவதென்றில்லை. மாணவர்கள் எதிர்கொள்ளும் எல்லாப் பரீட்சைகளிலுமே அழுத்தங்களும் ஒப்பீடுகளும் ஆசிரியர்களாலும் பெற்றோராலும் ஏற்படுகின்றன. கல்வி மாணவர்களின் சுயசிந்தனையை வளர்த்து ஆய்வு மனப்பான்மையையும் தேடலையும் அவர்களிடத்தில் உண்டாக்குவதாக இருக்க வேண்டும். மாணவர்கள் பரீட்சையை நோக்கி பல அழுத்தங்களோடும் துன்பங்களோடும் படிக்க வேண்டியுள்ளது. இதனால் அவர்கள் சோர்வடைந்து படிப்பில் ஆர்வம் குன்றி வெறுப்படையவும் கூடும். எமது சமூகத்துக்கு ஏற்ற வகையில் திட்டமிட்டு மாண வர்களின் மனங்கள் துன்பப்படாத வகையில் கல்வியலாளர்கள் சிந்திக்க வேண்டிய காலம் வந்துவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ இனியவள்

எங்களுடைய ஐந்து நண்பர்களில் நான் ஒரு தாதா (பேட்டை ரவுடி).
ன்றொரு நாள் பாடசாலையில் குழுச் யற்பாடு ஆரம்பமானது. எமது நப்பறையின் முன் பக்கத்தைச் சுத்தம் பது ஒரு துளசி மாடம் அமைப்பதே டம்.
ற்காக நிறைய துளசி மரங்கள், கன்றுகள் நட்டு அதற்குத் தண்ணீர் பச்சுவதற்காகப் பாத்தி ஒன்று அமைக்க ரம்பித்தோம். எல்லோரும் மண்வெட் ய வாங்கி, "கொண்டு வா நான் வட்டுறன் பாத்தி. உனக்கு வெட்டத் ரியாது" என்று சொல்லி மாறி மாறி த்தி வெட்டினோம். வேலை செய்யும் து களைப்புத் தெரியக்கூடாது என் ற்காக எமது வகுப்பாசிரியையைப் றி நக்கலடித்துக்கொண்டு சிரித்துச் த்து வேலை செய்தோம்.
படி சிரித்துக்கொண்டே பாத்தி கிண் போது நிலத்தடியிலுள்ள தண்ணீர்க் ழாயையும் சேர்த்து தோண்டிவிட் ம். அதற்குப் பிறகு நிலத்தின் கீழி து தண்ணீர் 'குப்' என முகத்தில் த்தது. எங்கள் ஐவருக்கும் என்ன செய்வதென்றே தெரியவில்லை. தண்ணீர் ஓர் எல்லையின்றி, கட்டுப்பாடின்றிப் பாயத் தொடங்கியது. அந்தநேரத்தில் எங்கட ஒல்லிக்குச்சி ஆசிரியை வேற வகுப்பில இருந்தவா. அந்த மனிசி கண்டால் சிக்க லாகிடும் எண்டு என்னுடைய நண்பிகளில் ஒருத்தி சொன்னாள். அப்பொழுது நான் சொன்னன். "வாங்கோடி பீயோனிட்ட போய்ச் சொல்லுவம்" எண்டு. பள்ளிக்கூடம் முழுக்கப் பீயோனைத் தேடினோம். அந்தப் பாவி எங்க போய்த் தொலைந்தாரோ தெரியேல்ல. இது என்ன இளவுடி எண்டு சொன்னாள் என் நண்பியில் ஒருத்தி. பிறகு சரி நாங்கள் ஏதாவது செய்வம் எண்டு தண்ணீர் குழாய்க்குக் கிட்டப் போனம்.
அப்போது அந்த ஒல்லிக்குச்சி ரீச்சர் எங் களைக் கண்டிட்டுது. என்ன செய்யிறியள்? எங்க போனீங்கள்? எண்டு சொல்லிக் கொண்டு வகுப்புக்கு வெளியால வந்தா. தண்ணீர்க் குழாய் உடைஞ்சதைக் கண்டிட்டா. பிறகென்ன மங்கலம்தான். அந்த மனிசி சும்மாவே நல்லா கதைக்கும். இப்பிடி எண் டால் சொல்லவா வேண்டும். உடனே கேட்டார், "யார் இதை உடைச்சது" எண்டு. எல்லோரும் என்னையே முறைச்சுப் பார்த்தாளவை. அப்பவே அவவுக்கு விளங்கிட்டுது. நான்தான் செய்தது எண்டு. உடனே சொன்னா, "வா இஞ்சால. நீ பெரிய குழப்படி. பொம்பிளப் பிள்ளையெல்லோ" அவ பேச நாங்கள் நிலத்தைப் பார்த்து சிரிச்சுக்கொண்டு நின்றம். பிறகு பீயோன் வந்திட்டார். அவரிட்ட சொல்லி அதைச் சரி செய்தா. அண்டைக்கு விளங்கியது ஆசிரியர்களை நக்கலடிக் கக்கூடாதெண்டு.
அவவைப் போல ஒரு ஆசிரியையை எங்க தேடினாலும் கிடைக்காது. பிறகு துளசி மாடம் அமைத்து அதற்கு விளக்கு வைத்து தினமும் பூசை செய் தோம்.
இப்படி நாம் பள்ளியில் விட்ட குறும்பு கள் கொஞ்சநஞ்சமல்ல. அதனால் பாதிக்கப்பட்டவர்களும் ஏராளம். பாடசாலையில் எங்கட வகுப்புத்தான் எப்பவும் கல கல சாலை. படிப்பிலை யும் சரி, குழப்படியிலும் சரி. இந்த 'ஹீரோக்கள்' பிரியும்போது ஏற்பட்ட வலிகள் சொல்லிலடங்கா. மீண்டும் வருமா அப்படி ஒரு நாள். எமது குறும் புகளை நினைத்துப் பார்க்கையில் உள்ளம் மகிழ்கிறது. அதேவேளை மனதில் எங்கோ ஒரு மூலையில் நெரு டலாகவும் இருக்கிறது. பள்ளிக்கூடத் தில படிச்சமோ இல்லையோ அதிபரிட்ட யும் ஆசிரியரிட்டயும் பேச்சு வாங்கித் தண்டனை பெற்றதுதான் அதிகம்.
பள்ளியில் இருந்து வெளிக்கிடும்போது கூட இதுகள் எப்பவும் திருந்தாத ஜென்மங்கள் என்ற பெயரோடதான் வெளிக்கிட்டம்.

> எமது குறும்புகளை நினைத்துப் பார்க்கையில் உள்ளம் மகிழ்கிறது. அதேவேளை மனதில் எங்கோ ஒரு மூலையில் நெருடலாகவும் இருக்கிறது. பள்ளிக்கூடத்தில படிச்சமோ இல்லையோ அதிபரிட்டயும் ஆசிரியரிட்டயும் பேச்சு வாங்கித் தண்டனை பெற்றதுதான் அதிகம்.



# கூட்டாளி

# இந்த வாரம்
## உங்களுக்கு எப்படி...?

03.08.2014 முதல்
09.07.2014 வரை



### மேடம்

சக்கலைஞர்களுக்கு வேற்பு கூடும். சகோதரி ால் நலம் உண்டாகும். ல தகவல் வந்து சேரும். மொழி, மத, இனக்காரர் உங்களுக்கு உதவுவார் . பயணத்தால் அனு ம் உண்டாகும். முக்கி தர்களது தொடர்பு ன்படும். மாணவர்க க்கு வெற்றி வாய்ப்புக்கள் கமாகும். கெட்டவர்க ா தொடர்பை விலக்கி, லவர்களின் நட்புறவை ப்பெறுவது நல்லது.



### இடபம்

எதிரிகள் அடங்கிப் போவார் கள். பேச்சில் திறமை வெளிப் படும். அரசியல் ஈடுபாடு ஆக்கம் தரும். மேலதிகாரிகள் உங்களைப் புகழுவார்கள். கலைத்துறையினருக்கு சுபீட்சம் கூடும். மாணவர் களது திறமை பளிச்சிடும். சமுதாய நல முன்னேற்றப் பணிகளில் ஈடுபாடு உள்ள வர்களுக்கு மதிப்பு உயரும். சொந்தத் தொழிலில் அதிக கவனம் தேவை.



### மிதுனம்

மதிப்பும் அந்தஸ்தும் உய ரும். மன மகிழ்ச்சி பெரு கும். கலைத்துறையின ருக்கு வரவேற்பு அதிகரிக் கும். பண நடமாட்டம் அதிக மாகும். கடன் தொல்லை குறையும். எதிரிகள் அடங்கு வார்கள். பிரச்சினைகள் எளிதில் தீரும். பேச்சாற்றல் வெளிப்படும். மாணவர் களது நிலை உயரும். நண் பர்களும் உறவினர்களும் ஆதரவாக இருப்பார்கள். வாழ்க்கைத்துணைவரால் நலம் உண்டாகும்.



### கடகம்

இடமாற்றமும் நிலைமாற்ற மும் உண்டாகும். வெளியூர், வெளிநாட்டுத் தொடர்புகள் பயன்படும். புதியவர்கள் உங்களுக்கு அறிமுகமா வார்கள். அவர்களால் அனு கூலம் ஏற்படும். உடல் நலனில் கவனம் தேவை. உஷ்ணாதிக்கத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது. நண்பர்கள், உறவினர்களால் பிரச்சினைகள் சூழும். பக்குவமாகச் சமாளிப்பது நல்லது. பெற்றோர் நலனில் அக்கறை செலுத்த வேண்டிவரும்.



### சிங்கம்

முக்கியமான எண்ணங்கள் ஈடேறும். நல்லவர்கள் நலம் பல புரிவார்கள். மனதில் துணிவும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். எதிரிகள் அடங் கிப் போவார்கள். சமுதாய நலப்பணிகளில் ஈடுபாடு உண்டாகும். உடன்பிறந்தவர் கள் உதவுவார்கள். மாணவர் களது திறமை வெளிப்படும். உடல்நலனில் கவனம் செலுத்தி வருவது நல்லது. அரசுப் பணியாளர்கள் விழிப்புடன் செயற்படுவது அவசியமாகும்.



### கன்னி

த்த காரியத்தில் வெற்றி றுவீர்கள். மதிப்பு உய . அரசுப்பணிகள் நிறை றும். பெரியவர்கள், தன தர்கள் ஆகியோரது ஆத கிடைக்கும். ஒன்றுக்கு ற்பட்ட இனங்களால் ஆதா பெறுவீர்கள். அலைச்சல் கமாகும். வீண்வம்பு, க்குகளைத் தவிர்ப்பது லது. முக்கியமான எண் ங்கள் ஈடேற வழிபிறக் . புத்திசாலித்தனம் ிச்சிடும். பலரும் உங் ளைப் போற்றுவார்கள்.



### துலாம்

தொலைதூரத் தொடர்பு பயன்படும். தெய்வப் பணிகளில் ஈடுபாடு அதிகரிக்கும். இரக்க சுபாவம் உண்டாகும். பிறருக்குத் தாராளமாக உதவுவீர்கள். மாணவர்களது திறமை பளிச்சிடும். அரசியல் ஈடுபாடு ஆக்கம் தரும். வேலையில்லாதவர்களுக்குத் தகுந்ததொரு வாய்ப்புக் கூடிவரும். எக்காரியத்திலும் பதற்றம் கூடாது. நிதானமாகச் யோசித்து ஈடுபடுவ்து நல்லது. வீண் செலவுகளைத் தவிர்க்கவும்.



### விருச்சிகம்

எதிர்பாராத பொருள்வரவு உண்டாகும். வியாபார முன்னேற்றத் திட்டங்கள் ஈடேறும். தெய்வ தரிசன மும் சாது தரிசனமும் கிடைக்கும். பெரியவர்க ளும் தனவந்தர்களும் உங்களுக்கு உதவுவார் கள். தொலைதூரத் தொடர்பு பயன்படும். வெளி நாட்டுப் பயணத்திட்டம் நிறைவேறும். மேற்படிப்புக் காகச் சிலர் வெளிநாடு செல்ல வாய்ப்பு உண்டாகும்.



### தனு

நல்லோர் தொடர்பு நலம் தரும். நற்பணிகளில் ஈடுபாடு உண்டாகும். புதியவர்கள் உங்களுக்கு அறிமுகமாகி, உதவுவார்கள். பயணத்தால் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் விட்டுக் கொடுத் துப் போவது நல்லது. வியா பாரிகளுக்கு முன்னேற் றமான சூழ்நிலை உருவா கும். மாணவர்களது நிலை உயரும். எழுத்தாளர்களுக் கும் பத்திரிகையாளர்களுக் கும் வரவேற்பு கூடும்.



### மகரம்

துணிச்சலான காரியங்களில் ஈடுபாடு உண்டாகும். எதிரி கள் அடங்குவார்கள். மாண வர்களது நிலை உயரும். உத்தியோகத்தர்கள், மருத்து வர்கள், விஞ்ஞானிகள், ஆன்மிகவாதிகள் ஆகியோர் செழிப்பான சூழ்நிலையைக் காண்பார்கள். வெளிநாட்டுத் தொடர்பு பயன்படும். கலைஞர்களுக்கும் மாதர்களுக்கும் பிரச்சினை கள் சூழும். பக்குவமாகச் சமாளிப்பது நல்லது.



### கும்பம்

மனதுக்கினிய சம்பவங்கள் நிகழும். புதிய பொருள்களின் சேர்க்கை நிகழும். எதிரிகள் அடங்கிப் போவார்கள். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் கூடிவரும். புதிய [illegible] வந்து சேரும். பயணத்தின்போது எச்சரிக்கை தேவை. முன்பின் அறிமுகம் இல்லாதவர்களிடம் எச்சரிக்கை தேவை.



### மீனம்

நண்பர்களும் உறவினர்களும் உங்க ளுக்கு உதவுவார்கள். கேளிக்கை, உல்லாசங்களில் ஈடுபாடு உண்டா கும். கலைஞர்களுக்கு வெற்றி வாய்ப்புகள் அதிகரிக்கும். தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றிக் கொள்ளச் சந்தர்ப்பம் கூடிவரும். காரியத்தில் முழுக்கவனம் தேவை. நிதானம் தேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# றோட்டில போன எங்கட பெடியன்

சார்வாகன்

கடலில அலைய பார்த்திருக்கிறம். அந்த அலை அடிக்கிற நேரம் பாருங்கோ, ஒரு இடத்தில மேடாகவும், இன்னுமொரு இடத்தில பள்ளமாகவும் போகும். இதுதான் அலைக்குரிய பெருமை எண்டு சொல்லலாம். ஆனா எங்கட றோட்டுகள் இப்பிடி அலையடிக்கிறமாதிரி, பள்ளமாகவும், திட்டியாகவும் இருந்தா அத என்னெண்டு சொல்லலாம்?
இப்பிடித்தான் ஒருநாள் நானும் என்ர இன்னுமொரு நண்பரும் ஒரு இடத்துக்குப் போனம். அந்த இடம் யாழ்ப்பாணத்தில இருந்து கொஞ்சத்தூரம்தான். ஆனால் அந்த இடத்தக்குப் போகோணும் எண்டா மனிசர் செத்துப்பிழைக்கோணும்.
எப்பிடி எண்டு கேட்டியளே! செம்பாட்டு மண் அடிக்கிற காத்தில எங்க பறக்கிறது எண்டு தெரியாம பறக்குது. அப்பாவ கண்ட பிள்ளை என்னெண்டு அப்பான்ர தோளில ஏறுதோ, அதுபோல இந்த செம்பாட்டு மண்ணும் மனிசர கண்ட உடனேயே பறந்து வந்து எங்களோட ஒட்டிக்கொள்ளுது. ஒட்டினாத்தான் என்ன பரவாயில்ல, அந்த றோட்டு மாட்டுவண்டி போறத்துக்குக் கூட பயன்படாது. அவ்வளவு கேவலமா இருக்கும். செவ்வாய் கிரகத்துக்குக்கூட மனிசன் சுகமாய் போய் வந்திடுவான். ஆனால் இந்த ஊருக்குப் போய் வாறதெண்டா? நீங்கள் ஒருக்காப் போய் பாருங்கோவன். அப்ப தெரியும்.
சங்குப்பிட்டிப் பாலம் கழிஞ்சு, அரை மைல் போனதுக்குப் பிறகு ஒரு சந்தி இருக்கு. அந்தச் சந்தியில இருந்து வலக்கைப் பக்கம் போனா அங்கதான் இருக்கு இந்த ஊர். ஊரின்ர பேர் கௌதாரிமுனை. ஆனால் நீங்க நினைக்கிற மாதிரி அங்க போறது சாதாரண விடயமில்ல. ஏற்கனவே சொன்னான் செவ்வாய்கிரகம்கூட போகலாம், ஆனா இஞ்ச போக ஏலாது எண்டு. அந்த சந்தியில இருந்து கொஞ்சத் தூரம் போனா பிறகு ஆமிக்காரரின்ர பொயின்ட் ஒன்டு கிடக்குது. அந்தப் பொயிண்டத் தாண்டி போறதா இருந்தா அவங்கள் கேக்கிற கேள்வியளுக்கெல்லாம் சரியான பதில் சொல்லோணும். ஏதாவது மளுப்பினமா இருந்தா அவ்வளவுதான். அவங்கள் சுத்தி சுழண்டு பாப்பாங்கள். இதுகள எல்லாம் சமாளிச்சு சரியான பதில சொல்லிப் போட்டுப் போய், அங்கால ஏதாவது விளையாட்ட காட்டினமோ புலனாய்வுக்காரரிட்ட அதப் போட்டுக் குடுத்துத் திரும்பி வரேலாத மாதிரி செய்து போடுவாங்கள்.
இதுகள எல்லாம் தாண்டி நாங்க அந்த ஊருக்குள்ள போனம். என்ன ஒரு அழகான ஊர். மணல் மேடுகள் ஒவ்வொண்டும் உயர்ந்து, அந்த ஊருக்குள்ள கடல் தண்ணி வராத மாதிரி அந்த ஊர பாதுகாத்து வானத்தைத் தொட்டுக் கொண்டு நிக்குது. ஆனா சில இடங்களில இப்பிடியான மணல்மேடுகள் கிடந்த அடையாளங்கள் கிடக்கு. ஆனால் மணல காணேல்ல. அதையும் தாண்டி அங்கால போனா, கடல் தண்ணி வத்திப் போய் இருக்கிற இடத்தில ரண்டு மூண்டு பொம்பிளயள் குந்திக்கொண்டு இருக்கினம். என்ன செய்யினம் எண்டா கடல் தண்ணி வத்தி உப்பு விளையிற காலமாம். இதால அண்டைக்கு ஒரு நாள் போகேக்க பாத்தவையாம். அதுதான் இண்டைக்கு வந்து அள்ளுறம் எண்டிச்சினம் அந்த பொம்பிளையள். சரி எங்கட வாழ்வாதாரங்கள போக்கிக்கொள்ளுறதுக்கு இயற்கையும் கை குடுக்கத்தான் செய்யுது எண்டு நினைச்சு கொண்டு வெளிக்கிட்டம்.
அந்த றோட்டின்ர கடைசி எல்லை வரைக்கும் போனம். அங்கத்தே சனம் பாவம் எண்டுதான் நினைக்கிறன். நல்ல தண்ணி கிணறு இல்ல. றோட்டு உதவாது. காலம ஒரு பஸ், பின்னேரம் ஒரு பஸ். அதுவும் சில வேளையளில வராது. அவசரம் எண்டா ஆசுப்பத்திரி இல்ல, மேல் வகுப்புப் படிக்கிறதெண்டா பள்ளிக்குடம் இல்ல. இருக்கிற சின்ன பள்ளிக்குடத்திலையும் சில பாடங்களுக்கு ரீச்சர் இல்ல. கூப்பிட்டா அடுத்த வீட்டுக்குக் கேக்காத அளவுக்கு வீடுகளோ எட்ட எட்ட. கரண்ட் இல்ல. இப்பிடி அடிப்படை வசதியள் ஒண்டு இல்லாம அந்த ஊரிலயும்சனம்இன்னும்இருந்துகொண்டு தான் இருக்குதுகள். ஆனா அவங்கள் ஏழையா இருந்தாலும் நல்ல பண்புகளும்நல்லாபழகத்தெரிஞ்ச சனங்களும். அதுகளாலதானோ என்னவோ எங்கட அரசியல் தலைமைகள் அந்த ஊர் பக்கம் தலைகறுப்பக் காட்ட மறுக்கினம் போல. அங்க இருக்கிற பிரச்சினைய ஒருவருக்கும் தெரியாது. தெரியப் போறது இல்ல. யாராவது ஒரு அரசியல் தலை வருவாரா? எங்களுக்கும் நல்ல கால பிறக்குமா எண்ட எதிர்பார்ப்போட இரு கதுகள் அந்த ஊர் சனங்கள். ஒரு பக்கத்தா ஊர பாது காக்கிற மணல் எல்லாம் அ ளுப்பட்டுக்கொண்டு போகுது. அது ஆ அள்ளுறது? ஆர் அனுமதி குடுத்தது? எ டெல்லாம் தெரியாது. இன்னொரு பக்க வாழ்றதுக்கு எந்த வித அடிப்படை வச யளும் இல்லாம , இயற்கையை மட்டு நம்பினவர்களா எங்கட சனம் அங் இருக்குது. இது சரி ஏராளமான சனங்க ஒரு இடத்தில கும்பலா இருந்தா அது அதுகள் ஏழையள இருந்தாக் கூட எங்க அரசியல் வாதிகள் அவயத் தேடிப் போவின ஏனெண்டா கும்பலான ஓட்டு முழுக்க அள் வாங்கலாம் எண்டு. ஆனா இப்பிடி திக்கு திக்கா இருக்கிற சனத்திட்ட போய் என்ன எடுக்கலாம்? காசு கரையிறது தான் மிச்ச எண்டுதான் நினைப்பினம். இப்பிடி யா தலைமைகளுக்குத் தெரியாது மக்க ளி நலங்கள், அவர்கள் நாயாய் படும்பாடுக எல்லாம். அண்மையில் காரைநகரில் நட சம்பவத்தைப்போல, அங்கேயும் ஒருசம்ப நடந்தால்தான் அங்கயும் வரு வினம்போ கொடிபிடிச்சி நெற்றுகளில படம்போட...







# சுவாரசியமானது கடல்

சமஸ்

கடலுக்கும் மனித இனத்துக்கும் உள்ள இணைப்புப் பாலம் என்று மீன்களைச் சொன்னால், அந்த வர்ணனை மிகையாக இருக்காது என்று நினைக்கிறேன். கடலோடிகளின் உலகில் எவ்வளவு சுவாரசியங்கள் உண்டோ, அதற்குக் கொஞ்சமும் குறைவில்லாத சுவாரசியம் கொண்டது மீன்கள் உலகம்.

**உங்களுக்கு எத்தனை தெரியும்?**
உலகில் மொத்தம் 35,000 மீன் இனங்கள் இருப்பதாக அறிவியல் உலகம் சொல்கிறது. இவற்றில் 2,500 இனங்கள் தமிழகக் கடற்கரைப் பகுதியில் இருப்பதாகச் சொல்கிறார்கள். ஒருகாலத்தில், தமிழகக் கடற்கரையோரக் கிராமப் பெரியவர்கள் யாரைக் கூப்பிட்டுக் கேட்டாலும், கிட்டத்தட்ட ஐந்நூறுக்கும் மேற்பட்ட மீன்களின் பெயர்களைப் பட்டியலிடுவார்களாம்.
இன்றைக்கெல்லாம் நூறு மீன்களின் பெயர்களைச் சொல்லும் மீனவர்களையே தேட வேண்டியிருக்கிறது. பாரம்பரிய அறிவை இழத்தல் என்பது எமது சமூகத்தின் எல்லாத் தரப்பிலும் நடந்துகொண்டிருப்பதன் சாட்சியங்களில் ஒன்று இது. நூற்றுக்கும் மேற்பட்ட மீன் இனங்களை நாம் ஒவ்வொருவரும் பார்த்திருந்தாலும், அவற்றில் விரல் விட்டு எண்ணக்கூடிய - எமதுவாழ்க்கையோடு நெருக்கமான - சில மீன்களின் உலகை மட்டும் இங்கே கொஞ்சம் பார்க்கலாம்.

**செல்லக்குட்டி நெத்திலி**
அளவில் சின்ன மீனான நெத்தலி உலகின் பெருங் கடல்கள் அத்தனையிலும் காணக்கிடைக்கும் இனம். மீன் உணவு அறிமுகமே இல்லாத சைவப் பிரியர்களைக்கூடச் சுண்டியிழுக்கும் மணமும் ருசியும் கொண்டவை நெத்திலி மீன்கள்.
நெத்தலிக் கருவாட்டு வருவல் என்றால் இன்னும் விசேடம்! மீன் ருசியர்களுக்கு மட்டுமல்ல; மீனவர்களுக்கும்கூட நெத்தலிகள் செல்லங்கள். நெத்தலி மீன்பாட்டில் மீனவர்கள் எதிர்கொள்ளும் சங்கடம் என்னவென்றால், அது கூடவே மழையையும் கூட்டிக்கொண்டு வரும் என்பது. கூட்டம்கூட்டமாகப் பிடிபடும். பல்லாயிரக் கணக்கான நெத்தலிகளை உடனே விற்கவும் முடியாது; கருவாடாக்குவதும் சிரமம் என்கிறார்கள்.

**பறக்கும் கோலா**
கோலா என்றால், கரையில் உள்ளவர்களுக்கு மீன் கோலா உருண்டை ஞாபகத்துக்கு வரலாம். கொஞ்சம் வயதான கடலோடிகளைச் சந்தித்தால், அது ஒரு வீர விளையாட்டு அல்லவா? என்று சிரிப்பார்கள். இப்போதுபோல, அந்த நாள்களில் வலை கொண்டு கோலாவைப் பிடிக்க முடியாதாம். ஆழ்கடல் தளங்களுக்குச் சென்று தான் பிடிப்பார்களாம். விரதம் இருந்து, வீட்டிலிருந்து வேப்பங்குழை எடுத்துச் சென்று, கயிற்றில் கட்டி கடலில் மிதக்க விட்டு, ஓ வேலா, வா வேலா, வடிவேலா... என்று கூப்பிட்டுக் காத்திருந்தால், ஒரு கோலா மீன் வருமாம்.
அதைப் பிடித்து, மஞ்சள் தடவி வணங்கி, ஓ வேலா, வா வேலா, கூப்பிட்டு வா வேலா... என்று நீரில் விட்டால், அது கூட்டத்தையே கூட்டிவருமாம். கோலா மீன்கள் புயல் வேகத்தில் பறக்கக் கூடியவை, அதுவும் கூட்டம்கூட்டமாக. பறக்க ஆரம்பித்தால் [illegible] இருக்கும்; [illegible] என்கிறார்கள்.

**கூத்தாடி சூரையன்**
நமக்குக் கிடைக்கும் மீன்களிலேயே அதிக புரதச் ச மிகுந்தது சூரை. மாலைதீவில் அதிக மவுசுள்ள மாசிக்கரு என்பது சூரைக் கருவாடுதான். சரியான கூத்தாடி சூரைதான் மீன் இனத்திலேயே அதிக வேகத்தில் நீந் மீன். மஞ்சள் சூரை மணிக்கு 75 கிலோ மீ வேகத்தில் நீந்தும் என்கிறார்கள். திமிங்கிலங்களுக் சுறாக்களுக்கும் பிடித்தமான உணவு சூரை.
ஆனால், ஓங்கல்கள் (டொல்பின்கள்) சூரைக் கூட்டத் உற்சாகக் கூத்தடிக்கும். எப்போதுமே சுறாக்கள், திமிங்கிலங்கள் மத்தியில் ஓங்கல்களுக்குக் கொ பயம் உண்டாம். இதனாலேயே புத்திசாலி சூரை என்ன செய்யும் என்றால், ஓங்கல்களைத் துணை அழைத்துக்கொள்ளுமாம். ஓங்கல்கள் எங்கே வ இடுகின்றனவோ அங்கே வலையைப் போட்ட சூரையன்கள் கூட்டம்கூட்டமாகப் பிடிபடுவான்கள் எ றார்கள்.

**சாளையோ சாளை**
அளவில் சின்னதும் ருசியில் அலாதியானதுமான சா மீன்கள் உடலில் நிறைய எண்ணெய்ப் பசை உள்ள இவை, நினைவிழத்தல் உள்ளிட்ட முதுவயது நோய்க தடுக்கும் என்கிற மீனவர்களின் நம்பிக்கையை உ படுத்துகின்றன சமீபத்திய அறிவியல் ஆய்வுகள். இரத்த குளுக்கோஸின் அளவைக் கட்டுப்படுத்தும் ஆற் சாளை மீன்களுக்கு உண்டு என்கிறார்கள் அறிவியலாள

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கூடு....

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி):

தந்தை சிவத்தையும், தங்கைமார் இருவரையும் தங்கியிருந்த பதுங்குகுழிக் குள்ளேயே போட்டு மூடிவிட்டு அருணும் கஸ்தூரியும், செல்லம்மாவும் நடக்கத் தொடங்கினார்கள்.

★ ★ ★

முகாமிலே தங்கியிருந்த செல்லம்மாவும் பிள்ளைகளும், கடந்த வாரம்தான் சொந்தவூருக்கு வந்திருந்தார்கள். வீட்டை விட்டுப் பிரிந்து ஏறத்தாழ இரண்டு ஆண்டுகள் கடந்தாகிவிட்டன. குச்சு வீதிகள் பற்றைகளால் மண்டிப் போயிருந்தன.

கிரவல் வீதிகள் சப்பாத்துக் கால்களைத் தாங்கித்தாங்கியே நொய்ந்து போயிருந் தன. முற்றத்தில் ஒரு புல்கூட முளைக்கவிடாமல் செருக்கிதுப் புரவு செய்துவிடுவார் சிவம். அந்தக் கடனுக்கு முற்றம் முழுவதும் நாயுண்ணிப் பற்றைகளும், நெருஞ்சி முட்செடிகளும் மலிந்து போய்க்கிடந்தன. மண்ணாலான அந்தக் குடிசை... இருந்த இடமே தெரியாமல் செடிகளால் மண்டிப் போயிருந்தது. தங்கைச்சியின் சாமத்திய வீட்டுக்குப் பனையோலை வெட்டி அடைத்த வேலி... ஓட்டை ஒடிசலாய்... ஆனால் மாமரம் மட்டும் ஒய்யாரமாய் நிமிர்ந்து நின்றது. போர் அழிவின் சாட்சியாய், பல்வேறு வடுக்களைத் தாங்கி நின்றாலும், தன்மானம் கொண்டு சிறிதே னும் பணியாமல் நிமிர்ந்து நின்றது. அப்பா போட்ட சைக்கிள் கொட்டில் மட்டும் ஓட்டை ஒடிசலானாலும் ஓரளவு நல்ல நிலையிலிருந்தது.

கொண்டு வந்த ஓரிரு பைகளை அந்தக் கொட்டிலுக்குள் வைத்துவிட்டு, மாமரத் தின் கீழ் வந்தமர்ந்து கொண்டான்.

பழைய நினைவுகள் அவனுக்குப் பம்பரமாய் சுழன்றன.

பங்குனி மாதத்துத் தகிக்கும் வெயிலுக்கு மாமரம் நல்ல சுவாத்தியமாய் இருக்கும். கஸ்தூரி அப்ப சின்னப்பிள்ளை. ஊஞ்சல் கட்டித்தரச் சொல்லி ஒரே கரைச்சல். ஒரு நாள், அம்மம்மாவோட பழைய சாறி ஒன்று எடுத்து ஊஞ்சல் கட்டிக் கொடுத்தான். அவள் ஆசையாக ஆடுவாள். இப்பிடித்தான் ஒருநாள்...

சாமித்தட்டில் பத்து ரூபா காசு கிடந்தது. தங்கைச்சி பள்ளிக்கூடத்துக்கு எடுத்து வந்திட்டாள். பள்ளிக்கூடம் முடிய, நானும் அவளும் பக்கத்துக் கடையில் சூப்புத்தடி வாங்கி சாப்பிடேக்க, வயலால மாடு கொண்டு அப்பா வந்திருக்கிறார். அதை நாங்கள் கவனிக் கேல்லை. கடை வாசலில வைத்து, மாட்டுக்கு அடிக்கிற தடியால அடிச்சாரே ஒரு அடி....?

காலின் கீழே கிடந்த தழும்பினை அவனையறியாமலே அவன் கைகள் வருடிக்கொண்டன. சின்னமாமாவின்ர பெடியனோட சேர்ந்து,பனங்கூடலடி குளத்துக்குப் போனம். போய் வரேக்க அப்பாவோட வேலை செய்யிற சிங்கன் மாமா கண்டு, அப்பாக்குச் சொல்லிப் போட்டார். இரவு அப்பா வரேக்க ஒன்பது மணியாச்சு. நான் நித்திரை. அடுத்த நாள் விடியக்காத்தால இந்த மாமரத்திலதான் கட்டிப்போட்டவர். பின்னேரம்தான் அம்மா அவிட்டு விட்டவா. அப்பா பொல்லாதவர் தான். என்றாலும் எங்களில நல்ல பாசம். வீட்டில நிறையத் தென்னம்பிள்ளைதானே. விழுகிற தேங்காயில கொப்பறா போட்டு எண்ணெய் ஊத்துவம். அப்பா கூப்பன் மா வேண்டி வருவார். பனங்காய்க் காலத்தில் அம்மா பணியாரம் சுட்டுத்தருவா.

சுற்றும் முற்றும் திரும்பிப்பார்த்தான். கண்ணுக்கெட்டிய தூரம் வரை தென்னைகள் இல்லை. வட்டோடு பட்டுப்போய்... முடமாக நின்றன. இனி.....? எண்ணெய்...?பணியாரம்.....??

நினைவுகளிலிருந்து மீள முடியாமலிருந்த அருணனை, தாயின் அழைப்பு மீளச் செய்தது.

★ ★ ★

"கீச்... கீச்கீச்கீச்... கீச்..கீச்..."

தனது காதினைக் கூர்மையாக்கிக் கொண்டான் அருண்.

குருவிகள் அலறும் சத்தம் அவன் காதுகளில் தெளிவாகக் கேட்டது.

பழைய நினைவுகளிலிருந்து மீண்டவனாய், குருவிகளை விட்டிருந்த கூட்டினை நோக்கி விரைந்தான்.

கறுத்தப் பூனையொன்று. பார்வதி மாமி வீட்டான் தான்..

அதே கறுத்தப் பூனைதான். கூட்டின் கீழே....

அருண் அமைதியாகிவிட்டான்.

இரத்தக் கறையேறிப் போயிருந்தது குருவிக்கூடு. பூனையால் குதறப்பட்டுக் கிடந்த தாய்க்குருவி குற்றுயிராய் கிடந்து துடித்தது. குஞ்சு பூனையின் வாயில் பௌவியமாகக் கிடந்தது. பூனையின் வாயால் குருதி சொட்டிக்கொண்டிருந்தது. என்னைக் கண்டும் கூட, பூனை அசையவில்லை. அப்படியே நின்றது.

★ ★ ★

நேரம் அதிகாலை நான்கு மணியிருக்கும். "சரர்...."

வாகனமொன்று படலையில் வந்து நின்றது. வாகனத்திலிருந்து இறங்கிய ஐந்தாறு தலைகள்,முற்றத்தை அண்மித்துக்கொண்டிருப்பது, ஓட்டை ஒடிசல்கள் நிறைந்த தறப்பாள் வெளிக்குள்ளால்....

சேவல்கள் தம் மார்பு செட்டைகளில் அடித்துக் கூவிக்கொண்டிந்தன. ஆனாலும் கிழக்குவானில் கூட விடியலில் அறிகுறி சிறிதளவேனும் தென்படவில்லை. இருள் மண்டிப்போயிருந்தது. ஆனால் அதற் குள்ளாலும் முற்றத்தில் வீழ்ந்து கிடந்த மாமரக்கொப்புக்களைத் தாண்டி வந்த பாதச்சுவடுகள் தெளிவாகவே தெரிந்தன. என்னைத் தாண்டி நகர்ந்துகொண்டிருந்தன அந்தத் தலைகள். "அண்ணா...."

"........................???" தங்கையின் அவலக் குரல் அடங்கியது.


இருள் மெல்லச் சூழ்ந்துகொண்டது.




யாரும் இல்லாத இடம்
ஒன்று வேண்டும்
அங்கு நான் மட்டும்
தனியாக வசித்திட வேண்டும்
சின்னக் குயில் இசைகளை
ரசித்திட வேண்டும்
அழகு மயில் நடனம்
அதை கண்டிட வேண்டும்
முயல் அதனைப் பிடித்து
விளையாடிட வேண்டும்
துள்ளி ஓடும் மானை
கையில் பிடித்திட வேண்டும்
அசைந்து வரும் யானை
அழகைக் கண்டிட வேண்டும்
பாசாங்கில்லாதப் பச்சைக்கிளி
போல் நானும் பறந்திட வேண்டும்
இல்லையேல் ஒரு பட்டாம்பூச்சி
போலாவது இருந்திட வேண்டும்
இயற்கை அழகை ரசித்திட வேண்டும்
இன்னிசை நாத ஒலி
கேட்டிட வேண்டும்
அழகாய் இவ்விடம் தேடி
அங்கு நான் வசித்திட வேண்டும்

சபா, மானிப்பாய்.

## சொற்சிலம்பம் - போட்டி இல: 328



அனுப்புபவர் பெயர்:.....................................................

விலாசம்: ..............................................................

..............................................................

கையொப்பம்:.........................................................

### இடமிருந்து வலம்

1. ஐம்பெரும் காப்பியங்களுள் ஒன்று
7. அரசன்
8. விழி
9. காடு
12. புனித இடம்
13. உடை
14. பிரச்சாரப் பேச்சு
17. நிறைதல்
19. ஆழ்ந்திருக்கை
20. தண்ணீர் அள்ளப் பயன்படுத்தப்படும் பாத்திரம்
21. பழங்கால ஆயுதம்
22. பத்துக்கு அடுத்தது

### மேலிருந்து கீழ்

1. கர்ப்பம் தரித்து ஆறாம் மாதம் செய்யும் சடங்கு
2. மென் அல்ல
3. மாலை கட்டப் பயன்படுத்தப்படும் ஒரு பூ வகை
4. சிறிய
5. விடாய்
6. மனிதன் ஆசை வைக்கும் பொருள்களுள் ஒன்று
10. வயிற்றில் குழந்தையைச் சுமப்பவள்
11. பதில்
13. விட்டத்தின் அரைவாசி
15. மேல்நாட்டு குடிவகை
16. ஆடு, மாடு மேய்வது இதை
17. உங்களையே விடாது தொடர்வது
18. ஆண்பன்றி/ ஆண் யானை
19. வெப்பத்தால் நீர் மாறுவது இப்படி
20. விண்

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத் துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலா னோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவ தால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 326 இற்கான சரியான விடைகள் வருமாறு:

### இடமிருந்து வலம்

(1) சிவதனுசு (2) ஆசி (7) விடம் (8) பசுவதை (10) பழுத்தல் (11) கியாதி (13) தின் (15) நரை (16) படு (17) முகமன் (19) புலம் (20) கன்னை (21) போல (22)விக்கிரகம்

### மேலிருந்து கீழ்

(1) சிவிங்கி (2) வட (3) தம்பதி (4) சுமத்திரை (5) ஆவல் (6) சிதை (9) சுதன் (12) யாமிகன் (14) குடும்பம் (15) நன் (16) பல (17)முகடு (18) மனைவி (19) புலர (21) போகி

சொற்சிலப்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி
இல.328
நியூ உதயன் பப்ளிகேஷன்
(பிறைவேற்)லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார்
வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு
எதிர்வரும் புதன் கிழமைக்கு
அடுத்து வரும்
புதன்கிழமைக்கு முன்னர்,
(13.08.2014 ஆம் திகதிக்கு
முன்னர்) கிடைக்கத்
தக்கதாகத் தபாலட்டையில்
ஒட்டி அனுப்பி
வைக்கப்படவேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல.328 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 17.08.2014 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 326 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**

செல்வி ஈ.ரிசிகேசினி,
இல.37, கல்லூரி ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

**2 ஆம் பரிசு**

வி.செல்வநாயகம்,
சிவன் கோயில் வீதி, புத்தூர்.

**3 ஆம் பரிசு**

கே.இராஜகோபால்,
அடைக்கலம் தோட்டம், கந்தசுவாமி
கோயிலடி, வட்டுக்கோட்டை.

**4 ஆம் பரிசு**

இ.வீரசிங்கம்,
இல.9/2, இராசதுரை வீதி,
வைரவர் புளியங்குளம், வவுனியா.

**5 ஆம் பரிசு**

மு.அன்ரனி,
ஆஸ்பத்திரி வீதி,
சின்னக்கடை, மன்னார்.

**பாராட்டுப் பெறுவோர்**

இ.ஆறுமுகம்,
கலைவாணி பவனம், கரணவாய்
மத்தி, கரவெட்டி.

செல்வி தி.ஜயா,
நாவற்குழி கிழக்கு, கைதடி.

க.தையல்நாயகி,
இந்திரகிரி, வதிரி,
கரவெட்டி.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி உதயன் அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம். யாழ். மாவட்டத்தைத் தவிர்ந்த [illegible] உரி யோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் [illegible] அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால் ஊடாக அனுப்பிவைக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாம். ராமேஸ்குமார்

# மனம் திரும்புங்கள்



கடவுளின் அற்புதப் படைப்பில் உருவான அதி சக்தி வாய்ந்த இளைஞர்களே, கொஞ்சம் பொறுப்புடன் நிதானித்து ஆழ்ந்து சிந்தியுங்கள். உங்கள் எதிர்காலம் எந்த திசையில் போகிறதென்று. நீங்கள் பிறந்து வளர்ந்த மண் சிவபூமி என்பதை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். நீங்கள் பிறந்த மண் சிவபூமி என்றால் நீங்களும் சிவனுக்குரியவர்களே. உங்கள் தசைகளில், நரம்புகளில், குருதியில் மங்களகரமான சிவனின் சிவ ஆற்றல்கள் எங்கும் பரவியுள்ளது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். நீங்கள் சிவனின் புத்திரர்களென்றால் சிவலோகம் சந்தோஷப்படும். நீங்கள் அதிநவீன மாயையின் அடியாள்களென்றால் நரகலோகம் வேதனைப்படும். இதில் நீங்கள் கடவுளின் சந்தோஷத்தையா அல்லது வேதனையையா எனத் தேர்ந்தெடுக்கப்போகிறீர்கள்.

ஏராளமான இளைஞர் கூட்டத்தால் எம் சிவபூமி இன்று மதுபூமியாக மாற்றமடைந்துள்ளது. திருநீறும் சந்தனமும் ஜவ்வாதும் மணக்கும் எம் தேசமெங்கும் மது வாடையே எங்கும் வீசுகின்றது. சிவ சாதனைக்குப் பதிலாக மதுவே இளைஞர்களின் உணர்வில் தீயாகப் பரவியுள்ளது. அந்த மது உணர்வே அவர்களை ஆழ்கின்றது. பின்பு அழிக்கின்றது. இந்த இளைஞர்களின் இழிச் செயலுக்கு முழுப் பொறுப்பாளிகள் யார்? தம் பிள்ளைகளுக்கு என்றும் பாதுகாவலர்களாக இருக்கும் பெற்றோர்களே முழுப் பொறுப்பானவர்கள். தம் மூதாதையர் கட்டிக் காத்து வந்த பாரம்பரியங்களையும் ஆன்மிக சத்தியங்களையும் எம் இன கலாசாரங்களையும் அசுர கால மாற்றத்தால் தாங்களும் பின்பற்றாது. தம் பிள்ளைகளையும் நவீன நவநாகரிகத்தில் மோகம் கொள்ளச் செய்து அவர்களையும் பின்பற்றவிடாது தடுத்ததாலேயே இந்தக் கெடு. ஒழுக்கம் என்பதும் அதற்கான விழிப்பு நிலை என்பதும் ஒரு பிள்ளைக்கு அதன் குடும்பத்தில் இருந்தே ஆரம்பிக்கின்றது என்பதைப் பெற்றோர்கள் மிக முக்கியமாக தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

தம் பிள்ளைகள் எங்கே போகிறார்கள்? வருகிறார்கள்? யார் யாருடன் கூட்டுச் சேருகிறார்கள்? அவர்களுடைய சுய தன்மையில் விரிவடையும் மாற்றங்கள் என்ன என்பதைப் பற்றி பெரும்பாலான பெற்றோர்கள் சற்றும் அலட்டிக் கொள்வதே இல்லை. பெற்றோர் ஆடம்பரங்களிலும் பொழுதுபோக்கு அம்சங்களிலும் இவ்வுலகுக்கு எதிரான எதிர்மறை எண்ணங்களிலும் தங்களை மறந்து பெரும்பாலும் மூழ்கி விடுகிறார்கள். தம் பிள்ளைகளைப் பற்றிய எதிர்கால எண்ணங்களைச் சிந்திப்பதற்குப் பதிலாக அனேக இடங்களில் பெற்றோர்களே தம் பிள்ளைகளுக்குப் பெற்றோலாக மாறிவிடும் அபாயம் தற்போது வளர்ந்து வருகின்றது.

எதிர்காலத்தில் அதிக வருமானத்தை ஈட்டக் கூடிய கல்வி முறைகள் தற்போது அறிமுகமாகியுள்ளன. அதை மட்டும் தம்பிள்ளைகள் படித்தால் போதும். அதன் மூலம் தம்மைத் தம் பிள்ளைகள் இன்னும் வசதியாக வைத்திருப்பார்கள் என்ற மேலான விருப்பில் அவர்கள் பிள்ளைகளின் ஒழுக்கத்தைப் பற்றிக் கிஞ்சித்தும் கணக்கில் எடுப்பதில்லை. வெளிநாட்டு பணப் புழக்கமும் அதனால் தம் பிள்ளைகள் கேட்பதையெல்லாம் வேண்டிக் கொடுப்பதும் அவர்கள் செய்வதையெல்லாம் பெற்றோர்கள் சரியென்று ஆமோதிப்பதும் எல்லாவற்றுக்கும் வளைந்து கொடுப்பதும் ஒரு சீரழிந்த கலாசாரத்துக்குத் தம் பிள்ளைகளை தாமே கரம் பிடித்து அழைத்துச் செல்கிறார்கள் என்பது மிகவும் வேதனைக்குரிய விடயமே. பெற்றோர்களே நீங்கள் சிந்திக்கும் காலம் வந்துவிட்டது.

இளைஞர்களே நீங்கள் கண்டிப்புடன் உங்கள் பெற்றோர்களால் வளர்க்கப்பட்டிருந்தாலும் நீங்கள் வெளி இடங்களில் பிற நண்பர்களால் தீமையான பாதைகளுக்குச் சென்று இருப்பீர்கள். இதனால் நீங்கள் இந்தச் சமூகத்தால் புறந்தள்ளப்பட்டு இருப்பீர்கள். உங்கள் குடும்பம், வாழ்க்கை எல்லாமே கேள்விக் குறியாயிருக்கும். இதிலிருந்து நீங்கள் மீண்டெழ விரும்பினாலும் பல சோதனைகள் உங்களைத் தடுத்திருக்கும். ஆனாலும் நீங்கள் ஒருபோதும் சோர்ந்து விடாதீர்கள். உங்கள் சக்தி அளப்பெரியது. விலைமதிப்பற்றது. இந்த சமுதாயத்துக்கும் மக்களுக்கும் உங்கள் ஆளுமை மிகவும் தேவையானது. இதனால் மனம் திரும்புங்கள்.

மிகத் தெளிவான ஒரு கருத்து. புத்தர் நாற்பது ஆண்டுகளுக்குப் பிறகுதான் ஞானம் அடைந்தார். ஆனால் அவருடைய சீடர்கள் அனைவரையும் இளைஞர்களாகவே தேர்ந்தெடுத்தார். இதைப் பற்றி புத்தரிடம் ஒருவர் கேட்டார். "சுவாமி நீங்கள் நாற்பது ஆண்டுகளுக்குப் பிறகுதான் ஞானமடைந்தீர்கள். இருந்தும் இளைஞர்களை மட்டும் உங்கள் சீடர்களாகத் தேர்ந்தெடுக்கிறீர்கள். இளைஞர் களை மட்டுமே இந்த ஆன்மிக வாழ்க்கைக்குக் கொண்டு வருகின்றீர்களே காரணம் என்ன? என்று. அதற்குப் புத்தர் "வயது முதிர்ந்தவர்களால் ஞானமடைவதற்குத் தேவையான முழு சக்தியையும் உள்வாங்குவது கடினம்" என்று சொன்னார். இளைஞர் சக்தி என்ன என்பது இப்போது உங்களுக்கு புரிந்திருக்கும். "காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்" முதுமை வந்தால் எதையும் சாதிக்க முடியாது. இப்போதே சாதிக்க எழுந்து விடுங்கள். உங்கள் தீய செயல்கள் மறைய ஆன்மிக வழிக்கு வாருங்கள். ஜெபம், தியானம், சத்சங்கம் மூலம் அனைத்துக் கெட்ட எண்ணங்களையும் துரத்தியடியுங்கள். மன ஒரு நிலையே அனைத்தையும் செய்யப் பக்கபலமாக அமையும். உங்களுக்குள் இருக்கும் கடவுளை மாசுபடுத்தாமல் மாண்புறச் செய்யுங்கள். இதுவே இன்றைய காலத்துக்கு உகந்தது.

---

றொ.றாஜப்பிரகாஷ்

# இன்றைய அறிவியலில் அன்றைய அறிஞர்கள்



தொழில்நுட்ப வளர்ச்சி இன்றைய உலகில் நாளாந்தம் பற்பல கண்டுபிடிப்புகளும் பற்பல சமூக விஞ்ஞான ரீதியான சிந்தனைகளும் முன்வைக்கப்படுகின்றன. ஆனால் அவை இந்தக் காலத்தில் உச்சக்கட்ட வளர்ச்சி கண்ட தொழில்நுட்ப சாதனங்களின் உதவியினாலேயே நடக்கின்றது. இந்தத் தொழில்நுட்ப சாதனங்கள் எதுவும் இல்லாமலேயே கிறிஸ்துவுக்கு முன்னும் கிறிஸ்வுக்குப் பின் முதற் கட்ட நூற்றாண்டுகளில் வாழ்ந்த பல அறிவியியலாளர்களாலும் பற் பல கண்டுபிடிப்புகள் முன்வைக்கப்பட்டன. இவை இன்று அறிவியல் மற்றும் தொழில்நுட்ப சாதனங்களின் உதவியோடு ஆராயப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டும், ஏற்றுக் கொள்ளப்பட்டும் வருகின்றன. அந்த அறிஞர்களில் ஒரு சிலரைப் பற்றிப் பார்ப்போம்.

**தற்காப்புக் கலையின் தந்தை போதிதர்மர்**- பல்லவ மன்னனான கந்தவர்மனின் 3 ஆவது மகன் போதிதர்மர் ஆவார். 'சுய விழிப்புணர்வு' என்பதே இவரின் பெயரின் அர்த்தமாகும். சீனாவிலும் ஜப்பானிலும் 'தாமோ (Damo) என அழைக்கப்படுகின்றார்.

கி.பி. 5 நூற்றாண்டைச் சேர்ந்தவராக இருக்கலாம் என நம்பப்படும் இவர் பல கண்டுபிடிப்புக்களையும் சிந்தனைகளையும் முன்வைத்தார்.

பெண் அடிமைத்தனம் நிலவிய காலத்தில் ஒரு பெண்ணைத் தன் ஆன்மிகக் குருவாக ஏற்றதன் மூலம் பெண்ணடிமைத்தன விடுதலைக்கு வித்திட்டார்.

தான் கற்ற வர்மக்கலை, கலரிப் பட்டை, யோகாக்கலை என்பவற்றையும் புலி, சிறுத்தை, குரங்கு, பாம்பு, நாரை ஆகியவற்றின் குண இயல்புகளையும மையமாக வைத்து சோலிங் தற்காப்புக் கலையை உலகுக்கு அறிமுகப்படுத்தினார். அன்று அவர் அறிமுகப்படுத்திய இந்தகக் கலையே பிற்காலத்தில் Kung- fu கலையாக மாறியுள்ளது. இதனால் இவர் தற்காப்புக் கலையின் தந்தையாகக் கருதப்படுகின்றார்.

மனிதனுக்கு ஆறு புலன்கள் இருக்கின்றது எனவும் அந்த ஆறாவது புலன் காதுக்குள் இருக்கின்றது எனவும், இதுவே உடலை சம நிலையில் பேணுகின்றது எனவும் கூறினார். இன்றைய விஞ்ஞான உலகு பல தொழில்நுட்பங்களின் உதவியோடு இதை உண்மை என ஏற்றுக் கொண்டுள்ளது.

இவர் அக்குப்பஞ்சர் வைத்திய முறையைக் கண்டுபிடித்ததாகப் பல ஊகங்கள் உண்டு.

உடல் உறுப்புக்கள் ஒருவரில் இருந்து வேறு ஒருவருக்கு மாற்றுவது பற்றி உலகில் முதன்முதல் தெரிவித்தவர் இவரே. இன்றைய உலகில் இது சாத்தியமாகியுள்ளது. என்பு மசை இன்னொருவருக்கு மாற்றுவது பற்றியும் முதலில் தெரிவித்தவர் போதிதர்மரே.

**அணுவைக் குறிப்பிட்ட ஔவையார்**- இன்றைய காலத்தில் பிரபல்யம் பெற்றிருக்கும் அணு எனும் சொற்பிரயோகத்தை முதன்முதல் பிரயோகித்தவர் சங்கமருவிய காலத்தைச் சேர்ந்த ஔவையார் எனக் குறிப்பிடப்படுகின்றது.

**கண்தானத்தின் முன்னோடி கண்ணப்பநாயனார்**-திருக்காளத்தி மலையிலுள்ள சிவலிங்கத்தை வணங்கிவந்த திண்ணனார் அந்தச் சிவலிங்கத்தின் கண்களில் காயம் இருப்பதைக் கண்டு தனது கண்ணைப் பிடுங்கி அதில் பொருத்தினார் எனக் கூறப்படுகின்றது. இதன் உண்மைநிலையை ஆராயாமல் நோக்குவோமாயின் இது இன்றைய கண்மாற்று சிகிச்சைக்கு வித்திட்டது எனலாம்.

**இரத்ததானத்தை ஆரம்பித்தவர் கர்ணன்**- குருஷேத்திரத்தில் நடந்த பாரதப் போரில் கர்ணன் உடலில் அம்புகள் தைத்துக் குற்றுயிராய்க் கிடந்தபோது கிருஷ்ணர் வயோதிப அந்தண வேடத்தில் அவர் முன் தோன்றி தனக்குத் தர்மம் செய்யும்படி வேண்ட, கர்ணன் தனது உடலில் தைத்துக் கொண்டிருந்த அம்பைப் பிடுங்கிய போது பீறிட்டுப் பாய்ந்த இரத்தத்தை ஏந்தி தனது புண்ணியங்கள் அனைத்தையும் கிருஷ்ணரின் கைகளில் தானமாக வழங்கி விட்டான். புனைகதையா உண்மைக் கதையா என்ற விவரத்தை விடுத்து இயல்பாக இந்தக் கதையை நோக்குவோமாயின் உலகில் முதன் முதலில் இரத்த தானத்தை ஆரம்பித்தவர் கர்ணனே.

**உடலைத் தானமாக்கியவர் தியோயிஜிஸ்**: மாவீரர் அலெக்ஸாண்டர் காலத்தில் கிரேக்க நாட்டில் வாழ்ந்த தத்துவமேதை தியோஜினிஸ். அவர் இறக்கும் போது அழிந்து போகும் தனது உடலை எரித்தோ புதைத்தோ அழிக்காமல் வனத்தினுள் வீசி வன விலங்குகளின் உணவாகப் பயன்படவிடும்படி கேட்டுக் கொண்டார். இதன்படி உலகில் தனது உடலை அழியவிடாமல் முதன் முதலாகத் தானமாக்கியவர் இவரே.


**அரசியல் எண்ணக் கருக்களைப் பற்றிக் குறிப்பிட்ட அரிஸ்ரோட்டில்**- இன்றைய உலகில் பிரபல்யமான அரசியல் எண்ணக்கருக்கலான அரசியலின் தன்மைகள், அரசின் வகைகள், ஆட்சியின் வகைகள், அரசின் போக்குகள் போன்ற அரசியல் எண்ணக் கருக்களை முதன்முதல் முன்வைத்தவர் கிரேக்க அரசியல் அறிஞரான அரிஸ்ரோட்டிலே ஆவார்.

இதனால் இவரே அரச அறிவியலின் தந்தை என அழைக்கப்படுகின்றார். இவராலேயே இன்று அரசியல் எண்ணக்கருக்கள் சிறந்த வளர்ச்சி கண்டுள்ளன எனலாம்.

இவ்வாறாக இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சி கண்ட உலகில் பல தொழில்நுட்ப சாதனங்களின் உதவியுடன் பற்பல கண்டுபிடிப்புக்களும் பல சமூக விஞ்ஞான மற்றும் அறிவியல் கருத்துக்களும் முன் வைக்கப் படுகின்றன.

ஆனால் இவை முற்காலத்திலேயே பல மாமேதைகளின் அறிவியல் சிந்தனைகளாலும் சமூக விஞ்ஞானம் சார் சிந்தனைகளாலும் கண்டுபிடிக்கப் பட்டிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தென்னை மரம்

அரசர் கிருஷ்ணதேவராயரின் அவைக்கு ஒரு நபர் வந்தார்.
அவர் அரசரிடம், அரசே! என்னுடைய வயலும் பக்கத்து வீட்டுக்காரர் வயலும் அருகருகில் உள்ளன. இரண்டுக்கும் இடையில் உள்ள வரப்பில், ஒரு தென்னை மரம் உள்ளது. பக்கத்து வீட்டுக்காரர் அதை எனக்கு விற்று விட்டார். நான்தான் அதை நன்றாகப் பராமரித்து வருகிறேன். இன்று அவர் என்னைத் தேங்காய் பறிக்கக் கூடாது என்றார். இப்போது அவர் தன் முடிவை மாற்றிக் கொண்டு விட்டாராம். மரம் திரும்ப அவருக்கு வேண்டுமாம்... என்று முறையிட்டார்.
அதைக் கேட்டு அவையினர் அனைவரும் திடுக்கிட்டனர். அமைச்சர் சொன்னார். அந்த மனிதாபிமானம் அற்ற மனிதரைக் கைது செய்து வந்து சிறையில் அடைக்க வேண்டும் என்றார்.
அதற்குள் சேனாதிபதி, அந்த நபரைக் கைது செய்து வரத் தயாராகிவிட்டார். - அப்போது அரசர் என்ன செய்யலாம்? என்று கேட்பதைப் போல் தெனாலிராமனைப் பார்த்தார். - தெனாலிராமன் புரிந்துகொண்டு, தாங்கள் அனுமதி தந்தால், இதற்கான தீர்வை நாளைக்குத் தள்ளிவைத்துக் கொள்ள லாம்... என்றார்.
அரசர், சரி எனவே, தெனாலி அந்த நபரிடம், நாளைக்கு உன் பக்கத்து வீட்டுக்காரனையும் அழைத்து வா... என்று அவனை அனுப்பி விட்டார். - மறுநாள் அந்த நபரும், பக்கத்து வீட்டுக்காரனும் சபைக்கு வந்தனர். - இருவரிடமும் நன்கு விசாரித்த பிறகு தெனாலிராமன் சொன்னார். - அப்படியானால் நீ உன் மரத்தைத் திரும்ப எடுத்துக் கொள்ள விரும்புகிறாய் இல்லையா? என்றார். - அதற்கு அவன், ஆம் ஐயா! என்றான்.
சரி, நீ அவனுடைய பணத்தைத் திரும்பக் கொடுத்துவிடு... என்றார் தெனாலிராமன். - அவனும் பணத்தை எடுத்துக் கொடுத்துவிட்டான். - சபையினருக்கு ஒன்றும் புரியவில்லை. தெனாலி ஏன் இப்படியெல்லாம் செய்கிறார்? என்று திகைத்தார். - பிறகு தெனாலி, மரத்தை வாங்கியவரிடம், சரி... இன்றிலிருந்து அந்த மரம் உன்னுடையது இல்லை... என்றார். - அந்த மனிதரிடம் ஏமாற்றம். - அப்போது தெனாலிராமன் தொடர்ந்து, இன்னொரு விஷயம்... அந்த மரம் நீ வாங்கும் போது எப்படி இருந்ததோ அப்படியே அதை நீ திரும்பக் கொடுத்து விட வேண்டும்... என்று கூறி விளக்கினார். - அதாவது நீ மரத்தை அவரிடம் வாங்கும்போது அம்மரம் காய்க்கத் தொடங்கவில்லை. ஆகவே, அதைத் திரும்ப ஒப்படைப்பதற்கு முன்பு 'எல்லாக் காய்களையும் பறித்துக் கொண்டுவிடு... என்றார் வாங்கியவரிடம். -
திரும்பப் பெற்றவரிடம், காய் இல்லாத மரத்தைத்தானே நீ விற்றாய்...? ஆகவே, என்றைக்கும் காயில்லாத மரம்தான் உன்னுடையது. அதில் இனிமேல் காய்க்கும் காய்கள் எல்லாம் மரத்தைத் திரும்பக் கொடுத்தவரையே சேரும்... அதை அவர் பறித்துக்கொள்ள அவ்வப் போது நீ அனுமதிக்க வேண்டும் தடுக்கக் கூடாது; நீயும் பறித்துக் கொள்ளக் கூடாது... என்றார். - தெனாலியின் இத்தீர்ப்பை அரசர் ஆமோதித்தார்
திரும்பப் பெற்றவன் முகத்தில் ஏமாற்றம்.
புகார் கொடுத்த நபர் மகிழ்ச்சியுடன் எல்லாரையும் குறிப்பாக, தெனாலிராமனை வணங்கி விட்டு விடைபெற்று சென்றார்.

## விடை தெரியுமா ? 274

### உங்களுக்கும் பரிசுகள்

1. வட மாகாண சபையின் முதலமைச்சரின் பெயர் என்ன?
2. மேல் மாகாணத்தின் தலைநகரம் எது?
3. அமெரிக்க நாட்டின் முதலாவது ஜனாதிபதியின் பெயர் என்ன?
4. உலகில் எத்தனை கண்டங்கள் உள்ளன?
5. இந்தியாவின் முதலாவது பிரதமர் யார்?

சிறுவர் கதிருக்கான ஆக்கங்களை அனுப்ப விரும்பும் சிறார்கள் "சிறுவர் கதிர்", உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**விடைகள் 272**

1. எஸ்.பி.திசாநாயக்க
2. ஜேர்மனி
3. இந்துமதம்
4. ராஜஸ்தான்
5. அமெரிக்கா

**விடை தெரியுமா?**

தெரிந்தால் 09.08.2014 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் 6 மாண வர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 பெறுமதியான பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

**வெற்றி பெற்றவர் விவரம் (272)**

♥ சி.அசெம்டா லேயம்,தரம்-4, லோரன்ஸ் அ.த.க.பாடசாலை
♥ ஸ்ரீசொரூபிகா, கொக்குவில் இந்து கல்லூரி

## ஆசிரியர்

*அறிவுக் கண்ணைத் திறப்பவராம்*
*அன்பாய் நம்மை அணைப்பவராம்*
*நெறிகள் வளர்க்கும் கதைகளையே*
*நிறைய நாளும் சொல்பவராம்!*

*மனதில் நல்ல மாற்றத்தை*
*மதித்துப் போற்றி வளர்த்திடுவார்*
*சினத்தால் விளையும் தீமைகளைச்*
*சிரித்துப் பேசிப் போக்கிடுவார்!*

*அடிக்கப் பிரம்பைத் தொடமாட்டார்*
*அன்பால் கல்வி அளித்திடுவார்*
*படிக்க வேண்டும் என்பதையே*
*பாசம் கொண்டே உரைத்திடுவார்!*

*குருவின் சொல்லைக் கேட்டிடுவோம்*
*குலையா அறிவைப் பெற்றிடுவோம்*
*அருமை வாழ்வை அடைந்திடுவோம்*
*அகிலம் சிறக்க வாழ்ந்திடுவோம்!*

*கற்றுக் கொடுத்த ஆசானை*
*காலம் முழுவதும் நினைத்திடுவோம்*
*வெற்றிக் கல்வி பெற்றிடுவோம்*
*வேழம் போல நடையிடுவோம்!*

அபிசன்

* வடவியட்நாம், தென்வியட்நாம், லாவோஸ், கம்போடியா ஆகிய நாடுகள் சேர்ந்த ஒரு நிலப்பரப்பு தான் இந்தோசீனா.
* பூச்சிகளில் தூரப்பார்வை உடைய சிறப்பு வண்ணத்துப்பூச்சி.
* 14 நாடுகளை எல்லைகளாகக் கொண்டது சீனா.
* கடவுளின் சொந்த பூமி கேரளம்.
* நமது உள்ளங்கையில் ஒவ்வொரு சதுர அங்குலத்திலும் தலா 3,000 வியர்வை சுரப்பிகள் உள்ளன.
* ஆண் நைட்டிங்கேல் பறவைதான் பாடும் பெண் பறவை பாடாது.
* வாத்துக்கள் அதிகாலையில் மட்டுமே முட்டையிடும்.
* ஆபிரிக்காவில் வாழும் பாஸன்ஸி என்னும் ஒருவகை நாய் குரைக் காது.

சிந்து சிவதாஸ்,
ஐங்கரன் வீதி.




## பொது அறிவு

1. இலங்கையின் இரசாயனத் தொழிற்சாலை அமைந்துள்ள இடம்?
பரந்தன்
2. பூமி கோள வடிவம் என்பதை முதலில் கூறியவர் யார்?
அரிஸ்ரோட்டில்
3. முதலாம் உலக மகாயுத்தம் எத்தனையாம் ஆண்டு ஆரம்பமாகிறது? 1914
4. இலங்கையின் மிக பழைய தலைநகரம் யாது?பொலநறுவை
5. முதன் முதலில் விண்வெளிக்குப் பயணம் செய்த பெண்மணி யார்?
வலன்ரீனா ரெலஸ்கோபா
6. பாக்கு நீரினையை முதலில் நீத்திக் கடந்த முதலாவது தமிழர் யார்?
நவரட்டிணசாமி
7. நீராவி இயந்திரத்தை எத்தனையாம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது?
1869
8. நீராவி இயந்திரத்தை கண்டுபிடித்தவர் யார்?
ஜேர்ஸ்வாட் என்பார்
9. யாழ்ப்பாணத்தில் பாயும் ஆறு எது?
வழுக்கியாறு
10. ஆறு கடலோடு கலக்கும் இடம்?
கழிமுகம்

சி.டிலானி, தரம் 10,
யா/ராமநாதன் கல்லூரி.



ஏ.கீதாராணி



எஸ்.அனிருத்தன், தரம்-2
மானிப்பாய் மகளிர் கல்லூரி



ஜெ.இ.ஆராதனா, தரம்-3சி
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி



ச.சேயோன், தரம்-3
யாழ்ப்பாணக் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிங்கத்தின் மருத்துவன்

அந்தக் காலத்தில் மனிதர்களை விலங்குகளைப் போல் விலைக்கு வாங்கிப் பயன்படுத்தினார்கள். செல்வந்தர்களிடம் பல அடிமைகள் இருந்தார்கள். மிருகங்களைவிட அவர்களை மிகவும் கேவலமாக நடத்தினார்கள். அவர்களுக்கு எந்தவிதமான சுதந்திரமும் இல்லை. அந்தக் கால கட்டத்தில் ஆபிரிக்காவின் வடபகுதி நாடொன்றில் அந்திரோகிலிஸ் என்ற அடிமை ஒருவன் வாழ்ந்துவந்தான். இவனுடைய எஜமானன் மிகக் கொடுமையானவன். தன்னிடம் உள்ள அடிமைகளை மிகவும் கேவலமாக நடத்தினான். காலை ஆறு மணி முதல் மாலை ஆறு மணிவரை எஜமானனின் நிலத்தில் வேலை செய்ய வேண்டும். பின்பு இரவு பத்து மணி வரை நீர் இறைக்க வேண்டும். சில நேரங்களில் மாடு போல் பாரவண்டி இழுக்க வேண்டும். கடும் வெயிலில் கல் உடைக்க வேண்டும். இவ்வளவு கடுமையாக உழைத்தும் கால் வயிற்று, அரை வயிற்றுச் சாப்பாடே கிடைக்கும்.

தவறு செய்துவிட்டால் தலைகீழாகத் தொங்க விட்டு சவுக்கால் அடிப்பார்கள். சிந்தித்தும் பார்க்க முடியாத சித்திரவதை செய்வார்கள். அந்திரோகிலிஸ் இந்தக் கொடுமையிலிருந்து தப்பிக்க நினைத்தான். வேறு நாட்டுக்கு ஓடி பிடிபட்டால் பழைய எஜமானனிடமே அனுப்பி விடுவார்கள். அப்படி அனுப்பப்பட்டால் அவனை அணுஅணுவாகச் சாகடித்து விடுவார்கள்.

இத்தனை விவரங்களும் தெரிந்தும்கூட, அந்திரோகிலிஸ் ஒரு நாள் முன்னிரவு வேளையில் கட்டுக்காவலையும் மீறித் தப்பித்துவிட்டான். எப்படியாவது ரோமாபுரி சென்று அங்கு யாரிடமாவது வேலைக்குச் சேர்ந்துவிட வேண்டும் என்பது அவனது திட்டம். ஆபிரிக்காவுக்கும் இத்தாலிக்கும் இடையில் உள்ள மத்திய தரைக் கடலைக் கடப்பது எப்படி? கடற்கரை வழியாகவே சென்றால் ஏதாவது துறைமுகம் குறுக்கிடும், அந்தத் துறைமுகத்தில் மனிதாபிமானம் உள்ளவர்களிடம் மன்றாடிக் கப்பலேறி ரோமாபுரி சென்றுவிடலாம்.

அடிமையிடம் பணம் ஏது? மாற்றுடைகள் தான் ஏது? கால்போன போக்கில் நடந்தான், நடந்தான், நடந்துகொண்டே இருந்தான். கடல் எந்தப் பக்கம் இருக்கிறது என்று அவனுக்குத் தெரியாது.

பொழுது புலர்ந்தது.

பசியும், தாகமும் அவனை வாட்டியது. அது ஓர் அடர்ந்த காடு. கண்ணுக்கெட்டிய தூரம் மனித சஞ்சாரமே இல்லை. காட்டு இலைகளையும் காய்கனிகளையும் தின்றான். நதியோரமாகவே சென்றதால், தண்ணீர் கிடைத்தது. கொடிய விலங்குகள் கொன்று விடுமோ என்று பயந்தான். இப்படி மூன்று நாள்கள் இரவு வெகு நேரம்வரை நடந்த அவன் ஓரிடத்தில் களைப்பால் படுத்து உறங்கிவிட்டான்.

காலை நேரம். ஏதோ சத்தம் கேட்டுக் க விழித்தான். அவன் எதிரில் மிகப் பெ ஆண் சிங்கம் ஒன்று உறுமிக் கொ நின்றது. அதனுடைய பார்வை பரிதாப இருந்தது. அது முன்னங்காலைத் தரை ஊன்றாமல் தூக்கிக்கொண்டு நின் அந்திரோகிலிஸிற்கு இப்போது விட புரிந்தது. காலில் ஏதோ அடிபட்டிருக்கி அதனால்தான் அது நகர முடியாமல் நி றது. தைரியமாக சிங்கத்திடம் சென்றான். கம் இடது காலைத் தூக்கிக் காட்டியது. ம பெரிய முள் ஒன்று சிங்கத்தின் பாதத் பாய்ந்திருந்தது. பாதமும் வீங்கி வைத்திருந்தது. அந்திரோகிலிஸ் சிங்கத் பாதத்திலிருந்து முள்ளைப் பிடுங்கினா சீழை வடித்து, பச்சிலைச் சாற்றைப் புண்ண விட்டு, துணி ஒன்றால் கட்டுக் கட்டினா அந்த முரட்டுச் சிங்கம் பூனைக்குட்டி போ அவன் கைகளை நக்கித் தன் நன்றியை தெரிவித்துக் கொண்டது.


மறுநாளும் அதே பச்சிலைச் சாற்றை விட கட்டுக் கட்டினான். ஐந்து நாள்களில் சிங் பூரண குணம் அடைந்துவிட்டது. அ அந்தச் சிங்கத்தின் குகையிலேயே நாள்கள் தங்கிவிட்டான்.

ஆனால் அவனுக்கு மனித முகங்கள பார்க்காமல் இருக்க முடியவில்லை. மூ மாதங்களுக்குப் பின் சிங்கத்திடம் பி விடை பெற்றுப் புறப்பட்டான். எப்படி ரோமாபுரி வந்துவிட்ட அந்திரோகிலிஸ் நாள் காவல்காரர்களிடம் சிக்கிக் கொண்ட காவலர்கள் அவனை மன்னனிடம் ஒப்பன தார்கள். மன்னன் இவன் ஆபிரிக்கா ருந்து தப்பி வந்த அடிமை என்று அறிந்த அவனுக்கு மரணதண்டனை விதித்தான். அந்தக் காலத்திய ரோமானியர்கள் அ மரணதண்டனை மிகக் கொடுமையான பூமிக்கு இருபதடி ஆழத்தில் பரந்த வட்ட பள்ளம் தோண்டி மேல் தளத்தில் அரச அதிகாரிகளும் அமர்ந்து கொண்டு பள்ளத் பல நாள்கள்வரை ஒரு சிங்கத்தைப் பட் போட்டு மரணதண்டனைக் கைதியை ந ஏணியின் மூலம் பள்ளத்தில் இறக்குவார் சிங்கம் பாய்ந்தோடி வரும். கைதி உயி கையில் பிடித்துக் கொண்டு ஓடுவான். இ மேலே இருந்துபார்த்து இரசித்து கைகொ சிரிப்பார்கள். பின்னர் சிங்கம் அவன் மே தாவி அவனைத் தன் கூரிய நகங்கள கிழித்துத் தின்னும். அதையும் கண்டுக பார்கள். எவ்வளவு குரூரம், எவ்வளவு கா மிராண்டித்தனம் பார்த்தீர்களா?

இப்படித்தான் அந்திரோகிலிஸ் நிலை பரிதாபமாக முடியும் என்று நினைத்தார் ஆனால் நடந்தது வேறு. அந்தச் சிங் அவன் மீது பாயவில்லை. மாறாக அவன் வந்து அன்பாக அவன் கைகளை நக்கி அவன் அருகில் படுத்துக் கொண்டது.

மன்னனுக்கும் மற்றவர்களுக்கும் இது ந முடியாத விந்தையாக இருந்தது. அந்தி லிஸ் மேலே வரவழைக்கப்பட்டான். வி கேட்டான் மன்னன். ஒரு மிருகத்துக்கு இ கும் பண்பு நமக்கு இல்லையே என்று வ தினான். சிங்கத்துக்கு வயிறு புடைக்க மா கொடுக்கச் செய்தான். மறுநாள் சிங்கத் அந்திரோகிலிஸிடம் ஒப்படைத்து இருவ யும் விடுதலை செய்தான்.

ரோமாபுரி வீதிகளில் மக்கள் அந்திரோகிலி சிங்கமும் வலம் வருவதைப் பார்த்தார்கள் 'மனிதனின் விருந்தாளி போகிறது' என் 'சிங்கத்தின் மருத்துவன் போகிறான்' என் மக்கள் பேசிக் கொண்டார்கள்.



**நீதி: நன்றி மறவாமை**

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# முகப்பருவுக்கான உணவுக்கட்டுப்பாடு

பெண்களின் அழகான கன்னங்களுக்கு அவ்வப்போது அச்சுறுத்தலாகத் தோன்றுவது முகப்பருக்கள். பருக்கள் வராமல் இருக்க வேண்டும் என்றால் மலச்சிக்கல் வராத அளவுக்கு வயிற்றைப் பராமரிக்க வேண்டும். பொடுகுத் தொல்லை, ஓமோன் பிரச்சினை, நகங்கள் வளர்த்தல், முறையற்ற உணவுப் பழக்கம், உணவில் அதிக அளவு எண்ணெய் பயன்படுத்துதல் போன்றவை இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

முகப் பருக்கள் வராமல் தடுப்பதற்கு உணவுக் கட்டுப்பாடு மிகவும் அவசியம். எளிதில் சமிபாடடையக் கூடிய மென்மையான உணவுகளை உண்ண வேண்டும். பழங்கள், காய்கறிகள், கீரை வகைகளை உணவில் அதிகம் சேர்க்க வேண்டும்.

தலையணை உறை, சோப், துவாய் போன்றவைகளைத் தனித்தனியாக ஒவ்வொருவரும் வைத்து தங்களுக்கு மட்டும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். முகப்பரு இருக்கும் ஒருவர் பயன்படுத்தும் இத்தகைய பொருள்களை இன்னொருவர் பயன்படுத்தும்போது அவருக்கும் இது பரவக்கூடும். குளிப்பதற்கும் சுத்தமான த்ண்ணீரைப் பயன்படுத்த வேண்டும்.

தண்ணீர் அதிகமாகப் பருக வேண்டும். முகத்தில் எண்ணெய் வழியாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அவ்வப்போது வெது வெதுப்பான நீரில் முகத்தைக் கழுவி சுத்தப் படுத்த வேண்டும். பப்பாளிச் சாற்றை முகத் தில் பூசி வர பருவுக்கு இயற்கையான சிகிச்சை கிடைக்கும்.

அப்பிள் பழத்தை நன்றாக மசித்து அதில் ஒரு தேக்கரண்டி தேன் கலந்து முகத்தில் பூசி வர பரு மறையும். வாரம் இருமுறை முகத்தில் அப்ளை செய்யவேண்டும்.

குளிக்கும்பொழுது வெதுவெதுப்பான நீரில் சிறிது வேப்பிலையைப் போடவும். அதன் சாறு இறங்கிய பின்னர் அதை எடுத்து குளிக்கும் நீரில் கலந்து குளிக்கலாம். ஒரு வாளி தண்ணீரில் 2 சிட்டிகை கற்பூரத் தூளைப் போட்டுக் குளித்தால் வியர்வை நாற்றம் அகலும். முகத்துக்கு கோடை காலத்துக்கு என்று பிரத்தியேகமாக பழவகை பேஷியல் செய்வது நல்லது.

அப்பிள், வாழைப்பழம், தர்ப்பூசணி, தக்காளி, வெள்ளரிக்காய், இளநீர் ஆகியவற்றைக் கொண்டு முகத்துக்குப் பூசலாம். (சைனஸ் தொந்தரவு உள்ளவர்களைத் தவிர அனைவரும் இந்த முறையைப் பின்பற்றலாம்). கோடை காலங்களில் வெளியில் அலைய நேரிடும்பொழுது இளநீர், தோடம்பழம், எலுமிச்சைப் பழ ஜூஸ் பருகுவது நல்லது.

சன் ஸ்ட்ரோக் வராமல் தடுக்க ஒரு வெங்காயத்தைக் கையிலோ, உடலிலோ வைத்திருந்தால் சன் ஸ்ட்ரோக்கிலிருந்து தப்பிக்கலாம். எண்ணெய் சருமம் உடையவர்களுக்கு தலை முடிக்கு அருகிலேயே எண்ணெய் சுரப்பி உள்ளது. எண்ணெய் சுரப்பிகளிலிருந்து அதிகம் எண்ணெய் வெளிவரும். வியர்வைச் சுரப்பிகளிலிருந்தும் வியர்வை அதிகமாக வரும். இது குறிப்பாக கட்டிளமைப் பருவத்தில் உள்ள வர்களை அதிகமாகப் பாதிக்கும். பருத் தொல்லை கோடை காலத்தில் எண்ணெய் சருமத்தில் அதிகமாகி விடும்.






# கண்ணில் கருவளையமா? கவலையை விடுங்கள்

பெண்களுக்கு மட்மின்றி ஆண்களுக்கும் பெரிய பிரச்சினையே கண் ணுக்கு கீழே ஏற்படுகின்ற கருவளையம் தான். அந்த கருவளையத்திற்கு தீர்வு தருகிறது எலுமிச்சை. அரை தேக்கரண்டி எலுமிச்சைச் சாறுடன், 5 துளி தேன், ஒரு தேக்கரண்டி பார்லி பவுடர் கலந்து, முகத்தில் பூசி 5 நிமிடம் கழித்து கழுவுங்கள். எலுமிச்சைச்சாறு முகத்தில் உள்ள அதிகமான எண்ணெயை நீக்கி விடும். பார்லி பவுடர் சேர்ப்பதால் முகம் ப்ளீச் செய்தது போல் பளிச்சென்று பிரகாசிக்கும். காய்ச்சல், தூக்கமின்மையால் கண்களுக்குக் கீழ் ஏற்படும் கருவளையத்தைப் போக்குகிறது எலுமிச்சை.

2 தேக்கரண்டி வெள்ளரி விதை பவுடருடன், அரைத் தேக்கரண்டி எலுமிச்சைச்சாறு சேர்த்து, இது கலக்கும் அளவுக்குப் பாலை விட்டு பேஸ்ட் செய்யுங்கள். இந்த பேஸ்ட்டை கண்ணுக்குக் கீழ் பூசி, காய்ந்ததும் கழுவுங்கள்.

கருவளையத்தைப் போக்கி, நல்ல நிறத்தைத் தருவதுடன் சருமத்தை மிருதுவாக்கும் தன்மையும் இந்த சிகிச்சைக்கு உண்டு. இளம் வயதிலேயே சிலருக்கு தோல் துவண்டு வயதான தோற்றத்தைத் தரும். இதற்கு சிறந்த வைத்தியம் எலுமிச்சையில் இருக்கிறது. துருவிய உருளைக்கிழங்கு - அரை கப் எலுமிச்சைச் சாறு - அரை தேக் கரண்டி, சிவப்பு சந்தனம் - ஒரு தேக்கரண்டி, இந்த மூன்றையும் சுடு தண்ணீரில் கலந்து பேஸ்ட் ஆக் குங்கள். முகத்தை ஒரு மெல்லிய மஸ்லின் துணியால் மூடி, அதன் மேல் இந்த பேஸ்ட்டைத் தடவி அரை மணி நேரம் கழித்துக் கழுவுங்கள். முகத்தில் உள்ள தோல் பகுதி இறுகி, இளமையான தோற்றம் கிடைக்கும்.





# இறால் கட்லெட்

ஞாயிற்றுக்கிழமை வந்தாலே எல்லோர் மனதிலும் மகிழ்ச்சிதான். விடுமுறை நாள் என்பதால் வீட்டிலே நீண்ட நேரங்களுக்கு ஓய்வு எடுப்பதும் பல்சுவையான உணவுகள் தயாரிப்பதிலும் ஆர்வத்துடன் ஈடுபடுவார்கள். எனவே இந்த நாளில் என்ன ஸ்பெஷல் செய்யலாம் என்று யோசனை செய்கிறீர்களா? இதோ உங்களுக்கான சில பிடித்த ருசிகர உணவுகள்.

பொதுவாக இறாலை அதிகமாக விரும்பிச் சாப்பிடுவார்கள். சிலருக்கு ஒவ்வாமை காரணமாக அதைத் தவிர்க்கவேண்டிய சூழ நிலையும் ஏற்படும். அதில் விருப்பமில்லாதவர்கள் இந்த மாதிரி கட்லெட் செய்து சாப்பிட்டால் சுவையாக இருக்கும்.

### தேவையானவை

இறால் - அரை கிலோ
தேங்காய் - ஒன்று
ரொட்டித் தூள் - ஒரு மேசைக்கரண்டி
கோதுமை மா - 1/4 குவளை
மஞ்சள் தூள் - கால் தேக்கரண்டி
மிளகாய் தூள் - கால் தேக்கரண்டி
எண்ணெய் - தேவையான அளவு
உப்பு - சிறிதளவு

### செய்முறை

சுத்தம் செய்யப்பட்ட இறாலை மஞ்சள் மற்றும் உப்புச் சேர்த்து வேகவைத்துக் கொள்ளவும். பின்னர் வெந்த இறாலை நன்றாகப் பிசையவும். அத்துடன் சிறிதளவு கோதுமை மா, கரம் மசாலாத்தூள், உப்பு, வேக வைத்த உருளைக்கிழங்கு ஆகியவற்றுடன் சேர்த்து பிசைந்து கொள்ளவும். சிறிய உருண்டை பிடித்து வடை போல தட்டிக் கொள்ளவும். பின்னர் அதனை ரொட்டித் தூளில் பிரட்டி தோசைக்கல்லில் எண்ணெய் வார்த்து வேகவைத்து எடுக்கவும். இது இறால் கட்லட். சாப்பிட சுவையாக இருப்பதுடன் கல்சியம் சத்தும் அதிகமாகக் கிடைக்கும்.

# மார்பு எலும்பை பலப்படுத்தும் மரீச்சாசனம்

### செய்முறை

முதலில் இரண்டு கால்களையும் முன் பக்கமாக நீட்டி நிமிர்ந்து உட்காரவும். பின்னர் வலது காலை மேல்நோக்கி மடக்கி வைக்கவேண்டும். வலது கால் பாதம், இடது தொடையை உள்பக்கமாகத்தொட்டுக் கொண்டு இருக்க வேண்டும். வலது தொடைப்பகுதி தரைக்குச் செங்குத்தாக இருக்கவேண்டும்.

அதன்பின்னர் வலது பக்கமாக குனிந்து வலது கையை வலது முழங்காலைச் சுற்றி வளைத்து உள்ளங்கையை முதுகுக்கு கொண்டு வரவும். இடது கையைப் பின்பக்கமாகக் கொண்டு சென்று வலது கை மணிக்கட்டைப் பிடிக்கவும். இந்நிலையில் மூச்சை ஆழ்ந்து உள்இழுத்துக் கொண்டே முதுகை நன்கு நிமிர்த்தி மேலே பார்க்கவேண்டும்.

பின்னர் மூச்சை வெளிவிட்டுக் கொண்டே முன்னே குனிந்து நெற்றியை அல்லது கீழ்த்தாடையை இடது முழங்காலில் வைத்து 20 விநாடிகளுக்கு அதே நிலையில் சாதாரண சுவாசத்தில் இருக்க வேண்டும். பின்னர் ஆழ்ந்த உள் மூச்சுடன் நிமிர்ந்து கைகளை, கால்களை விடுவித்தவுடன் கால்களை மாற்றி மேலே செய்தது போல் செய்யவும்.



### பயன்கள்

உள் உறுப்புகளைச் சுற்றி இருக்கும் கொழுப்புகளைக் கரைத்து உடலின் எடையைக் குறைக்க உதவுகிறது. முதுகெழும்பு, இடுப்பெழும்பு கழுத்து போன்றவற்றை வலிமையடையச் செய்கிறது. மார்பு எலும்பைப் பலப்படுத்து கிறது.

இதயம், நுரையீரல் போன்றவற்றை வன்மையடையச் செய்கிறது. கல்லீரல், மண்ணீரல் இவற்றை இயல்பு நிலையில் வைத்து உடலைப் பாதுகாக்கிறது. உடல் எடையைக் குறைக்க உதவுகிறது. கைகளில் உள்ள அனைத்து மூட்டுகளுக்கும் வலிமை தருகிறது.

# பிரமர [illegible]

பிரம்மன் உலகத்தை சிருஷ்டிக்கத் தேவையான சக்தியை வேண்டி தவம் செய்தபோது இம்முத்திரையாலேயே தவம் செய்ததாகவும், அது [illegible] தோற்றம் தரும் என [illegible] பிரமர முத்திரை என்ற பெயர் வழங்கப்படுகிறது.

### பயன்கள்

மனிதனது உடலில் உள்ள ஒவ்வாமை, பயங்களைப் போக்கவல்ல அற்புத சக்தி கொண்டது இம்முத்திரை. உடலில் நோய் எதிர்ப்பு சக்தி குறையும்போது ஒவ்வாமை ஏற்படுகிறது. தொற்றுகள் ஏற்படும்போது வழங்கப்படும் ஆன்டிபயோடிக் மருந்துகளால் ஏற்படுகின்ற வயிற்றுக் கோளாறுகள், சளி, சைனஸ் போன்ற தொல்லைகளுக்கும் இது நிவாரணம் தரும். நிம்மதியான உறக்கம், நன்றாக சமிபாடடைவதற்கு இந்த முத்திரை பயன்படும்.

### செய்முறை

ஆள்காட்டி விரலை மடக்கிக் கொண்டு, நடு விரல் நுனியைப் பெருவிரல் நுனியோடு அழுத்திப் பிடித்து, மற்ற இரு விரல்களையும் நேராக வைக்கவும். இவ்வாறு தினமும் 15 நிமிடம் செய்ய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஏன் இந்த கொலை வெறி?

## சர்வதேசம் மௌனம்

■ அதிரன்

பொதுமக்கள் இருப்பதாகப் பலமுறை எச்சரிக்கப்பட்ட நிலையிலும், காஸாவில் அகதிகள் தங்கியுள்ள ஐ.நா. பாடசாலை ஒன்றின் மீது இஸ்ரேலிய சியோனிச படை தாக்குதல் நடத்தியதில் சுமார் 20 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர். மொத்தமாகக் காஸாவில் கடந்த செவ்வாய்க்கிழமை இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் 100 பலஸ்தீனர்கள் உயிரிழந்தனர்.

உலகமே அவமானத்துடன் நிற்கிறது என்று இந்தத் தாக்குதல் குறித்து ஐ.நா. பேச்சாளர் கிரிஸ் கின்னஸ் கவலை தெரிவித்திருந்தார். இஸ்ரேலின் ஆக்கிரமிப்பால் இடம்பெயர்ந்து ஐ.நா. பாடசாலைகளில் தஞ்சம் புகுந்திருக்கும் பலஸ்தீன அகதிகள் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்துவது ஒரு வாரத்துக்குள் இது இரண்டாவது முறையாகும். இந்தப் புதிய வன்முறைகளுடன் காஸாவில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்களின் எண்ணிக்கை 1400 ஆக உயர்ந்துள்ளது.

ஐ.நாவின் கணிப்பின்படி கொல்லப்பட்டவர்களில் முக்கால் பங்கினர் அப்பாவிப் பொது மக்களாவர். இதில் 240 க்கும் அதிகமான சிறுவர்,சிறுமியர் கொல்லப்பட்டுள்ளனர். இது கொல்லப்பட்ட பொதுமக்களில் 29 வீதமாகும்.

மறுபுறத்தில் பலஸ்தீனப் போராளிகளின் தாக்குதலில் கொல்லப்பட்ட இஸ்ரேல் படையினரின் எண்ணிக்கை 57 ஆக உயர்ந்திருப்பதாக இஸ்ரேல் இராணுவம் உறுதி செய்துள்ளது. இஸ்ரேல் குடியேற்றக்காரர்கள் மூவரும் கொல்லப்பட்டுள்ளனர். எனினும் இதுவரை 90க்கும் அதிகமான சியோனிச சிப்பாய்கள் கொல்லப்பட்டிருப்பதாக ஹமாஸ் குறிப்பிட்டுள்ளது.

இதில் ஜபலியா அகதி முகாமில் இருக்கும் ஐ.நாவினால் நடத்தப்படும் பாடசாலை மீதே இஸ்ரேல் தாக்குதல் நடத்தியிருப்பதாகக் காஸா அவசர மருத்துவப் பிரிவின் பேச்சாளர் அஷ்ரப் அல் குத்ரா குறிப்பிட்டுள்ளார் பாடசாலையின் பெண்கள் பிரிவில் இருக்கும் இரு வகுப்பறைகள் மற்றும் குளியலறை மீதே தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாகப் பலஸ்தீனத்துக்கான ஐ.நா. அகதிகள் நிலையம் குறிப்பிட்டுள்ளது.

ஐ.நா. நிவாரண உதவிகளுக்கான பிரிவின் பேச்சாளர் கின்னஸ் குறிப்பிடும்போது, ஜபலியா பாடசாலையில் இடம்பெயர்ந்த அகதிகளே தங்கியிருப்பதாக இஸ்ரேலுக்கு 17 தடவைகள் அறிவுறுத்தப்பட்டது என்றார். இந்த உயிர்ப்பலிகள் ஏற்பட்ட தாக்குதலுக்கு ஒரு சில மணி நேரங்களுக்கு முன்னரும் நாம் இஸ்ரேலை அறிவுறுத்தி இருந்தோம் என்றும் அவர் குறிப்பிட்டார். இந்தத் தாக்குதலில் சிறுவர்கள் பெண்கள் என 20 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

கடந்த 24 தினங்களாகக் காஸா மீது இஸ்ரேல் கடல், வான் மற்றும் தரைவழியாக நடத்தும் தாக்குதலால் இடம்பெயர்ந்துள்ளவர்களில் குறைந்தது 180,000 பலஸ்தீனர்கள் அங்குள்ள ஐ.நாவினால் நடத்தப்படும் பாடசாலைகளிலேயே தஞ்சம் புகுந்துள்ளனர்.

ஆனால் 1.7 மில்லியன் மக்கள் தொகை கொண்ட காஸாவில் இதுவரை 215,000 மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி இருப்பதாக ஐ.நா. கணித்துள்ளது.

காஸாவில் இருக்கும் ஒரே மின்சார உற்பத்தி நிலையமும் தாக்குதலுக்கு உள்ளானது. இந்த நிலையில் முற்றாக சேதமடைந்திருக்கும் இந்த மின்சார உற்பத்தி நிலையத்தை சீரமைப்பதற்குக் குறைந்தது ஓர் ஆண்டு எடுத்துக் கொள்ளும் என்று பலஸ்தீன மின்சக்தி அதிகார சபையின் தலைவர் பாத்தி அல் ஹெய்க் கலிக் குறிப்பிட்டுள்ளார் .

ஏற்கனவே மின்சாரத் தட்டுப்பாட்டால் தவித்துவரும் காஸா இந்தத் தாக்குதல் மூலம் பாரிய பிரச்சினையை எதிர்கொண்டுள்ளது. உடனடியாக மின்சார விநியோகம் உறுதிசெய்யப்படாவிட்டால் காஸா பெரும் மனிதாபிமான பிரச்சினையை எதிர்நோக்க வேண்டிவரும் என்று காஸா மின்சார விநியோக நிறுவனத்தின் பேச்சாளரான ஜமால் டர்தசாவி எச்சரித்துள்ளார்.இந்த மின்சாரத் தடை மருத்துவமனைகள், நீர் விநியோகத்திலும் பாதிப்பை செலுத்தும் என்று அவர் எச்சரித்துள்ளார்

அதேபோன்று இஸ்ரேல் போர் விமானம் கடந்த செவ்வாய்க்கிழமை காஸாவின் உத்தியோகபூர்வ தொலைக்காட்சி சேவையான அல் அக்ஸாவையும் தாக்கியது. இந்தத் தாக்குதலை அடுத்து அல் அக்சா ஒளிபரப்புகள் பல மணிநேரம் தடைப்பட்டன. காஸா மீதான கண்மூடித்தனமான தாக்குதல்கள் தொடரும் நிலையில் மோதல் நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்தும் இராஜதந்திர முயற்சிகளும் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

இஸ்ரேல் தரப்பு முதலில் முன்வரும் வரை புதியதொரு உடன்பாடொன்றுக்கு தாம் முன்வரப்போவதில்லை என்று ஹமாஸ் குறிப்பிட்டுள்ளது. மனிதாபிமான உடன்படிக்கை ஒன்றுக்கு இஸ்ரேலின் அர்ப்பணிப்புத் தேவை. ஆக்கிரமிப்பு தொடரும் நிலையில் எமது குழந்தைகள் கொல்லப்படும் சூழலில் எமது தரப்பில் நாம் உடன்பாடொன்றை அறிவிக்க முடியாது என்று ஹமாஸ் பேச்சாளர் சமி அபூ சுஹ்ரி சுட்டிக்காட்டியுள்ளார்

காஸா மீதான முற்றுகை விலக்கப்படும் வரை நிரந்தரப் போர் நிறுத்தம் ஒன்றை ஹமாஸ் நிராகரித்து வருகிறது. காஸா மீது படையெடுத்திருக்கும் இஸ்ரேல் படை அங்குள்ள ஹமாஸ் சுரங்கப்பாதைகள் முற்றாக அழிக்கப்படும்வரை பின்வாங்கப் போவதில்லை என்று இஸ்ரேல் குறிப்பிட்டுள்ளது. இந்த நிலையில் காஸா மீதான இஸ்ரேலின் புதிய தாக்குதல் அதிக தினங்கள் நீடித்த தாக்குதலாக மாறியுள்ளது.

கடந்த 2012 ஆம் ஆண்டு இடம்பெற்ற காஸா-இஸ்ரேல் மோதல் எட்டு தினங்களில் முடிவுக்கு வந்தது. அதே போன்று கடந்த 2008 ஆம் ஆண்டு மோதல் 22 நாள்கள் வரை நீடித்தது. ஆனால் தற்போதைய மோதல் 24 ஆவது தினத்தை எட்டியுள்ளது.

கொல்லப்படுபவர்கள் எல்லோரும் சிவிலியன்கள். பெரிய அளவில் பலஸ்தீனக் குழந்தைகள் செத்து மடிகின்றனர். மருத்துவமனைகள், மாற்றுத் திறனாளிகளுக்கான இல்லம் எல்லாம் குண்டு வீச்சுக்கு இரையாகியுள்ளன. குண்டு வீச்சின் விளைவாகப் பெரிய அளவில் குடிதண்ணீர் விநியோகம், கழிவு நீர் வெளியேற்றம் எல்லாம் பாதிக்கப்பட்டுள்ளது. ஹமாஸும் இஸ்லாமிய ஜிகாத் இயக்கமும் மக்களைக் கேடயமாகப் பயன்படுத்துவதாக இஸ்ரேல் கூறுகிறது. இது ஒரு அபத்தமான குற்றச்சாட்டு. காஸா ஒரு துண்டு நிலம் 51 கி.மீ நீளம் சுமார் 11 கி.மீ அகலம் உள்ள இந்தத் துண்டு நிலத்தில் 18 லட்சம் மக்கள் வாழ்கின்றனர். இதற்குள் நின்று சிவிலியன்களுக்கு மத்தியில்தான் இயக்கத்தினரும் இருந்து போரிட்டாக வேண்டும்.


இந்தத் துண்டு நிலத்தின் ஒரு பக்கம் கடல், கீழ்ப்பக்கம் எகிப்து. வலப்பக்கம் இஸ்ரேல். கடலோரத்தில் இஸ்ரேலுக்கு ஒதுக்கப்பட்ட பகுதியில் சுமார் 86 சத வீதத்தைப் பாதுகாப்புப் பகுதி என இஸ்ரேல் அறிவித்துத் தன்னுடைய கண்காணிப்பில் வைத்துள்ளது. தங்களுடைய உலகத் தொடர்புகள் பலவற்றையும் பலஸ்தீனியர்கள் இஸ்ரேலின் ஊடாகத்தான் நிறைவேற்றிக் கொள்ள முடியும். இதற்கான வழிப் பாதைகள் ஆறையும் தன் கட்டுப்பாட்டில் வைத்துள்ளது இஸ்ரேல். நிலப்பகுதியிலும் சுமார் 15 சத வீதத்தைப் பாதுகாப்புப் பகுதியாக அறிவித்து அதையும் தன் கண்காணிப்பில் வைத்துள்ளது. கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கு விளைபொருட்கள் உற்பத்தி ஆகிக் கொண்டிருந்த நிலம் இது.

ஆக பலஸ்தீனியர்கள் இன்று ஒரு முற்றுகை இடப்பட்ட மக்கள். காஸா ஒரு மிகப் பெரிய அகதிகள் முகாம். நிரந்தரமாக அவசரநிலை அறிவிக்கப்பட்ட பகுதி.

இந்தப் பின்னணியில்தான் இன்றைய போர் நடந்து கொண்டிருக்கிறது. காஸாவும், மேற்குக் கரையும் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகள் என்பதையும், தான் ஓர் ஆக்ரமிப்பாளன் என்பதையும் இஸ்ரேல் ஏற்பதில்லை. இறையாண்மை உள்ள பகுதிகளை கைவசப்படுத்தி இருந்தால்தான் அதன் பெயர் சர்வதேசச் சட்டப்படி ஆக்கிரமிப்பாம். காஸாவும் மேற்குக்கரையும் எகிப்து மற்றும் ஜோர்டானின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளாம். எனவே அவை இறையாண்மை உடைய நாடுகள் இல்லையாம். எனவே அவற்றில் வன்முறையாக நுழைந்து குடியமர்த்துவதை ஆக்கிரமிப்பு எனச் சொல்லக் கூடாதாம்.சட்டம் பேசுகிறது இஸ்ரேல்; ஒத்தூதுகிறது அமெரிக்கா.

இஸ்ரேலைச் சேர்ந்த பதின்ம வயது மாணவர் மூவர் கொல்லப்பட்டதை ஒட்டித்தான் இந்த விமானத் தாக்குதலை அது தொடங்கியது. ஹமாஸ்தான் இந்தக் கொலைகளைச் செய்தது என அது குற்றம்சாட்டுகிறது. ஹமாஸும் பிற போராளி இயக்கங்களும் தங்களுக்குத் தொடர்பில்லை என்கின்றன. இஸ்ரேல் தனது குற்றச்சாட்டை மெய்ப்பிக்க எந்த ஆதாரத்தையும் இதுவரை ஐ.நா. அவை முன்வைக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



- காஸாவில் இஸ்ரேல் நடத்தியுள்ள கொடும் செயலுக்கு உலகம் முழுவதும் கண்டனம்.
- மீண்டும் ஒரு போர் நிறுத்தத்துக்கு சர்வதேச முயற்சி.
- பழிக்குப் பழி- என்ற போக்கு இரு தரப் பிலும் நீடிக்கிறது.

# இஸ்ரேலியரின் வெறியாட்டம்

■ ரெங்கன்

காஸா நிலப் பரப்பின் மீது இஸ்ரேலியர் நடத்தியுள்ள கடும் குண்டுத் தாக்குதல்களை உலக நாடுகள் பலவற்றிலும் மக்கள் கண்டித்திருக்கிறார்கள். உலகத் தலைவர்கள் போர் நிறுத்தத்துக்கு அழைப்பு விடுத்துள்ளார்கள். கெய்ரோவில் அமெரிக்க மற்றும் அரபு நாடுகளின் ஆதரவில் போர் நிறுத்தம் ஒன்றுக்கான மாநாடு நடைபெறவிருப்பதாகத் தெரிகிறது. இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் பிரதிநிதிகள் அங்கு சென்றிருப்பதாகவும் செய்திகள் வருகின்றன.

இஸ்ரேல் அண்மைக் காலத்தில் காஸா நிலப் பகுதியில் நடத்தியுள்ள தாக்குதல்களில் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கொல்லப் பட்டிருப்பதும், இவர்களில் சிறுவர் சிறுமியர்கள் அதிகமாகக் கொல்லப்பட்டிருப்பதும் உலகத் தலைவர்களின் கடும் விமர்சனத்துக்குள்ளாகியிருக்கிறது.

இந்த நிலைமையில் ஹமாஸைத் தன் பிடிவாத நிலையிலிருந்து தளர்வு மேற்கொள்ளச் செய்வதற்கான முயற்சிகள் நடைபெறும் அதே நிலையில் புதியதொரு போர் நிறுத்தத்துக்கு உதவும்படி இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அமெரிக்காவின் உதவியை நாடியிருப்பதாகவும் செய்திகள் கூறுகின்றன. போர் நிறுத்தம் ஒன்றைப் பற்றி ஆலோசிப்பதற்காக ஹமாஸ் தலைவர்கள் எகிப்தியத் தலைநகருக்குச் சென்றிருப்பதாகவும் கூடச் செய்திகள் வந்துள்ளன.

இடைநடுவில் வந்துள்ள ஒரு செய்தியின்படி இஸ்ரேல் போர் நிறுத்தம் ஒன்றை மீண்டும் அறிவித்திருப்பதாகவும் அது மீறப்படும் பட்சத்தில் தம்மை பொறுப்புக் கூறும்படி கேட்கப்படாதென்று அறிவித்திருப்பதாகவும் செய்திகள் கூறின.

கடந்த புதன்கிழமையன்று இஸ்ரேலிய படைகள் வீசிய எறிகணையொன்று காஸாவிலுள்ள ஐ.நா. பாடசாலை ஒன்றின் மீது விழுந்து வெடித்தில் அங்கிருந்தவர்களில் 20 பேர் கொல்லப்பட்டார்கள். இரு தரப்பு மோதல்கள் ஆரம்பித்ததிலிருந்து பொதுமக்கள் பாதுகாப்புக்காகக் குறித்த பாடசாலையில் தஞ்சம் புகுந்திருந்தார்கள். கடந்த வியாழன் வரை 1,260 பேர் கொல்லப்பட்டுள்ளனர். புதன்கிழமை மட்டும் 32 பேர் கொல்லப்பட்டனர். இதற்கிடையில் தற்காலிக போர் நிறுத்தம் ஒன்று தொடர்பாக விவாதிப்பதற்காகப் பலஸ்தீன தரப்பினர் கெய்ரோவுக்குச் செல்ல ஆயத்தமாகிக் கொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

காஸாவில் மக்கள் ஈத் பெருநாளைக் கொண்டாட ஆயத்தமாகிக் கொண்டிருந்த வேளையில் கடந்த திங்கள் செவ்வாய்க் கிழமைகளில் இஸ்ரேலியர், காஸா குடியிருப்புக்கள் மீது கடும் தாக்குதல்களை மேற்கொண்டு குண்டுகளை வீசினார்கள். ஏராளமானவர்கள் கொல்லப்பட்டார்கள். இந்தத் தாக்குதல்களில் சிறுவர்கள் ஏராளமாகக் கொல்லப்பட்டிருப்பது குறித்து மனித உரிமை நிறுவனங்கள் பெரும் கவலை வெளியிட்டுள்ளன. 240 சிறுவர்களுக்கு மேல் கொல்லப்பட்டிருப்பதாக அவர்கள் தெரிவிக்கின்றனர். யுனிசெவ் சிறுவர்கள் நிதியம் வெளியிட்ட அறிக்கையொன்றில் காஸாவிலிருந்து ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டதில் கடைசியாக இஸ்ரேலில் ஆறு சிறுவர்கள் காயமுற்றமையும் சிறுவர்கள் பாதிப்பு எண்ணிக்கையில் சேரும் என்றார்கள். காஸாவிலுள்ள யுனிசெப் அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில் சிறுவர்கள் கொல்லப்படுவதை, காயமுறுவதை, சிதைவுறுவதை, எரிக்கப்படுவதையெல்லாம் நாம் பார்க்க நேர்கின்றது. அதுமட்டுமல்ல சிறுவர்கள் பெருமளவில் அச்சுறுத்தலுக்கும் உள்ளாகியுள்ளார்கள். இது முன்னர் ஏற்பட்ட மோதல்களைவிட பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்துவதாய் இருக்கின்றது என்றார். காஸாவில் போர் நிறுத்தம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்யுமாறு இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அமெரிக்காவைக் கேட்டிருப்பதாக அமெரிக்க ராஜாங்க அமைச்சின் செயலாளர் ஜோன் கெரி தெரிவித்துள்ளார். போர் நிறுத்தம் ஒன்றைக் கடைக்கொள்ள விருப்பம் தெரிவித்துள்ள இஸ்ரேலியப் பிரதமர் அது இஸ்ரேல் தன்னை பாதுகாத்துக் கொள்ளக்கூடியதாக இருக்க வேண்டும். இதுவரை இஸ்ரேல் செய்துள்ள தியாகங்களுக்குப் பின்னடைவாக இருக்கலாகாது என்று கூறியதாகக் கெரி தெரிவித்தார்.

காஸா மீதான இஸ்ரேலின் தாக்குதல் பழிக்குப் பழி என்ற நிலைப்பாட்டையே காட்டுகிறது. இப்பொழுது இரு தரப்பிலும் அப்பாவிப் பொதுமக்களே ஏராளமான கொல்லப்பட்டிருப்பது தெரிய வந்துள்ளது. இஸ்ரேலிய நாடு என்பது பூமியில் இருக்கலாகாது என்ற கோட்பாட்டை ஹமாஸ் கடைப்பிடித்தாலும், அந்த அளவுக்கு இஸ்ரேலை அழித்தொழிக்கும் சக்தி அதற்கு இருப்பதாகத் தெரியவில்லை. அதனால்தான் ஏவுகணைகளை வீசிவிட்டு ஹமாஸ் போராளிகள் மறைந்து விடுகிறார்கள். ஆனால் இஸ்ரேலியர் எறிகணைகளாலும், ஏவுகணைகளாலும் விமானக் குண்டுகள் தரை, வானம் மற்றும் கடல்வழியாக எல்லாம் தாக்குதல்களை நடத்துவதாகக் கூறப்படுகின்றது.

நிலைமை மேலும் மோசமடையாமல் இருக்க இரு தரப்பும் போர் நிறுத்தமொன்றை மேற்கொள்வதன் மூலம் அப்பாவி மக்கள்

## உலக நடப்பு

பலரின் உயிர்களைக் காப்பாற்ற முடியும். பலஸ்தீன அதிகார சபையினரை பின்பற்றி சர்வதேச அனுசரணையுடன் ஹமாஸ் சற்று நிதானப் போக்கை கடைப்பிடிக்கலாம். அதே சமயம் இஸ்ரேலும் தனது கண்மூடித்தனமான பழிவாங்கும் போக்கை மாற்றிக் கொள்வது அவசியம்.

கடந்த செவ்வாய்க்கிழமை காஸா நிலப் பரப்பின் மீது இஸ்ரேலிய ராணுவம் குறிப்பிட்ட இலக்குகளை குறி வைத்துத் தாக்குதல்களை நடத்தியுள்ளது. பலஸ்தீன குடியிருப் புப் பகுதிகளில் [illegible] களுக்கு இஸ்ரே[illegible] வேண்டும் என்று இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெதன் யாகு விடுத்த அறிவித்தல் ஒன்றையடுத்து இந்தத் தாக்குதல் நடைபெற்றுள்ளது.

காஸா நகரின் மீது இஸ்ரேலிய விமானங்கள் கடுமையான குண்டுத் தாக்குதல்களை நடத்தியதாக அங்கு வாழும் மக்கள் கூறியுள்ளார்கள். இஸ்ரேலிய விமானமொன்று காஸாவிலுள்ள ஹமாஸ் தலைவர் இஸ்மாயில் ஹானியெக் என்பவரின் வீட்டின் மீது எறிகணையொன்றை வீசி அந்த வீட்டைத் தரைமட்டமாக்கியது. வீட்டிலுள்ள பொருள்கள் சேதமடைந்தாலும் ஆள்கள் எவரும் பாதிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. ஹமாஸ் இணையத்தில் இது பற்றி ஹானியெக் கூறுகையில், கற்களை நாசம் செய்வதால் எமது மன ஓர்மையை அழித்துவிட முடியாது. சுதந்திரம் அடையும்வரை நாம் போராடுவோம் என்று கூறியுள்ளார். இஸ்ரேலிய அறிவித்தல் ஒன்றில் காஸா எல்லையருகில் உள்ள சுரங்கம் ஒன்றின் வழியாக இஸ்ரேலுக்குள் நுழைந்த கிளர்ச்சியாளர்களால் ஐந்து இஸ்ரேலிய இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் என்றும், கொல்லப்பட்டவர்களில் ஒருவரின் உடலை சுரங்கம் வழியாக இழுத்துச் செல்ல அவர்கள் முயன்ற போதும் இஸ்ரேலிய இராணுவம் அதைத் தடுத்துவிட்டது. ஒரு பலஸ்தீன போராளியும் கொல்லப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

**இஸ்ரேலிய தாக்குதலின் விளைவு**

இஸ்ரேலிய இராணுவத்தினர் நடத்திய தாக்குதலின் விளைவுகள் எப்படி இருந்தன என்பது காஸா மருத்துவமனையிலிருந்து நிருபர் ஒருவர் வொஷிங்டனுக்கு அனுப்பியிருந்த அறிக்கையில் பின்வருமாறு விவரிக்கப்பட்டிருந்தது.

காஸா நகர் ஷிப்பா மருத்துவமனையில் ஒரே பரபரப்பு. உயிர்களைக் காப்பாற்றும் முயற்சி. இவைகளுக்கிடையில் ஒரு துணியினால் சுற்றப்பட்ட குழந்தையின் உடலைத் தள்ளு வண்டியில் வைத்து சில ஆள்கள் கொண்டுபோகிறார்கள். சிவப்பு உடை தரித்த ஒரு சிறுமி- அவள் முகமெல்லாம் இரத்தக்கறை- இறந்தவர்களையும் இறந்து கொண்டிருப்பவர்களையும் கடந்து வெறித்த பார்வையுடன் வேகமாக நடக்கிறாள்.

"ஓ கடவுளே எங்களுக்கு என்ன நேர்ந்துவிட்டது" என்று ஒரு மனிதர் புலம்புகிறார். மருத்துவமனையில் அவர் எழுப்பிய குரல் ஓங்கி ஒலிக்கிறது.

அங்கிருந்த அனைவருமே அதைத்தான் செய்திருப்பார்கள். அன்று திங்கட்கிழமை [illegible] மரங்கள் வரி[illegible] ஒரு சிறு வீதியில் கடற்கரை முகாமில் ஒரு குண்டு வெடித்தது. ஈதுல் பித்ர் பண்டிகையையொட்டிய விடுமுறையை மக்கள் கொண்டாடிக் கொண்டிருந்தார்கள். சிறுவர்கள் வெளியில் விளையாடிக் கொண்டிருந்தார்கள். சிலர் ஊஞ்சல்களிலும் நிறுத்தப்பட்டிருந்த வாகனங்களுக்கருகிலும் காணப்பட்டார்கள்.

ஹமாஸ் மோட்டார் ஷெல் ஒன்று வெடித்தாக இஸ்ரேலிய தரப்பில் கூறப்பட்டது. இஸ்ரேலிய விமானம்தான் குண்டு வீசியது என்றார்கள் ஹமாஸ் தரப்பினர். சம்பவத்தில் குறைந்தது ஏழு சிறுவர்கள் உட்பட 10 பொதுமக்கள் கொல்லப்பட்டார்கள்.

அகமது அல்-ஹெலு என்பவர் தனது தந்தையின் பிரேதத்தின் அருகில் அழுது கொண்டிருந்தார். அந்த உடல் வெறும் சிதைவுண்ட சதைக் கும்பலாகவே காணப்பட்டது. ஒரு வாரத்துக்கு முன்னர் இந்தக் குடும்பத்தின் வீடு தாக்குதலுக்குள்ளானது. அந்தப் பகுதியில் ஹமாஸ் போராளிகளும் இஸ்ரேலியப் படையினரும் பயங்கர மோதலில் இறங்கியிருந்தார்கள். அப்போது ஹெலுவின் பாட்டியார் கொல்லப்பட்டார். எனவே அவர்கள் குடும்பம் கடற்கரை முகாமுக்கு ஓடி அடைக்கலமானார்கள். இப்பொழுது அங்கும் அவர்கள் தப்பமுடியாமல் போய்விட்டது. அப்பா, அம்மாவின் வழியில் நீங்களும் போகிறீர்களா என்று ஹெலுவின் சகோதரன் அழுதார். சில மணி நேரம் கழித்து தங்கள் தந்தையின் சிதைந்த உடலை ஒரு வெள்ளைப் பைக்குள் தாதிமார் வைப்பதற்கு இரு சகோதரர்களும் உதவினார்கள். ஒரு துண்டு சதை கீழே விழுந்துவிட்டது. அதனை ஹெலு மிகக் கவனமாக எடுத்துப் பைக்குள் வைத்தார். மருத்துவமனையின் வெளியில் சவச்சாலைக்கு வெளியில் சாலேஹெலியான் என்பவர் ஒரு படியின் மீது அமர்ந்திருக்கிறார். அவருடைய இரண்டு மகன்மாரின் ஜனாசாக்கள் உள்ளே இருக்கின்றன.

மருத்துவமனை வேலையாள் ஒருவர் வந்து அவரிடம் அவரது மகன்மாரின் பெயர்களைக் கேட்கிறார். பின்னர் தமது பிள்ளைகளின் உடல்களைக் கண்டு தழுவிக் கொள்கிறார். சவ அறையில் பல சிறுவர்களின் உடல்கள் காணப்படுகின்றன. பல ஆண்கள் வெளியில் நின்று கொலைகளைக் கண்டித்து குரல் எழுப்புகிறார்கள்.

இந்தப் படுகொலைகளுக்கு இறைவன் பழிவாங்குவாராக! என்று ஒருவர் குரல் எழுப்புகின்றார்.

இஸ்ரேலியர்களுக்கு நாங்கள் இனிமேலும் பயந்து கொண்டிருக்கமாட்டோம் என்கிறார் இன்னொருவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காதலித்துக் கொண்டே இருங்கள்..

■ குட்டி

காதலிக்கும்போது இனிக்க இனிக்கக் காதலிப்பவர்கள் திருமணத்தின் பின் அதே காதலுடன் வாழ்கிறார்களா? காதலிக்கும்போது நிறைகளாகத் தெரிந்த பல விடயங்கள் திருமணத்தின் பின் குறைகளாகத் தெரிவது ஆண்களுக்கு மட்டுமல்ல, பெண்களுக்கும் தான்.எப்படியாவது அவனை அல்லது அவளைக் காதலித்து விடவேண்டும் என்பதற்காக ஒரு ஆணும் பெண்ணும் எத்தனையோ காரியங்கள் செய்கின்றனர். தங்களைத் தாங்களே மாற்றிக்கொள்கின்றனர். காதலில் வெற்றி கண்டு திருமணம் செய்த பின் அப்படி இருக்கிறார்களா? ஒரு பெண்ணின் அன்பைப் பெறும் வரை ஆண் போராட வேண்டியுள்ளது. பின்னர் ஆணின் அன்பைத் தக்கவைத்துக் கொள்ள பெண் போராடத் தொடங்குகிறாள். ஆக மொத்தத்தில் அன்பெனும் போராட்டமே காதலில் உயிரோட்டமாகின்றது.

ஆரம்ப காலத்தில் பேசி முடிக்கப்பட்ட திருமணங்களே அதிகம் விவாகரத்துக்குள்ளாகும் நிலையில், தற்போது நிலைமை மாறிவிட்டது.

மணிக்கணக்காகக் காத்திருந்து நொடிக்கணக்காக ரசித்திருந்து காதலித்துத் திருமணம் செய்து கொண்டவர்கள்தான் விவாகரத்துக் கோரி நீதிமன்ற வாசல்களுக்கு விரைகின்றனர். ஏன்? காதல் கசக்கும் நிலைக்கு வந்து விடுமா? நித்தம் பெற்றால் முத்தமும் சலிக்கும் என்றாகிவிடுமா? திருமணத்தின் பின்னும் குறையாத காதலுடன் இருப்பவர்கள் வாழ்க்கையில் இலகுவாக வெல்கிறார்கள்.

உங்களில் எத்தனை பேர் காதலித்துத் திருமணம் செய்து கொண்டவர்கள்? படிக்கும் பாடசாலையிலோ, கல்லூரியிலோ, விழாக்களிலோ, பக்கத்து வீடுகளிலோ, அலுவலகங்களிலோ ஏதேனும் ஒரு இடத்தில் நீங்கள் காதல் வயப்பட்டிருப்பீர்கள்.

'இல்லை. எனக்குள் எந்த சூழ்நிலையிலும் காதல் வராது. வரவுமில்லை' என்று சொல்பவர்களை இந்த இடத்தில் அவர்கள் உண்மையை மறைக்கிறார்கள் என்று கூறலாம். ஈட்டி முனையால் சாதிக்க முடியாததை அன்பால் சாதிக்கலாம் என்பதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். ஒரு பெண் தனக்குத் தேவையான பாதுகாப்பு, அன்பு, காதல் எல்லாவற்றையும் உணரும் ஓர் ஆணுடன் மிக உரிமையாகப் பழகுவாள். அது பெண்ணுக்குரிய குணமாகவே படைக்கப்பட்டுள்ளது. அதை ஆண்கள் மகிழ்வுடன் ஏற்றுக் கொள்ளும்போது வாழ்க்கை பூரணத்துவமாகின்றது. காதலிக்கும் பெண்ணைக் குழந்தையாகப் பார்த்தால் அவள் உங்களைத் தாயாகப் பார்ப்பாள் என்று காரணமில்லாமல் சொல்லி வைத்திருக்கமாட்டார்கள். காதல் என்பது திருமணத்திலோ கல்லறையிலோ முடிவதற்காக உருவாக்கப்படவில்லை. அதனையும் கடந்து வாழ்க்கை இருக்கின்றது. அதனை காதலர்கள் உணர வேண்டும்.

காலம் நேரம் பாராமல் எந்தச் சூழலிலும் குறையாத காதலைச் கொடுக்கும் காதலர்கள் திருமணத்தின் பின் காதலிக்க நேரம் தேடும் நிலை வந்துவிடுகின்றது. இதுவே சிறு கீறலாக உருவெடுத்துக் காதல் தம்பதியர்களுக்கிடையில் பாரிய பிளவாகின்றது. அதே நேரம் காதல் என்ற உணர்வை வெறுமனே கொடுப்பதாகவோ அல்லது பெறப்படுவதாகவோ இல்லாமல் அது பரிமாற்றத்துக்குரிய உணர்வாகப் பேணப்பட வேண்டும்.

காதலித்துத் திருமணம் செய்தவர்களா நீங்கள்? இப்போது மனதைத் தொட்டுச் சொல்லுங்கள் காதலைச் சொல்லியபோது மனதில் இருந்த அதே காதல் உள்ளதா? அணுவும் குறையாமல் இருந்தால் வாழ்த்துக்கள்! பொதுவில் ஆண்களும் பெண்களும் விழுந்து விழுந்து காதலித்து விட்டுத் திருமணத்தின் பின் நெடுகக் காதலிச்சிக் கொண்டே இருக்க முடியுமா? வேலைக்குப் போக வேண்டாமா? உழைக்க வேண்டாமா? இப்படிப் பல கேள்விகள். உங்களை நீங்களே கேட்டுக்கொள்ளுங்கள். காதலிக்கும்போது நீங்கள் வேலைக்குப் போகவில்லையா? உழைக்கவில்லையா? அப்போது கொட்டிக் கிடந்த நேரம், தாலி கட்டியவுடன் இல்லாமல் போய் விடுகின்றதா?

எல்லோரும் ஏதாவது ஒரு தருணத்தில் காதலைச் சந்தித்திருப்போம். இல்லையா?

பள்ளிப் பருவத்திலோ, பல்கலையிலோ, பணிபுரியும் இடத்திலோ, ஏன் நடுத்தர வயதில் என்று ஏதாவது ஒரு தருணத்தில் சட்டென்று காதல் உரசிப் போயிருக்கும். அதைச் சுவடு தெரியாமல் நீங்கள் அழிக்க முற்பட்டு தோல்வியும் கண்டிருப்பீர்கள்.

காதல் திருமணத்தின் பின்னும் தொடரவேண்டும். அதைத்தான் இருபாலாரும் எதிர்பார்க்கின்றனர். உங்கள் துணையிடம் அன்பைச் செலுத்துங்கள். உங்களுக்கு அந்த அன்பு இருமடங்காகக் கிடைக்கும். காதல் என்பது எதிர்பார்ப்பும், நிபந்தனையும் இல்லாமல் வருவது என்பார்கள். இன்று காதலர்களுக்கிடையே ஏற்படும் எதிர்பார்ப்புகள்தான் பிரச்சினைக்கு மூலகாரணமாகிறது. அதிலும் குறிப்பாகப் பெண்கள் தாமாக ஒன்றை நினைத்து அதன்படி நடந்துவிட்டு காதலன் தன் எதிர்பார்ப்பை நிறைவேற்றவில்லை என்று குற்றஞ்சாட்டுகிறார்கள். எதிர்பார்க்காதீர்கள். எதிர்பாராத சமயத்தில் உங்கள் எதிர்பார்ப்பை விட அதிகப்படியாகவே சந்தோசத்தில் ஆழ்த்துவான் காதலன். காதல் திருமணம் செய்து கொண்டவர்கள் சண்டையிட்டுப் பிரிவதற்குக் காரணம் இத்தகைய எதிர்பார்ப்பும், நிபந்தனைகளும்தான் என்கின்றனர் உளவியல் நிபுணர்கள்.

முழு மனதோடு காதலியை, காதலனை, மனைவியை, கணவனை நேசியுங்கள். அவர்களின் மனது நோகும்படியான வார்த்தைகளையோ, செயல்களையோ தவிருங்கள். அவைகள் மனதை நொருக்கிவிடும். காதலில் விழுந்த மனம் குழந்தையாகுவது இயல்பு. சின்னக்குழந்தைகளுக்கு எப்படி அன்பும் அரவணைப்பும் முக்கியமோ அதைப் போல அன்புக்குரியவர்களும் எப்பொழுதும் கவனித்துக் கொண்டே இருக்க வேண்டும் என்று நினைப்பது காதல் மனத்தின் இயல்பாகலாம். ஒவ்வொரு நொடியும் எங்கள் கவனம் அவர்கள் மீதுதான் இருக்கிறது என்பதை உணர்த்திக்கொண்டே இருங்கள்.

அன்பானவர்களை அக்கறையுடன் கவனிப்பது காதலின் ஆழத்தை அதிகரிக்கும் என்கின்றனர் அனுபவசாலிகள்.



காதல் திருமண வாழ்க்கை என்பது பெண்ணுக்கோ ஆணுக்கோ மட்டும் விதிக்கப்படவில்லை. இருவரிலும் தங்கியுள்ளது. ஆண் -பெண் இருவரும் இதைத் தெரிந்து கொண்டாலே வாழ்க்கையில் வீசும் மழைச்சாரல்...!

# இந்தக் காலத்துப் பெண்கள்

பெப்சிகோ நிறுவனத்தின் தலைமைப் பொறுப்பில் இருக்கும் இந்திரா நூயி, தனது அனுபவத்தை ஒரு பேட்டியில் பகிர்ந்துகொண்டிருக்கிறார். அது பெண்களின் நிலை பற்றிய பல கேள்விகளை எழுப்புகிறது. பொதுவாக அலுவலகத்தில் நெடுநேரம் வேலை செய்யும் இந்திராவை அன்று இரவு 9.30க்கு நிர்வாக இயக்குநர் அழைத்தார். இந்திராவை நிறுவனத்தின் அதிபராக நியமிக்க முடிவெடுக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார். இந்திராவுக்கு மகிழ்ச்சி கரைபுரண்டது. இவ்வளவு புகழ் வாய்ந்த பெரிய ஒரு பன்னாட்டு நிறுவனத்தின் அதிபராகத் தான் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதை நினைத்துப் புளகாங்கிதம் அடைந்தார்.

உடனே வீட்டுக்குப் போய் இந்த மகிழ்ச்சியைத் தன் குடும்பத்தினருடன் பகிர்ந்துகொள்ள விரும்பினார். பத்து மணிக்கு வீட்டை அடைந்துவிட்டார்.

அம்மா படிக்கட்டின் மேல் நின்றபடி இவருக்காகக் காத்திருந்தார். "அம்மா நான் ஒரு நல்ல செய்தி சொல்லப்போறேன்" என்று கத்தினார்.

"அது இருக்கட்டும், நீ போய் பால் வாங்கி வா" என்றார் அம்மா. உடனே வாகனத் தரிப்பிடத்தைப் பார்த்தார் இந்திரா. அவருடைய கணவரின் கார் அங்கே இருந்தது. "அவர் எத்தனை மணிக்கு வந்தார்?" என்று கேட்டார். "எட்டு மணிக்கு" என்று பதில் வந்தது. "பால் வாங்கி வரும்படி அவரையும் சொல்லியிருக்கலாமே" என்று கேட்டு[illegible]. "அவர் களைப்பாக இருந்தார்" என்று பதில் வந்தது. வேலைக்காரர்களிடம் சொல்ல அம்மா மறந்திருக்கிறார். எனவே இப்போது இந்திராதான் போய்ப் பால் வாங்கி வர வேண்டும்.

கடமை தவறாத மகளாகப் பால் வாங்கிவந்து சமையலறையில் வைத்தார் இந்திரா. பிறகு, "நான் 'பெப்சிகோவின்' தலைவராகியிருக்கிறேன். நீ என்னை பால் வாங்கி வா என்கிறாய். என்ன அம்மா நீ?" என்று சொன்னார் இந்திரா.

"நீ பெப்சிகோவின் தலைவராக இருக்கலாம். ஆனால் வீட்டுக்கு வந்துவிட்டால் நீ மனைவி, பெண், மருமகள், அம்மா. எல்லாமே நீதான். அந்த இடத்தை வேறு யாரும் எடுத்துக் கொள்ள முடியாது" என்ற அம்மா, "உன்னுடைய கிரீடத்தையெல்லாம் வீட்டுக்குள் கொண்டு வராதே" என்றாராம்.

**நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?**

"நாட்டுக்குத்தான் ராணியப்பா, வீட்டுக்கு அவ மனைவியப்பா" என்று 'பெரிய இடத்துப் பெண்' என்னும் பழைய படத்தில் ஒரு பாடல் வரும். காலம் எவ்வளவோ மாறிவிட்டது. ஆனால், பெண்ணின் நிலை மட்டும் இன்னும் மாறவே இல்லையோ என்று தோன்றுகிறது. இந்திரா நூயி போன்ற மேல்தட்டுப் பெண்களுக்கே இந்த நிலை என்றால், மற்றப் பெண்களின் நிலை என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்னொரு சகலதுறை வீரரை இழக்கிறது சர்வதேச கிரிக்கெட்

கிரிக்கெட்டின் கடவுள் என வர்ணிக்கப்படும் இந்திய அணியின் நட்சத்திரம் சச்சின் டெண்டுல்கர் சர்வதேச ஆட்டங்களில் ஓய்வை அறிவித்தது ஒட்டுமொத்த கிரிக்கெட் உலகத்தையும் கவலையில் ஆழ்த்திய சமயம் இன்னொரு செய்தி அவர்களை மேலும் நெருடியது. இந்தியாவுக்கெதிராக டர்பனில் நடைபெற்ற டெஸ்ட் ஆட்டத்துடன் தனது 18 வருட டெஸ்ட் கிரிக்கெட் வாழ்வை முடித்துக் கொள்வதாக தென்னாபிரிக்க அணியின் சகல துறை ஆட்டக் காரரான ஜாக்ஸ் கலிஸ் அறிவித்துள்ளார். தற்போது மஹேல ஜெய வர்த்தன தனது டெஸ்ட் ஓய்வை அறிவித்து கிரிக்கெட் ரசிகர்களை சோக்த்தில் மூழ்கடித்துள்ள அதே சமயம், மீண்டும் சோகத்தில் சோகம் கொடுத்திருக்கிறார் ஜாக்ஸ் கலிஸ். 2015 உலகக்கிண்ணத்தை கனவாக நினைத்திருந்த ஜக்ஸ் கலிஸ் அதனை கனவாகவே விட்டு சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். இவரது ஓய்வு அறிவிப்பு அவரது ரசிகர்களையும், தென்னாபிரிக்க ரசிகர்களையும் மட்டுமல்லாது கிரிக்கெட்டை ரசித்துப் பார்க்கும் அனைவரையும் கவலையடையச் செய்திருப்பது உண்மை.

1995ஆம் ஆண்டு டர்பனில் நடைபெற்ற இங்கிலாந்துக்கெதிரான டெஸ்ட் ஆட்டத்தின் மூலம் சர்வதேச அரங்கில் ஒரு துடுப்பாட்ட வீரராக அறிமுகமானார். அந்த ஆட்டத்தில்மழையின்விளையாட்டு வித்தைகாட்ட இறுதி இரு நாள்களிலும் எந்தவொரு பந்தும் வீசப்படாமல் ஆட்டம் சமனிலையில் முடிவடைந்திருந்தது. அந்த ஆட்டத்தில் 12 பந்துகளை எதிர் கொண்டிருந்த காலிஸ் ஒரு ஓட்டத்தை மட்டும் பெற்று சாதாரணமான அறிமுகத்தை மேற் கொண்டிருந்தார். அடுத்து நடந்த ஆட்டங்களிலிலும் தன்னைச் சிறந்த வீரராக அவர் வெளிப்படுத்தியிருக்கவில்லை. முதல் 5 ஆட்டங்களிலும் அவரது ஓட்டம் சராசரி 8.14 ஆகவே இருந்தது. ஆனால் ஆஸ்திரேலியாவுக்கெதிராக நடைபெற்ற ஆட்டமொன்றில் 29 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 3 இலக்குகளைக் கைப்பற்றி பந்து வீச்சில் தனது திறமையை வெளிப்படுத்தியிருந்தார். அதேவேளை 1996 இல் கேப்டவுனில் நடைபெற்ற இங்கிலாந்துக்கெதிரான ஆட்டத்தில் தனது ஒருநாள் கிரிக்கெட்டுக்கான காலடியையும் எடுத்து வைத்திருந்தார். ஆஸ்திரேலியாவுக்கெதிராக 1997 இல் ஆஸ்திரேலிய மண்ணில் தனது அணி தோல்வியின் விளிம்பில் போராடிக் கொண்டிருந்தபோது தனது முதலாவது சதத்தைப் பதிவு செய்து அணியை தோல்வியிலிருந்து மீட்டெடுத்து தென்னாபிரிக்க ரசிகர்கள் மத்தியில் நாயகனானார். டெஸ்ட் ஆட்டத்தில் சதமடித்து ஒரு மாத காலப் பகுதியிலேயே ஒருநாள் போட்டியிலும் நியூஸிலாந்து அணிக்கெதிராக சதத்தைப் பதிந்து அணியின் வெற்றிக்கு மீண்டும் பங் கெடுக்க அணியின் முக்கியமான வீரராக உருவெடுக்கத் தொடங்கினார். துடுப்பாட்டதில் தன்னைச் சிறந்த வீரராக வெளிப்படுத்திய கலிஸ் தனது பந்து வீச்சின் பலத்தையும் வெளிப்படுத்தலானார்.

தற்போது நடைபெறும் சம்பியன் லீக் ஒருநாள் கிண்ணத்துக்குப் பதிலாக 1998ஆம் காலப்பகுதியில் நடைபெற்ற கிரிக்கெட் தொடரில் தன்னை சிறந்த சகலதுறை ஆட்டக்காரராக நிரூபித்தார். அத் தொடரில் மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிரான ஆட்டமொன்றில் 30 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளைக் கைப்பற்றியதுடன், அரையிறுதி ஆட்டத்தில் 100 பந்துகளில் 113 ஓட்டங்களையும் பெற்றிருந்தார். அதேவேளை 2000 ஆம் ஆண்டில் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கெதிராக ஒரு டெஸ்ட் ஆட்டத்திலேயே அரைச்சதம், சதம், 5 இலக்குகள் என சகல துறையில் பிரகாசித்தார்.

2001ஆம் ஆண்டு இந்தியாவுக்கெதிரான ஆட்டத்தில் சச்சினின் இலக்கைக் கைப்பற்றிக் கொண்டதன் மூலம், 100 இலக்குகள் என்ற மைல் கல்லை கடந்ததுடன், 3000 ஓட்டங்களைக் கடந்த அதேவேளை 100 இலக்குகளையும் கைப்பற்றிக் கொண்ட 8ஆவது சர்வதேச வீரர் என்ற சாதனையையும் படைத்தார். 2003 டிசெம்பர் தொடக்கம் 2004 மார்ச் வரை நடைபெற்ற 5 டெஸ்ட் ஆட்டங்களில் தொடர்ச்சியாக 5 சதங்களை விளாசி, அவ்வாறு சாதனை படைத்திருந்து கிரிக்கெட் உலகின் பிதாமகன் டொன் பிராட்மனுடன் இணைந்து கொண்டார். தென்னாபிரிக்க அணிக்காக டெஸ்டில் அதிக ஓட்டங்களைப் பெற்றவர் கரி கிறிஸ்டன் என்ற பதிவை 2005இல் மாற்றி எழுதினார். அதுவரை காலமும் கிறிஸ்டன் பெற்றிருந்த 7,289 எனும் ஓட்டக் குவிப்வே தென்னாபிரிக்க அணி வீரர் டெஸ்ட் ஆட்டங்களில் பெற்றுக் கொண்ட அதிக ஓட்டங்களாக இருந்து வந்தது. அதே ஆண்டு 20/20 ஆட்டங்களிலும் சர்வதேச அரங்கில் தடம் பதித்தார்.

2006 இல் அணியின் தலைவர் கிரேம் சிமித் காயமடைந்து கொள்ள அணியைத் தலைமை தாங்கும் வாய்ப்பு இவருக்கு கிட்டியது. ஆனால் அந்த ஆட்டத்தை ஆஸ்திரேலியா வென்றிருந்தது. அதே ஆண்டு நியூஸிலாந்துக்கெதிரான ஆட்டத்தில் தனது 100 ஆவது டெஸ்ட் ஆட்டத்தை விளையாடினார். அதே போட்டியில் அவ்ரது சக வீரரான பொலக் மற்றும் நியூசிலாந்தின் ஸ்டீவன் பிளமிங் ஆகியோர் அதே மைல் கல்லைக் கடந்தனர். 2007இல் நடந்த உலகக் கிண்ண ஆட்டத் தொடரில் 485 ஓட்டங்களைக் குவித்துத் தனது அணிக்காக அதிக ஓட்டங்களைப் பெற்றுக் கொண் டார். 2009இல் சர்வதேச ஒரு நாள் ஆட்டங்களில் 10, 000 ஓட்டங்களைக் கடந்து சாதனை படைத்தார். 2012 இல் இலங்கை அணிக்கெதிராக 150ஆவது டெஸ்ட் ஆட்டத்தில் விளையாடிய கலிஸ் 150 ஓட்டங்களைக் கடந்ததுடன் 224 ஓட்டங்களைக் குவித்தார். ஒரு கிரிக்கெட் வீரர் தொடர்ச்சியாக எப்போதும் சிறப்பாக விளையாடிக் கொண்டிருக்க முடியாது என்பது இவர் பெயரிலும் உண்மையாக ஆனது. தொடர்ச்சியாக 29 ஒருநாள் ஆட்டங்களில் பிரகாசிப்பதற்குத் தவறியிருந்தார்.



அதேவேளை கடந்த ஆண்டு விளையாடிய டெஸ்ட் ஆட்டங்களில் பிரகாசிக்கத் தவறிய கலிஸிற்கு மிக மோசமான வருடமாகவும் அமைந்தது. அந்த ஆண்டில் 7 ஆட்டங்களில் விளையாடி 17.63 எனும் ஓட்ட சராசரியில் 194 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டார். இதனையடுத்து 2015 உலகக்கிண்ணப் போட்டிக்காகத் தன்னைத் தயார்ப்படுத்திக் கொள்வதற்காகவும், டெஸ்டில் சிறப்பாக ஆட முடியாது இருப்பதாகவும் கூறி டெஸ்ட் வாழ்க்கையை முடித்துக் கொண்டார். தொடர்ந்து மட்டுப்படுத்தப்பட்ட ஆட்டங்களில் விளையாடி வந்த இவர் அந்த ஆட்டங்களிலும் தடுமாறினார். இறுதியாகக் கடந்த மாதம் இலங்கைக்குச் சுற்றுப் பயணம் மேற் கொண்டிருந்த தென்னாபிரிக்க அணித் தொடரை வென்றிருந்த போதும் கலிஸின் பங்களிப்பைப் பெற்றிருக்கவில்லை. அதனையடுத்து 2015 உலகக் கிண்ணத்துக்கான தனது கனவுக்கான தூரம் வெகு தொலைவில் இருக்கிறது எனக் கூறி சர்வதேச கிரிக்கெட்டுக்குக் கையசைத்தார்.

166 டெஸ்ட் ஆட்டங்களில் 280 இனிங்ஸ்களில் களம் கண்ட கலிஸ் 58 அரைச்சதங்கள், 48 சதங்கள் உட்பட 55.37 எனும் சிறந்த ஓட்ட சராசரியில் 13,289 ஓட்டங்களையும், 328 சர்வதேச ஒருநாள் ஆட்டங்களில் 314 இனிங்ஸ்கள் விளையாடி, 86 அரைச்சதங்கள், 17 சதங்களுடன் 44.36 என்ற ஓட்ட சராசரியில் 11,579 ஓட்டங்களையும், 25 20/20 ஆட்டங்களில் 5 அரைச்சதங்கள் விளாசி 35.05 எனும் ஓட்ட சராசரியில் 666 ஓட்டங்களையம் குவித்துள்ளார். அதேவேளை டெஸ்ட், ஒருநாள் ஆட்டம், 20/20 ஆட்டங்களில் முறையே 292, 273, 12 இலக்குகளைக் கைப்பற்றியுள்ளதுடன் 200, 131, 7 பிடியெடுப்புகளையும் மேற்கொண்டுள்ளார்.

தென்னாபிரிக்க ரசிகர்களால் கிங் கலிஸ் என செல்லமாக அழைக்கப்படும் கலிஸ், சர்வதேச கிரிக்கெட்டில் நிஜமாகவே கிங்தான்.

இவரது சர்வதேச கிரிக்கெட்டிலிருந்தான ஓய்வு கிரிக்கெட்டுக்கு மிகப் பெரிய இழப்பாகவே இருக்கும். இவரது இடத்தை அணியில் நிரப்புவதற்கு இன்னொரு சகலதுறை வீரர் கிடைப்பது அரிதிலும் அரிதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org